# பெரியார் பல்கலைக்கழகம்

*NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)*

*State University - NIRF Rank 56 - State Public University Rank 25*

*Salem-636011, Tamilnadu, India*

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்விமையம்

## CDOE

## இளங்கலைத் தமிழ்

இரண்டாமாண்டு மூன்றாம் பருவம்

## விருப்பப் பாடம் - 3

# தமிழ் மொழி வரலாறு **24DUTA13**

**2024 – ஆம் கல்வியாண்டுமுதல் பயிலும்**

**மாணவர்களுக்குரிய பாடநூல்**

**Prepared by:**

**Centre for Distance and Online Education (CDOE)**
**Periyar University, Salem – 11.**

# தமிழ் மொழி வரலாறு

## பாடத்திட்டம்



| அலகு | பாடத்திட்ட விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | மொழி அமைப்பும் வரலாறும் - மொழி வரலாற்றுச் சான்றுகள் – தொல் திராவிட மொழியும் தமிழும் – பழங்காலத் தமிழ் | 1-39 |
| 2 | இடைக்காலத் தமிழ் – தற்காலத் தமிழ் | 40-75 |
| 3 | கல்வெட்டுத் தமிழ் – தமிழில் பிற மொழிக் கலப்பு | 76- 114 |
| 4 | தமிழ்க் கிளைமொழிகள் – தமிழ்ச் சொற்பொருள் மாற்றம் | 115- 158 |
| 5 | தமிழ்த் தொடரியல் – தமிழ் வரி வடிவம் | 159- 200 |

## கற்பித்தல் நோக்கங்கள்

- பேச்சு மொழி, எழுத்து மொழி வழக்குகளைப் புரிந்து கொண்டு பயன்படுத்தச் செய்தல்.
- காலந்தோறும் தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அதன் பின்னணியோடு ஆய்ந்து அறிதல்.
- போட்டித் தேர்வுக்கு மொழியியல் பாடத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

## பயன்கள்

- தமிழ் மொழியின் தொன்மை மற்றும் இனப் பெருமையை அறிதல்.
- தமிழ் நாகரிகத்தின் அடையாளம் திராவிடமொழிக் குடும்பங்கள் மொழியின் சிறப்புகள், மாற்றங்கள் ஆகியவற்றை அறிதல்.
- தமிழ்மொழியின் அறிவியல் பண்புகளைஅறிதல்.
- தமிழ், வடமொழிமொழி குடும்பங்களின் தனித்துவத்தை அறிதல்
- அறிவியல் அடிப்படையில் மொழி குறித்த ஆய்வில் ஈடுபட வழிவகுத்தல்.

# அலகு – 1

## 1.1 மொழி அமைப்பும் வரலாறும்

### முன்னுரை

பேச்சாலும் எழுத்தாலும் மனிதன் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் கருவி மொழியாகும். ஆறறிவு பெற்ற மனித சமுதாயத்தையும் ஐயறிவு கொண்ட விலங்குகளையும் வேறுபடுத்துவது மொழி. ஒரு மொழியின் அமைப்பை விளக்குவதே அம்மொழியின் இலக்கணம் ஆகும். மொழி மொழியால் விளக்கப்படுகின்றதை இலக்கணம் என்பர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழ் மொழிக்குத் தொல்காப்பியர் நல்லதோர் இலக்கணம் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பாணினி வடமொழிக்கும். தொல்காப்பியர் தமிழ் மொழிக்கும் இலக்கணம் எழுதினர். மரபுவழி இலக்கணங்கள் அந்ததந்த மொழிகள் பேசும் மக்கள் சமுதாயத்திற்காக எழுதப்பட்டன. ஆர்டன், போப், பெஸ்கி போன்றோர் தமிழ்மொழியை ஐரோப்பியர் கற்பதற்காக எழுதினர். இவர்களது தாய்மொழி வேறு. இவர்கள் கற்ற இரண்டாவது மொழிக்கு இலக்கணம் எழுதினர். மொழியியலாளர் (Linguists) தங்களுக்குத் தெரியாத மொழிகளுக்கெல்லாம் இலக்கணங்களைப் படைத்தனர். போவாஸ் (Boas), சபீர் (Sapir) போன்றவர்கள் மொழியியல் கொள்கைகளை அடிப்படையாக வைத்து இலக்கணங்களைப் படைத்தனர். அத்தகைய இலக்கணங்கள் காலந்தோறும் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது. அவற்றின் படிநிலை வளர்ச்சி குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

### ஒலியை ஆராயும் முறை

இலக்கணம் பெரும்பாலும் சொல்லியலை அடிப்படையாகக் கொண்டது; சொல்லியலிலே தொடரியலும் பேசப்படுகின்றது. ஒலியன் கோட்பாடு மொழி ஆராய்ச்சிக்கு வழங்கியுள்ள பெருங்கொடை; மொழியியலில் தொடரியலும் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றது. மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்ற தலைப்பின்கீழ் ஆராய்வர். மக்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன்மூலம் சமூகம் வளர்ச்சியடைந்து வருகிறது. கருத்துப் பரிமாற்றத்தைச் சைகை (gestures) மூலமும், குறியீடு (Sign) மூலமும் தெரிவிக்கலாம்

ஆனால், இவற்றின் மூலம் நுண்ணிய கருத்துக்களை உணர்த்த முடியாது; பேச்சொலிகள் (vocal sounds) மூலமே எந்தக் கருத்தையும், உணர்த்தமுடியும்.

ஒலியை ஆராயும் முறையில் மூன்று முறைகள் உள்ளன.

அவையாவன:

**(i) பௌதிக ஒலியியல்** (acoustic phonetics) இவ்வியலில் பேச்சொலியின் பௌதிகத் தன்மையை ஆராய்தல்: ஒலி அலைகளாக வருவதை அளந்து கணக்கிடுவர்.

**(ii) கேட்பொலியியல்** (auditory phonetics): மனிதனின் கேட்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாகும். இது சிறந்த முறையாகக் கருதப்படுவதில்லை.

**(iii) உச்சரிப்பொலியியல்** (articulatory phonetics) ஒலியுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒலியின் பிறப்பை ஆராய்வதாகும். நமது மரபுவழி இலக்கண ஆசிரியர்கள் இம்முறையிலேயே தமிழ் ஒலிகளின் பிறப்பை விளக்கியுள்ளனர்.

ஒலியுறுப்புக்கள் அதிர்ந்தோ, காற்றை அடைத்தோ, வெளிவரும் காற்றை அதிரச்செய்தோ பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகளாகும். மெய்யொலிகளின் பிறப்பு முயற்சியையும் பிறப்பிடத்தையும் ஒலிப்பு முறையையும் கொண்டு அடைப்பொலிகள் அல்லது வெடிப்பொலிகள் (plosives), உரசொலிகள்(fricatives), மூக்கொலிகள்(nasals), மருங்கொலிகள் (laterals), ஆடொலிகள் (trills), அரை உயிர்கள் (semi vowels) என வகைப்படுத்தலாம். வாயறையின் ஓரிடத்தில் மூச்சுக்காற்று ஒலிப்பானால் முழுதும் தடை செய்யப்பட்டு, திடீரென்று வெடிப்போடு வெளியேறினால் அதனை வெடிப்பொலி அல்லது தடையொலி என்பர். அப்பொழுது அண்ணக்கடை அடைப்பு ஏற்படும். தமிழில் வல்லின ஒலிகளை வெடிப்பொலிகள் என்பர். அடைப்பொலிபோலவே அமைந்து அண்ணக்கடை திறந்து மூக்கறை வழியே மூச்சுக்காற்று வெளியே செல்லும் போது மூக்கொலி அல்லது மெல்லினம் தோன்றும். மூக்கொலி தோன்றும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. வாயறையில் மூச்சுக்காற்று வரும்போது முழுவதும் தடுக்காமல் மூச்சு வெளியேறும் பாதையை ஒலிப்பானால் குறுக்கி அந்த இடுக்கியின் வழியே செலுத்தினால், உராய்வுத்தன்மை (friction) ஏற்படுகிறது. இப்படி உராய்வுத் தன்மையோடு கூடிப் பிறக்கும் ஒலிகளே உரசொலிகள் (fricatives) எனப்படும். உரசொலி உண்டாகும் போது குரல்வளை

மடல்கள் அதிர்ந்தும் அதிராமலும் இருக்கலாம். அப்போது அண்ணக்கடை அடைப்பும் உண்டு. மூச்சுக்காற்று வாயறையில் ஓர் இடத்தை அடைத்து நாக்கின் இரண்டு பக்கத்திலும் (மருங்கிலும்) வெளிவந்தால் மருங்கொலி எனப்படும். ல, ள இரண்டும் மருங்கொலியாகும். தமிழில் ரகரம் ஒரு வருடொலியாகும்.

சொல் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைந்த மிகக்குறைந்த ஒலி வேறுபாட்டையே ஒலியன் என்கிறோம். தமிழில் ககரம் சூழலுக்கேற்ப ஒலி மாறுபாடு அடையும்.

கடல் katal

பக்கம் pakkam

பகல் pahal

தங்கம் tangam

ஒலியனியல் ஆய்வில் பல ஆய்வுமுறைக் கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை வேற்று நிலை வழக்கு (contrastive distribution), துணைநிலை வழக்கு (complementary distribution), உறழ்ச்சி (free variation) போன்றவையாகும். மொழிகளில் காணப்படும் சொற்களின் உள் அமைப்பை (internal structure) ஆராய்வதை உருபனியல் அல்லது சொல்லியல் (morphology) என்பர். போயஸ், சபீர் போன்ற அமெரிக்க அறிஞர்கள் அமெரிக்க இந்திய மொழிகளை ஆராய்ந்தபொழுது அம்மொழிகளின் அமைப்பினை அறியச் சில வழிமுறைகளை வகுத்தனர். இம்முறைகளை விதிமுறை (Item and process) என்பர். அமைப்பு மொழியியலாளர்களான புளூம்ஃபீல்டு, பிளாக் போன்றவர்கள் சேர்க்கை முறையினை (Item and arrangement) உருவாக்கினார். மரபு இலக்கணத்தார் சொல்லடுக்கு முறையை (Word and paradigm) பயன்படுத்தி உருபனியல் நுட்பங்களை ஆராய்ந்தனர். பல்வேறு உருபனியல் எண்ணங்களையும் கருத்துக்களையும் அமைப்பு மொழியியல் அறிஞர்கள் வளர்த்தனர். ஹாரிஸ் (Harris, 1951), புளூம்ஃபீல்டு (Bloomfield, 1933) பிளாக் (Bloch, 1972), ஹாக்கெட் (Hockett, 1958), நைடா (Nida, 1964) போன்ற பேரறிஞர்கள் உருபனியல் கோட்பாடுகளை உருவாக்கினர்.

ஒரு மொழியில் காணப்படும் பொருளைக் காட்டும் சின்னஞ் சிறு கூறுகளே 'உருபன்' (morpheme) எனப்படும். ஒரு மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்வதற்கு

உருபன்களைப் பிரித்தறிதல் வேண்டும். இவற்றைப் பற்றி நைடா (Nida) அவர்கள் தமது மார்பாலஜி (Morphology,1946) எனும் நூலில் மிக விளக்கமாகக் கூறியுள்ளார். சொற்பாகுபாட்டை (Parts of speech) அடிநிலை இலக்கணக் கூறுகள் (Primary grammatical categories) என்றும், திணை, பால், எண், இடம், வேற்றுமை போன்றவற்றைத் துணைநிலை இலக்கணக் கூறுகள் (Secondary grammatical categories) என்றும் கொள்வாருமுளர் (Lyons, 264). தமிழ் மொழியில் பெயர்ச்சொல், வினைச் சொல் போன்றவற்றில் பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காண்கிறோம்.

சொல்லமைப்பின் அடிப்படையில் மொழிகளை மூன்று வகையாகப் பிரிப்பர்.

1. தனிநிலை மொழிகள் (isolating) - சீனமொழி
2. ஒட்டுநிலை மொழிகள் (agglutinative) - தமிழ்மொழி
3. உட்பிணைப்பு மொழிகள் (inflexional) - சமஸ்கிருதம், இலத்தீன்

தொடரியலில் வாக்கியங்களின் உறுப்புக்களையும் அவை வழங்குகின்ற முறைகளையும் இயல்புகளையும் முழுமையாக ஆராய்ந்து அவற்றின் வாயிலாகத் தொடரமைப்பு முறையை விளக்குகிறோம்.

'அவன் வேகமாக ஓடினான்'

என்கிற வாக்கியத்தைப் பெயர்த் தொடர், வினைத் தொடர் என இரண்டாகப் பிரிக்கிறோம். பெயர்த் தொடரில் 'அவன்' என எழுவாய்த் தொடரும் வினைத் தொடரில் 'வேகமாய் ஓடினான்' என்ற பயனிலைத் தொடரும் இருக்கின்றன. இவற்றில் 'அவன்' என்பதற்கும் 'ஓடினான்' என்பதற்கும் எழுவாய் - பயனிலை உறவு உண்டு, 'வேகமாக' என்பதும் 'ஓடினான்' என்பதும் வினையடை பயனிலை உறவில் இருக்கின்றன. 'அவன்' என்பதற்கும் 'வேகமாக' என்பதற்கும் உறவில்லை. 'வேகமாக' என்பது 'ஓடினான்' என்பது போன்ற பயனிலையை அவாவி நிற்கிறது. 'அவன் ஓடினான்' 'வேகமாக ஓடினான்' என்ற வாக்கியங்கள் இயல்பானவை மட்டுமின்றி இலக்கணமுடையவையும் ஆகும்.

பெயர்ச்சொல் தொடர், வினைச்சொல் தொடர், பெயரடைத் தொடர், வினையடைத் தொடர் என்றும் தொடர்களைப் பாகுபாடு செய்து, மொழியில் வழங்கும் பல்வேறு, வாக்கியங்களை விளக்கலாம், தமிழில் பெயரடை எல்லாம் பெயர்க்கு முன்னும் வினையடை எல்லாம் வினைக்கு முன்னும் அமைகின்றன.

நல்ல பையன் பெயரடை.

வேகமாக வந்தான் – வினையடை

பெயரடையோ வினையடையோ ஒரு வாக்கியத்தில் பயனிலையாக வருவதில்லை, இவ்வமைப்பு தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை மாறவில்லை. தொடரியல் ஆராய்ச்சியின் வரலாற்றை நோக்கின் மூன்று நிலைகளைக் காணலாம். 1. மரபு இலக்கண ஆசிரியர்கள் (Traditional grammarians) ஆராய்ந்தவை 2. அமைப்பு மொழியியல் (Sturctural linguistics) 3. உறுப்பு பிரிப்புமுறை (Immediate Constituent Analysis). மாற்றிலக்கணத்தின் தந்தையாக சொம்ஸ்கி (Chomsky) யைக் கருதுவர்.

## தமிழ் மொழியின் வாழ்வும் வரலாறும்

தொல்காப்பியமும் பாணினீயமும் விளக்க மொழியியல் அடிப்படையில் அமைந்த பழமையான இலக்கணங்களாகும். இவ்விலக்கண ஆசிரியர்கள் மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல் என்ற நிலையில் ஆராய்ந்தனர். இக்கால விளக்க மொழியியலின் தந்தை புளூம்ஃபீல்டு அவர்கள் பாணினியைக் கற்றதனாலேயே விளக்க மொழியியல் குறித்துச் சிறந்த விளக்கங்கள் கிடைத்தன என்று கூறுகிறார். லேகாஸ் என்ற நூலை இயற்றிய ஹெராகிளிட்டஸ் என்பவரும் டெமாகிரிட்டஸ் என்பவரும் இந்நிலையிலே மொழி பற்றி ஆராய்ந்தனர். பிளாட்டோ போன்றவர்கள் மொழியை ஆராய்ந்தவர்களுள் முதன்மையானவர்கள். கிரேக்க நாடு அரிஸ்டார்க்கஸ்(Aristarchos), மல்லோஸ், கிரிசிப்போஸ் போன்ற இலக்கண அறிஞர்களைத் தந்துள்ளது. இவர்களது நூல்கள் அனைத்தும் இலக்கண வளர்ச்சிக்குத் துணையாக அமைந்தன. டைஸ்கோலஸ் (Dyskolos) போன்றவர்கள் பேச்சுமொழிப் பற்றியும் தொடரியல் பற்றியும் எழுதினர். அரிஸ்டாட்டிலுக்குப் பின்வந்த கிரேக்க இலக்கண ஆசிரியர்களுள் மிகச்சிறந்தவராகக் கருதப்படுபவர் டயோனிசியஸ் திரேக்ஸ்(Dionysius Thrax). சொல்வகை (Parts of speech) என இலக்கண ஆசிரியர்கள் பலர் செய்யும் ஆய்வுக்கும் பகுப்புக்கும் இவர் நூலே அடிப்படையாகும்.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சு இலக்கண ஆசிரியர்கள் மைகிரேட் (Meigret), எஸ்டின் (Estienne), தியோடர் (Theodore) போன்றோர் குறிப்பிடத்தக்கவர். அதன் பின்னர் ஆங்கில மொழியின் இலக்கணங்கள் பல உருவாயின. 1869ல் ஹோல்டர் (W. Holder) எழுதிய நூல் ஒன்று (Elements of

speech) வெளியாயிற்று. இன்னும் பல இலக்கணங்கள் போர்ட்ராயல் கோட்பாட்டையொட்டிப் பிறந்தன. வில்கின்ஸ், கூப்பர், முரே போன்றவர்கள் இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க இலக்கண ஆசிரியர்களாவர்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அலிவரா (Fernad de Oliverra) என்பவரால் எழுதப்பட்ட போர்ச்சுகீசிய இலக்கணமும், ரைஸ் (Joan Dafydd Rhys) என்பவரால் எழுதப்பட்ட இத்தாலிய மொழியின் உச்சரிப்பு என்ற நூலும் குறிப்பிடத் தக்கனவாகும். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த லெபனிட்ஸ் (G.W. Leibniz), பல்லாஸ் (Pallas), அதுலாங் (Johann Christoph Aldelung), ஹெர்டர் (Herder) போன்ற அறிஞர்கள் ஐரோப்பிய மொழிகளின் ஒப்பு மொழியியல் வளர்ச்சிக்கு அடிகோலினர் எனலாம். இந்நூற்றாண்டில் லுடால்ப் செமிட்டிக் மொழிகளைப் பற்றியும் லுகுயிட் (Lhuyd) கெல்டிக் மொழிகளைப் பற்றியும், கியர்மதி (S. Gyarmathi) உராலிக் அல்டாய்க் மொழிகளைப் பற்றியும் ஆராய்ந்தனர். ஒப்பு மொழியியல் ஆய்விற்குச் சமஸ்கிருதம் இன்றியமையாதது என உணர்ந்து வில்லியம் ஜோன்ஸ் (William Jones), போன்றவர்கள் இது பற்றி ஆராயத் தலைப்பட்டனர்.

19 ஆம் நூற்றாண்டே மொழியைப் பற்றிய ஆராய்ச்சிக்கு வித்திடப்பட்ட காலம் எனலாம். மொழியின் தோற்றத்திற்குப் பின்னர் சொற்பிறப்பு ஆராய்ச்சியே மொழி ஆராய்ச்சி எனக் கருதப்பட்டது. இன்றைய ஒப்பு மொழியியலுக்கும் வரலாற்று மொழியியலுக்கும் வித்திட்ட பெருமை ராஸ்க் (Rask), பாப் (Bopp), கிரீம் (Girmm) போன்றோரைச் சாரும். ராஸ்க் (1797-1832) வரலாற்று மொழியியலுக்கான பல வரன்முறைகளையும் கோட்பாடுகளையும் விளக்கியுள்ளார். டார்வினின் பரிணாமக் கொள்கையையொட்டி மொழியின் பரிணாமத்தை ஆகஸ்ட் சிலேகர் (August Schleicher) ஆராய்ந்தார். மொழி வளர்ச்சியில் தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை என மூன்று வளர்ச்சி நிலையைக் காணலாம். மொழி மனிதனின் தொடர்ச்சியான ஒரு செயற்பாடு என்பதும் அவனுடைய உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களைப் புலப்படுத்தும் கருவி என்பதும் ஹம்போல்டின் (1767-1835) கருத்தாகும். இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மொழியியல் பேரறிஞர்களுள் புளூம்ஃபீல்டு ஒருவராவார். புளூம்ஃபீல்டு எழுதிய 'Language"என்ற நூல் மொழியியல் துறையில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது எனலாம். அமெரிக்க மொழியியல்

வரலாற்றில் 1933-1950 ஆகிய இக்காலக் கட்டத்தை புளூம்ஃபீல்டின் சகாப்தம் (Bloomfieldian Era) என்றே கூறுவர். பைக் (Kenneth Pike) என்பாரின் ஒலியியல், ஒலியினியல் என்ற இரண்டு நூல்களும் அத்துறையிலே மிகச்சிறந்த நூல்களாகக் கருதப்படுகின்றன. உருபனியல் துறையில் நைடா (Nida) வின் 'Morphology' என்ற நூலே மிகச் சிறந்த நூலாகக் கருதப்படுகின்றது.

மொழியலை மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

- விளக்க மொழியில் (Descriptive Linguistics)
- வரலாற்று மொழியியல் (Historical Linguistics)
- ஒப்பு மொழியியல் (Com- parative Linguistics)

**(i) விளக்க மொழியில் (Descriptive Linguistics)**

ஒரு மொழியின் குறிப்பிட்ட காலத்தை அடிப்டையாக வைத்து அக்கால மொழியினை ஆராய்வது விளக்க மொழியியலாகும். சங்க காலத் தமிழையோ, இடைக்காலத் தமிழையோ, இன்றைய காலத் தமிழையோ விளக்க மொழியியல் அடிப்படையில் ஆராயலாம்.

**(ii) வரலாற்று மொழியியல் (Historical Linguistics)**

மொழி காலந்தோறும் மாறுபடும் இயல்புடையது. ஒவ்வொரு கால கட்டத்திலும் மொழி எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை விளக்கி, காலப்போக்கில் அம்மொழி அடைந்த மாற்றத்தை ஆராய்வது வரலாற்று மொழியியலாகும்.

**(iii) ஒப்பு மொழியியல் (Com- parative Linguistics)**

இன உறவுடைய மொழிகளை ஒப்பிட்டு அவற்றின் 'தொல் மொழி'யின் அமைப்பை வரையறுக்கும் ஆய்வை ‘ஒப்பீட்டு மொழியியல்' என்பர் ஒப்பீட்டு மொழியியலில் ஒப்புமை ஒன்றுக்கே சிறப்பிடம் அளிக்கப்படுகின்றது. தமிழ் மொழியின் வரலாற்றை இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு போன்ற சான்றுகளின் அடிப்படையில் ஆராயலாம்.

தமிழ் மொழியின் வரலாற்றைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஆராயலாம்.

1. பழந்தமிழ் (Ancient Tamil).
2. இடைக்காலத் தமிழ் (Medieval Tamil).
3. தற்காலத் தமிழ் (Modern Tamil)

**1. பழந்தமிழ் (Ancient Tamil) (3rd Century BC to 500 AD)**

(அ) Tamil) பழந்தமிழ் (Proto Ancient Tamil) (தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களும் தொல்காப்பியமும்).

(ஆ) மத்திய பழந்தமிழ் (Middle Ancient Tamil) (பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்)

இ) பின் பழந்தமிழ் (Later Ancient Tamil) (திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன).

**2. இடைக்காலத் தமிழ் (Medieval Tamil) (500 A.D. -1600 A.D.)**

(அ) முன் இடைக்காலத் தமிழ் (Early Medieval Tamil) (500 A.D. -850 A.D).

(ஆ) மத்திய இடைக்காலத் தமிழ் (Middle Medieval Tamil) (850-1200 A.D.)

(இ) பின் இடைக்காலத் தமிழ் (Later Medieval Tamil) (1200-1600 A.D.).

இடைக்காலத் தமிழைப் பல்லவர் காலத் தமிழ்,சோழர் காலத் தமிழ், நாயக்கர் காலத் தமிழ் என்றும் பிரித்து ஆராய்வர்.

**3. தற்காலத்தமிழ் (Modern Tamil) (1600 A.D.)**

(அ) முன் தற்காலத் தமிழ் (Early Modern Tamil) (சிற்றிலக்கியங்கள், மடங்களின் தொண்டு முதலியன)

(ஆ) பின் தற்காலத் தமிழ் (Later Modern Tamil) போர்ச்சுக்கீசியர், டச்சு, பிரெஞ்சு ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட மொழி வளர்ச்சி, 20 ஆம்நூற்றாண்டு கிளைமொழி ஆய்வு முதலியன).

## 1.2 மொழி வரலாற்றுச் சான்றுகள்

உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி டார்வினின் பரிணாமக் கொள்கை, இயற்கை மொழிகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய வழி வகுத்தது. மொழி வளர்வது பரிணாம வளர்ச்சியாலும் (evolution), கடன் வாங்கலாலும் (diffusion) என்பர் வரலாற்று மொழியியல் பேரறிஞர்கள். தமிழ் மொழி வரலாற்றை அறிய இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுக்கள், பிறமொழிக் கல்வெட்டுக்கள், அயல்நாட்டார் குறிப்புக்கள், கிளைமொழிகள் போன்றவற்றை அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளலாம். இவ்வடிப்படைச் சான்றுகள் தமிழ்மொழி வரலாற்றிற்கு உதவும் வகையை ஆராய்வோம்.

### 2.1.1 இலக்கியங்கள் (Literatures):

ஒரு நாட்டின் வரலாற்றிற்கும் மொழியின் வரலாற்றிற்கும் இன்றியமையாத சான்று இலக்கியமாகும். எழுத்திலக்கியம் (Written literature), வாய்மொழி இலக்கியங்கள் (Folk literature) என்று இவை இரு வகைப்பபடும்.

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய மிகப் பழமையான இலக்கணம். சிலப்பதிகாரம் தொல்காப்பியத்துக்குப் பின் தோன்றிய காப்பியம். இவ்விரண்டு நூல்களையும் ஒப்பிட்டு, நோக்கின் மொழி வளர்ச்சி தெள்ளத் தெளிவாக விளங்கும். தொல்காப்பியம் எதிர்காலத் தன்மை ஒருமை விகுதியாக 'அல்' என்பதைக் கூறுகின்றது(தொல்.சொல். 200). சிலப்பதிகாரகாலத்தில் ‘அல்’ ஈறு 'அன்' ஈறாக மாறிய நிலையைக் காண்கிறோம்.

17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே பேச்சுத்தமிழ் முழுக்க முழுக்க இலக்கியத்தில் இடம் பெறலாயின. இராமப்பய்யன் அம்மானை, சிவகெங்கை சரித்திரம், மாகாபுராண அம்மானை, பொன்னுருவி மசக்கை போன்ற வாய்மொழி இலக்கியங்கள் அச்சிடப்பட்டன. மாகபுராண அம்மானை பதினொட்டம் நூற்றாண்டுத் தமிழின் ஒலி வகையின் சிறப்பியல்புகளைக் கூறுகின்றது. குற்றியலுகரம் சிலபோது குற்றியலிகரம்போல ஒலிக்கிறது.

புக்கு > புக்கி

இருபத்து > இருபத்தி

அதுபோல மொழிக்கு இடையில் வருகின்ற உகரமும் இகரமாகின்றது.

அருமை > அரிமை

சிறுமொழி > சிறிமொழி

தென்பாண்டி நாட்டில் சொல்லின் முதலில் இயல்பாக இன்று எழுகின்ற எடுத்தலோசை இல்லாமையால் மொழி முதலில் மெய்யெழுத்தோடு வரும் குறில்கள், நெடிலின் முன் ஒலி இழந்து நிற்கின்றன.

புறா > ப்றா

பலா > ப்லா

17 ஆவது நூற்றாண்டு பேச்சுத் தமிழைப் பற்றி இராமப் பய்யன் அம்மானை மூலம் அறிகிறோம். மதுரை, இராமநாதபுர வட்டார வழக்கையும் இந்நூலின் மூலம் அறிகிறோம்.

அடைக்காய் - பாக்கு

வெள்ளிலை - வெற்றிலை

சம்பாரம் - சாக்கு

## 1. 2. 2 இலக்கணங்கள் (Grammars):

தமிழ்மொழி வரலாற்றிற்கு இலக்கியத்தைப் போலவே இலக்கணங்களும் சான்றாகும். இலக்கியம் மொழி இயல்பை ஆராய்வதற்கு அடிப்படையானதாகும். தொல்காப்பியர் பிறப்பியலில் ஒலிகளை உரைத்துள்ளார். அவர் உச்சரிப்பொலியியல் நோக்கில் அவற்றை உரைத்துள்ளார்.

'அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை

கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்'

என்று யகரத்தின் பிறப்பினை விளக்கினார். யகரம் ஒலிப்புடை ஒலி என்பதனை 'மிடற்றெழு வளியிசை' என்ற தொடரால் சுட்டுகிறார். தொல்காப்பியம் நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல், முத்துவீரியம் போன்ற பல இலக்கண நூல்கள் தமிழில் பல்வேறு காலங்களில் தோன்றியுள்ளன. ழகரம் புணர்ச்சியில் டகரமாக - மாறுதலைத் தொல்காப்பியர் 'கீட்டிசை' என்ற சொல்லுக்குக் கூறினார். ஆனால், வீரசோழியம் பாழ் + தீமை பாட்டீமை போன்ற வேறு சிலவற்றிலும் மாறும் என்று கூறுகிறது. ஆறாம் வேற்றுமைக்கு 'அது மட்டுமிருந்து பின்பு 'ஆது' வும் சேர்ந்து ஒருமைக்கு இவை இரண்டும் பன்மைக்கு 'அ'வும் என்ற நிலை ஏற்பட்டது.

## 1. 2. 3 உரையாசிரியர்கள் (Commentators)

தமிழ் இலக்கண இலக்கியங்களுக்குப் பலரும் உரை எழுதியுள்ளனர். இலக்கண ஆசிரியர்கள் நூற்பா கருத்துக்களை விளக்கியதோடு அன்றி அவர்கள் காலத்து வழக்கினையும் கூறிச் சென்றனர். தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்றை ஈறு கூறாமல் இடங்கூறி விளக்குகிறார். உரையாசிரியர்கள் வியங்கோள் விகுதிகளைக் கூறியுள்ளனர்.

இளம்பூரணர், தெய்வச்சிலையார் - க

சேனாவரையர் - க,யா,அல்

நச்சினார்க்கினியர், கல்லாடர் - க,யா, அல், ஆல், ஆர்,மார், உம், ஐ

### 1.2.4. வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள் (Grammars by Foreigners)

வெளிநாட்டவர் பலர் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளனர். பெரும்பாலோர் பேச்சுத் தமிழுக்கே இலக்கணம் கண்டனர். கி.பி. 1672 இல் டச்சுக்காரர் பால்டீயஸ் (Baldaeus) என்பார் இந்தியா பற்றிய நூலில் தமிழ் மொழியின் உச்சரிப்புக்கள், வேற்றுமைப் பாகுபாடுகள், வினைவிகற்ப வாய்பாடு முதலியவற்றைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். கி.பி. 1680 ஆம் ஆண்டில் கோஸ்டா பல்த்சரா (Costo Balthsara) என்பவர் இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கணம் ஒன்றை எழுதினார். கி.பி.1685 ஆம் ஆண்டில் புருனோ (Bruno) என்பவர் ஓர் இலக்கண நூல் எழுதினார். கி.பி. 1786-ல் சீகன்பால்கு (Ziegenbleg) தமிழ் இலக்கண நூல் (Grammatica Damulica) எழுதினார். பெஸ்கி எனும் வீரமாமுனிவர் பேச்சுத் தமிழின் இலக்கணம் ஒன்றினை (Grammar of the common dialect of the Tamulian) எழுதினார். ரேனியஸ் (Rhenious) என்பவர் கி.பி. 1836 இல் 'தமிழ் மொழியின் இலக்கணம்' (Grammar of the Tamil language) என்ற நூலை வெளியிட்டார். டாக்டர் கிரால் அவர்கள் தமிழ் வினையடிச் சொற்களை அவை ஏற்கும் கால இடைநிலைகளின் அடிப்படையில் மெல்வினை, இடைவினை, வல்வினை என மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பகுக்கின்றார்.

### 1.2.5. அகராதிகள் (Dictionaries)

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தும் அகர எழுத்து வரிசையில் அமையும்படி ஒருசேரத் தொகுத்து அவற்றின் பொருள்களை அம்மொழியிலேனும் பிறமொழியிலேனும் விளக்கும் நூல் அகராதியாகும். இதனை 'உரிச்சொல் பனுவல்' என்பது பழைய மரபு. சமணத் தமிழ்ச் சான்றோர் பலரும் இத்தகைய நூல்களை இயற்றி 'நிகண்டு' என்று வழங்கினர். பண்டைக் காலத்து நிகண்டுகள் செய்யுள் வடிவிலே எழுதப்பட்டவையாகும். கி.பி.1732 இல் வீரமாமுனிவரால் சதுரகராதி தொகுக்கப்பெற்றது. இவ்வகராதியில் பன்னிரண்டாயிரம் சொற்கள் உள்ளன. வீரமாமுனிவர் ஏழு அகராதிகளை வெளியிட்டார். அவையாவன: 1. தமிழ் - இலத்தீன்

அகராதி 2. இலத்தீன் - தமிழ் அகராதி 3. தமிழ்-பிரெஞ்சு அகராதி 4. தமிழ் -ஆங்கில அகராதி 5. போர்ச்சுக்கீசியம் - இலத்தீன் - தமிழ் அகராதி 6. வட்டார வழக்குத் தமிழ் அகராதி. 7. சதுரகராதி. தமிழ் அகராதி வரலாற்றில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) மிகச் சிறந்த சாதனையாகும். இந்நூலில் இலட்சத்து நாலாயிரத்து நானூற்று ஐந்து சொற்கள் இடம் பெற்றுள்ளன. திராவிட மொழியியல் பேரறிஞர்கள் பர்ரோவும் எமனோவும் (T. Burrow and M.B. Emeneau) இணைந்து வெளியிட்ட 'திராவிடச் சொற்பிறப்பில் அகராதி' (A Dravidian Etymological Dictionary, DED, DEDS) திராவிட மொழியியல் உலகில் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## 1.2. 6. கல்வெட்டுக்கள் (Inscriptions)

தமிழ் மொழி வரலாற்றிற்கு உதவும் அடிப்படைச் சான்றுகளுள் கல்வெட்டும் ஒன்றாகும். கல்வெட்டுக்கள், சாசனங்கள், செப்பேடுகள் ஆகியன மொழி வரலாற்றிற்குப் பெரிதும் துணை செய்கின்றன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தொடர்ச்சியாகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. கல்வெட்டுக்களால் ஒலிமாற்றத்தை அறியலாம். காலத்தை நிர்ணயிக்க முடியாத கல்வெட்டை மொழியியல் மாற்றங்களைக் கொண்டு ஓரளவு கணிக்கலாம். கல்வெட்டுக்களில் உடம்படுமெய் இல்லாமல் உயிரெழுத்துத் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

கோஇலுக்கு

ஆஇரம்

திராவிட மொழியியலார் ஆள், அழு என்ற இருசொற்களும் பழந்தமிழில் யாள், யழ என்று வழங்கியிருக்க வேண்டுமென்பர். மூலத்திராவிடத்தில் யகர ஒலி உண்டு. ஆனால், இடைக்காலத்தில் யகரம் வழக்கிழந்துவிட்டது. ஆயினும், ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் யகரம் மொழிக்கு முதலாக வந்துள்ளது. கல்வெட்டில் 'கொடுக்கக் கடவேனாகவும்' போன்ற வியங்கோள் உள்ளது. சுருங்கில், முட்டில், செய்யில் முதலிய நிபந்தனைப் பொருளை உணர்த்தும் வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. தன்வினை, பிறவினைப் பாகுபாடு இயற்கையாக அமைந்துள்ளது. எதிர்கால வடிவத்தையும் இறந்தகால வடிவத்தையும் இணைப்பதன் மூலம் நிகழ்காலம் உணர்த்தப்படும் முறையைக் கல்வெட்டுக்களில் காண்கிறோம். தன்மை ஒருமையில்

'ஏன்' என்ற ஈறும் தன்மைப் பன்மையில் 'ஓம்' என்ற ஈறும் கல்வெட்டில் வந்துள்ளன. அன், ஆன், ஆள், ஆர், ஆர்கள் விகுதிகள் கல்வெட்டில் காணப்படுகின்றன. எனவே கல்வெட்டுக்கள் தமிழ் மொழி வரலாற்றை அறிந்துகொள்ள மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

## 1.2.7 பிறமொழிக் கல்வெட்டுக்கள் (Inscriptions in other languages)

தமிழ்மொழியில் காணப்படும் கல்வெட்டுக்களேயன்றிப் பிற மொழிகளில் அமைந்த கல்வெட்டுக்களும் மொழி வரலாற்றிற்கு உதவுகின்றன. இலங்கையில் கிடைத்த சிங்கள மொழிக்கல்வெட்டுக்கள் மிகப்பல. அவற்றில் தமிழ்ப் பெயர்களும் தமிழ்ச்சொற்களும் காணப்படுன்றன. தமிழ் நாட்டில் பிற மொழிக் கல்வெட்டுக்கள் நிறைய உள. தமிழில் 'க' என்ற எழுத்து பல ஒலிகளாக ஒலிக்கின்றன. கால்டுவெல் தடையொலிகள் மொழிக்கு முதலிலும் இடையே இரட்டித்து வருகையிலும் 'K' போன்ற ஒலிப்பிலா ஒலியாகவும் மொழிக்கிடையே உயிர் எழுத்துக்களின் நடுவே ஒற்றையாய் வரும்போதும் மெல்லெழுத்தின் பின் வரும்போதும் 'G' போன்ற ஒலிப்புடை ஒலியாகவும் (Voiced) ஒலிக்கின்றது என்றும், இம் மாற்றத்தை உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச்சட்டம் (law of convertibility of surds into sonants) எனப் பெயரிட்டுள்ளார்.

## 1.2.8. அயல்நாட்டார் குறிப்புக்கள் (Foreigner's references)

வேற்று மொழிகளில் எழுதப்பட்டுள்ள தமிழ்ப் பெயர்களும் தமிழ்ச்சொற்களும் தமிழ்மொழி வரலாற்றை உருவாக்கப் பயன்படுகின்றன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பதஞ்சலியும் கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த வரருசியும் தென்னிந்தியா பற்றியும் தென்னிந்தியச் சொற்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றனர். குமரிலப் பட்டருடைய தந்திர வர்த்திகத்திலும் (Tantra varttika) பாலி, சமஸ்கிருதம், பிராகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் தமிழ் பற்றிய குறிப்புகள் நிறைய உள்ளன. பதஞ்சலி அவர்களும் காஞ்சி என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றார். கிரேக்கத்தில் damarica என்ற சொல் தமிழகத்தைக் குறிக்கிறது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிங்களமொழி மகாவம்சத்தில் damila என்ற சொல் உள்ளது. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த லீலாதிலகம் என்ற நூலில் பாண்டி நாட்டு, சோழ நாட்டு வழக்காறுகளையும்

உச்சரிப்பையும் காண்கிறோம் 17 ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த ராபர்ட் டி. நோபிலி 'ச' என்ற ஒலியை 'tch' என்றே எழுதுகிறார். பதினெட்டாம் நூற்றாண்டில் வந்த வீரமாமுனிவர் 'ச'வை 'S' என எழுதினார்.

## 1.2.9 கிளைமொழிகள் (Dialects)

மொழிக் குடும்ப (Language family) வரலாற்றிற்கு (History of languange) கிளைமொழிகளும் (Dialects) மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. திருநெல்வேலி கிளை வழக்கில் 'நீம்' என்ற முன்னிலைப் பன்மை வடிவம் காணப்படுகிறது. நிகழ்கால விகுதியாக 'த' என்பது சொல்லு-தான் போன்றவற்றில் காணப்படுகிறது. உத்தரம் என்ற சொல்லுக்குக் கைமரம் என்றும் விடை என்றும் இரு பொருள் உண்டு. இவ்வாறு இரு பொருள் தரக்கூடிய ஒரு சொல் கிளைமொழி வழக்கில் வெவ்வேறு சொற்களாக மாறிவிட்டன. இரு பொருள்களையும் இரு வேறு சொற்கள் உணர்த்தும் முறையில் 'உத்தரம்' என்றும் உத்தாரம் என்றும் இரு வேறு முறையில் ஒலிக்க முற்பட்டனர்.

மொழி வரலாற்றை எழுதப் பயன்படும் உத்திகளில் மிக்க ஆற்றல் உடையது ஒப்பியல் முறை (Comparative method) யாகும். ஒரு குடும்பத்தின் பல்வேறு மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் முறைதான் ஒப்பியல்முறை எனக் கருதுகின்றனர். பல மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து அவையனைத்தும் தொல்மொழி (Proto Language) ஒன்றிலிருந்து திளைத்திருக்க வேண்டும் என ஒப்பியல் ஆய்வு மொழியியலாளர்கள் கூறுகின்றனர். ஒப்பிலக்கணம் என்ற சொல்லை முதன் முதலாக வான்சிவேகல் என்ற ஜெர்மானிய அறிஞர்தாம் தம்நூலில் பயன்படுத்தினர். 1856 இல் கால்டுவெல் தம்முடைய திராவிட மொழி ஒப்பிலக்கண நூலை வெளியிட்டார். திராவிட மொழியியல் பேரறிஞர்கள் பர்ரோவும் எமனோவும் இணைந்து வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி (A Dravidian Etymological Dictionary) திராவிட மொழி உலகில் ஒப்பற்ற சாதனையாகும்.

## 1.3 தொல் திராவிட மொழியும் தமிழும் - பழங்காலத் தமிழ்

திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூலமொழியிலிருந்து பிறந்து வளர்ந்தவைகளாகும். மொழிக் குடும்பம் என்பது தொல் மொழி (Proto language) ஒன்றிலிருந்து பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் வெவ்வேறு மாற்றமடைந்து ஒரு

பிரிவு மொழியும் மற்றொரு பிரிவு மொழியும் வெவ்வேறு மொழியெனக் கருதும் பல மொழிகளின் தொகுதியாகும். எல்லாத் திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியினை மூலத்திராவிட மொழி அல்லது தொல் திராவிட மொழி (Proto Dravidian language) என வழங்கினர் தொல் திராவிடம் என்னும் ஒரு மொழி வழக்கில் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகிறது.

வான்சிலேகல் என்ற ஜெர்மானிய மொழியியல் அறிஞர் தாம் முதன் முதலாக ஒப்பிலக்கணம் என்ற சொல்லைத் தமது நூலில் பயன்படுத்தினார். இன்றைய ஒப்பு மொழியியலுக்கும் வரலாற்று மொழியியலுக்கும் வித்திட்ட பெருமை ரஸ்க் (Rask) பாப் (Bopp), கிரீம் (Grimm) ஆகியோரைச் சாரும். கி.பி.1837இல் பென்பே என்பார் மீட்டுருவாக்கத்தின் (Reconstruction) இன்றியமையாமையைப் பற்றிப் பேசி இருந்ததும் அது சிலேகல் காலத்தில்தான் நடைமுறைக்கு வந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கவையாம். பாப் அவர்கள் இந்தோ-ஐரோப்பிய இலக்கணம் ஒன்று எழுதினார். கி.பி.1817இல் அடெலுங் (J.c. Adelung) என்பாரும் கி.பி. 1791இல் பல்லாஸ் (Pallas) என்பாரும் பல்வேறு மொழிகளிலிருந்து சொல் அட்டவணைகளைத் தயாரித்து இருந்தனர். இவ்வட்டவணைகள் பின்னர் ஒப்பிலக்கணம் எழுதுவதற்குத் துணையாக இருந்தன. கி.பி. 1896இல் வில்லியம் ஜோன்ஸ் (Willam Jones) சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் ஆகியவை ஒரே இனத்தைச் சார்ந்தவை என்ற கருத்தை வெளியிட்டார். கி.பி.1856 இல் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை வெளியிட்டார். திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பெரும் பிரிவாகப் பிரிப்பர்.

1. **தென் திராவிட மொழிகள்**
2. **நடுத்திராவிட மொழி**
3. **வட திராவிட மொழி**

## திராவிட மொழி வழங்கும் இடங்கள்

### 1. தென் திராவிட மொழிகள்

திராவிட மொழிகளில் மிகப் பழமையான இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட தமிழ்மொழி தமிழ் நாட்டில்

மட்டுமின்றிப் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், பீஜித்தீவு, இலங்கை, (ஸ்ரீ லங்கா), தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கயானா, மடகாஸ்கர், திரினிடால் போன்ற நாடுகளில் பேசப்படுகின்றது. மலையாள மொழி கேரளத்தில் மட்டுமின்றி இலட்சத்தீவிலும் பேசப்படுகின்றது. கன்னட மொழி கர்நாடக மாநிலத்தில் பேசப்படுகின்றது. கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் பேசப்படும் இம்மொழியைக் கொடகு, கூர்க்கி, கோதகி போன்ற பல பெயர்களால் வழங்குவர். துளு மொழி கர்நாடக மாநிலத்திலுள்ள மங்களூர்ப் பகுதியில் பேசப்படுகின்றது. கொடகு மொழியையும் துளு மொழியையும் இலக்கிய வளமில்லா மொழி வகையுள் (non-literary languages) அடக்குவர். தோடா மொழி தமிழகத்திலுள்ள நீலகிரி மாவட்டத்தில் தோடா பழங்குடி மக்களால் பேசப்படுவதாகும். இது திராவிட மொழிகளிலேயே அதிக ஒலிகளைக் கொண்ட மொழியாகும். தோடா மொழியைப் போன்று கோத்தா மொழியும் நீலகிரி மாவட்டத்தில் வாழும் கோத்தா பழங்குடியினரால் பேசப்படுவதாகும். இவ்விரண்டு மொழிகளுக்கு இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. நீலகிரி மாவட்டத்தில் இம் மொழிகளைத் தவிர பணியர் பழங்குடி மக்கள் பேசும் பணிய மொழியும், பெட்ட குறும்பர் பழங்குடி மக்கள் பேசும் பெட்ட குறும்பா மொழியும் தனி மொழிகளாகக் (distinct languages) கருதப்படுகின்றன. பழங்குடி இருளர் மக்கள் பேசும் இருளப்பேச்சைத் தமிழின் கிளைமொழியாகவும் தனி மொழியாகவும் கருதுகின்றனர். முள்ளுகுறும்பர் என்ற பழங்குடி மக்கள் பேசும் பேச்சை மலையாள மொழியின் கிளைமொழியாகவும் தனி மொழியாகவும் கருதுகின்றனர். கசவர் பழங்குடி மக்கள் பேசும் பேச்சையும் கன்னடமொழியின் கிளைமொழியாகவும் தனிமொழியாகவும் கருதுகின்றனர். காட்டு நாயக்கர் எனும் பழங்குடி மக்கள் பேசும் பேச்சுக் கன்னடமொழியின் கிளை மொழியாகும். திராவிட மொழியியல் வல்லுநர்கள் இம் மொழிகளைப் பற்றி முடிந்த முடிவுக்கு வந்த பின்னர், திராவிட மொழிகள் பட்டியலில் இம்மொழிகளும் இடம் பெறும். மேலே கண்ட அனைத்துப் பழங்குடி பேச்சுக்களும், மொழிகளும் தமிழகத்திலுள்ள நீலகிரி மாவட்டத்தில் பேசப்படுவனவாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வு மையம் (Centre of Advanced Study in Linguistics) இம் மொழிகள் அனைத்தையும் டாக்டர் பட்ட ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. கர்நாடக மாநிலத்தில்

தென்கனராவில் பேசப்படும் கொரகா மொழியைப் பற்றியும் டாக்டர் சங்கரபட அவர்கள் ஆராய்ந்துள் ளார். இவர் இம்மொழியினைத் தனிமொழியாகக் கருதுகின்றார். பரந்த கள ஆய்வினை மேற்கொண்டால் இன்னும் பல மொழிகள் இப்பிரிவில் அடங்க வாய்ப்புண்டு.

## 2. நடுத்திராவிட மொழி

நடுத்திராவிட மொழியான தெலுங்கு ஆந்திர மாநிலத்திலத்திலும் தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களிலும் பேசப்படுகின்றது. இந்திய நாட்டில் இந்தி மொழிக்கு அடுத்தபடியாக அதிக மக்களால் பேசப்படும் மொழியாகும். நடுத்திராவிட மொழிகளில் இலக்கிய வளமுள்ள மொழி இஃதொன்றேயாகும் . திராவிட மொழிகளில் தெலுங்கு மொழிக்குச் சிறந்த இடம் உண்டு. கோண்டி மொழி (Gondi language) ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரம் போன்ற நான்கு மாநிலங்களில் பேசப்படுகின்றது. திராவிட பழங்குடி மொழிகளுள் அதிகமான மக்களால் பேசப்படும் கோண்டி மொழிக்குப் பல கிளைமொழிகள் உண்டு. கூயி மொழி (Kui) ஒரிஸ்ஸா மாநிலத்தில் பேசப்படுகின்றது. இம்மொழி பேசுவோர்களைக் 'கோந்தி' அல்லது 'கந்த்' மக்கள் என வழங்குவர். குவி (Kuvi) மொழி ஒரிஸ்ஸா, ஆந்திரப் பிரதேசங்களில் பேசப்படுகின்றது. இம்மொழிக்கும் கூயி மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கோலாமி (Kolami) மொழி ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றது. இம்மக்களைப் பற்றிய குறிப்பு ஸ்டீபன் ஹிஸ்லாட் என்பவரால் தெரிய வந்தது. 'பர்ஜாஸ்' என்று வழங்கப்படுகின்ற பழங்குடி மக்கள் பர்ஜி (Parji) என்ற மொழி பேசுகின்றனர். இம்மொழி பேசும் பழங்குடி மக்கள் மத்தியப் பிரதேசத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்தில் வாழ்கின்றனர். 'கொண்டதொரா' என்றும் கூபி என்றும் வழங்கப்படுகின்ற பழங்குடி மக்கள் கொண்டா அல்லது கூபி (Konda or Kubi) என்ற மொழி பேசுகின்றனர். இம்மொழி பேசுவோர் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர். ஒரிஸ்ஸாவைச் சார்ந்த கோரபுட் மாவட்டத்திலும் இம்மொழி பேசுவேர் வாழ்கின்றனர். இம்மொழி குயி-குவி மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது. கதபா (Gadaba) என்ற மொழி ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த ஸ்ரீகாகுளம் என்ற மாவட்டத்தில் பேசப்படுகின்றது. இதனைக் கொண்கொர் கதபா என்றும் வழங்குவர்.

நாயக்கி (Naiki) மொழி மகாராஷ்டிராவைச் சார்ந்த பந்தா பகுதியிலும் பெரார் பகுதியிலும் வாழும் பழங்குடி மக்களால் பேசப்படுகின்றது. பெங்கோ (Pengo) மொழி ஒரிஸ்ஸாவைச் சார்ந்த கோரபுட் மாவட்டத்திலும் தசமந்தபூர் பகுதியிலும் காலஹண்டி பகுதியிலும் வாழும் மக்களால் பேசப் படுகின்றது. மண்டா மொழி ஒரிஸ்ஸாவிலுள்ள கோரபுட் மாவட்டத்தில் வாழும் பழங்குடி மக்களால் பேசப்படுகின்றது.

## 3. வட திராவிட மொழி

வட திராவிட மொழியான குருக் மொழி (Kurukh) ஒரோவொன் என்ற பழங்குடி மக்களால் பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றது. சோட்டா - நாக்பூர் பகுதியில்தான் மிக அதிகமாக வாழ்கின்றனர். மாலர் என்று வழங்கப்படுகின்ற பழங்குடி மக்களால் மால்தோ (Malto) மொழி மேற்கு வங்கத்திலுள்ள இராஜ்மகால் குன்றுப் பகுதியிலும் பீஹாரிலுள்ள சந்தால் பர்ஹணா பகுதியிலும் பேசப்படுகிறது. இவர்கள் வாழுமிடத்தைக் கொண்டு டார்டர் கால்டுவெல் அவர்கள் இம்மொழியை 'இராஜ்மஹால்' என வழங்கினார். வடதிராவிட மொழிகளில் ஒன்றான பிராகூய் (Brahui) இந்தியாவிற்கு வெளியே மேற்குப் பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தான் பகுதியில் பேசப்படுகின்றது. பல நூற்றாண்டுக் காலமாக இவர்கள் தங்கள் மொழியைப் பாதுகாத்து வருகின்றனர்.

## தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

தென்திராவிட மொழிகளில் அஃறிணை ஒன்றன்பாலிலிருந்து வேறுபட்ட உயர்திணைப் பெண்பால் ஒருமை விகுதியைப் பெற்றிருப்பது தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும். தெலுங்கு, குவி, குயி போன்ற மொழிகளில் நிகழ்வது போன்ற மெய் இடம் பெயரல் (Metathesis) தென் திராவிட மொழிகளில் இல்லை.

இகர எகர உகர ஒலி மாற்றங்கள் (Operation of i/e and u/o alternation) குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இவ்வொலி மாற்றங்கள் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளிடையே மட்டுமின்றித் தமிழ் மொழியின் வரி வடிவத்திற்கும் பேச்சு வழக்கிற்குமிடையே நிகழ்வதைக் காணலாம். தமிழ், மலையாள மொழிகளில் வரும் 'இ' 'உ' முறையே தெலுங்கு, கன்னட மொழியில் 'எ' 'ஒ' வாக மாறுகிறது. தொல்திராவிடத்தில் எதிர்மறை விகுதியாக 'ஆ' இருந்தது. பின்னர் தென் திராவிடத்தில் தகரமும் இணைந்தது. தொல்திராவிட காலங்காட்டும்

இடைநிலைகளான -த்- -ந்த்- -த்த்- -இ- போன்றவை தென்திராவிட மொழிகளில் பயின்று வருவதைக் காணலாம். தென் திராவிட மொழிகளில் வியங்கோள் விகுதிகள் உள்ளது. எச்ச வடிவங்களோடு வேண்டு "உம்' விகுதி சேர்ந்து உடன்பாட்டுப் பொருளையும் 'ஆ'விகுதி சேர்ந்து எதிர்மறைப் பொருளையும் கூறுதல் தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும்.

தென் திராவிட மொழிகளில் ணகரமும் ளகரமும் தனி ஒலியன்களாக உள்ளன. நடுத்திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் ணகரம் னகரத்துடனும் ளகரம் லகரத்துடனும் இணைந்துவிட்டன. னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் காட்டுகின்றது. மகரம் பன்மையைக் காட்டுவதால் ஒருமைக்குரிய னகரம் முன்னர் இருந்திருக்க வேண்டும். 'நீன்' என்றிருந்து னகரத்தை இழந்து 'நீ' என்றாகியிருக்க வேண்டும். திராவிட மொழிகளில் இறந்தகாலம், இறப்பில்லாக் காலம் என்ற பகுப்பே அடிப்படையான காலப் பாகுபாடாகும். நிகழ்காலமும் எதிர்காலமும் வேறு படுத்தப்பட்டாலும் அவற்றிடையே மயக்கம் மிகுதியாக உள்ளது. 'அவன் செய்து' என்பவற்றில் சூழ்நிலையைக் கொண்டு காலத்தைப் புரிந்து கொள்கிறோம். துகரம் இறந்த காலம் காட்டும் இடைநிலையாகக் கருதப்பட்டது. கு, பு இறப்பில்லாக் காலத்தைக் காட்டும் விகுதியாகக் கருதப்பட்டது. இறப்பில்லாக் காலத்தில் எதிர் காலத்தைக் காட்டப் பகரம் மிகுதியாக வருகிறது. ககரம் சொல்லாக்க அசையாக எல்லா வினைவேர்களுடன் எதிர்கால முற்றாக வரும்போது வரலாம் என்றும் எதிர் காலம் பகரத்தின் மாற்று வடிவமான வகரத்தால் காட்டப்பெறும் எனச் சேனாவரையர் சுட்டிக் காட்டுகிறார். உருபொலியன் விதிப்படித் தகரம் என்பது ன், ல் பிறகு வருகையில் நுனியண்ண வெடிப்பொலியாகிறது. ண், ள் பின்வரும்போது நாவளை வெடிப்பொலியாகிறது. உண்டு, நின்று என்பவற்றில் உள்ளது தகரமே. இவ்விதிக்கு உட்படாத வடிவங்களைத் தகரம் பெற்றிருந்தாலும், இறப்பில்லாக் காலத்தையே சுட்டும்.

ஏனைய தென் திராவிட மொழிகளோடு ஒப்பிடுமிடத்து வடமொழித் தாக்குதல் மிகக் குறைந்த மொழி தமிழாகும். வடமொழியை மேற்கொண்டாலும் அதனைத் தமிழ் ஒலியமைப்புக் கேற்ப மாற்றி அமைத்துக்கொண்டனர். நன்னூலும் இதற்கு விதி வகுத்துச் செல்கிறது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் தற்காலத்

தமிழுடன் வேறுபட்ட போதிலும் பழங்காலத் தமிழுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. தொன்மையான வடிவங்களையும் இலக்கணக் கூறுகளையும் பேணிப் பாதுகாப்பதால், தமிழ் மொழி திராவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகிறது. திராவிட மொழிச் சொற்களை மீட்டுருவாக்கம் செய்து, தொல் திராவிட வடிவைக் காண்கிறோம். அப்படிப்பட்ட தொல் திராவிட வடிவங்கள் (Proto Dravidian Forms) பெரும்பாலும் தமிழோடு ஒத்திருப்பக் காண்கிறோம்.

கால்டுவெல் அவர்களும் தமது திராவிட மொழி ஒப்பிலக்கண நூலில் தமிழ் மொழிக்குச் சிறப்பான இடத்தை அளித்துள்ளார். தொல்தமிழ் மலையாள காலத்திற்குப் பிறகு தமிழில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. மொழி முதல் ஞகரமெய் நகரமெய்யாக மாறல் தொல்தமிழிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். தொல்திராவிடத்தில் ஞகர முதன்மொழிச் சொற்கள் தமிழில் நகர மெய்யாக உள்ளன. இதனால்தான் பழந்தமிழில் ஞரல்- நரல் ஞால்-நால், ஞாண்-நாண், ஞெகிழ்-நெகிழ் - போன்ற ஞகர-' நகர உறழ்ச்சி (Free variation) காணப்படுகின்றது. தொல் திராவிடத்தில் ஆண்பாலுக்குரிய விகுதியாகக் 'கன்' பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும்' முதுக்கன் என்ற சொல் மலையாள மொழியில் காணப்படுகின்றது. இதுவே பழந்தமிழில் 'முதியன்' என்று காணப்படுகிறது. திருக்குறள் 715 ஆம் பாடலில் முதுவர் என்ற பன்மை வடிவம் காணப்படுவதால் அதற்கு இணையாக முதுவன் என்ற சொல் பயின்று வந்திருக்க வேண்டுமென டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள் குறிப்பிடுகின்றார். 'கன்' என்ற வடிவம் 'வன்' எனப் பழந்தமிழ் காலத்திற்கு முன்பே' மாறியிருக்க வேண்டும். முன்னிலைப் பன்மை இடப் பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவம் 'நிம் எனத் தொல் திராவிடத்தில் இருந்திருக்க வேண்டும். மலையாளத்தில் தொல் திராவிட வடிவம் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். பழந்தமிழில் வழங்கும் வடிவம் 'நும்' ஆகும். இங்கு இகர உயிர் உகர உயிராக மாறியுள்ள மாற்றம் தமிழுக்கே உரிய தனி மாற்றமாகும்.

## 1.5 பழங்காலத் தமிழ்

### 1.5.1 தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் மொழி

ஒரு நாட்டின் வரலாற்றில் கல்வெட்டுக்கள் இடம் பெறுவதைப் போல, ஒரு மொழியின் வரலாற்றிலும் அவை இடம் பெறுகின்றன. குகைகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களாதலால் இக்கல்வெட்டுக்களைக் குகைக் கல்வெட்டுக்கள் என்றும்

தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் என்றும் கூறுவர். தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் பல குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குகைக் கல்வெட்டுக்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களுடன் ஒத்துள்ளன. கி.பி. 1906 இல் கெமைடு என்னும் ஆங்கிலேயர் மருகால் தலையிலுள்ள கல்வெட்டைக் கண்டுபிடித்தார். கே.வி. சுப்பிரமணிய அய்யர் பன்னிரண்டு இடங்களிலிருந்த முப்பது கல்வெட்டுக்களை ஆராய்ந்தார். இருபத்தொரு இடங்களிலிருந்த எழுபத்தொரு பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவற்றில் உள்ளது தமிழ் எழுத்துக்களே என்றார். நாகசாமி போன்றோர் இதனைத் 'தமிழ்' என வழங்குகின்றனர். ஐராவதம் மகாதேவன் அவர்கள் குகைக் கல்வெட்டுக்களைத் தமிழ்க் கல்வெட்டுக்களாகக் கருதுவதோடு, சங்க இலக்கியச் செய்திகள் இக்கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருந்தமையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

பிராமி இந்திய வரிவடிவங்களின் தாய் எனக் கருதப்படுகிறது. பிராமி எழுத்து முறையில் வட பிராமி, தென் பிராமி என இரு வகையுண்டு, தென்பிராமியைத் 'திராவிடி ' என்றும் வழங்குவர். தென்னிந்தியப் பிராமிக்கும் வடஇந்தியப் பிராமிக்கும் வரிவடிவில் வேறுபாடு உண்டு தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களில் தமிழுக்கே தனிச் சிறப்பாக உள்ள ழ, ற, ன என்னும் எழுத்துக்களும் காணப்படுகின்றன. ஐ, ஔ, ஆயுதம் போன்ற உயிர்களும் காணப்படவில்லை. குழிந்துரசொலியும் பிற விடங்களில் மூலத்திராவிட இடையண்ண வெடிப்பொலியாகவே மாறி விடுகின்றது. பிராகிருதச் சொற்கள் தமிழில் கலந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுக்களும் சிலம்பு, மணிமேகலை எனும் சான்று பகர்கின்றன. கெ.வி. சுப்பிரமணிய அய்யர், எச். கிருட்டின சாஸ்திரி, நாராயண ராவ், ஐராவதம் மகாதேவன், மயிலை சீனி வேங்கடசாமி போன்றோர் இக் கல்வெட்டுக்களைப் படித்துப் பொருள் கூறியுள்ளனர்.

## தொல்காப்பியத் தமிழ்

தமிழில் காணப்படும் மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். திராவிட மொழிகளிலே இந்நூல் மிகப் பழமையான நூலாகக் கருதப்படுகின்றது. எழுத்து சொல், பொருள் என்ற அதிகாரங்களையும் அவற்றில் கூறப்படும்

செய்திகளையும் நோக்கின் இவ்வாசிரியரின் நுண்மாண் நுழை புலத்தை நன்கு அறியலாம். தொல்காப்பியத்தின் பகுப்புமுறை இன்றைய மொழியியலாரின் பகுப்பு முறையைப் பெரிதும் ஒத்துள்ளது. எழுத்துக்களின் வரன்முறை பற்றிக் கூறும்போது,

'ரகார ழகாரம் குற்றொற் றாகா' (49)

ரகாரமும் ழகாரமும் தனிக் குற்றெழுத்தையொட்டி மெய்யெழுத்தாக வாரா என்பது தமிழ் மொழியின் அமைப்பை எந்த அளவிற்கு நுணுகி ஆராய்ந்துள்ளார் என்பதைப் புலனாக்கும். தொல்காப்பியர் பிறப்பியலில் எழுத்துக்களின் பொதுப் பிறப்பைக் கூறியபின், உயிர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிக் கூறுகிறார். உயிர் எழுத்துக்களின் பொதுப் பிறப்புப் பற்றியும் உயிர் எழுத்துக்களின் சிறப்புப் பிறப்புப் பற்றியும் விளக்குகிறார். அகரமும் ஆகாரமும் வாயைத் திறத்தலாலே பிறக்கின்றன. இவற்றைக் கீழ் நடு உயிர் (low central vowels) என்பர். அ, ஆ இவ்விரண்டும் அங்காப்புயிர் (பிறப்.3), என்றும் இ, ஈ, எ, ஏ, ஐ முன்னுயிர்கள் (front vowels) என்றும் (பிறப்.4), உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை குவியுயிர் (பிறப்.5) என்றும் விளக்கப்பட்டுள்ளன.

## மெய்யொலிகளின் பிறப்பு

**உரசொலிகள் (Fricatives)**

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் இரண்டாவது வகை ஒலிகள் அண்பல் உரசொலியும் (alveolar, fricative), நுனிநா உரசொலியும் (apical fricative) ஆகும். அவை முறையே ரகரமும் ழகரமும் ஆகும்.

'நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.' (பிறப். 13)

**மருங்கொலி: (Lateral)**

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் மூன்றாவது வகை ஒலிகள் லகரமும் ளகரமும் ஆகும்.

**ஈரிதழ் ஒலி (Bilabial)**

பகர மெய்யும் மகர மெய்யும் ஈரிதழ் ஒலிகளாகும். மேல் உதடும் கீழ் உதடும் தம்மில் பொருந்தப் பகரமும் மகரமும் பிறக்கும்.

## பல்லிதழொலி (Labio-dental)

மேற்பல்லும் கீழ் உதடும் கூட வகரம் பிறக்கும். த, ந - நுனிநாப் பல்லொலிகளான தகர மெய்யும் நகர மெய்யும் 'பல்லெயிற்றொலி' (gingival) களாகும். 'பல் முதல் மருங்கின்' 'நாநுனி பரந்து ஒற்ற' அவை பிறக்கும் என்கிறார் தொல்காப்பியர். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்று சார்பெழுத்துக்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

## எண்ணுப் பெயர்கள் (Numerals)

**ஒன்று:** இதன் மாற்றுருபுகளாக (allomorphs) ஓர், ஒரு, ஒன்று ஆகிய வடிவங்கள் காணப்படுகின்றன.

**இரண்டு:** இதன் மாற்றுருபுகள் இரு, இர், ஈர், இரண்டு, 'இரு' மெய்ம் முதல் சொற்களின் முன் வருகின்றன.

**மூன்று:** இதன் மாற்றுருபுகள் மு, மூ, மூன்று.

**நான்கு:** இதன் மாற்றுருபுகள் நால், நான்கு.

**ஐந்து :** இதன் மாற்றுருபுகள் ஐ, ஐந், ஐம், ஐந்து.

**ஆறு:** இதன் மாற்றுருபுகள் அறு, ஆறு.

**ஏழு:** இதன் மாற்றுருபுகள் எழு, ஏழ்.

**எட்டு:** இதன் மாற்றுருபுகள் எண், எட்டு.

**ஒன்பது:** இதன் மாற்றுருபுகள் ஒன்பதின் - ஒன்பதிற்று

**பத்து:** இதன் மாற்றுருபுகள் (பது - பஃது) பன், பதின் , பான், பத்து . 'ஆம்பல்' (393) 'தாமரை' (393), 'வெள்ளம்' (393) தொல்காப்பியத் தில் பேரெண்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## வேற்றுமை

'வேற்றுமை தாமே ஏழெனமொழிப' (தொ.சொ.62) என்று கூறுகிற தொல்காப்பியர் அடுத்த நூற்பாவிலேயே

'விளி கொள் வதன்கண் விளியொ டெட்டே' (தொல்.சொல்.63)

என்று விளியுடன் வேற்றுமை எட்டு என்கிறார்.

## முதல் வேற்றுமை

தொல்காப்பியர், 'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' - (தொல்.சொல்.65) எனக் கூறுவதால் முதல் வேற்றுமையைப் பெயர் என்றும் எழுவாய் என்றும் பொருளின் பெயரால் குறிப்பிட்டுள்ளார். எழுவாய் வேற்றுமை என்றதனால் முதல் வேற்றுமை எழுவாயாகச் செயலாற்றுவது மட்டுமின்றி அவ்வேற்றுமை ஏற்கும் அறுவகைப் பயனிலைகளையும் கூறியுள்ளது (தொ. சொ. 66).

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும். இரண்டாம் வேற்றுமையின் பொதுத் தன்மையை 'எவ்வழிவரினும் வினையே, வினைக்குறிப்பு அவ்விரு முதலில் தோன்றும்' (55) என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உரையாசிரியர்கள் இவ்வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்பர்.

'காவ லோனக் களிறஞ் சும்மே'

என்பதில் இரண்டாம் வேற்றுமைப் பொருள் வந்துள்ளது. இங்கு அகரம் இரண்டாம் வேற்றுமை உருபாக வந்துள்ளது. மலையாளத்தில் 'அகரமும், கன்னடத்தில் 'அம்'மும் இரண்டாம் வேற்றுமை உருபுகளாக வந்துள்ளன.

## மூன்றாம் வேற்றுமை

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமையின் உருபாக 'ஒடு' என்றும் அது வினைமுதல், கருவி என்ற அடிப்டையில் தோன்றும் என்றும் கூறுகிறார். தொல்காப்பியனார் வேற்றுமை மயங்கியலில் 'ஆன்' என்னும் உருபையும் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் 'மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி' (576) என்று வேற்றுமை மயங்கியலில் குறிப்பதாலும் மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளிலும் வரும் என்பது பெறப்படுகிறது. சங்க காலத்தில் 'ஒடு' உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது. கருவிப் பொருளை உணர்த்த 'ஆன்' உருபு பயன்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் 'ஆன்' என்பது 'ஆல்' ஆயிற்று. 'ஒடு' என்பது 'ஓடு' ஆயிற்று. மூன்றாம் வேற்றுமை உருபுகளாக நன்னூலார் ஆன், ஆல், ஒடு, ஓடு என்ற நான்கினையும் கூறுகிறார். இன்று 'ஒடு' விற்குப் பதில் 'உடன்' என்ற சொல்லுருபு வழங்கப்படுகின்றது.

## நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமை உருபு 'கு' என்றும் அது எப்பொருளாயினும் கொள்ளும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். 'க்கு' இவ்வேற்றுமைக்கு மாற்றுருபாகும். இவ்வேற்றுமை நோக்கு, கொடை, எல்லை, முறை ஆகிய பொருள்களில் வருவதைக் காணலாம். 'கு' பெரும்பாலும் நோக்கற் பொருளில் வழங்கப்பட்டது. இன்று இவ்வேற்றுமைக்கு 'ஆக' 'பொருட்டு' என்ற சொல்லுருபுகள் வழங்கப்படுகின்றன.

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' இது 'இதனின் இற்று இது' (561) என்ற வாய்பாட்டில் வரும். ஆனால், தொல்காப்பியர் அடுத்த நூற்பாவில் ஒப்புப் பொருள், நீங்கற் பொருள், அச்சப் பொருள் ஆகியனவும் கூறியுள்ளார். ஒப்புப் பொருளுக்கு இருபத்திமூன்று சொற்களும் ஏனையவற்றிற்கு நான்கு சொற்களும் குறிப்பிட்டுள்ளார். இன்று 'இருந்து' 'நின்று 'என்ற சொல்லுருபுகளை 'இல்' உருபோடு வழங்குகிறோம்.

## ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை மட்டும் பெயர்த் தொடரைப் பற்றியதாகும். ஆறாம் வேற்றுமையின் உருபு 'அது' எனவும் அது 'தன்னிலும் பிறிதினும் இதனது இது' என்னும் கிழமையில் தோன்றும் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார். நச்சினார்க்கினியர் ‘ஆது' என்பதையும் ஆறாம் வேற்றுமை உருபாகக் கருதுகின்றார். அது, ஆது, அ ஆகியவற்றை ஆறாம் வேற்றுமையின் உருபாக நன்னூலார் குறிப்பிடுகின்றார். 'அது' ஒருமை, பன்மை வேறுபாடின்றி இரண்டிற்கும் வழங்கியது. தற்பொழுது 'உடைய' என்ற சொல்லுருபு வழங்கப்படுகிறது.

## ஏழாம் வேற்றுமை

தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமையின் உருபு 'கண்' என்றும் அது வினை செய்யிடம், நிலம், காலம் ஆகிய மூன்று பொருளில் வரும் என்றும் கூறுகிறார். யூல்ஸ் பிளாக் (Jules Bolch) 'கண்' என்பதை கு + அண் எனப் பிரித்தற்குரியது எனவும் 'அண' 'நடுவில்' என்ற பொருள் உடையது எனவும் கருதுகிறார். அடுத்த நூற்பாவில் பத்தொன்பது பின்னிணைச் சொற்களைத் தொகுத்து 'அதன்பால' என்கிறார். இளம்பூரணர் இவற்றை வேற்றுமை உருபுகளாகக் கருதுகிறார். நன்னூலார் இவற்றை 'இடப்பொருள் உருபே' என்கிறார் நச்சினார்க்கினியர் வேற்றுமை உருபுகளாகக் கருத,

தெய்வச்சிலையாரும் கல்லாடரும் பெயர்களாகவும் உருபுகளாகவும் செயலாற்றுகின்றன என்கின்றனர்.

## எட்டாம் வேற்றுமை

இவ்விளி வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. பெயர்ச் சொல்லின் ஈறு கெட்டும் திரிந்தும் பிற ஒலிகள் ஈற்றில் இணைந்தும் விளிவேற்றுமை வடிவங்கள் அமைகின்றன. ஏனைய வேற்றுமை வடிவங்கள் ஒரே வகையாக அமைய, விளிவேற்றுமை வடிவங்கள் பல்வேறு வடிவங்களாக அமைதலைக் காணலாம். தொல்காப்பியர் விளி வேற்றுமைக்குத் தனி இயலையே அமைத்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## சங்ககாலத் தமிழ்

தொல்காப்பியத் தமிழில் காணப்பட்ட கூறுகள் சங்ககாலத் தமிழில் காணப்படுகின்றன. சில மாற்றங்களைத் தவிர சங்ககாலத் தமிழ் முழுக்க முழுக்க தொல்காப்பியத் தமிழாகும். சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வந்துள்ளன. மெய்யெழுத்துக்களுள் க, த, ப, ம, என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க இலக்கியத்திலும் இவ்வைந்து மெய்யெழுத்துக்களோடு எல்லா உயிர்களும் இணைந்து மொழி முதல் வந்துள்ளன. சங்க இலக்கியத்தில் ஞகரம் 'அ எ ஒ' வோடு இணைந்து மொழி முதலில் வருவதுடன் 'அ இ' யோடு இணைந்தும் மொழி முதலாகிறது. யகரம் ஆவோடு மட்டுமல்லாது அகரத்தோடும் ஊகாரத் தோடும் இணைந்து மொழி முதலில் வந்துள்ளது. பதினொரு உயிர் எழுத்துக்களும் சங்க இலக்கியத்தில் மொழி இறுதியில் வருகின்றன. 'ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு மெய்களுள் ஞகரம் தவிர ஏனைய பத்தும் சங்க இலக்கியங்களில் மொழிக்கு இறுதியாக வந்துள்ளன. உரையாசிரியர்கள் 'உறிஞ்' என்னும் சொல்லை உதாரணம் காட்டுகின்றனர்.

சங்க இலக்கியங்களில் வேறு சில மெய்களும் -'ண்ம்' - 'ய்ம்' என்பனவும் சொல் இறுதியில் ஈரொற்றாய் அமைந்து வந்துள்ளன. "செய்யூ' என்ற வடிவம் இறந்த காலம் காட்டுவதாகும். 'ஊ' காரத்தைச் சொல்லிறுதியாகப் பெற்ற அரிய சொல்லாகும். 'செய்யூ' என்பது 'செய்யா' என மாறியது. மூக்கொலியை இறுதியாகயுடைய

சொற்களில் மூக்கொலி மருங்கொலியாயிற்று. 'நீயிர்' 'நீர்' என மாறி வந்துள்ளது (புற. 110.6.நற்.48.8). 'நும்' என்பது 'உம்' 'உமக்கு' என மாறியுள்ளது. (நற். 368.3, புற 45.5), முன்னிலை ஒருமை வடிவமாக 'உன்' (அக.222.2) வந்துள்ளது. 'நின்' (புற.29, குறுந்.22.5) என்பது 'நுன்' என்று மாறிய பின் 'ந'கர மெய் கெட்டோ 'உம்' மிலிருந்து ஒப்புவமையாக்கத்தினால் வந்த வடிவமாகும். எதிர்மறை வினையெச்ச வாய்பாடாகப் பழந்தமிழில் பெரும்பான்மையாக வருவது 'செய்யாது' எனும் வாய்பாடாகும்.

பழந்தமிழில் இவ்விரு சொற்களும் முறையே சிறுவன், முதியன் என்றே வழங்கி வந்துள்ளன. மொழியிடையில் வரும் 'ய' கரம் தொல்திராவிடத்தில் சில சொற்களில் 'ச'கரமாக இருந்திருக்க வேண்டும் என்பர் ஒப்பிலக்கணத்தார். 'பெயர்' என்ற வடிவம் 'பெசர்' என்றே இருந்திருக்க வேண்டும். அவ்வாறே 'உயிர்' என்பது 'உசிர்' என்றும் 'இயை' என்பது இசை என்றும் இருந்திருக்க வேண்டும் என்பர். இடைக்கால நூல்களில் 'உசிர்' 'இசை' போன்ற சொற்களைக் காணலாம். வீரசோழிய உரையாசிரியரும் 'ய' கரம் 'ச' கரமாக மாறும் என்று கூறி, 'உசிர்' போன்ற சொற்களை எடுத்துக்காட்டுகிறார். எனவே பழைய சகரமே இடைக்காலத்தில் வழங்கியதைக் காண்கிறோம். ஒரு காலத்தின் பேச்சு வழக்குப் பின்னர் இலக்கிய வழக்கமாக மாறுவதும் உண்டு.

**ஐந்தாம் வேற்றுமை உருபு:** இன் >இல் ஆயிற்று.

**னகரம் ஞகரமாதல்:** 'ன' கரமானது 'ஞ' கரமாகிறது.

அன்னை அஞ்ஞை

முன்னை > முஞ்ஞை.

**'ஆ''காரம் 'ஓ' காரமாதல்:** விகுதியில் வரும் 'ஆ' 'ஒ'வாக மாறுகிறது.

சென்றார் > சென்றோர்

வந்தார் > வந்தோர்

**விகுதி முதல் அகரம் ஓகாரமாதல்:**

கிழவன் > கிழவோன்

இளையர் >இளையோர்

**யகர ஒலி மறைதல்:**

ஆகாரத்திற்கு முன் வரும் யகர மெய் கெட்டுள்ளது ஓர் ஒலி மாற்றமாகும்.

யாடு > ஆடு - நற். 266.5.

யாமை > ஆமை புற 387.1.

யார் > ஆர்-நற்.119.4.

யாற்று >ஆற்று ; பதிற். 43.15. குறுந் 24.3

**உறழ்ச்சி (Free variation):**

பழந்தமிழில் உறழ்ச்சி சற்று மிகுதியாகவே உள்ளது.

அகல்பு - பதிற் 43

அகல்வு- நற்.388

தமிழ் மொழியில் காணப்படும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது பதிலிடு பெயர்களாகும் (Pronouns). இதனைத்தான் தொல்காப்பியர்,

'தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்

அம்மூ விடத்தும் உரிய என்ப. (511) - எனக் கூறிப் போந்தார்.

தான், தாம் சில இடங்களில் அழுத்த அசைநிலையாகவும் தற்சுட்டுப் பெயராகவும் பயன்படுகின்றன.

'அளிதோ தானே தோழி' - நற்.114: புற 5.

'அன்னை தான் அறிந்தன்று' - நற். 175.

முன்னிலைப் பன்மை ‘நீம்' பழந்தமிழில் இடம் பெறவில்லை. 'நீம்' சீவகசிந்தாமணியிலும் 'நீங்கள்' அப்பர் தேவாரத்திலும் வந்துள்ளன. எனவே நீமும் நீங்களும் இடைக் காலத்தில்தான் வந்துள்ளன எனக் கூறலாம். பலர்பால் விகுதியாகப் பெயரில் 'மார்' விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தோழிமார்-அக.15, 9

ஐயன்மார் -புற.342.15.

**வினா இடப்பெயர்கள் (Interrogative pronoun)**

யாங்ஙனம்-நற்.184.

யாண்டு-புற.86.

போன்றவை சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன. லகரம் ளகரமாக மாறும் மாற்றம் தமிழ், மலையாளம், கோத்தா, தோடா ஆகிய நான்கு மொழிகட்குமே உரிய

பொது மாற்றமாகும். எண்ணுப் பெயர்கள் தொண்டு (ஒன்பது) கோடி சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் 'கோடி' என்ற எண்ணுப் பெயரைக் குறிப்பிடவில்லை.

தொண்டு - மலை.21.

கோடி - புறம். 18,814,202

'செயின்' என்னும் வினையெச்ச வாய்பாடு பின்னர் 'செயில்' என்றாகியது. 'செய்து' 'ஆல்' விகுதி பெற்று நிபந்தனை வினையெச்சமாக வருகிறது. செய்யும் என்பது ஆயின் அல்லது ஏல் என்பதுடன் சேர்ந்து நிபந்தனையைக் காட்டுகிறது. எதிர்காலத்தைக் குறிக்கும் எச்சமாகிய 'செய்பு' மெல்ல மறைந்து, செய்பான் - செய்வான், செய்பாக்கு போன்றவை நோக்கத்தைக் காட்ட வருகின்றன. 'செய்யிய' என்பது நோக்கத்தைக் காட்டும் பழைய வினையெச்ச வாய்பாடாகும். இது மறைந்து 'செய' எனும் வினையெச்சம் புறநானூற்றில் வருகிறது. 'செய்யா' என்ற வாய்பாட்டோடு 'செய்யாத' என்னும் வாய்பாடும் பயன்படுத்தப்பட்டிருப்பது, உடன்பாட்டில் 'செய்யாத' என்ற வாய்பாடு வருவது பற்றிய ஒப்புவமையாக்கத்தினால் ஆகும்.

## சங்க காலத் தமிழின் தொடரியல் (Syntax of Sangam Tamil)

சங்க காலத் தமிழில் மிக நீண்ட கலப்பு வாக்கியங்களையே காண்கிறோம். எளிமையான வாக்கியங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. இருபதுக்கும் அதிகமான துணைவாக்கியங்களை இணைத்து உருவான கலப்பு வாக்கியங்களைப் பதிற்றுப்பத்திலும் அகநானூற்றிலும் காண்கிறோம். பதிற்றுப்பத்திலுள்ள பதினொன்றாவது பாடலில், 'சேரலாத நின் பலர் புகழ் செல்வ மினிது கண்டிகுமே' என்பது இருபது துணைநிலை வாக்கியங்களைக் கொண்டு நீண்ட வாக்கியமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

## சங்க மருவிய காலத் தமிழ்

பழந்தமிழை முன் பழந்தமிழ், பின் பழந்தமிழ் என இரண்டாகப் பிரிக்கிறோம், முன்பழந்தமிழைச் சங்க காலத் தமிழ் என்றும், பின் பழந்தமிழைச் சங்க மருவிய காலத் தமிழ் என்றும் வழங்குகிறோம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்ககால நூல்களாகும். திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவையாதலால், அவற்றைச் சங்க மருவிய கால நூல்கள் என்றும்

அக்காலத்தைச் சங்க மருவிய கால நூல்கள் என்றும் கூறுகிறோம். செ. வை. சண்முகம் அவர்கள் 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' என்ற கட்டுரையில், பரிபாடல், கலித்தொகை சங்க நூல்களாயினும் பல புதுமைகளைக் கொண்டு விளக்குகின்றது என்கின்றார். மு. அருணாசலம் அவர்களும் பிற சங்க இலக்கியங்களுக்குப் பின்னரே பரிபாடலும் கலித்தொகையும் தோன்றின என்பார் பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் தமது 'சங்கத்தமிழ்' என்ற நூலில் பின் பழந்தமிழ்க் கூறுகள் பரிபாடலிலும் கலித்தொகையிலும் காணப்படுவதால், இவ்விரண்டு நூல்களையும் மொழியியல் அடிப்படையில் சங்க மருவிய கால நூல்களாகக் கருதுகின்றார்.

### யகர மெய் கெடல்

மொழி முதல் யகர மெய் கெடல் பரிபாடலிலும் சிலம்பிலும் மணிமேகலையிலும் காண்கிறோம்.

'ஆரிக்கொடுமை செய்தாரென்று அன்னை அறியின்' சிலம்பு - 7.38.4

### நகர மெய் கெடல்

முன் பழந்தமிழில் நின், நும் காணப்படுகின்றன. மணிமேகலையில் 'உன்' முப்பது இடங்களிலும் 'உம்' ஓர் இடத்திலும் வருவதாகச் சோ.ந.கந்தசாமி குறிப்பிடுகிறார். 'யாங்கு' என்னும் சங்ககாலச் சொல் சங்கமருவிய காலத் தமிழில் 'எங்கு' என மாறி வருவதாகக் கூறுவார்.

யாங்கு > எங்கு

### குறில் நெடிலாதல்

சங்கத் தமிழில் காணப்படும் குறில் வடிவங்களையுடைய வினை விகுதிகள், சங்கமருவிய காலத் தமிழில் நெடில் வடிவங்களையுடைய வினை விகுதியாக மாறுகின்றன.

என் > ஏன்

எம் > ஏம்

ஆங்கு, ஈங்கு முதலிய சங்க காலச் சொற்கள் மணிமேகலையில் அங்கு, இங்கு என வருவதாகக் கூறுகிறார்.

**தனிக்குறில் 'ர' கர 'ழ' கரம்**

'ர' கரமும் 'ழ' கரமும் குறில் கீழ் ஒற்றாக வாரா (தொல். 49) என்ற விதி சங்கமருவிய காலத்துப் பொருந்தும். 'வர்த்தனை' என்ற சிலம்பில் காணப்படும் சொல்லாட்சியைப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்.

## சகர முதன் மொழிச் சொற்கள்

தொல்காப்பியப்படி சகரம் மொழிமுதல் வாராது. ஆனால் சங்க இலக்கியங்களிலும் சங்கமருவிய நூல்களிலும் சகரமுதன் மொழிச் சொற்கள் நிறைய வந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் சகடு, சண்பகம், சதுக்கம், சந்தனம், சந்தி, சதங்கை, சக்கரம், சகடம், சங்கமன் போன்ற சொற்களும் மணிமேகலையில் சம்பாபதி, சரவணம், சனமித்திரன், சரண், சலம், சபக்கம், சண்பகம் போன்ற சொற்களும் காணப்படுவதாகப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் சோ.ந. சுந்தசாமி அவர்களும் எடுத்துக்காட்டுகின்றனர்.

**ரகரத்தின் முன் இகரம் வரல்**

ரகரச் சொற்களின் முன் 'இ' கரம் இணைந்து வருதலைக் காண்கிறோம்.

(எ.கா) இராமன், இராவணன்

**பால் விகுதி (Gender - mumber suffix)**

'ஆளன்' ஆண்பால் விகுதியாகவும் 'ஆட்டி' பெண்பால் விகுதியாகவும் 'ஆளர்' பலர்பால் விகுதியாகவும் மணிமேகலையில் காணப்படுவதாக, சோ. ந.கந்தசாமி குறிப்பிட்டுச் செல்கிறார்.

உருவிலாளன் – மணிமே.

விலையாட்டி - மணிமே.

பழந்தமிழில் 'கள்' விகுதி பெரும்பாலும் அஃறிணை காட்டும் சொற்களிலேயே வருகிறது. இது சங்க மருவிய காலத்திலும் தொடர்கிறது.

நிரைகள் – பதி.

அரண்கள் -பதி.

## தொழிற் பெயர்

செய்தது, செய்வது, செய்யாதது வாய்பாட்டுத் தொழிற் பெயர்கள் சங்கமருவிய காலத்தமிழில் அதிகம் வரக்காண்கிறோம்.

மாறு கொள்வது போலும் -பரி. 19.7.

வறியார்க்கொன் றீவதே ஈகை. - குறள் 221;

**துணைவினை:** 'இடு' என்னும் வினை துணைவினையாகவும் வருகின்றது.

'வேலொடு நின்றான் இடு' என்று திருக்குறளில் (552) வருகிறது.

**விகுதிகள்**

தன்மை ஒருமை விகுதிகளில் என், ஏன் என்பவற்றில் சங்க மருவிய காலத் தமிழில் 'ஏன்' விகுதிதான் அதிகமாக வந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் - ஏன் விகுதி ககரத்துடன் வருதல் குறிப்பிடத் தக்கது.

ஆற்றுகேன் - கலி. 140.14.

## தொகுப்புரை

- மொழி காலந்தோறும் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு தற்போது இத்தகைய வளர்ச்சி நிலையை எட்டியுள்ளது.
- தமிழ்மொழியின் வாழ்வும் வரலாறும் மிகத் தொன்மையானது. தொல்காப்பியம் அதற்குச் சரியான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.
- மொழியை ஆராய மூன்று முக்கிய பிரிவுகள் மொழியில் அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மொழியின் வரலாற்றுச் சான்றுகளாக இலக்கியம், இலக்கணம், உரையாசிரியர்கள், வெளிநாட்டார் எழுதிய குறிப்புகள், அகராதிகள், கல்வெட்டுக்கள் ஆகியன உள்ளன.
- தொல்திராவிட மொழிகளோடு தமிழ் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பது தரவுகள் மூலம் நமக்குத் தெரிய வருகிறது.
- திராவிடமொழியை மூன்று பெரும் பிரிவகளாகப் பகுத்து வகைப்படுத்தலாம்.
- தொல்காப்பியர் காலத்தில் தமிழ்மொழி பெற்ற வளர்ச்சி நிலை மற்றும் மாறுதல்கள் ஆகியன இந்தத் தரவுகள் மூலம் தெளிவடைகிறது.
- காலந்தோறும் வேற்றுமையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து இந்த இயலில் அறிந்து கொள்ள முடிகிறது.
- சங்ககாலத் தமிழ், தற்காலத் தமிழிலிருந்து பேச்சு வழக்கிலும், எழுத்து முறையிலும் தன்னைக் காலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொண்டுள்ளது.
- கிடைக்கப்பெற்ற கல்வெட்டுத் தரவுகள் மூலம் தென்திராவிடமொழியின் சிறப்பியல்புகள் குறித்துத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

## மாதிரி வினாக்கள்

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**1. ஒரு மொழியில் காணப்படும் பொருளைக் காட்டும் சின்னஞ்சிறு கூறுகள்?**

அ) தனியன்

**ஆ) உருபன்**

இ) ஒலியன்

ஈ) பொருண்மை

2. சொல்லமைப்பின் அடிப்படையில் மொழிகளை எத்தனை வகைகளாகப் பிரிப்பர்◌?

**அ) 3**

ஆ) 4

இ) 5

ஈ) 6

3. விளக்க மொழியியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர்?

அ) பிளாட்டோ

**ஆ) புளூம்ஃபீல்டு**

இ) ஹெராகிளிட்டஸ்

ஈ) சோம்ஸ்கி

4. 'Morphology' என்ற நூலை இயற்றியவர்?

அ) பைக்

ஆ) புளூம்ஃபீல்டு

**இ) நைடா**

ஈ) ஹம்போல்ட்

5. மாகபுராண அம்மானை தோன்றிய காலம்?

அ) 16ஆம் நூற்றாண்டு

ஆ) 17ஆம் நூற்றாண்டு

**இ) 18ஆம் நூற்றாண்டு**

ஈ) 19 ஆம் நூற்றாண்டு

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. மொழியியலின் மூன்று பெரும் பிரிவுகளை விளக்கு.

2. வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள் குறித்தெழுதுக.

3. தமிழ் மொழி வரலாற்றை எழுதுவதில் கல்வெட்டுக்களின் பங்களிப்பை எழுதுக.

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. மொழி வரலாற்றுச் சான்றுகள் குறித்துக் கட்டுரை வரைக

2. திராவிட மொழியும் தமிழும் குறித்து விவரித்துரைக்க.

3. பழங்காலத் தமிழ் குறித்துக் கட்டுரை எழுதுக.

## மாதிரி வினாக்களுக்கான விடை

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. ஆ) உருபன்

2. அ) 3

3. ஆ) புளூம்ஃபீல்டு

4. இ) நைடா

5. இ) 18ஆம் நூற்றாண்டு

......................

# அலகு – 2

## இடைக்காலத் தமிழ் - தற்காலத் தமிழ்

### முன்னுரை

தமிழ் மொழியைப் பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத்தமிழ் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் இவற்றின் சில பல பண்புகளைக் கருத்தில் கொண்டு இவற்றை முறையே 'சங்கத்தமிழ்', 'தெய்வத்தமிழ்', 'வளரும் தமிழ்' என வழங்குவது மிகப் பொருத்தமாகும் என்கிறார். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை இடைக்காலத் தமிழ் என்றும் வழங்குவர். இடைக்காலத் தமிழைப் பல்லவர் காலத் தமிழ், சோழர் காலத் தமிழ், நாயக்கர் காலத் தமிழ் என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவற்றைக் குறித்து இந்த இயலில் விரிவாகக் காணலாம்.

### 2.1. இடைக்காலத் தமிழ்

சங்க காலத்திற்குப் பின் தோன்றிய தமிழைப் பல்லவர் காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், சோழர் காலத் தமிழ் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### 2.1.1 பல்லவர் காலத் தமிழ்

பல்லவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில் தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இலக்கியங்களைப் பாடினர். இவ்விலக்கியங்கள் மட்டுமின்றி இக்காலக் கல்வெட்டுக்களும் பல்லவர் காலத் தமிழைப் பற்றி அறியப் பெரிதும் துணை செய்கின்றன. சங்க காலத்தைப் போலவும் சங்க மருவிய காலத்தைப் போலவும் பல்லவர் காலத்திலும் (இ எ உ ஒ அ) என்ற ஐந்து உயிர்களும் அவற்றிற்கினமான நெடில்களும் ஒலியன்களாக இருந்தமையை அறிகின்றோம். எகரமும் ஒகரமும் தவிர ஏனைய உயிர்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் வரும். எகர ஒகரங்கள் சொல்லின் இறுதியில் வாரா.

## மெய் ஒலியன்கள்

க்ச்ட்ற்த்ப், ஞ்ண்ன்ம், ய்ழ்ர்ல்வ், ள் என்பன மெய்யெழுத்துக்களில் ஒலியன்களாக விளங்கின. நெடில் மெய்களுக்கு அல்லது மெய் மயக்கங்களுக்கு முன்னர் நெடில் குறிலாக மாறுவது என்பது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெருவழக்காயிற்று.

நக்கி > நிக்கி

ஆழாக்கு > ஆழக்கு

பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைக் காண்கிறோம்.

மங்கலம் > மங்கிலம்

மேலன > மேலின

இகரம் உகரமாதலையும் இக்காலத்தில் காண்கிறோம்.

விழிஞும் > வுழிஞும்.

ஐகாரம் அகரமாகின்றது.

ஐந்து > அஞ்சு

பனைகாய் > பனங்காய்.

ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கூரம் செப்பேட்டில் ஐந்தே என்பது அயிந்தே எனக் காணக் கிடைக்கின்றது.

ஐகாரம் அகரமாவதுடன் எகரமாகவும் மாறுகின்றது.

அரசர் > அரைசர் > அரெசர்

தலை > தலெ

யகரம் கெடுதல் சங்கத் தமிழ், சங்கமருவிய காலத் தமிழ் மாற்றம் பல்லவர் காலத்திலும் தொடர்கின்றது.

யாராலும் > ஆராலும்

யானை > ஆனை

க்த் > த்த் : க்த் > த்த்த் எனப் பல்லவர் காலத்திலும் மாறுகின்றது.

பக்தி >பத்தி

முக்தி > முத்தி

ற்ற் >த்த் : ற்ற் >த்த் என மாறுகின்றது.

பற்றேதும் > பத்தேதும்

கி.பி. எட்டாம் நூற் றாண்டுக் கல்வெட்டுக்களிலேயே இம் மாற்றங்களைக் காணலாம்.

ஆற்றுக் கால் > ஆத்துக் கால்

சேற்று நிலம் > சேத்து நிலம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் 'ந' 'ஞ' கரமாக மாறியுள்ளது. இடையண்ண ஒலியோ முன்னுயிரோ முன் னால் வந்தால் இம்மாற்றம் ஏற்படும், இதனை வரையறுத்த சூழல் எனலாம். இவ்வாறு வரையறுத்த சூழலால் அமையாத இடங்கலும் 'ந' கரம் 'ஞ' கரமாதலைக் காணலாம்.

நெகிழ்த்தது > ஞெகிழ்த்தது

முந்நாழி > முஞ்ஞாழி

**இதழ்ச்சாயல் பெறல் (Labialization)**

உங்கள் > உங்கொள் > உம்கொள் (அப். தேவாரம்).

**தடையொலிகளின் ஒலிப்புடைமை (Voicing of the Plosive)**

தடையொலிகள் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களால் அறியலாம். தமிழ் இடப் பெயர்களும் சிறப்புப் பெயர்களும் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதத்தில் வெட்டப்பட்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. சில தமிழ்க் கல்வெட்டுக்கள் சமஸ்கிருத, கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. தடையொலிகளின் ஒலிப்புடைமையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:

(i) உயிரிடைத் தடையொலி (Plosives occurring intervocally)

(ii) இன மூக்கொலி முன் தடையொலி (plosives occurring after the homorganoc nasals).

## ஒருங்கிணைவு (Coalesonce)

**'ந'கர'ன' கரங்கள் ஒன்றாதல்**

பல்லின மூக்கொலியான நகரம் அண்பல் மூக்கொலியான 'ன' கரத்துடன் ஒன்றாதல் என்பர். பல்லினவேருக்கும் ஈற்றுக்கும் சிறிது மேலாக ஒலிக்கும் னகர ஒலியே நகரத்தின் ஒலியாக மாறியது. பண்டைத் தமிழில் 'ந' கரம் உயிர்களுக்கிடையேயும் சொல்லீற்றிலும் வரும். ஆனால், னவுக்குப் பதிலாக 'ந'

சொல்லின் இடையிலும் சொல்லின் இறுதியிலும் சொல்லின் முதலிலும் எழுதப்பெற்றது.

ந் > ன் -பத்து விழுக்காடு

ன் >ந் - இரண்டு விழுக்காடு

இதனால் மொழிக்கு முதலில் வந்தால் 'ந' என்றும் பிறவிடத்திலும் 'ன' என எழுதுவதும் மரபாகி விட்டது. பல்லின மூக்கொலி மொழிமுதல் எழுதும் மரபு பல்லவர் காலத்தில் துவங்கியிருக்கலாம்.

## றகர ரகர மயக்கம்

ஒலியனியலில் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம் றகர ரகர மயக்கம் ஆகும். இம்மயக்கம் முதற்கண் மெய் மயக்கத்தில் ஏற்பட்டிருக்கக்கூடும். இஃது ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பத்தாம் நூற்றாண்டிலும் தோன்றியது. பதினோராம் நூற்றாண்டில் உயிரிடையே இம்மயக்கம் காணத்தொடங்கியது.

### ளகர ழகரங்கள் ஒன்றாதல்

இவ்விரண்டு ஒலிகளை ஒலிக்கும்போது அணர்தல் இல்லாமை முக்கிய வேறுபாடாகும். 'நாட்டாழ்ச்சி' என்ற சொல்லில் 'ஆள்' என்பது 'ஆழ்' என்றே ஏழாம் நூற்றாண்டிலேயே எழுதப் பெற்றிருக்கிறது.

ஆள் >ஆழ்

'ஆள்' என்ற அடிச்சொல் தொடர்ந்து 'ஆழ்' என்பதைத் தனக்கு மாற்று வடிவமாகக் கொண்டது. வைணவ அடியாரைக் குறிக்கும். ஆழ்வார் என்ற சொல் ஆள்வார் என்றே இருந்திருக்க வேண்டும். கல்வெட்டுக்கள் அரசர்களை 'ஆள்வார்' என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 'ழ'கரம் 'ள' கரமாக மாறல்

சிறப்பு 'ழ' கரம் 'ள' கரமான மாற்றம் குறிப்பிடத்தக்க தொன்றாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே இம்மாற்றத்தைன் காணலாம்.

கிழமை > கிளமை

கிழக்கு > கிளக்கு

## 'ப' கரம் ' 'வ' கரமாதல்

உயிரிடையே பகரம் வகரமாகிறது, சில இடங்களில் பகரம் மகரமாக மாறிய மாற்றம் பல்லவர் காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டும்.

நிபந்தம் > நிமந்தம்

மொழி முதல் மகரம் வகரமாவதும் உண்டு.

மிருக > விருக

கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய அவிநயம், சொல்லின் எல்லா இடங்களிலும் ஔகாரம் வரும் என்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் ல் 'அன்' சாரியை பெருவழக்காகவும் 'இன்' சாரியை சிறுவழக்காகவும் இருந்தன. பிற்காலத்தில் 'அன்' சாரியைக்குப் பதிலாக 'இன்' சாரியைப் பயன்படுத்தப்பட்டது. 'அழுத்து' என்பதற்குப் பதில் 'அழுந்து' என்றும் 'தவித்தன' என்பதற்குப் பதிலாக 'தவித்தன' என்றும் வருகின்றது. தொடக்கத்தில் தன்வினை, பிறவினை பாகுபாடு இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

"கில்' என்னும் புதிய இடைச்சொல் பல்லவர் காலத்தமிழில் இடம் பெறுகின்றது. 'உண்ணகிலான்' போன்ற சொற்களில் உள்ள "கிலான்' என்பது 'கில்' எனும் வேரையுடைய தனி எதிர்மறைச் சொல்லாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையில் 'கிற்பான்' போன்ற சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். எதிர்மறை வடிவத்தில் வரும்போது ஈற்றிலுள்ள நெட்டுயிர் எதிர்மறையைச் சுட்டிக் 'கில்' எனும் வேருடன் கூடி 'கிலான்' என்பதையே எதிர் மறையைக் காட்டும் சொல்லாகச் செய்தது. செய்+கு+ இலா ன் எனப் பிறழ் பிரிப்பால் கொள்ளப்பட்டது.

'கின்று' என்ற இடைநிலை முதன்முதலில் பரிபாடலில் (22.5.35) தான் வந்துள்ளது. அதன் பின்னர்ச் சிலம்பிலும் மணிமேகலையிலும் அதன் வரவு பெருகிப் பல்லவர் காலத் தமிழில் நிலைத்துவிட்டது எனலாம். பல்லவர் காலத் தமிழில் மிகுதியாக வழங்கத்தலைப்பட்டது. தேவார, திருவாசகங்களில் 'செய்கின்ற' என்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சங்கள் முழு வளர்ச்சியும் பெருவழக்கும் எய்தின.

மயங்குகின்றேன்-திருவா.62.

'நின்று' என்பதுடன் உறழ்ந்து (free variation) வருகின்றது. நன்னூலில் 'ஆநின்று' நிகழ்கால விகுதியாகக் குறிக்கப்பட்டுள்ளது. இறந்தகால இடைநிலை 'இன்' பல்லவர் காலத்தில் பெருவாரியாக வரக் காண்கிறோம்.

சங்க நூல்களில் 'யான்' என்ற சொல் தன்மை ஒருமையைக் குறிக்க, சங்க மருவிய நூலான பரிபாடலில் தான் முதன் முதலாக 'நான்' (பரி.6-97, 20-82) என்ற சொல் வருகின்றது. அப்பர் தேவாரத்தில் 'யான்' 29 இடத்திலும் 'நான்' 339 இடத்திலும் வருகின்றன. முன்னிலைப் பன்மைச் சொல்லாக 'நீயிர்' பிற இலக்கியங்களில் வர, சங்க மருவிய கால நூலான பரிபாடலில் 'நீர்' (பரிபா.8.7) என்ற சொல் வந்துள்ளது. இலங்கைப் பேச்சுத் தமிழிலும் 'உ' கரம் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இரட்டைப் பன்மை வடிவம் 'நீர்கள்' அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றது.

உயர்வு ஒருமை (honorific singular) உயர்திணையில் மட்டுமின்றி அஃறிணையிலும் உள்ளவை அப்பர் தேவாரத்தில் காண்கிறோம்.

உடல் -ஆர்.

உயிர் -ஆர்.

நிபந்தனை எச்ச உருபுகளாக - ஆல், இல், ஏல் பல்லவர், சோழர் காலத் தமிழில் மிகுதியாக வருகின்றன.

எண்ணுதியேல் -அப்பர் தேவா. 2395.1.

இடைக்காலத் தமிழ் எதிர்கால இடைநிலைகளுடன் -ஆய் விகுதியை இணைத்து ஏவல்வினை உருவாகி உள்ளது.

தருவாய் -அப்பர் தேவா. 918.4.

'செய்யும்' என்னும் வாய்பாட்டு ஏவல் வினைகள் சங்கத் தமிழில் அருகிக் காணப்பட, இடைக்காலத் தமிழில் பெருகி, தற்காலத் தமிழில் நிலைத்திருக்கக் காண்கிறோம்.

காணும் - அப்பர் தேவா.1452.4

'செய்யேல்' வாய்பாட்டு ஏவல் வினைகள் இடைக்காலத் தமிழில் அதிகமாக வருகின்றன.

அஞ்சேல் -அப்பர் தேவா. 1571.2.

அஞ்சேல் - சுந்தரர் தேவா. 979.4.

திருவாசகத்தில் எதிர்மறை வழக்கு முற்றிலும் வேறுபட்ட வடிவில் காணப்படுகின்றது.

பாடிற்றிலேன் (பாடவில்லை)

பண்டைத் தமிழில் வினைமுற்றுக்குப் பின் இறந்த காலத்தில் எதிர்மறையைக் குறிக்கவேண்டின் வினைமுற்றுக்களுடன் 'அல்' எனும் குறிப்பு வினையை இணைத்துக் கூறல் உண்டு.

மருண்டனென் அல்லேன். பதி. 74.23

## அனுமதி வினை: (Permissive verb)

இக்காலத் தமிழ் போன்றே, அப்பர் தேவாரத்திலும் காணப்படுகின்றது.

ஆள் - அலாம் > ஆளலாம்.

'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தில் வல்வினைகளோடு அகர உருபு வரும்போது, சங்கத்தமிழில் -ப்ப்- இடையில் வர, இடைக்காலத் தமிழில் 'க' கர ஒற்று மிகுதியாக வருகின்றது. 'செய்யாம்' வாய்பாட்டு உடன்பாட்டு வினைமுற்றுக்கள் பழந்தமிழில் காணப்பட, இடைக்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டன.

செல்லாம் பதி 57.6.

'மல்' விகுதியுடைய வினையெச்சங்களும் (நடுங்காமல், பாடாமல்) பல்லவர் காலத்தில் வழக்கத்திலிருந்தன. பெயர்ச்சொற்களில் இரட்டைப் பன்மைச் சொற்கள் இடைக் காலத் தமிழில் வருவது போன்று, இரட்டைப் பன்மை விகுதிகள் வினைச் சொற்களிலும் காணப்படுகின்றன.

கழிக்கின்றீர்கள் -அப்பர் தேவா. 412.1.

முன்னிலை ஒருமை காட்டும் 'ஆய்' விகுதி சங்கத் தமிழில் எதிர்மறையில் வர, சங்க மருவிய காலத் தமிழிலும் பிற்காலத்திலும் எல்லா இடங்களிலும் வருகிறது.

சொன்னாய் - அப்பர் தேவா.2406.3.

பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் சமஸ்கிருதச் செல்வாக்கினை மிகுதியாகக் காணலாம். பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் கிரந்தம், வடமொழி போன்றவற்றில் எழுதப்பட்டமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்பர் தேவாரம் போன்றவற்றில் சமஸ்கிருதச் சொற்கள் ஓரளவு தமிழாக்கம் செய்யப்பட்டதையும் காண்கிறோம்.

அப்பர் தேவாரத்தில்தான் முதன்முதலாக 'தமிழன்' என்ற சொல்லாட்சியைக் காண்கிறோம். இதற்குப் பின்னர் தான் இச்சொல்லாட்சியின் வழக்குப் பல்கிப்

பெருகியது. சங்க காலத்தில் 'தமிழ்' என்ற சொல் நாடு, மக்கள், மொழி பண்பாட்டைக் குறித்து நின்றது.

## 2.1.2 சோழர் காலத் தமிழ்

சோழர் காலத்தில் வளமான நூல்கள் தோன்றின. கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்ற மாபெரும் காப்பியங்கள் இக்காலத்தில் தோன்றின. இக்கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. சோழர் காலத்தில் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் தோன்றின. சோழர் காலக் கல்வெட்டுக்களும் நிறைய கிடைத்துள்ளன. சோழர் காலத் தமிழைச் சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுக்கள் மூலம் நன்கு அறியலாம்.

பல்லவர் காலத்திய ஒலியன்களான உயிர் எழுத்துக்கள் சோழர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின. பல்லவர் கால மெய்யொலியன்கள் சோழர் காலத்திலும் தொடர்ந்தன. இலக்கியங்களில் நகரமும் னகரமும் ளகரமும் ழகரமும் ரகரமும் றகரமும் வேற்றுநிலை வழக்கில் (contrast) வருகின்றன. ஙகரத்தையும் ஞகரத்தையும் ஒலியன்களாக நிறுவ வேற்றுநிலை வழக்குகள் காணப்பட வில்லை.

எல்லா உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வரும் என்பது தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களில் காணப்படுகின்றன. அதே போன்று க், ச், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் என்பது தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. ஞகரம் ஆ, எ, ஒ ஆகியவற்றுடன் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால், வீரசோழியம், நன்னூல் அக்கால வழக்கையொட்டி மேற்கண்டவற்றைத் தவிர அகரத்துடனும் வரும் எனக் கூறுகின்றன. யகரம் 'ஆ' காரத்துடன் மட்டும் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

யகரம் சோழர் காலத்தில் ஆகாரத்துடன் மட்டுமின்றி அ, உ, ஊ, ஒ, ஔ வற்றுடனும் வரும் என வீரசோழியமும் நன்னூலும் கூறுகின்றன. வகரம் பின்னுயிர்களான உ, ஊ, ஒ, ஓ என்பற்றைத் தவிரப் பிறவற்றுடன் வரும் எனத் தொல்காப்பியம் கூறுவது சோழர் காலத்திற்கும் பொருந்துவதாகும். எல்லா உயிரும் மொழியிறுதி எழுத்துக்களாக வரும் எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன.

ஆனால், வீரசோழியம் எ, ஒ என்ற உயிர்களைத் தவிர எல்லா உயிர்களும் மொழியிறுதியில் வரும் எனக் கூறுகிறது. பல்லவர் காலக் கல்வெட்டுக்களிலும் இதே நிலை காணப்படுகின்றது. ம், ஞ், ண், ன், ந், ய், ர், ல், வ், ள், ழ் ஆகிய மெய்யெழுத்துக்கள் மொழியிறுதியில் வரும் எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன. ஆனால், வீரசோழியம் மேற்கண்ட மெய்களுள் ஞ், த், ல் மொழியிறுதியில் வாரா எனக் கூறுகிறது. தொல்காப்பியம் ஆய்தத்தைச் சார்பெழுத்து என்கிறது. ஆனால், வீரசோழியம் ஆய்தத்தைத் தனி ஒலியாகக் கருதுகிறது.

நேமிநாதம் ஒன்பது உயிர்களே (ஏகாரம், ஓகாரம், ஔகாரம், நீங்கலாக) மொழிக்கு இறுதியில் வரும் எனக் கூறுகிறது. (நேமிநாதம் நூற்பா 8). மொழிக்கு முதலில் யாகார உயிர்மெய் ஆகாரமாக (யகர மெய் கெடுதல்) வருதலை 'யா முதற் பேர் ஆ முதலாம்' (நேமிநாதம் நூற்பா36) என்று நேமிநாதர் கூறியுள்ளார்.

சோழர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, இலக்கணக் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராய்வோம். பல்லவர் கால மாற்றங்கள் பெரும்பாலும் சோழர் காலத்திலும் தொடர்கின்றன எனலாம்.

**'அ'கரம் 'இ' கரமாதல்:**

அதனுக்கு > அதினுக்கு

மேலன > மேலின

**'அ'கரம் 'உ'கரமாதல்:**

கொண்டது > கொண்டுது

புகுந்தது > புகுந்துது

**'உ' கரம் 'இ' கரமாதல்:**

அமுது > அமிது

அருளின > அரிளின

**'எ'கரம் 'இ' கரமாதல்:**

பெயரால் > பியரால்

செலவு > சிலவு

தமிழ்ச் சொற்கள் சிலவற்றில் இகரம் எகரமாகின்றது.

பிறவும் > பெறவும்

**'உ' கரம் 'ஒ' கரமாதல்:**

கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் தமிழ்ச் சொற்களில் உள்ள 'உ'க ரம் 'ஒ' கரமாகிறது.

குலைதர > கொலைதர

குந்தள அரசர் > கொந்தள அரசர்

**'இ' கரம் 'அ'கரமாதல்**

அதியமான் > அதயமான்

ஞாயிறு > ஞாயறு

**இடையண்ண சாயல் (Palatalisation)**

சொல்லின் இறுதியிலுள்ள உகரம் இடையண்ணத் தடையொலியான சகரத்திற்குப் பின் வந்தால் இகரம் ஆகும்.

கழஞ்சு > கழஞ்சி

இ, ய, ஐ மூன்றுக்குப் பின்னர் வரும் மூக்கொலியும் (ந) அதற்கினமான பல்லொலியும் (த) இடையண்ணச் சாயல் பெறும்.

ஐந்து > அஞ்சு

விளைந்த > விளைஞ்ச

அகரம் ஐகாரமாதலும் உண்டு. இம்மாற்றம் பழந்தமிழில் சகர யகர மெய்களுக்கு முன்னர்க் காணப்படுகிறது.

அரசர் > அரைசர்

அரசு > அரைசு (பதிற் 37141; புற. 26.6.)

இம்மாற்றம் கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி இலக்கிய மொழிகளிலும் காணப்படுகின்றது.

சமயம் > சமையம்

தச்சன் > தைச்சன்

முன்னோ பின்னோ இடையண்ண ஒலி தொடராத போதும் அகரம் ஐகாரமாகும்.

அத்தை > ஐத்தை

அத்தான் > ஐத்தான்

இம்மாற்றத்தை இக்கால சமூகக்கிளை மொழிகளிலும் காணலாம்.

**'ஐ' காரம் 'எ'கரமாதல்:**

இந்நிலம் > இஞ்ஞிலம்

அரசர் > அரைசர் > அரெசர்

**எகர முடிபு:**

அரைசன் > அரெசன் என்று சொன்னாலும், சொல்லின் இடை யிலுள்ள எகரம் அகரமாகவே எழுதப்பெறும். ஆனால், சொல்லின் இடையில் எகரம் அகரமாக ஒலிக்கப்படவில்லை. அரெசன் என்ற வடிவத்திலுள்ள அகரம் கீழ்நடு உயிர் ஆனால், சொல்லினிடையில் அவ் > அகரம் முன்தாழ் இடை உயிராக மாறுகின்றது.

**மொழி முதல் இகரத்துடன் யகரம்**

பல்லவர் காலத்தில் முன்னுயிர்கள் அரையுயிரான யகரத்துடன் இணைந்து ஈரொலியுயிராக மாறிக் கி.பி. 11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் முன்னுயிர்கள் வழுக்கொலியான யகரத்தைச் சொல்லின் முதலில் பெற்றன.

இக்கோயில் > யிக்கோயில்

இரண்டு > யிரண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இகரத்தை யிகரமாக ஒலிப்பதைக் கால்டுவெல் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகு மாற்றத்தால் சொல் முதலில் இல்லாத யிகரம் இகரமாகின்றது.

ஆயிரம் >ஆஇரம்

இவ்வாறு திரியும் 'ஆஇரம்' என்ற சொல் தொல்காப்பியர் கால ஆஇரம்' என்ற சொல்லிலிருந்து வேறுபட்டது. முன்பு கூறியது யிகரத்தின் திரிபாகும். பின்னர் கூறியது தொல்காப்பிய காலத்தது ஆகும். தொல்காப்பிய காலத்து உயிர்கள் ஒன்றோடொன்று மயங்கி வரும். உடம்படுமெய் வாராது.

## இதழினமாதால் (Labialisation):

இதழொலிக்குப் பின் வந்தாலும் முன் வந்தாலும் அகரம் ஒகரமாகி விடும்.

வாணகப்பாடி > வாணகொப்பாடி

அனுபவித்து > அனுபொவித்து

அதே சூழ்நிலையில் வேறு சில இடங்களில் அகரம் நடுப்பின்னுயிராகவோ (mid back vowel) குற்றியலுகரமாகவோ ஒலிக்கும். இக்கால உச்சரிப்பிலும் இதழொலியாதலைக் காணலாம்.

கம்பம் கம்பொம் ~ கம்போ

என மாறுகிறது. வைணவச் சார்புடைய மணிப்பிரவாள நடையில்

கள் > கொள்

என்று மாற்றமடைந்திருப்பதைக் காணலாம்.

கேட்டீர்கள் > கேட்டீர் கொள்

காடுகள் > காடு கொள் - என மாறியுள்ளது.

**இகரம் உகரமாதல்**

களிறு>களுறு

தமிழ் > தமுழ்

இதழொலி (labial), வளைநா ஒலி (retroflex), நுனியண்ண ஒலி (alveolar) எகரத்துக்கு முன்னோ பின்னோ வந்தால் அந்த எகர ஒலி இதழ் ஒலியாகும்.

எப்பேர்ப்பட்ட > எப்போர்ப்பட்ட

தென்றிசை > தொன்றிசை

'சொவிடு' என்றவடிவம் பிற்காலத்துச் 'சோடு' என்றாயிற்று செந்தா மரை > சொந்தாமரை என்று மாறிற்று. இம்மாற்றம் செம் > சொம் என மாறும் ஒப்புவமையாக்கத்தால் ஏற்பட்டதாகும். இவற்றில் எகரம் நடுவுயிராகவும் குவியுயிராகவும் ஒலிக்கின்றது.

## மெய்யொலி இடையண்ணமாதல் (Palatalisation of consonants)

'த்த்' என்ற ஒலியின் முன் இடையண்ண ஒலியோ முன்னுயிரோ வந்த ல் அது இரட்டை இடையைண்ண ஒலியாகும்.

வைத்த > வைச்ச

சிலப்பதிகாரத்தில் அஞ்ஞை, மஞ்ஞை என்ற சொற்களில் இரட்டித்த இடையண்ண மூக்கொலியைக் (long palatalnasal) காணலாம். முன்னிலை ஒருமைச் சொல்லான 'ஞாய்' என்தில் 'ஞ' கரம் மொழி முதலில் வந்துள்ளது. இடையண்ண மூக்கொலி (Palatal nasal) மலையாளத்திலும் தமிழ்க் கிளைமொழிகளில் சிலவற்றிலும்

இருக்க ஏனைய திராவிட மொழிகளில் மறைந்து விட்டது. இகரத்துக்கு முன்னோ யகரத் திற்குமுன்னோ இடையண்ண ஒலிவரல் பல்லவர் கால இலக்கியங்களில் உண்டு.

செய்ந்நின்ற > செய்ஞ்ஞின்ற

போக்கு மறைந்து, சோழர் காலத்து மீண்டும் பழைய பல்லின மூக்கொலியே (dental nasal) வரலாயிற்று. மலையாளத்திலோ பழைய இடையண்ண மூக்கொலியே (Palatal nasal) தொடர்ந்தது.

வைத்து > வைச்சு > வச்சி

இடையண்ணமாதலுக்குக் காரணமான 'இ' அல்லது 'ய்' பிற்காலத்தில் மறைந்து விட்டது.

## இடையண்ண ஒலி பல்லின ஒலியாதல்:

இடையண்ண ஒலிகள் பல்லின ஒலிகளாக மாறல் சோழர் காலத் தில் வேரூன்றியது.

ஞாயிறு > நாயிறு

செருமுனை > திருமுனை

**'ழகர' 'ளகர' மாற்றம்:** நாழி > நாளி

**ள' கர 'ழ' கர மாற்றம்:** வாழை > வாளை

**'ழ' கரம் 'ய' கரமாதல்:** வாழை > வாயை கோழி > கோயி

இம்மாற்றம் பற்றி வீரசோழியம் குறிப்பிடுகின்றது.

**யகரம் 'ச' கரமாதல்:** உயிர் > உசிர் **,** மயிர் > மசிர்

உயிரிடைத் தடையொலி மறைந்தமையும் உடம்படு மெய்யான யகரம் சேர்ந்தமையும் நோக்கற்பாலன. ஆனால், வகரம் உடம்படுமெய் வர வேண்டிய இடத்தில் ஒப்புவமையாக்கத்தால் (analogy) யகரம் வருகின்றது.

இகல் > இயல்

## சமஸ்கிருதச் சொற்கள்

பல சமஸ்கிருதச் சொற்கள் ஒலிப்புடைய மெய்யொலி (voiced consonant) யுடன் துவங்குகின்றன. இவற்றின் முதலசையில் அகரம் உண்டு, அச்சொற்கள் தமிழுக்கு வரும்போது அகரம் எகரமாக மாறும்.

கங்கா > கங்கை ~ கெங்கை

தண்ட> தண்டம் ~ தெண்டம்

## கல்வெட்டுச் சான்றுகள்

தடையொலிகள் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் அறிகிறோம். சோழப் பேரரசின் காலத்திற்குள்ளாகவே உயிர்களுக்கிடையேயும் மெல்லெழுத்தின் பின்னேயும் வரும் வல்லெழுத்து ஒலிப்புடை ஒலியாக மாறியதெனலாம் எனப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இன மூக்கொலிக்குப் பின் வரும் தடையொலிகள் முதலில் ஒலிப்புடையதாக இருந்திருக்கவேண்டும். மூக்கினமாதல் பின்னண்ணத் தடையொலியைத் தாங்கியிருத்தல் வேண்டும். அங்கனம் என்ற சொல் அங்ஙனம் என வந்துள்ளமையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மூக்கொலியாதல் சோழர் காலத்தில் வேறு தடையொலிகளிலும் ஏற்படத் தொடங்கிற்று. (பெரும் பாணப்பாடி > பெரும்மாணப்பாடி; அம்பது > அம்மது). இம்மாற்றம் மலையாளத்தில் உறுதியாக நிலைபெற்றது. பிற்காலத்தில் தமிழிலும் இக்கொள்கை வளரலாயிற்று.

## ஒருங்கிணைவு (Coalescense):

**'ந'கர'ன'கரங்கள் ஒன்றாதல்**

பல்லின மூக்கொலியான நகரம் அண்பல் மூக்கொலியான னகரத்துடன் ஒன்றாகி விட்டது. பல்லவர் காலத்தில் தொடங்கின இம்மாற்றம் பிற்காலச் சோழர் ஆட்சியில் முழுதும் மயங்கி ஒன்றாகி விட்டது.

**'ற'கர 'ர'கர மயக்கம்**

இம்மயக்கம் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பத்தாம் நூற்றாண்டிலும் தோன்றியது. பதினோராம் நூற்றாண்டில் உயிரிடையே இம்மயக்கம் காணத் தொடங்கியது.

ற்ப் > ர்ப்ப் ஏவற்படி ஏவர்ப்படி

## பால் காட்டும் விகுதி (Gender-number suffix)

சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழிய இலக்கணம் (கி.பி.11 ஆம் நூற்றாண்டு) 'கண்,' 'மன்' எனும் இரண்டு புதிய விகுதிகளை ஆண் பாலுக்குரிய விகுதியாகக் கூறுகிறது (சிறுக்கன், கருமன்). பெண்பாலுக்குரிய விகுதியாக மி,சி,

ஆட்டி, ஆத்தி போன்றவற்றைக் குறிப்பிடுகிறது (சிறுமி, ஆய்ச்சி, வெள்ளாட்டி, வண்ணாத்தி) (நூற்பா 56). சங்க இலக்கியங்களை நோக்கக் 'கண்' புதிய விகுதியாகத் தோன்றுகிறது. ஆனால், அவ்விகுதி மற்ற திராவிட மொழிகளில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மி, சி போன்ற பெண்பால் விகுதிகள் சிலம்பிலும் கலித்தொகையிலும் காணப்படுகின்றன. ஆட்டி, ஆத்தி போன்றவைகள் உண்மையிலேயே புதிய விகுதிகளாகும். பலர் பால் விகுதியாக அர்கள், ஆர்கள், கள், மார் (நூற்பா. 30) முதலியவற்றை வீரசோழியம் குறிப்பிடுகின்றது. ஆனால், இவ்விகுதிகள் சங்க இலக்கியங்களிலேயே குறைந்த எண்ணிக்கையில் வந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'கள்' என்ற விகுதி நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இருபத்தைந்து இடங்களில் வந்துள்ளது.

## பதிலீடு பெயர்கள் (Pronouns):

இட்டைக்காலத் தமிழில் 'நீம்' என்ற வடிவமும் 'நங்கள்' என்ற இரட்டைப் பன்மையும் நிலைபெற்றன.

நீம்- சீவகசிந்தாமணி 1932.3

நீங்கள் -அப்பர் தேவாரம் 4,457

யாங்கள், நாங்கள், எங்கள், நங்கள் போன்ற தம்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களும் நீங்கள், நீர்கள், நுங்கள், உங்கள் போன்ற முன்னிலைப் பதிலிடு பெயர்களும் தங்கள், தாங்கள், அவர்கள், இவர்கள், யாவர்கள் போன்ற பதிலிடு பெயர்களும் புதிய கூறுகளாகக் கருதத்தக்கன.

## வேற்றுமை (Case)

மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என்னும் உருபுகளையும் ஐந்தாம் வேற்றுமைக்கு இன், இல், ஆகிய உருபுகளையும் ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது, அ ஆகியவற்றையும் ஏழாம் வேற்றுமைக்கு ஏறத்தாழ இருபத்தியெட்டு உருபுகளையும் (நன்.302) நன்னூலார் குறிப்பிடுகின்றார். ஆறாம் வேற்றுமைக்குத் தொல்காப்பியர் 'அது' என்னும் உருபினை மட்டும் கூறிச் செல்கிறார். அது ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவானதாகச் செயல்பட்டது.

## 'இயக்கு வினை' (Causative):

இயக்குவினை விகுதியாக - பி,- வி (காண்பி, செய்வி) சங்க மருவிய காலத்திலே காணப்பட்டாலும், சோழர்காலத் தமிழில் தான் அதிகம் பயின்று வந்துள்ளது. இகர அளபெடையும் காரணவினை காட்டும் உருபாக அக்காலத்தில் இருந்துள்ளது.

சோழர் காலத்தில் தோன்றிய 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நன்னூல் த், ட், ற், இன் ஆகியவற்றை இறந்த காலக் குறியீடாகவும் கிறு, கின்று, ஆநின்று ஆகியவற்றை நிகழ்காலத் குறியீடாகவும் (நன்.143.144) கூறுகின்றது. நிகழ்கால இடை நிலைகளாக மேற்கண்ட மூன்றை வீரசோழியம்தான் (11 ஆம் நூற்றாண்டு) முதன் முதலில் குறிப்பிட்டது. 'கின்று' பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் வரும் என்றும் 'கிறு' மற்ற விடத்தில் வரும் என்றும் (வீரசோ. நூற்பா 74,77) வீரசோழியனார் குறிப்பிடுகின்றார்.

## ஏவல்வினை

இடைக்காலத் தமிழில் எதிர்கால இடைநிலைகளுடன்-ஆய் விகுதியை இணைத்து ஏவல்வினை உருவாகியிருப்பதைக் காணலாம்.

வருவாய் - பெரிய புராணம் 3740.1, வாராய் - பெரிய புராணம் 37403.

இடைக்காலத் தமிழில் - ஈர் எதிர்கால இடைநிலைகளுடன் இணைந்து ஏவல்வினையாக வருவதைக் காணமுடியும்.

பேசுதீர் -பெரியபுராணம் 2655.1,

## எச்சங்கள்

நன்னூலார் வான், பான், பாக்கு என்ற மூன்று வினையெச்ச வடிவங்களைக் குறிப்பிடுகின்றார் (தன். 343) சங்க மருவிய கால இலக்கியங்களிலேயே இது காணப்படுகின்றது.

காண்பான் - கலி 97.7. , வருவான் - கலி. 113.

கொள்வான் - பரி. 16.51.

வினையெச்ச வாய்பாடான செய்யூ, செய்பு என்ற வடிவங்கள் பெரிய புராணத்தில் இல்லை. செய எனும் வினையெச்ச விகுதிகளான (Infinitive suffixes) மார், இய, இயர் போன்றவை பெரியபுராணம், கம்பராமாயணத்தில் இல்லை. ஆனால்,

பழந்தமிழில் காணப்படுகின்றன. எதிர் மறை வினையெச்ச விகுதிகளான (negative participle suffixes) - மல், மை, -மே ஆகியவை சோழர் காலத்தமிழில் அதிகமாகப் பயின்று வந்தி ருக்கின்றன.

கிடையாமை பெரியபுராணம் 4034.2 , காணாமே - பெரிய புராணம் 1326.31

### எதிர்மறைவினை:

ஆத், ஆ (ait a:) விகுதிகளையுடைய எதிர்மறை வினை சோழர்காலத் தமிழில் அதிகமாகப் பயின்று வருகின்றன. -அல்-, -இல் விகுதியுடைய எதிர்மறை வடிவங்கள் சங்க காலத்தில் மிகுதி. ஆனால், இத்தகைய வடிவங்கள் சோழர் காலத் தமிழில் வழக்கில் அதிகமில்லை.

## 2.1.3 நாயக்கர் காலத் தமிழ்

பண்டைக் காலத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்குமிடையே வேறுபாடுகள் பலவற்றைக் காண்கிறோம். இடைக்காலத் தமிழின் சிறப்புக் கூறுகளில் சில சங்கமருவிய காலத்தில் தோன்றி இடைக்காலத் தமிழில் நிலைத்து விட்டமையைக் காண்கிறோம். ஆனால், நாயக்கர்காலத்தில் வளமான இலக்கியங்கள் தோன்றவில்லை. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தென்னகத்தின்மீது படையெடுத்தான். இதனால் தமிழர் தம் உரிமை இழந்தனர். மதுரையில் தோன்றிய இசுலாமியர் ஆட்சி, விசயநகரப் பேரரசின் தலையீட்டால் மறைய மதுரையில் நாயக்கர் ஆட்சி வேரூன்றியது. நாயக்கர்கள் இருநூற்றேழு ஆண்டுகள் (1529-1736) மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இக்காலக் சுட்டத்தில் வில்லிபாரதம் போன்ற காப்பியம் தோன்றியது. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற நூல்கள்தோன்றின. மேலும் நாட்டுப்புற இலக்கியங்கள், மாகபுராண அம்மானை இராமப்பய்யன் அம்மானை போன்ற நூல்கள் தோன்றின. மேலை நாட்டினரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவரின் A Grammar of the common dialect of the Tamil language' என்ற இலக்கண நூலும் இக்காலக் கட்டத்திலேதான் எழுந்தது. இது பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கண நூலாகும். நாயக்கர்கள் இரு நூறு ஆண்டுகள் ஆண்டதால் தெலுங்கு மொழியின் செல்வாக்கினையும் தெலுங்கு மொழியின் சொற்களையும் காண்கிறோம். நாயக்கர் காலத் தமிழை வில்லிபாரதம்,

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், பெஸ்கியின் தமிழ் இலக்கணம் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களின் அடிப்படையில் ஆராய்வோம்.

பல்வர், சோழர் கால ஒலியன்களான உயிர், மெய் எழுத்துக்கள் நாயக்கர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின. பண்டைத் தமிழில் நகரமும் னகரமும் வெவ்வேறு ஒலியன்களாக இருந்தன. ஆனால், இடைக்காலத் தமிழில் இவ்விரண்டு ஒலியன்களும் இணைந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். தொல்காப்பியர் சகரம் மொழிமுதல் வாராது என்கிறார். சங்க கால இலக்கியங்களிலேயே சகர மொழி முதல் சொற்களைக் காண்கிறோம். சங்க மருவிய காலத் தமிழில் சைகார முதற் சொற்கள் வருகின்றன. நாயக்கர் கால வில்லிபாரதத்தில் சௌகாரச் சொற்கள் வருகின்றன.

சௌபால – வில்லிபாரதம், சௌபாலர் - வில்லிபாரதம்

வில்லிபாரத மொழிநடை தமிழும் வடமொழியும் கலந்த தொன்றாகும். தமிழும் வடமொழியும் கலந்த கலப்பினால், கீழ்க் கண்ட மெய்ம் மயக்கங்கள் (clusters) வில்லி பாரதத்தில் காணப்படு கின்றன.

ம்ச்-, -ல்ச்-, -த்ண்--த்வ்-, -க்வ்-, -த்ய்-, -ப்ர்-, -த்ர்-, -ச்ர்-

சமஸ்கிருத ஒலியன்களான S Ṣ S, தமிழில் புகுத்தியமையால் கீழ்க்கண்ட மெய்ம் மயக்கங்கள் காணப்படுவதாகப் பெஸ்கி என் னும் வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார். உயிர்களின் மாத்திரையும் தன்மையும் மாறுபட்டதே இக் காலத்திற்குரிய சிறப்புக்கூறு எனப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் உயிரொலி, மெய் யொலி மாற்றங்கள் சிலவற்றைக் காண்போம்.

**'இ'கரம் 'உ'கரமாதல்:** சிலிர்க்கு > சிலுருக்கு, தமிழ் > தமுழு,மதில் > மதுலு

**'அ'கரம் இகரமாதல்:** அதனால் > அதினால், வஞ்சனை > வஞ்சினை

**'அ'கரம் 'கரம் 'உ'கரமென்றும் 'உ'கரம் 'இ'கரமென்றும் மாறல்**

வந்தது > வந்தது, இருபது > இருபதி

**'இ'கரம் 'யி'கரமாக மாறல் -** இது பல்லவர் காலத்திலேயே காணப்படுகின்றது.

இரண்டு > யிரண்டு

**ஐ அய் > அ என மாறல்**

தலை > தல, யானை > யான

ஐகாரம் 'அய்' என எழுதப்பட்டு 'அ' ஒன்றே ஒலிக்கப்பட்டது.

**'எ'கரம் 'அ'கரமாதல்:** எல்லாம் > அல்லாம், வேண்டாம் > வாண்டாம்

ஐ > ஆ - இக்காலப் பேச்சு வழக்கிலும் இதனைக் காணலாம்.

**'ய'கரம் 'எ'கரமாதல் :** யமன் > எமன்

மொழி முதல் யகரம் சங்க, பல்லவர் காலத்திலேயே மறைந்தது.

யார் > ஆர்

யாண்டு> ஆண்டு

நாயக்கர் காலத்திலும் இப்போக்குத் தொடர்ந்தது.

யமுனை > அமுனை

## மெய் ஒலிகள்

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் எழுதக் கிரந்த வரி வடிவங்களை புகுத்தியது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். பெஸ்கி அவர்களும் தமது இலக்கண நூலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## சமஸ்கிருதச் சொற்கள் தமிழாகும் வகை:

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தமது நூலில் சமஸ்கிருத ஒலிகள் தமிழாக்கப்படலைக் குறித்து விளக்கமாகக் கூறியுள்ளார்.

(அ) இக்காலத்தில் சமஸ்கிருத நாமடி ஒலி (retroflex plosive) இடையண்ணத் தடையொலியாக மாறிற்று.

KS > KC தோஷா > தோசம்

(ஆ) 'க்ஷ' என்ற ஒலி 'ச' என மாறல்:

ks > s > c க்ஷணம் > சணம்

(இ) ஷ்ட் > ஸ்தி என மாறல்:

கஷ்டம் > கஸ்தி

## ஒலிப்புடைய, ஒலிப்பிலாத் தடையொலிகள் (Medial voiced and voiceless plosives):

**றகர மெய்:**

றகர மெய் வளைநா மூக்கொலியாயிற்று என்பதைப் பெஸ்கி குறிப்பிடுகிறார்.

கன்று> கண்ணு, ஒன்று>ஒண்ணு

**மெய்த்தடையொலிகள்:**

தடையொலிகள் மயக்கத்தில் முதல் மெய் இரண்டாவது மெய்யுடன் ஓரினமாகின்றது.

மாட்சி > மாச்சி, காட்சி > காச்சி

**'க'கரம் 'ய'கமாக மாறல்:** கன்னிகள் > கன்னியள்

**'ய'கரம் 'க'ரமாக மாறல்:** இடையூறு> இடைகூறு

## மூக்கொலிகள்:

னகர மெய் நெடில் உயிர்களுக்குப் பின்னரும் மகரம் போன்ற மெல்லின மெய்களுக்குப் பின்னரும் இழக்கப்படுகிறது.

நான்முகன் > நாமுகன்

## இடையின மெய்கள்:

தண்ணீர் > தண்ணி, தூண்டில் > தூண்டி

கீழ்க்காணும் அமைப்பை வில்லிபாரதத்தில் உறழ்நிலையில் (Free variation) காண்கிறோம்:

கடவி ~ கடாவி, பலம் ~ பெலம்,பந்தர்-பந்தல் ,குடர்-குடல்

**எகர ஒகர எழுத்துக்களின் வரிவடிவம்:**

எகர ஒகர எழுத்துக்களின் உருவ அமைப்பைப் பற்றி இலக்கணங்கள் கூறுகின்றன. எகர ஒகர உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் புள்ளி பெறும் எனக் கூறுகின்றது (தொல்: எழுத்து 14,15).

**'கள்' பன்மை விகுதி:**

சங்கத் தமிழில் ‘கள்’ விகுதி அஃறிணைச் சொற்களில் காணப்படுகின்றது. சங்க மருவிய காலத்தில் உயர்திணையுடன் வருவதையும் இரட்டைப் பன்மைச் சொற்களாக வருவதையும் காண்கிறோம். அதற்குப் பின்னர் இடைக்காலத் தமிழில் இது பெருமளவில் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாயக்கர் கால வில்லிபாரதத்தில் ‘கள்’ விகுதி 1660 இடங்களில் வந்துள்ளது.

யாங்கள் – வில்லிபாரதம்

நாங்கள் - வில்லிபாரதம்

எங்கள் – வில்லிபாரதம்

## பெயர்பதிலிகள் (Pronouns):

முன்னிலை உருபேற்கத் திரிந்த வடிவமாகிய 'நுன்' 'நும்' என்பதிலிருந்து ஒப்புவமையாக்கமாக வந்துள்ளது .'நும்' 'நுன்' என்பன வழக்கு மிகுதியான 'உம்' 'உன்' என்ற வடிவங்களைத் தந்தன. முன்னிலைப் பன்மை 'நீவிர்' நீயிர் ஆகியவற்றிற்குப் பதிலாக 'நீர்' என்ற வடிவம் வளர்ச்சி பெற்றது. பாலை வேறுபடுத்தாத 'தான்' 'தாம்' என்பதற்குப் பதிலாகச் சார்பு நிலைப் பெயர்ப் பதிலிகளான 'அவன்' 'அவள்' என்பன வழக்குப் பெறுகின்றன. 'தான்''தாம்' 'தன்' 'தம்' ஆகியன தற்சுட்டுப் பெயராகவோ சாரி யைகளாகவோ அசைநிலைகளாகவோ (emphatic expletives) மிகுதி யாகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் காலப்போக்கில் வெறும் இடைச் சொற்களாகவோ, வேற்றுமை உருபுகளாகவோ ஆகின்றன.

## வேற்றுமை (Case)

கருவிப்பொருள் வேற்றுமை நீங்கற் பொருள் வேற்றுமையுடன் ஒன்றாகும் போக்கு உள்ளது. பழைய வேற்றுமை உருபுகளின் வழக்கு காலப் போக்கில் மறையத் தொடங்கின. வயின், - மிசை, உழி முதலிய உருபுகள் வழக்காற்றிலிருந்து மறையத் தொடங்கின. மூன்றாம் வேற்றுமை உருபான 'ஆன்' 'ஆல்' ஆகவும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளுக்குப் பதில் சில சொற்களே வேற்றுமை உருபுகளாக வருகின்றன. 'கொண்டு' என்னும் சொல் கருவிப்பொருள் வேற்றுமையை உணர்த்துகிறது.

"பொருட்டு', 'ஆக' என்னும் சொற்கள் நான்காம் வேற்றுமையை உணர்த்துகின்றன. 'ஆக' என்னும் சொல்லுருபு பழைய குகர விகுதியுடன் வருகின்றது. ஐந்தாம் வேற்றுமை 'இருந்து', 'நின்று' முதலிய சொல்லுருபுகளைப் பெறுகிறது. ஆறாம் வேற்றுமை 'உடைய' என்பதைப் பெறுகிறது.

இடப்பொருளை உணர்த்தும் எச்சொல்லையும் ஏழாம் வேற்றுமை உருபாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். பழைய இடப் பொருள் வேற்றுமையை உணர்த்த 'வைத்து' என்பது வருகின்றது. இடப்பொருள் வேற்றுமையை உணர்த்த இல், இன், உள், கடை, பால், கண், வாய், தலை, இடை, வழி போனறவை பயன் படுத்தப்படுகின்றன. பழந்தமிழில் இறந்த கால விகுதி 'இ'கரம் வினையெச்சத்திலும் பெயரெச்சத்திலும் காணப்படுகின்றது நாயக்கர் காலத் தமிழில் 'இ'கரமும் 'இன்'னும் பெரும்பான்மையாக வருகின்றன.

## எச்சங்கள்:

தொல்காப்பியர் செய்யூஉ, செய்பு (713) என்ற இரு வினையெச்ச வாய்பாடுகளைக் குறித்துச் செல்கிறார். இவை பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. வில்லிபாரதம் போன்ற நூல்களில் செய்யூஉ, வாய்பாட்டு வினையெச்சம் ஓரிரு இடங்களில் மட்டுமே வந்துள்ளது. - மல் விகுதி கொண்ட எதிர்மறை வினையெச்சம் சங்க முரவயி காலத் தமிழில் அருகிக்காணப்பட, இடைக்காலத் தமிழில் அதிகமாகக் காணப்படுகின்றது.

## எதிர்மறை

"செய' என்னும் எச்சத்துடன் அகரவுருபைச் சேர்க்கப்பழைய எதிர்மறை வடிவம் 'செயா' என்பது கிடைக்கின்றது. பால் விகுதியைச் சேர்ப்பின் 'செயான்' என்ற வடிவம் கிடைக்கிறது. 'செய்து' 'செய்த' என்பவற்றின் ஒப்புவமையாக்கமாக எதிர்மறை வடிவங்களும் 'செய்யாது' 'செய்யாத' என்றாகின்றன. 'செய' எனும் வடிவம் எதிர்மறை வடிவான இல்லை என்பதுடன் எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் வருகிறது. செய + இல்லை என்ற இரு சொற்களும் பேச்சு வழக்கில் 'செய்லே' என்றாகின்றது. 'லே' எதிர்மறை இடை நிலையாகிறது.

## 2.1.4 மராட்டியர் காலத் தமிழ்

நாயக்கரது ஆட்சிக்குப் பின் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1676 முதல் கி.பி. 1799 வரை ஆட்சி புரிந்தும் பிறகு கி.பி. 1855 வரை தஞ்சையிலேயே செல்வாக்குப் பெற்றும் விளங்கினர். கி.பி. 1676இல் எகோஜி தஞ்சையைக் கைப்பற்றித் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினார். அது முதல் தஞ்சையில் மராட்டியர் ஆட்சி தொடரலாயிற்று. மராட்டியர் ஆட்சிக்காலத்தில் தூது, உலா, நாடகம், கோவை, சதகம், அம்மானை, புராணம் சம்பந்தமாக அறுபத்தியெட்டு இலக்கியங்கள் மலர்ந்துள்ளன. தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் வந்துள்ளனர். மராட்டிய ஆட்சியின்போது தமிழ், தெலுங்கு, மராட்டி, சமஸ்கிருதம், ஆங்கிலம், அரபி வழக்கில் இருந்தன. உணவு சம்பந்தப்பட்ட மராட்டி சொற்கள் நிறைய தமிழில் கலந்துள்ளன. மராத்தி மொழிக் கல்வெட்டுக்கள் நாகரி எழுத்துக்களிலும் அரசு ஆவணங்கள் மோடி எழுத்துக்களிலும் எழுதப் பெற்றன.

மராட்டியர் காலத் தமிழை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் துணைகொண்டு ஆராயலாம்.

நாயக்கர் கால ஒலியன்களான உயிர், மெய் மராட்டியர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின. மராட்டியர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, கல்வெட்டு, செப்பேடுகளைக் கொண்டு ஆராய்வோம். சோழ, நாயக்கர் கால மாற்றங்கள் பெரும்பாலும் மராட்டியர் காலத்திலும் தொடர்கின்றன எனலாம்.

## கல்வெட்டுக்கள் :

கீழ்க்கண்ட மாற்றங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகினறன.

கஜம்> கிஜம்

பரிபாலனம் > பரிபாலினம்

யஸ்வத்தம்பா > யெஸ்வத்தம்பா

## உருபனியல் :

மராட்டியர் காலத் தமிழில் தற்காலத் தமிழில் காணப்படுவதைப் போன்றே பால்காட்டும் விகுதிகள், கால இடைநிலைகள், ஏவல் விகுதிகள், குறையெச்சங்கள் எதிர்மறை விகுதிகள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், நிபந்தனை எச்சங்கள் காணப்படு கின்றன. மராட்டியர் கால 'கோடீச்சுரக் கோவை' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு மராட்டியர் காலத் தமிழின் உருபனியல் ஆராயப்பெற்றுள்ளது.

## பதிலிடு பெயர்கள் (Pronouns):

நான், யான் ஆகிய இரு தன்மை ஒருமைப்பதிலிடு பெயர் களும் நாம், நாங்கள் ஆகிய இரு தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர் களும், நீ, நீர், நீவிர் ஆகிய முன்னிலைப் பதிலிடு பெயர்களும் இவன், இவர், இவள், அவன், அவர், அது, அவை, தன், தம், ஆகிய படர்க்கைப் பதிலிடு பெயர்களும் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

## வேற்றுமை (case):

ஐ,-கு, ஒடு, -ஆல், -இல், -இன் ஆகிய வேற்றுமை உருபுகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

**இறந்தகால இடைநிலைகள்:** ந்த் த்த்...இன் ஆகிய இறந்த கால இடைநிலைகளை மராட்டியர் காலத் தமிழில் காண்கிறோம்.

**குறையெச்சங்கள் :** 'அ' விகுதி குறையெச்ச விகுதியாக வருவதைக் காண்கிறோம்.

உற, மகிழ்ந்திட

**எதிர்மறை:** அல்-ஆத்-இல்-ஆகிய இடைநிலைகள் எதிர்மறையைக் குறித்து வந்துள்ளன.

அடையோம், இரேன்

**பெயரெச்சங்கள் :** அ, உம் ஆகிய இரு பெயரெச்ச விகுதிகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

சிதைத்திட்ட, இருக்கும்

**வினையெச்சங்கள் :** இ, உ விகுதிகள் வினையெச்ச விகுதிகளாக வந்துள்ளன.

தேடி, உற்று

## பால்காட்டும் விகுதிகள்

**தன்மை ஒருமை -** அன், -ஏன் ஆகிய தன்மை ஒருமை விகுதிகள் மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன.

**தன்மைப் பன்மை -** அம், ஓம் -தும் ஆகிய விகுதிகள் தன்மைப் பன்மை விகுதிகளாக மராட்டியர் காலத் தமிழில் காணப்படுகின்றன(அம், கொண்டனம்).

**முன்னிலை ஒருமை -** ஐ -ஆய் முன்னிலை ஒருமையைச் சுட்டுகின்றன.

ஆண்பால் - அன் - விகுதி ஆண்பால் ஒருமை விகுதியாக இக்காலத் தமிழிலில் காணப்படுகின்றது. (என்றனன்,நிற்பன்)

**பெண்பால் -** அள், ஆள் ஆகிய -விகுதிகள் பெண்பாலைச் சுட்டுகின்றன.

நிற்கின்றனள், ஏகினள்

**பலர்பால் -** அர், -ஆர் விகுதிகள் பலர்பால் விகுதிகளாக வளர்ந்துள்ளன.(அர், நீங்குவர்)

## தமிழில் மராட்டி சொற்கள்

சேமியா கிச்சடி, சுசாயம், பட்டாணி, கோசும்பரி, வாங்கி, ஸொஜ்ஜி உணவு பற்றிய சொற்கள் தமிழில் கலந்துள்ளன. கங்காலம், கிண்டி, ஜாடி, சாலிகை, குண்டான் பாத்திரங்கள் தொடர்பான சொற்கள் தமிழில் கலந்துள்ளன. கண்டி, சாகி, லாவணி, அபங்கம், டோக்ரா முதலிய இசைத் தொடர்பான சொற்கள் தமிழில் கலந்தன.

காமட்டி, கைலாகு, வில்லங்கம், சாவடி, கோலி, அபாண்டம், கில்லாடி, இண்டியா, கலிங்கம், கொட்டு, சந்து, சலவை, ஜாஸ்தி, சுங்கு, சொண்டி, தடவை, தரகரி, திமிசு, நீச்சு, பீருடை போன்ற சொற்களும் தமிழ் மொழியில் கலந்தன.

## பேச்சு மொழிச் சொற்கள்

அஞ்சாவுது, ஆதாயம், ஆனை, ஆழ்ச்சி, இத்தைவரை, இப்போ, ஒருத்தர், ஊரு, ஒன்ம்பது, காற்பாத்தி, குடுக்கிறது, கைய்வசம், சதிரம், சமற்பகம், சிலவு, சினேகம், சேந்த, ஞாயம், தீருவை, துடங்கின, நடக்குது, நண்ணீ, நாலாவுது, நூத்து அன்பது, புதுப்பிச்சு,மனுசர், மாத்து, முன்னாலே, முந்தின, மூணரை, மேல் புறம், ரொக்கம், வத்தகர், வருஷாந்தம், வார்த்தைப்பாடு, விக்கிர, விக்கினம் முதலியன.

மராட்டியர் காலத்தமிழ் இலக்கியங்களில் நிறைய வட மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. பிறன்மொழிச் சொற்களும் காணப்படுகின்றன. இக்காலத் தமிழின் கூறுகள் மராட்டியர் காலத்துத் தமிழிலே தொடங்கிவிட்டது எனக்கூறலாம். சோழர், நாயக்கர் காலத் தமிழ்க் கூறுகளில் சில நிலைத்து விட்டன. பிறமொழிகளின் ஆதிக்கம் காரணமாகப் பிறமொழிச் சொற்களும் தமிழில் கலந்துவிட்டன.

## 2.2 தற்காலத்தமிழ்

**பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்**

மேலை நாட்டாரின் வருகைக்குப் பின்னர் தமிழ்மொழி வரலாற்றில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது எனலாம். இலக்கிய வரலாற்றில் மட்டுமின்றி மொழி வரலாற்றிலும் இதனை நன்கு காணலாம். 19ஆம் நூற்றாண்டிலே தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தவை அச்சியந்திரங்களாகும். மேனாட்டாரின் தொடர்பால் சிறுகதை, புதினம், பத்திரிகைகள், உரைநடை போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்மொழியும் நவீன மொழியாக வாழத் தலைப்பட்டது. மேனாட்டறிஞர்களான பெஸ்கி, ரேனியஸ், கிரால், போப், ஆர்டன், கால்டுவெல் ஆகியோர் 19 ஆம் நூற்றாண் டுத் தமிழைப் பற்றிக் குறிப்பாகப் பேச்சுத் தமிழைப் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளனர். கால்டுவெல் அவர்களைத் 'திராவிட மொழியியலின் தந்தை' எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலை நாட்டினரின் வருகையால் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்றது. கலை யியல், அறிவியல் போன்ற துறைகள் வளர வளரத் தமிழும் பல்வேறு மாற்றங்களைக் கண்டது.

19 ஆம் நூற்றாண்டுத் தமிழைப் பற்றி மேனாட்டறிஞர்களும் (ரேனியஸ், கிரால், பெஸ்கி, போப், ஆர்டன், கால்டுவெல் போன்றோர்களும்) இருபதாம் நூற்றாண்டுத் தமிழைப் பற்றி எஸ். வையாபுரிப் பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ச. அகத்தியலிங்கம், செ. வை சண்முகம், பொன் கோதண்டராமன், மு.சண்முகம் பிள்ளை, கு பரமசிவம், ஆந்திரனோவ் (Andronov), சுமில் சுவலபில் (Kamil Zvelebil) போன்ற பேரறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர்.

## வரன்முறை (Distribution)

எல்லா உயிரும் சொல்லுக்கு முதலிலும், இடையிலும் வரும். ஈற்றில் ஏ காரமும், ஓகாரமும் வருதல் இல. ஈகாரம், ஊகாரம் ஆகிய இரண்டும் தீ, பூ என்னும் ஓரசைச் சொற்களில் ஈற்றில் வருகின்றன. க், ச், த், ப், ம், ந், ஞ், வ், ய், ஆகியவை சொல்லுக்கு முதலில் வரும். பிறமொழிச் சொற்களில் ட், ர், ல் மொழி முதல் (டப்பா, ரகசியம், லட்டு) வருகின்றன. பதினெட்டு மெய்களும் மொழியிடையில் தனித்து வருகின்றன. ம், ன், ண, ழ், ல், ள், ர், ய் ஆகியவை சொல்லுக்கு இறுதியில் வரும். இன்றைய எழுத்துத் தமிழ் என்று கூறும்போது நாளிதழ்கள், மாத இதழ்கள், கதை, நாவல், சிறுகதை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தமிழையும் ஆராயவேண்டும். உயிர் எழுத்துக்களில் எ,ஒ,ஔ ஆகியவை இறுதியில் வருவன வல்ல. மெய்யெழுத்துக்களில் க், ச், த், ட், ப், ம், ன், ண், ய், ர், ல், வ், ழ் ழ்,ள்,ஜ், ஸ், ஆகியவை மொழியிறுதியில் வருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் எழுந்த சுவாமிநாதம் என்ற நூலுக்கு எழுதப்பட்ட எழுத்ததிகார விருத்தி உரையில் ர, ல என்ற இரண்டு மெய்யும் எல்லா உயிர்களோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும் என்றும் டகரம் அ, ஆ, இ, ஈ, ஏ, ஆகிய உயிர் எழுத்துக்களோடு சேர்ந்து சொல்லின் முதலில் வரும் என்றும் கூறியது தற்காலத் தமிழின் சிறப்பியல்புகளாகும்.

## இன்றைய பேச்சுத் தமிழில் ஒலி மாற்றங்கள்

பேச்சுத் தமிழில் நிகழும் ஒலி மாற்றங்கள் குறித்து இங்குக் காண்போம். டாக்டர் கு.பரமசிவம் அவர்கள் எழுதிய 'இக்காலத் தமிழ் மரபு' என்ற நூலில் 'உரையாடலில் ஒலி மாற்றங்கள்' என்ற இயலில் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

(i) இகர எகர, உகர ஒகர மாற்றம்: (இலை –எலை, இடம் – எடம்)

(ii) இகர எகரங்கள் ஒகரமாதல்: (பிறப்பு – பொறப்பு, பெட்டி – பொட்டி)

(iii) இகரம் உகரமாதல்: (பிட்டு, புட்டு)

(iv) உகரம் இசுரமாதல்: (புல்லு,பில்லு)

(v) ஔகாரத் திரிபு: (ஔவை – அவ்வை)

## ஓரினமாதல் (Assimilation)

ஒரு சொல்லின் முன்னால் வருகின்ற ஒலியன்களுக்கேற்பப் பின்னால் வரும் வேறோர் ஒலியன் வேறுபடுமாயின் அதனை முன் வழி ஓரினமாக்கம்(Progressive assimilation) எனலாம்.

வேள்விக்கு > வேள்விக்கி, கத்திக்கு > கத்திக்கி

**பின்வழி ஓரினமாக்கம் (Regressive assimilation)**

செண்பகம் > செம்பகம், வன்சினம் > வஞ்சினம்

**தொடர்வழி ஓரின மாக்கம் (Continuous assimilation)**

நன்செய் > நஞ்செய், புன்செய் > புஞ்செய்

## சந்தி (Sandhi):

புதிய சந்திகளும் தோன்றியுள்ளன. அந்தந்த (அந்த + அந்த), நாலா பக்கமும் (நாலு + பக்கம்); பத்திரிகாசிரியர் (பத்திரிகை + ஆசிரியர்) போன்று எத்தனையோ சொற்களில் மாற்று வடிவங்கள் வந்து புதிய புணர்ச்சி விதியை அமைக்கும்படி செய்துள்ளன. சங்ககால இலக்கியங்களில் காணப்படும் அத்தனைச் சொற்களையும் இடைக்காலத்திலோ அல்லது இக்காலத்திலோ காண முடிவதில்லை. அடு (வருத்துதல், அமர் (ஆசைப்படு), இடு (தயார் செய்), ஊறு (கர்ஜி), சூழ் (ஆலோசி) போன்ற எத்தனையோ வினைச்சொற்கள் இன்றைய தமிழில் காணப்படுவதில்லை. இரண்டாம், நான்காம், ஆறாம் வேற்றுமை உருபுகள், இறந்தகால, எதிர்கால விகுதிகள் ஆகியவை சங்ககாலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றன. அன்று வழங்கிய, பல சொற்களின் வடிவங்கள் இன்றும் பயன்பட்டு வருகின்றன ஆண், பெண், ஆறு, காலை, மாலை, உழு,நெய், ஓடு, காண் போன்ற சொற்களில் மாற்றமில்லை. இவையெல்லாம் இன்றையத் தமிழில் காணப்படும் சங்கத் தமிழ் கூறுகளாகும். சங்க காலத்திற்குப் பின் மொழியில் ஏகப்பட்ட மாற்றங்கள் இடைக்காலத் தமிழில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தற்காலத் தமிழின் பரம்பரைச் சொத்தாக உள்ளது. இரட்டைப் பன்மை வடிவங்களும்

பெரும் பான்மையாக வழங்கத் தலைப்பட்டன. தற்காலத் தமிழில் நிகழ்கால விகுதியாக கிறு, கின்று மிகுதியாக வருகின்றன. சங்க இலக்கியத்தில் வல்வினைகள் (strong verbs) பகர மெய் ஏற்று வருவது பெரும்பான்மை வழக்காகும். இடைக்காலத்தில் ககர மெய் ஏற்பதே பெரும்பான்மை வழக்காகும். அதுவே இன்றையத் தமிழிலும் நிலைத்து விட்டது. சரக்கு, சட்டை, கிழக்கு, மேற்கு, கிழக்கு, மாதம் போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் இடைக்காலத்தின் நினைவாக இன்றும் உள்ளன. இடைக்காலத்தில் காணப்படாத எத்தனையோ வினைச் சொற்கள் (கண்டுபிடி, கைது செய், காட்டிக் கொடு) இன்றையத் தமிழில் காணப்படுகின்றன.

## உயர்வு ஒருமைப் பெயர்கள் (Honorific Singular)

உயர்வு, தாழ்வு எனச் சமுதாயத்தில் படிநிலை அமைப்பு ஏற்பட்டதன் விளைவாகத் தமிழில் உயர்வைக் குறிக்கும் விகுதிகள் தோன்றின. முக்கியமானவர்களை மற்றவர்களினின்றும் வேறு படுத்த 'ஓடு' என்பதனைப் பயன்படுத்தினர். 'ஆர்' என்பது முக்கியமானவர்களைக் குறிக்கும் விகுதியாக வழங்க, அதிலிருந்து வேறு பட்டு 'ஆர்கள்' விகுதி மிகவும் முக்கியமானவர்களைக் குறிக்கும் விகுதியாக வழங்கலாயிற்று.

அண்ணனார், அண்ணியார்,வரதராசனார்.

'அவர்கள்' என்பது பெயருக்குப் பின்னால் வந்து உயர்வு ஒருமையைக் காட்டும்.

மு. வரதராசனார் அவர்கள், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்

## முன்னிலைப் பன்மை வடிவங்கள்:

'நீங்கள் 'என்ற சொல் உயர்ந்தோரையும் 'நீர்' என்ற சொல் சமநிலையில் உள்ளோரையும் 'நீ' என்பது தாழ்ந்தோரையும் குறிக்க இன்றையத் தமிழில் வழங்கப்படுகின்றன. உயர்சொற் கிளவி ஏவல் வினை வடிவத்தையும் பாதிக்கிறது. சமமான நிலையில் உள்ளவர் களுக்கு 'உம்' விகுதி சேர்க்கப்படுகிறது. உயர்ந்தோர் கூற்றுக்கு "உங்கள்' என்னும் சொல் பயன்படுத்தப் படுகிறது.

நட> நடவும் > நடங்கள்

## பெயர்ப் பாகுபாடு

**சிறப்புப் பெயர் (Personal nouns)**

சக்திவேல், மெய்யப்பன் சுரே, மீனா, கலா போன்றவை சிறப்புப் பெயராகும். சிறப்புப் பெயர்கள் பன்மை உருபு ஏற்பதில்லை.

**பொதுப் பெயர் (Common nouns)**

சிறப்புப் பெயர் அல்லாதனவெல்லாம் பொதுப் பெயராகும். பையன், வீடு போன்றவற்றை எண்ணப்படு பொருள்பெயர் என்றும் பால், தண்ணீர், காற்று போன்றவற்றைத் திடப் பொருள் பெயர் என்றும் கூறலாம். எண்ணப்படு பெயர் எண்ணடைகள் ஏற்று வரும். ஆனால், திரட்பெயர்கள் அவற்றை ஏற்று வாரா.

**பருப்பொருட் பெயரும் நுண்பொருட் பெயரும்(Concrete and abstract noun):**

உருவம் உள்ளதையும் கண்ணால் காணக் கூடியதையும் பருப் பொருள்கள் என்றும் உருவம் இல்லாததையும் கருத்தளவிலே நினைக்கக்கூடிய பொருள்களை நுண்பொருள்கள் என்றும் பிரிப்பர். நுண்பொருட் பெயர்களோடு மூன்றாம் வேற்றுமை உருபு - ஓடு, வினையெச்ச உருபாகிய -ஆய் ஆகிய இரண்டும் மயங்கி வரும் என்பார் பேராசிரியர் டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள்.

**ஆக்கப் பெயர்கள் (Derived nouns):**

(i) உருபு -த்துவம் பெறல்: முதலாளி > முதலாளித்துவம்

(ii) உருபு -அம் பெறல்: திருப்பு > திருப்பம்

iii) உருபு - பது பெறல்: எடு > எடுப்பது

(iv) உருபு -ப்பு பெறல்: சிரி > சிரிப்பு

(v) உருபு - வு பெறல்: வாழ் > வாழ்வு

**பெயர்ச் சொல்லில் எதிர்மறை வடிவம்:**

பெயர்ச் சொல்லில் எதிர்மறை வடிவம் சேர்க்கப்படுதல் இன்றையத் தமிழில் பெருவழக்காக உள்ளது.(நாகரிகம் > அநாகரிகம், அவசியம் > அனாவசியம்)

**முன்னிலை ஒருமை** :நீ

**முன்னிலை பன்மை:** நீங்கள், உங்கள்

**படர்க்கைப் பெயர்கள்:** தான், தாம் ஆகிய பதிலிடு பெயர்கள் பண்டைக்காலத்தில் படர்க்கைப் பதிலிடு பெயர்களாக வழங்கி வந்தன. தான், தாம் எவ்விதப் பால்

வேற்றுமையையும் காட்டு வதில்லை. எண் வேற்றுமையே காட்டுகின்றது. தன்மை, முன்னிலையும் அவ்வாறே உள்ளது. பதிலிடு பெயர்கள் எண் வேற்றுமையைக் காட்டி நின்றன எனக் கருத இடமுண்டு.

சுட்டுப் பெயர்களே படர்க்கை மூவிடப் பெயர்களாகப் பயன்படுகின்றன. இப்பெயர்களே திணை, பால், எண், இடம் காட்டும் என்றும் இதன் அடிப்படையில் தமிழ் இலக்கண அறிஞர்கள் பெயர்ச் சொற்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால். ஒன்றன்பால், பலவின்பால் எனப் பிரித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வேற்றுமை:

விளிகொள்வதோடு எட்டு எனவும் கூறுகின்றார். ('ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப், பொருள் வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை') என நன்னூலார் வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகின்றார். இரண்டாம் வேற்றுமை உருபாகப் பழந்தமிழிலும் இன்றையத் தமிழிலும் - ஐ வழங்குகின்றது. இஃது உயர்திணைப் பெயர்களுடனும் பதிலிடு பெயர்களுடனும் வெளிப்படையாக வரும்,- பொதுவாக அஃறிணைப் பெயர்களுடன் வரும். கருவி வேற்றுமையைச் செய்வதற்கு உதவியாக இருக்கும் கருவி (ஆயுதம்) என்றும், செய்யும் பொருளாகிய கருவி (பொருள்) என்றும் பிரிக்கலாம்.

## ஒட்டுக்கள் (Affixes)

தற்காலத் தமிழில் பெயர், வினை தவிர ஒட்டுக்களும் (affixes) வழக்கிலுள்ளன. முன்னொட்டு (prefix) உள்ளொட்டு (infix) பின்னொட்டு (suffix) என மூவகை உண்டு.

முன்னெனாட்டு (Prefix) - மரியாதை > அவ மரியாதை

உள்ளொட்டு (Infix): தமிழில் இல்லையென்பர்.

பின்னொட்டு (Suffix) -பெரியாரும் இராஜாஜியும் நண்பர்கள்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் என்று கூறும்போது வளர்ந்து வரும் அறிவியல் தமிழையும் பரவல் செய்தித் தொடர்பின் சக்தி வாய்ந்த வானொலித் தமிழையும், மக்களிடையே செல்வாக்குப் பெற்று வரும் நாளிதழ், மாத இதழ் போன்றவற்றில் காணப்படும் பத்திரிகைத் தமிழையும் ஆராய வேண்டும். இத்துறைகளைச் சார்ந்த தமிழைப் பற்றி ஆராயப்படாவிட்டால், இருபதாம் நூற்றாண்டுத் தமிழை முழுமையாக ஆராய்ந்து போல் ஆகாது. வளர்ந்து வரும் சமுதாய மாறுதலுக்கேற்ப மொழியும்

மாற்றமடைந்து கொண்டே வருகின்றது. ஓர் இனத்தின் பண்பாட்டைக் காட்டும் கருவியாக மொழி திகழ்கின்றது. சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் மொழி திகழ்கின்றது எனலாம்.

## அறிவியல் தமிழ்

பல் கல்வி தருவதற்கான சொல் வளத்தை, குறியீட்டுத் தொகுப்பை நடை அமைப்பை, சுருக்கமாகக் கூறப்போனால் அதற்கான நூல்களைக் கொண்ட தமிழைத்தான் 'அறிவியல் தமிழ்' என்கிறோம். இதுவரை தமிழில் வந்த அறிவியல் நூல்களை நோக்கும்போது, நிறை குறை தெளிவாக விளங்குகிறது. மூலமொழிச் சொற்களைத் தாய்மொழியில் இடத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டும். மூலமொழியில் சொல்லியுள்ளவாறே தாய்மொழியில் கூறினால் கருத்துத் தெளிவு உண்டாகாது. வினைமுற்றைப் பயன்படுத்த வேண்டும். மொழியினைப் புதிய துறைகளில் பயன்படுத்தும்போது கருத்துப் பரிமாற்றத் தேவைகளுக்கேற்பவும் பயன்படும் துறைகளின் வளர்ச்சிக் கேற்பவும் புதிய கலைச் சொற்களும் வாக்கிய அமைப்புக்களும் இன்றைய தமிழில் உருவாவது இன்றியமையாததாகும்.

புதுச்சொல் படைக்கும்போது எளிமை (Simplicity), வழக்கு முதன்மை (currency), ஆக்கத்திறன் (Productivity), சொல் தெளிவு (transparancy) முதலியவற்றை மனதில் கொள்ள வேண்டும். கலைச் சொல்லாக்கத்தில் ஒலி பெயர்ப்பு (Translitertaion) இன்றியமையாததாகும். ஒலி பெயர்ப்பில் மேற்கொண்ட முறை பற்றியும் மேற்கொள்ளவேண்டிய முறை பற்றியும் மொழியியல் பேரறிஞர்கள் அகத்தியலிங்கம் அவர்களும் சண்முகம் அவர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். வடசொற்களை எழுதக் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. தமிழ் நெடுங்கணக் கொடு ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்னும் கிரந்த எழுத்துக்களும் பயன் படுத்தப்பட்டுவருகின்றன.

(எ.கா) Zigmandi – ஸிக்மாண்டி,Boltzman – போல்ட்ஸ்மன், Vanderwalls – வான்டர்வால்ஸ், Andrews - ஆண்ட்ரூஸ்

I . அறிவியல் தமிழில் செயப்பாட்டுவினை ஆட்சி அதிகம்.

ii.பெயராக்க நடை (Nominalized style) அதிகம் கையா ளப்படுகின்றது.

iii . முக்காலத்துக்கும் பொதுவான தொடர்கள் பெருவழக்காக உள்ளன.

iv. பண்புப் பெயர் வழக்கு (abstract nouns) அறிவியல் தமிழில் அதிகம்

V. தெளிவும் செறிவும் வற்புறுத்தப்படுகின்றன.

## வானொலித் தமிழ்:

பொதுச் செய்திப் பரிமாற்றங்கள் வானொலிமூலம் நடைபெறுகின்றன. நம் நாட்டில் கல்லாதவர்களின் தொகை அதிகமிருப் பதால் வானொலியின் பங்கு மிக முக்கியமாதனதாகும். வானொ லித் தமிழில் இரு வழக்கு நிலையைக் (Diglossia) காண்கிறோம். செய்தி அறிக்கை, அறிவிப்பு, பேச்சு போன்றவை அனைத்தும் உயர் மொழி வழக்கில் அமைந்துள்ளன. வானொலியில் 'நான்கு கோடி' என்பது 'நாலு கோடி' என்றும் 'ஏறக்குறைய' என்பது 'கிட்டத்தட்ட' என்றும் கூறப்படுகின்றன.தமிழ் வாக்கியங்களின் சொற்றொடர்கள் ஆங்கிலச் சொற்றொடர்களின் சாயலில் உள்ளன. 'நடப்பு நிதியாண்டு மத்திய அரசின் அனுமதி நாடி இத்திட்டங்கள் காத்திருக்கின்றன' போன்ற வாக்கியங்கள் ஆங்கிலத்தைத் தழுவி உள்ளன.

## பத்திரிகைத் தமிழ்

தமிழ்ப் பத்திரிக்கைகள் பரவல் செய்திக் தொடர்பில் முக்கியப் பங்கினைப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம். செய்தித் தாள்கள், வார, மாத இதழ்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் தமிழ் வழக்கில் காலத்திற்கேற்பவும் நாளும் வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் சமுதாய வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும் பல புதுச்சொற்கள், சொற்றொடர்கள், மற்ற மொழியமைப்புக்கள், மொழி நடை போன்றவை தோன்றி வருவதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் மக்களின் அன்றாடப் பேச்சு வழக்குகளில் இடம் பெற்றுள்ள சில சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை பத்திரிகைகளில் பரவலாகப் பயன்பட்டு வருவதை நம்மால் அறிய முடிகிறது. உலகின் பல பகுதிகளில் நடக்கும் நாட்டு நடப்புகளைப் பற்றிக் கூறுவதால் ஆங்கில மொழியின் மறைமுகச் செல்வாக்கை ஆங்காங்கே காண முடியும். புதிய புதிய தொகைகளும், தொடர்களும் உண்டாக்கப்படுகின்றன. பத்திரிகைத் தமிழை ஆய்ந்து அறிந்து கொள்ளல், இன்னும் சிறப்பாகச் செய்யப்பட வேண்டிய ஆய்வுகளுக்கும் மொழித் திட்டமிடுதலுக்கும் வழி வகுக்கும். மொழி வழக்குகளில் நிலை பேறாக்கம், புதுமையாக்கம் போன்றவை ஏற்பட ஏதுவாக அமையும். மொழி வளர்ச்சியினை அறியப் பயன்படும் அடிப்படை அளவிகள் மூன்றாகும்: (1) எழுத்துருவாக்கம் (2) நிலைபேறாக்கம் (3) புதுமையாக்கம்.

திரு வி.க. தமது தலையங்கங்களை 'எழுத்துப் பேச்சு' என்கிறார். சிறுசிறு சொற்றொடர்களில், இடைஇடையே பல அருந்தமிழ்ச் சொற்கள் சேர்த்து எளிய இனிமையான தமிழில் எழுதினார். திரு.வி.க.வின் தேசபக்தன் தொடர்ந்து நடைபெற்றிருந்தால் சுதேசமித்திரன் நடை மாறியிருக்கக்கூடும் என்று திரு.ஏ. என். சிவராமன் கூறுவது குறிப்பிடத்தக்கது. மணிக்கொடி (1933) இலக்கிய வரலாற்றில் மட்டுமின்றிஉரை நடை வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கது.

இதழ்களில் ஓரளவு பேச்சுநடையும் எழுத்து நடையும் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. எழுத்துச் சீர்திருத்தத்திற்கும் நாளிதழ்களே முன்னோடியாக இருந்துள்ளன. பல்லாண்டுக் காலமாக 'விடுதலை' நாள் இதழில் ஐ, ஔ என்பவை 'அய்' 'அவ்' என்றே அச்சிடப்பெற்று வருகின்றன.

i) பத்திரிகைத் தமிழில் புதுச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

நுண் + உயிர் > நுண்ணுயிர்

பேர் + உந்து > பேருந்து

ii) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களை இணைத்துக் கூட்டுச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

குடி +அரசு - குடியரசு

கருணை + இல்லம் - கருணை இல்லம்

iii) பெயர்ச் சொற்களுடனோ அல்லது அடிச் சொற்களுடனோ விகுதி சேர்த்துப் புதுச்சொற்கள் படைக்கப்படுகின்றன.

ஆளு + நர் - ஆளுநர், பதிவு + ஆளர் - பதிவாளர்

iv) இரண்டு தமிழ்ச் சொற்களைச் சேர்த்துப் புதுப் புதுப் பொருளுக்கேற்ப சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

போக்கு + வரத்து – போக்குவரத்து, கூட்டு + அணி கூட்டணி

தினந்தந்தி மக்கள் நாளேடாக விளங்க எளிமையாக்கமே முக்கிய காரணம் எனின் மிகையாகாது. தமிழ்ப்பத்திரிகைகள் புது மரபுகளை உண்டாக்குவதுடன் அவற்றை மக்களிடையே பரவச் செய்வதிலும் முன்னணியில் நிற் கின்றன. தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தமிழ்ப் பத்திரிகைகள் பெருந்துணையாக இருக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## தொகுப்புரை

- இடைக்காலத்தில் பல்லவர்கள் காலத் தமிழ்பக்தி இலக்கியங்களை வளர்த்ததோடு தமிழ் மொழியின் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.
- அப்பர் தேவாரத்தில் இதழ்ச்சாயல் பெறல் அதிகமாக இடம் பெற்றுள்ளது.
- சோழர் காலத் தமிழில் கம்பராமாயணமும் சீவக சிந்தாமணியும் எழுத்து மாற்றங்களுக்குச் சான்று பகர்கின்றன.
- நேமிநாதம் சோழர் காலத் தமிழுக்கான மாற்றங்களைத் தெரிவிக்கும் நூலாகத் திகழ்கிறது.
- நாயக்கர் காலத்தமிழில் வேற்றுமை, எச்சங்கள் ஆகியவற்றில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.
- மராட்டியர் காலத் தமிழில் பேச்சு மொழியில் பெரும் மாறுதல் ஏற்பட்டதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. அன், ஏன் ஆகிய தன்மை ஒருமை விகுதிகள் காணப்படும் காலம்?

அ) சோழர் காலம்

**ஆ) மராட்டியர் காலம்**

இ) பல்லவர் காலம்

ஈ) நாயக்கர் காலம்

2. குண்டான் என்பது எம்மொழிச் சொல்

அ) இந்தி

ஆ) பாரசீகம்

**இ) மராட்டி**

ஈ) போர்ச்சுக்கீசியம்

3. நான் என்னும் சொல் முதன்முதலில் இடம் பெறும் இலக்கியம்?

அ) அப்பர் தேவாரம்

**ஆ) பரிபாடல்**

இ) கலித்தொகை

ஈ) குறுந்தொகை

4. 'தமிழன்' என்ற சொல்லாட்சி இடம்பெறும் இலக்கியம்?

**அ) அப்பர் தேவாரம்**

ஆ) பரிபாடல்

இ) கலித்தொகை

ஈ) குறுந்தொகை

5. கள் விகுதி அதிகம் இடம்பெற்றிருக்கும் இலக்கியம்?

அ) அப்பர் தேவாரம்

ஆ) பரிபாடல்

இ) கலித்தொகை

**ஈ) வில்லிபாரதம்**

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பல்லவர்கால மெய்யொலியன் குறித்து எழுதுக.
2. சோழர் கால உயிரொலி மாற்றங்கள் குறித்து எழுதுக.
3. சமஸ்கிருத சொற்கள் தமிழாகும் வகை குறித்தெழுது.
4. மராட்டியர் காலத் தமிழ் குறித்து எழுதுக

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. பல்லவர்காலத் தமிழ் குறித்துக் கட்டுரை வரைக
2. சோழர் காலத் தமிழ் குறித்து விவரித்துரைக்க
3. நாயக்கர் காலத் தமிழ் குறித்துக் கட்டுரை வரைக.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

1. **ஆ) மராட்டியர் காலம்**
2. **இ) மராட்டி**
3. **ஆ) பரிபாடல்**
4. **அ) அப்பர் தேவாரம்**
5. **ஈ) வில்லிபாரதம்**

........................

# அலகு - 3

## கல்வெட்டுத் தமிழ் - தமிழில் பிறமொழிக் கலப்பு

### முன்னுரை

கல்லின் மீது பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்குக் கல்வெட்டெழுத்து என்று பெயர். இவை அழியாப் பொருட்கள் மீது எழுதப்பட்டுள்ளமையால் பல நூற்றாண்டுகள் கடந்தும் நமக்குக் கிடைத்துள்ளன. எகிப்திய மொழி, உக்ரிடிக்மொழி, உறிட்டைட்மொழி, பினீசிய மொழி போன்ற மொழிகள் அனைத்தும் கல்வெட்டுக்களிலேயே வாழ்பவை. இம் மொழிகளின் பழமையும் வளமும் கல்வெட்டுக்களினாலேயே வெளிவந்தன. திராவிட மொழிகளில் குறிப்பாகத் தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களைக் காண முடிகிறது. இவற்றுள் மிகப்பழமையானவை பிராமி கல்வெட்டுக்களாகும். இவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பர். இவற்றைக் கீழவளைவு, மறுகால் தலை, திருவாதவூர், ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், விக்கிரமங்கலம் போன்ற பல இடங்களில் காணலாம். அசோகர் பயன்படுத்திய பிராமி எழுத்துக்களைத் தென்னிந்திய மொழிகளுக்கேற்ப மாற்றியமைத்ததே தென்னிந்தியப் பிராமி என்பர். பொதுவாகத் தமிழ் நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய மூன்று வகை எழுத்துக்களால் ஆகியவை. குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களாலானவை. கிராந்த எழுத்துக்களாலும் தமிழ் எழுத்துக்களாலும் ஆகிய கல்வெட்டுக்கள் கி.பி.6ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

### 3.1 கல்வெட்டுத் தமிழ்

தமிழில் 'க' என்ற எழுத்து பல ஒலிகளாக ஒலிக்கின்றன கால்டுவெல் தடையொலிகள் (plosives) மொழிக்கு முதலிலும் இடையே இரட்டித்து வருகையிலும் 'k' போன்ற உயிர்ப் பொலியாகவும், மொழிக்கிடையே உயிர் எழுத்துக்களின் நடுவே ஒற்றையாய் வரும்போதும் மெல்லெழுத்தின் பின் வரும்போதும் 'g' போன்ற ஒலிப்புடைய ஒலியாக (voiced)வும் ஒலிக்கின்றது. இம்மாற்றத்தை உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச் சட்டம் (Law) of Covertibillity of surds into sonants) எனப்

பெயரிட்டுள்ளார். கல்வெட்டுக்களில் தமிழ்ச் சொற்கள் கிரந்தம், பிராகிருதம். தேவநாகரி போன்ற அயல்மொழி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

தமிழ்மொழி வழக்கை இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு என இருவகையாகப் பகுக்கலாம். கல்வெட்டு வழக்கு, பேச்சு வழக்குடன் ஒத்தியல்வது மக்கள் நாவில் வழங்கும் பேச்சு வழக்கில்தான் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். இலக்கிய வழக்கைக் கற்றோர் மட்டுமே பேணிப் பாதுகாத்தனர். 19, 20ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் பேச்சு வழக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் தனித்தனி வரலாறு உடையவை. ஒன்றின் தாக்கத்தை மற்றதில் காணலாம் இவ்விரண்டையும் ஆராய்ந்தால்தான் தமிழ் மொழி வரலாறு முழுமையடையும். பேராசிரியர் தெ பொ மீனாட்சிசுந்தரனார் தமிழ்மொழி வரலாற்றை ஆராயும்போது குகைக் கல்வெட்டு மொழி, தொல்காப்பியத்தமிழ், சங்ககாலத் தமிழ் என்ற வரிசையிலே தான் ஆய்வு செய்கின்றார். இவர் பல்லவர்கால, சோழர்காலத் தமிழை ஆராயக் கல்வெட்டுக்களையே அடிப்படையாகக் கொண்டு உள்ளார் என்பதிலிருந்து கல்வெட்டுத் தமிழின் ஆய்வு இன்றியமையாமை என்பது நன்கு புலனாகின்றது.

பி.சி.சாப்ரா (B.Ch. Chabra) அவர்களும் டாக்கர் டி ஸி சர்க்கார் (Dr. D.C. Sirkar) அவர்களும் மொழியியலுக்குக் கல்வெட்டுக்களின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தனர். தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் கல்வெட்டின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தவர் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் ஆவார். டாக்டர் கே.கணபதி பிள்ளை அவர்கள்தான் முதன் முதலில் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 7ஆம் மற்றும் 8ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுத் தமிழை ஆய்வு செய்தார். ஜெயகுமாரி அவர்கள் எம்.லிட் ஆய்வுக்காக 7ஆம் நூற்றாண்டிலிருந்து 11ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்தார் பாகீரதி அவர்கள் தமது எம்.லிட் ஆய்வுக்குக் கி.பி. 1050 முதல் 1250 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தார். பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 14 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுத் தமிழை ஆய்வு செய்தார். பன்னீர் செல்வம்

அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு கி.பி.7, 8, 9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தார். கி.பி. 800 -920 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக் தமிழையும் சடாவர்ம சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் காலத்திய கல்வெட்டுக்களையும் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து வேலுப்பிள்ளை அவர்கள் இரண்டு டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். குமாரி கார்த்திகேயினி அவர்கள் டாக்டர் பட்ட ஆய்வுக்குக் கி.பி.900-1050 ஆம் ஆண்டு கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளார்கள். பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் டாக்டர் செ.வை.சண்முகம் அவர்களும் இணைந்து 1250 1350 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதி கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டுள்ளனர்.

## கல்வெட்டியல்

கல்வெட்டியல் அல்லது சாசனவியல் (Epigraphy) என்பது, கல் அல்லது வேறு பொருட்களில் வெட்டப்பட்ட அல்லது உலோகங்களில் வார்க்கப்பட்ட எழுத்துக்கள் தொடர்பான ஆய்வுத்துறை ஆகும். இத்துறை பண்பாடு மற்றும் கால அடிப்படையில் கல்வெட்டுக்களை வகைப்படுத்துவதையும், அவற்றை வாசித்து விளக்குதல், அவற்றிலிருந்து முடிவுகளைப் பெறமுயல்தல் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. கல்வெட்டியல் ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் கல்வெட்டியலாளர் எனப்படுகிறார்கள்.

கல்வெட்டியல் துறை 16 ஆம் நூற்றாண்டில் இருந்து உறுதியான வளர்ச்சி பெற்று வருகிறது. கல்வெட்டியலின் கொள்கைகள் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபட்டுள்ளன. ஐரோப்பியக் கல்வெட்டியல் தொடக்கத்தில், இலத்தீன் கல்வெட்டுக்கள் தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தியது. ஜார்ஜ் ஃபப்ரிசியஸ் (Georg Fabricius) - (1516–1571); ஆகஸ்ட் வில்ஹெல்ம் சம்ப்ட் (August Wilhelm Zumpt) - (1815–1877); தியோடோர் மாம்சென் (Theodor Mommsen) - (1817–1903); எமில் ஹியூப்னெர் (Emil Hübner) - (1834–1901); பிரான்ஸ் கியுமொண்ட் (Franz Cumont) - (1868–1947); லூயிஸ் ராபர்ட் (Louis Robert) - (1904–1985) போன்றவர்கள் இத்துறையில் தனிப்பட்ட பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

மாம்சென்னினால் 1863 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டட, கோப்பஸ் இன்ஸ்கிரிப்ஷனம் லட்டினரம் என்னும் இலத்தீன் கல்வெட்டுக்கள் தொடர்பான

தொகுப்பு, போர்க்கால இடையீடுகளைத் தவிர்த்து, இன்றுவரை பெர்லினில் இருந்து வெளியிடப்பட்டு வருகிறது. இலத்தீன் கல்வெட்டுக்கள் தொடர்பிலான மிகப் பெரியதும், விரிவானதுமான தொகுப்பு இதுவேயாகும். கிரேக்கக் கல்வெட்டியல் தொடர்பான நடவடிக்கைகள் வேறொரு குழுவினால் எடுக்கப்பட்டன. 1825 தொடக்கம் 1877 வரையான காலப்பகுதியில், கோப்பஸ் இன்ஸ்கிரிப்ஷனம் கிரீசாரம் (Corpus Inscriptionum Graecarum) என்னும் தொகுப்பும் ஜெர்மனியிலிருந்தே வெளியிடப்பட்டது. பின்னர் வெளியிடப்பட்ட நவீன தொகுப்புக்களினால் இதைப் பலர் தற்போது பயன்படுத்துவதில்லை.

## கல்வெட்டுக்களின் காணப்படும் பேச்சசுத் தமிழ்

கல்வெட்டுக்கள் பேச்சுத்தமிழில் அமைந்துள்ளன. கல்வெட்டு மொழியில் இடைச்செருகல் (Interpolation) இல்லை. எக்காலக் கல்வெட்டு என்பதை நிர்ணயித்துவிட்டால் அது அக்கால வழக்கு எனக் கொள்ளலாம். பிற்காலப் பேச்சு வழக்கை ஒத்தியல்கின்ற மாற்றங்களை அவ்வக்காலப் பேச்சு வழக்கில் காணப்பட்ட ஒலி மாற்றங்களெனவும் பிற்காலப் பேச்சு வழக்கை ஒத்தியலாத மாற்றங்களை எழுதுபவரின் தவறுகள் எனவும் கூறலாம். ஆகாரத்துக்குப் பதில் அகரத்தையும் ஈகாரத்துக்குப் பதில் இகரத்தையும் ஊகாரத்திற்குப் பதில் உகரத்தையும் எழுதுவது எழுதுபவரின் தவறாகும். எழுதுபவரின் தவறுகள் மெய்யெழுத்துக்களை எழுதுவதிலும் காணப்படுகின்றன. (எ.கா) பதினைஞ்ங்கழஞ்சு (பதினைங்கழஞ்சு), (கொண்டு) கொண்ட்டு

## வரிவடிவம்

குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட தமிழ்மொழிக் கல்வெட்டுக்களாகும். குகைக் கல்வெட்டுக்களின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டாகும். கி.பி.7 ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் வரிவடிவத்திலும் கிரந்த வரிவடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. கி.பி.8 ஆம் நுற்றாண்டிலிருந்தே வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. தமிழ் வரிவடித்திற்கும் கிரந்த வரிவடிவத்திற்கும் இடையேயுள்ள உறவினை ஆராயவேண்டும். தமிழ் வரிவடிவத்திற்கும் கிரந்த வரிவடிவத்திற்கும் உறவு நெருக்கமானது உ, ஊ, ய, ங, த, ந, ய, வ என்பன இரண்டு வடிவங்களிலும் ஒரே

மாதிரியாக எழுதப்படுகின்றன. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ற, ர, ல, ள என்னும் எழுத்துக்கள் சிறிதளவே மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் இணைத்துக் 'கிரந்தத்தமிழ் வரிவடிவம்' என்பாருமுளர்.

கல்வெட்டுக்களில் வடமொழிப் பகுதியைக் கிரந்தத்திலும் தமிழ்ப் பகுதியை வட்டெழுத்திலும் எழுதினார். கிரந்த வடிவம் தமிழ்ப் பகுதியில் வடமொழியை எழுதப் பயன்படுத்தப்பட்டது. பல்லவர்கள் கிரந்த வடிவத்தையும் தமிழ் வரிவடிவத்தையும் தென்னிந்தியாவில் புகுத்தினர் என டி.என்.சுப்பிரமணியம் கூறுகிறார். கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வட்டெழுத்து வளர்ச்சி அதிகமிருந்தது. பினீசிய எழுத்து அரமைக் எழுத்து என்ற மேற்காசிய எழுத்துக்களிலிருந்து வட்டெழுத்து தோன்றியிருக்குமென பர்னல் (Burnell) கூறுகின்றார். வட்டெழுத்தும் அசோகன் பிராமியிலிருந்து வளர்ச்சி அடைந்திருக்க வேண்டுமேன கோபிநாதராவ் கூறுகின்றார். வட்டெழுத்து தமிழ்நாடு முழுதும் முந்திய காலத்தில் வழக்கிலிருந்திருக்க வேண்டும் என்றும் பல்லவர்கள் கிரந்தத் தமிழைப் புகுத்திய பின்பு இது வழக்கொழிந்திருக்க வேண்டும் என்றும் கூறுகிள்றனர். கோபிநாதராவ் தமிழ் வரிவடிவத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தையும் அசோகன் காலப்பிராமி, திருநாதர்குன்று கல்வெட்டு, பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் கல்வெட்டு வடிவங்களுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். கிரந்தத் தமிழ் வரிவடிவத்திற்கும் தெலுங்கு, கன்னட வரிவடிவத்திற்குமுள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் எழுத்து வளர்ச்சியை இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றனர். எகரத்தை ஏகாரத்திலிருந்தும் ஒகரத்தை ஓகாரத்திலிருந்தும் பிரிப்பதற்கான புள்ளி 11 ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்களில் காணப்படுவதாகக் கோபிநாதராங் குறிப்பிடுகின்றார். தமிழ்க் கிரந்த வடிவங்களின் மாற்றமும் இருவகையில் நடைபெற்றுள்ளது. நேர்கோடுகளுக்குப் பதிலாக வளைகோடுகளும் வளைகோடுகளுக்குப் பதிலாக நேர்கோடுகளும் எழுதப்பட்டமையே ஆகும். எட்டாவது நூற்றாண்டிலிருந்து கிரந்த எழுத்தில் ஏற்பட்ட முக்கியமான மாற்றம் எல்லா எழுத்துக்களின் வலப்பக்கக் கோணங்களும் வட்டங்களாக மாறினது ஆகும். முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து எழுத்துக்கள் அதிக அளவில் கோணங்களைப் பெற்று

நீள் சதுர வடிவம் கொள்ளத் தொடங்கின. கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப்பழைய கல்வெட்டுக்கள் அனைத்தும் பிராமி வரிவடிவத்திலேயே எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக் குகைக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டு என முதன் முதலில் கூறியவர் கே.வி.சுப்பிரமணிய அய்யர். குகைக் கல்வெட்டுக்களுக்குப் புதிய கால முறையை வகுக்கும் மகாலிங்கம் அவர்கள் அவற்றுள் மிகப் பழையவை கி.மு.3ஆம் நூற்றாண்டு எனவும் மிகப் பிந்தியவை கி.பி மூன்றாம் நூற்றாண்டு எனவும் கூறுகின்றார். அசோகனுடைய வரிவடிவத்திற்கு வேறுபாடு அந்நாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றமாகக் கொள்ளலாம்.

கிரந்த வரிவடிவம், தமிழ் வரிவடிவம், வட்டெழுத்துத் தொடர்பான வளர்ச்சியைக் காட்டும் கல்வெட்டுக்கள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டன. வட்டெழுத்தைப் பொறுத்தமட்டில் கோபிநாதராவ், சிவராமமூர்த்தி, டி.என். சுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகியோர் சேரநாட்டு வரிவடிவமும் பாண்டியநாட்டு வரிவடிவமும் வேறு என்று கொள்ளவில்லை பாண்டிய நாட்டில் வழங்கிவந்த வரிவடிவம் 'வட்டம்' என்பதற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலக் கல்வெட்டொன்று சான்று பகர்கிறது. பழைய வட்டெழுத்தின் முன்னோடியே தமிழ் பிராமியைக் குறிப்பன என்பதைப் பழைய சான்றுகளாகக் கொள்ளவேண்டும். பல்லவர்களில் சிலர் நாகரி எழுத்து வடிவத்தையும் பயன்பத்தியுள்ளனர். பாண்டியரும் சேரரும் வடமொழியை எழுதக் கிரந்தத்தையும் தமிழ் மொழியை எழுத வட்டெழுத்தையும் பயன்படுத்தினர்.

இடைக்காலக் கல்வெட்டுக்களின் இயல்புகளில் ஒன்று, தமிழ் இலக்கண நூலாரின்படி புள்ளிபெற வேண்டிய எழுத்துக்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் புள்ளியில்லாது எழுதப்படுவதாகும். புள்ளி என்ற பெயர் எகர ஒகரக்குறில்கள் வழங்குவதாகும். ஆனால், உயிர் எழுத்துக்களாகிய எகர ஒகரக் குறில்கள் புள்ளிபெற வேண்டுமென கூறப்படுகின்றது. வடமொழிக்கு வழங்கப்பட்ட பிராமி வரிவடிவத்தைத் தமிழுக்கு வழங்க முற்பட்ட போது தனி மெய்யெழுத்துக்கும் வடமொழியில் வழங்காத எகர ஒகரக் குறில்களுக்கும் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் தொடங்கியது. எனவே

இடைக்கால கல்வெட்டுக்களில் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்களுக்கும் வேறுபாடு காணமுடியாது. ஏகார ஓகார மாற்றத்தினை வீரமாமுனிவர் செய்ததாகக் கூறுவர். தமிழ் வரிவடிவமும் காலப் போக்கில் சிறிது, சிறிது மாறிச் சென்றிருக்கின்றது.

## மொழியமைப்பு

**உயிர் ஒலியன்கள்**

இ ஈ உ ஊ

எ ஏ அ ஆ ஒ ஓ

(ஐ-கூட்டொலி; ஒளகாரம் எச்சொல்லிலும் இடம் பெறவில்லை).

**மெய் ஒலியன்கள்**

'ங' கரம் சொல்லின் இடையில் சுகர வெடிப்பொலிக்கு இன மூக்கொலியாக வருகின்றது.மகர மெய்யின் மாற்றொலியாக 'ங' கரமெய்யைக் கொள்ளலாம். பாண்டியர் கல்வெட்டுக்களில் ஞகர மெய்யும் இந்நிலைக்கு வந்துவிட்டது.

**உயிரொலி மாற்றங்கள்**

1. அ > இ

படலிகை > பிடலிகை

மலாட்டு > மிலாட்டு

2. அ> ஒ

பெற்றான் > பெற்றோன்

என்றாம் > என்றோம்

3. இ > அ

ஞாயிற்று > ஞாயற்று

காவிதிப்பாக்கம் > காவதிப்பாக்கம்

4. உ > அ

நுந்தா > நந்தா

ஊருணி > ஊரணி

5. உ > இ

ஒன்றினுக்கு > ஒன்றிநிக்கு

6. ஐ > ஏ

ஊட்டாமை > ஊட்டாமே

கெடாமை > கெடாமே

7. ஒ> அ

பொலிசை > பலிசை

8. ஒ > அ

கொடு > குடு

கொணர்ந்து > குணர்ந்து

## மெய்யொலி மாற்றங்கள்

1. ஞ > ந

ஞான்று > ஞான்று

ஞெகிழ்ந்து > நெகிழ்ந்து

2. க> ய

பதிகம் > பதியம்

திகதி > தியதி

க> ம

சந்திவிக்கிரகப் பேறு - சந்திவிக்கிரமப்பேறு

3. ந்த > ஞ்ச

ஒழிந்து > ஒழிஞ்சி

இசைந்த > இசைஞ்ச

ஐந்தாவது > ஐஞ்சாவது

4. ல் > ள்

மதில் > மதிள்

துலை > துளை

5. ள்> ழ்

திருவாய்க் கேள்வி > திருவாய்க்கேழ்வி

6. ர்க்க > ற்க

நாயனார்க்கு > நாயனாற்கு

தேவர்க்கு > தேவற்கு

7. ற்க் > க்க்

தெற்கு > தெக்கு

மேற்கு > மேக்கு

ர்ப்ப் > ற்ப்

எப்பேர்ப்பட்ட > எப்பேற்பட்ட

8. ங்க் > ஞ்ச்

கலிங்கு > கலிஞ்சு

9. ன்ம் > ம்ம்

தேவகன்மி > தேவகம்மி

10. கெடல்

போழ்து > போது

கொணர்ந்து >கொணந்து

வாய்க்கால் > வாக்கால்

**மொழி முதல் யகரம்**

ஆளும் > யாளும்

இறையான்சேரி > யிறையான்சேரி

**யகர முதற்சொற்கள் இகரத்தை முதலாகப் பெறுதல் உண்டு**

இயாண்டு

சொல்லின் இறுதியில் உகரத்தைச் சேர்க்கும் இயல்பு திராவிட மொழிகளுக்கு உண்டு. இவ்வியல்பைத் தமிழ்க் கல்வெட்டுக்களில் காணலாம்.

நெல் > நெல்லு

என் > எள்ளு

**நூற்றாண்டு வாரியாக ஒலியியல் மாற்றங்கள் (Phonological Changes)**

**6-ஆம் நூற்றாண்டு**

ற்ற > த்த்

ஏற்றம் > ஏத்தம். பல்லவன் கோயில் செம்புப்பட்டயம் 45

**7 ஆம் நூற்றாண்டு**

அ>எ

அரசர்> அரெசர்

உ >இ

இவருடைய > இவரிடைய

ஐ>எ

ஐந்நூறு > அஞ்நூறு

**8 ஆம் நூற்றாண்டு**

அ >இ

எல்லாவற்றி > எல்லாவிற்றின்

எய்>அய்

எண்ணெய் > எண்ணை

க>ய

திருப்பதிகம் > திருப்பதியம்

**9 ஆம் நூற்றாண்டு**

இ> அ

ஞாயிறு >ஞாயறு

ழ > ள

கிழமை > கிளமை

**11 ஆம் நூற்றாண்டு**

ய > யி

இக்கோயில் > யிக்கோயில்

**12ஆம் நூற்றாண்டு**

ற> ர

நிறுத்த > நிருத்த

**14 ஆம் நூற்றாண்டு**

க> வ

தகப்பனார் > தவப்பனார்

ன் > கெடுதல்

கொள்வான் > கொள்வா

**15ஆம் நூற்றாண்டு**

ய் > ள்

ஆராய்ச்சி > ஆராள்ச்சி

**16ஆம் நூற்றாண்டு**

ன்ற> ண்ண

ஒன்று > ஒண்ணு

ள் > கெடுதல்

யாள்ப்பாணம் > யாப்பாணம்

ன்ற > ண்ண

ஒன்று > ஒண்ணு

கல்வெட்டுப் பெயர்ச் சொற்களைப் பாலறி கிளவி உள்ள பெயர்ச் சொற்கள் என்றும் பாலறி கிளவிகள் இல்லாப் பெயர்ச் சொற்கள் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். பெயர்ச்சொல்லே பயனிலை அமைந்த வினைமுற்று இடம்பெறாத வாக்கியங்களும் கல்வெட்டில் உண்டு. நான்காம் வேற்றுமை உருபாகிய குகரம் ரகரத்திற்குப் பின் - க்கு என்றும் றகரத்திற்குப் பின் -கு என்றும் வரும் மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆன், ஆல் இவ்விரண்டும் கல்வெட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ஆறாம் வேற்றுமை உருபாக 'அது மட்டுமின்றி 'அ' கரமும் 'உடைய'வும் கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஏழாம் வேற்றுமைக்குக் 'கண்' மட்டுமின்றிப் 'பக்கல்' என்பதும் கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வீரசோழியம் இவ்வுருபைப் பற்றிப் பேசுகின்றது. ஐந்தாம் வேற்றுமைக்கு 'நின்று' என்ற சொல்லுருபும் கல்வெட்டில் காணப்டுகின்றது. தன்மை ஒருமைக்கு யான், நான் என்ற இரு வடிவங்களும் பன்மைக்கு யாம், நாம், நாங்கள் என்ற வடிவங்களும் காணப்படுகின்றன. மரியாதைப் பன்மையாக இவர், இவர்கள் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. எண்ணுப்பெயர்கள் எண்ணுமுறைப் பெயர் என இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று, ஒரு, ஓர், இரண்டு, இரு, ஈர், மூன்று, மு, மூ என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. 'பத்து'க்கு பத்து, பது, பதின், பதிற்று என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. பெயர்களாக வழங்குபவை என்றும் பெயர்களும் முன்புவரும் எண்ணுப் பெயர்களைப் பெயரடைகளாக வழங்கு பவை என இருவகைப்படுத்தலாம்.

(எ.கா)

அடைக்காய் பத்து

பழம் பதினாறு

விளக்கு இரண்டுக்கு

மூன்று மா

பதினேழு கழஞ்சு

அரை, கால் போன்ற பின்னங்களும் வழங்குகின்றன. 'ஆம்' என்பதைச் சேர்ப்பதால் உண்டாகும் எண்ணுமுறைப் பெயர்கள் பெயர்ச் சொற்களுக்கு முன்னும் 'ஆவது' என்பதைச் சேர்ப்பதால் உண்டாகும் எண்ணுமுறைப் பெயர்ச் சொற்களுக்குப் பின்பும் வருகின்றன. தன்மை ஒருமையில் 'ஏன்' என்ற ஈறும் தன்மைப் பன்மையில் "ஓம்' என்ற ஈறும் கல்வெட்டில் வந்துள்ளன அன், ஆன், ஆள், ஆர், ஆர்கள் விகுதிகள் கல்வெட்டில் காணப்படுகின்றன.

'கொடுக்கக்கடவேன் ஆகவும்' போன்ற வியங்கோள் வினை கல்வெட்டில் காணப்படுகிறது. சுருங்கில், முட்டில், செய்யில் முதலிய நிபந்தனைப் பொருளை உணர்த்தும் வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. 'ஆகில், ஆயில்' என்பதும் நிபந்தனை வினை வடிவமேயாகும். கல்வெட்டுக்களில் தன்வினை, பிறவினைப் பாகுபாடு இயற்கையாக அமைந்துள்ளது. எதிர்கால வடிவத்தையும் இறந்தகால வடிவத்தையும் இணைப்பதன் மூலம் நிகழ்காலம் உணர்த்தப்படும் முறையைக் கல்வெட்டுக்களில் காணலாம்.

(எ.கா)

அளப்போமானோம்

எரிப்போமானோம்

செலுத்துவோமானோம்

இடைத்தைக் குறிக்கும் வினையடையாக முற்காலக் கல்வெட்டுக்களில் முன், பின், முன்பு, முன்னம், பின்னை, அன்று என்ற வடிவங்களும் பிற்காலக் கல்வெட்டுக்களில் முன்பு, பின்பு, அன்றாடு என்பன பயன்படுத்தப்பட் டுள்ளன. ஆக, ஆய், ஆவது போன்றவைகள் இடைச்சொற்கள் போலப் பயன்படுவதைக் கல்வெட்டுக்களில் காணலாம். மரியாதை இடைச்சொற்கள் இடைக்காலத் தமிழுக்கே

உரியன. பிற சொற்களுக்கு முன்பும் பின்பும் அமைவதுண்டு. முற்காலக் கல்வெட்டுக்களில் ஸ்ரீ என்பதும் அதன் திரிபுகளாகிய சிரி, திரு, சி என்பனவும் அடிகள் என்பதுவும் பெயர்ச் சொல்லுக்கு முன் வழங்கியுள்ளன. பிற்காலக் கல்வெட்டுக்களில் ஸ்ரீ என்பதுவும் அதன் திரிபுகளும் உடையார், தேவர், நாயனார், நாச்சியார் என்பனவும் பெயர்ச் சொற்களுக்கு முன் வழங்கியுள்ளன. சொற்களின் பின்னிணைப்புகளாக அடிகள், அமுது, அருள் என்பன முற்காலக் கல்வெட்டுக்களிலும் தேவர், நாச்சியார், அமுது, அருள் என்பன பிற்காலக் கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ளன.

## தமிழ் பிராமி கல்வெட்டு

தமிழ் பிராமி கல்வெட்டுகள் 38 ஊர்களில் மலை சார்ந்த குகைத் தளங்களிலும் திறந்தவெளியிலும் கண்டறியப்பட்டு உள்ளன. இம் 38 இடங்களில் சற்றொப்ப 100 கல்வெட்டுகள் அறியப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் குறைந்தது 1 முதல் அதிகமாக 12 கல்வெட்டுகள் வரை என இம் 38 இடங்களில் காணப்படுகின்றன. தமிழ் பிராமி கல்வெட்டுகள் தமிழ் மொழியின் தொன்மைக்கும் தமிழ் எழுத்து வட்டெழுத்தாகி அடுத்து சோழர் கால எழுத்தாகி பின் இந்நாள் எழுத்தாக உருத்திரிந்ததற்கு சான்றாக உள்ளன. திரு. ஐராவதம் மகாதேவன் பெருமுயற்சி எடுத்து இவற்றை எல்லாம் அடர்வு செய்து தென்னகத்திற்கு சமணர் வச்சிர நந்தி தலைமையில் வடக்கே இருந்து வந்ததை ஒட்டி தமிழகத்தில் மதுரையைச் சுற்றியுள்ள இடங்களில் அமைந்த தமிழி கல்வெட்டுகள் கி.மு. 2 ம் நூற்றாண்டு முதல் கி.பி. 2 ம் நூற்றாண்டு வரையான காலத்தன என்று காலவரையறை செய்தார். எனினும் புதுக்கோட்டை த் தமிழ் பிராமி நடுகல் கல்வெட்டு கங்கரை குறிப்பது 5 -ம் நூற்றாண்டு வரை தமிழ் பிராமியின் பயன்பட்டை உறுதி செய்கின்றது. இக்கல்வெட்டுகள் உள்ள தளங்களை சமண துறவிகளின் படுக்கை என்று ஐராவதம் மகாதேவன் கூறினாலும் மேட்டுப்பட்டி தமிழி கல்வெட்டு "அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ" என்பதிலும், புகளூர் தமிழி கல்வெட்டு "மூதா அமண்ணன்" என்பதிலும் தான் சமணர் பற்றிய தெளிந்த குறிப்பு உள்ளது மற்றவற்றில் அவ்வாறு தெளிவாக இல்லை. இதனால் இவற்றை ஆசீவகர் படுக்கைகள் என்று பேரா. க. நெடுஞ்செழியன் கூறுகிறார். ஆனால் அதற்கும் தெளிவான கல்வெட்டுக் குறிப்பு ஏதும் இல்லை. இக்குன்றுகளின் இருப்பிடத்தில்

பிற்காலத்தே சமண புடைப்பு சிற்பங்கள் அமைந்ததாலும் ஐயனார் கோவில்கள் அமைந்ததாலும் இக் கல்வெட்டுகள் சமணர்க்குரியன ஆசீவகர்க்குரியன என்பது தவறு. இக்கல்வெட்டு விளக்கம் அந்தத் தவற்றை வெளிப்படுத்தவே அமைந்ததாகும். இக்குகைகளில் அமைந்த கற்படுக்கைகள் மருத்துவம் மேற்கொள்ளப்பட்ட நோயாளிகளுக்கான படுக்கைகள் என்றே எண்ணத் தோன்றுகின்றன. ஏனென்றால் முற்றும் துறந்த சமண, ஆசீவக முனிவர் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கப்போவதில்லை. இடைவிடாமல் இடம்பெயர்வது தான் முற்றத் துறந்தவரின் பண்பு.

அண்மையில் கிடைத்த கொங்கப்பட்டி கல்வெட்டுத் தொடரைக் கருத்தில் கொண்டு பிற பிராமிக் கல்வெட்டுகளை மீள்பார்வை செய்த போது இக் கல்வெட்டுகளில் இடம்பெறும் அந்தை, உபசன் ஆகிய பெயர்ச் சொற்கள், அவற்றின் பொருள் பிராமணர் தொடர்புடையவை என்று தெரிவிக்கின்றன. இவ்வாறு சற்றொப்ப 20 கல்வெட்டுகள் உள்ளன. இவை தமிழகத்தில் தமிழ் பிராமணர் இருப்பை 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக எடுத்துச் செல்கின்றன. இதனால் தமிழ்ப் பிராமணரை ஆரியர், யூத பிராமணர், நாடற்றவர், மொழியற்றவர் என்று சிலர் சொல்வது வல்லடிவழக்கு (unreasonable insistence) என்று தெரிகிறது. பிராமணரை இவ்வாறு கூறுவது அறிவின்மை ஆகும். தமிழ் பிராமணரைத் தமிழ் மண்ணின் மைந்தராக ஆதிக்குடியாக அடையாளப்படுத்தும், முகவரி தரும் இப்படியான கல்வெட்டுச் சான்று வேறு எவருக்கும் இல்லை என்பதே உண்மை.

வியாசரின் புராணமதம் கி.பி. 6 ம் நூற்றாண்டில் அறிமுகமாவதற்கு முன்பு பிராமணர் வேள்வி மதத்தையும் தந்திர யோக மதத்தையும் பின்பற்றி வாழ்ந்தனர். எனவே அவர்களில் இரந்து வாழும் தவசிகள் மருத்துவத் தொண்டு புரிய கற்படுக்கைகளை ஏற்படுத்தச் செய்தனர். இதற்கு மாங்குளம், மேட்டுப்பட்டி, நெகனூர்பட்டி கல்வெட்டுகள் சான்றாகும். மக்கள் இத்தகு இரந்து வாழும் சமண, ஆசீவக, பிராமண முனிவர்களை தமது உடல் நலம், மனநலம் கருதி நாடிச் சென்று பார்த்தனர், எதிர்காலம் பற்றி அறிய குறிகேட்கவும் சென்றனர். இம்மக்களில் அரசர், வணிகர், பிராமணர், ஊரார், எளியோர் அடங்குவர். இவர்கள் தாம் இந்த குகைத்தள படுக்கைகளும் கல்வெட்டுகளும் உருவாகக் காரணமானவர். இக்கல்வெட்டுகள் மூலம்

அக்காலத் தவசிகள் மீது மக்கள் கொண்டிருந்த நன்மதிப்பை விளங்கிக்கொள்ள முடிகின்றது. மாங்குளம், மாமண்டூர், புகளூர், நெகனூர்பட்டி ஆகிய இடத்து கல்வெட்டுகளில் துறவு பிராமணத் தாய், தந்தையருடைய பிள்ளைகளும் குறிக்கப்படுவது பிராமணர் வாழ்வின் முற்பகுதியில் இல்லறத்தையும் முதுமையில் அந்தணர் எனப்படும் இரந்து வாழும் துறவறத்தையும் கடைபிடித்து வாழ்ந்தது பிரம்மச்சரியம், இல்லறம், காடுறை அறம், துறவறம் என்னும் நால்வர்க்க வாழ்க்கையைக் கடைபிடித்து வாழ்ந்தனர் என்று உணர்த்துகின்றது. ஆனால் புத்த, சமண, ஆசீவகம் மதத்திற் உள்ளது போல் இந்த துறவு பிராமணர் முற்றும் துறந்தவர் (complete renunciate) அல்லர். துறவு வாழ்விலும் இவர்தம் உறவினர் அவ்வப்போது வந்து பார்த்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்திருந்தனர் என்று தெரிகின்றது. "துவிஜ" எனப்படும் இருபிறப்பாளர் என்ற சொற்பொருள் தியானத்தவ வாழ்க்கையை ஏற்ற பின் இரண்டாவது பிறப்பெடுத்தவர் என்ற பொருளில் பிராமணரைக் குறிக்க வழங்குவது ஈண்டு நோக்கத்தக்கது. இந்த தவவாழ்வினால் முக்கால அறிவு, சித்துக்கள் கிடைக்கப்பெற்றவராக இந்த துறவு பிராமணர் இருந்ததால் மக்களால் அதிகமாக மதிக்கப்பட்டனர். பின்பு பிராமணர் கி.பி. 6 ம் நூற்றாண்டு அளவில் வியாசர் தோற்றுவித்த புராண மதத்தை தழுவிய இந்த தந்திர யோகத்தை அடியோடு கைவிட்டதனால் முக்கால அறிவு, சித்துக்கள் அற்றவராக ஆகிப்போனதால் மக்களிடம் தமக்கு இருந்த தொழத்தக்க மதிப்பை இழந்தனர் என்று தெரிகின்றது.

இத்தமிழி கல்வெட்டுகளில் புழங்கும் சொல்லாட்சி அக்காலப் பேச்சு வழக்குத் தமிழ் என்பது புலனாகின்றது. இவற்றில் புழங்கும் தமிழ் அல்லாத சொற்களும் பெயர்ச் சொற்களும் பிராகிருத மொழிக்கானவை, காட்டாக தம்மம், தன்மன், உதயனஸ ஆகியன. கல்வெட்டு எழுத்துகளில் நெடில் குறிலாகவும், ஒற்றெழுத்து இன்றியும் எழுதப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகளில் ஆண்பால் ஈறு "அன்" தனித்தே எழுதப்பட்டுள்ளது. இகர ஈற்றை அடுத்து யகர மெய் இடப்பட்டுள்ளதானது அக்கால எழுத்து நடையை காட்டுகின்றது. இகரம் எகரமாக குறிக்கப்பட்டுள்ளது. இக்காலத்திற்கும் பயன்படும் பல அரிய தனித்தமிழ்ச் சொற்கள் இக்கல்வெட்டுகளில் உள்ளன. மாங்குளம் முதல் நெற்றம்பாக்கம் வரை பொதுமக்கள் கல்வெட்டுகளுக்கும்

கிண்ணிமங்கலம் முதல் புதுக்கோட்டை வரை நடுகல் வகை கல்வெட்டுகளும் ஊர்வாரியாக விளக்கப்பட்டுள்ளன.

**மாங்குளம்:** மதுரைக்கு வடக்கில் மேலூர் போகும் தேசிய நெடுஞ்சாலையில் கத்தப்பட்டி என்ற கிராமத்தில் பிரிந்து வடமேற்கில் சென்றால் மாங்குளத்தை அடையலாம். இவ் ஊரினை அண்டிய மீனாட்சிபுரம் என்ற ஊரை ஒட்டி தெற்கு வடக்காக 'ஓவாமலை' என்றும் 'கழுகுமலை' என்றும் மக்களால் அழைக்கப்படும் இரு குன்றுகள் உள்ளன. இதன் உச்சியில் கிழக்குப் பகுதியில் கிழக்கு முகமாய் ஐந்து குகைகள் இயற்கையாய் அமைந்துள்ளன. இவற்றில் கற்படுகைகளும், நீர்வடி விளிம்புகளும் வெட்டப்பட்டு வதிவிடங்களாக மாற்றி அமைத்துள்ளனர். இதில் நான்கில் பட்டிப்புரோலு எழுத்து முறையில் ஆறு கலவெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டு 1:1** > மாங்குளம் மலை ஏறியதும் உள்ள முதல் குகைத் தளத்தில் இரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை பாறை முகப்பில் அமைந்த நீர்வடி விளிம்பின் கீழே உள்ளன. முதற்கல்வெட்டு ஒரு வரியில் உள்ளது.

**கணிய் நந்த அஸிரிய்இ குவ்அன்கே தம்மம் இத்தாஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய்**

**விளக்கம்:** கணி நந்த ஆசிரியர் நடத்திய கல்விச் சாலையில் வேத பாடம் சொல்வானுக்கு தருமமாய் நெடுஞ் செழியனின் மணிக்கல் சுரங்கப் பொறுப்பாளன் கடலன் வழுதி என்பான் இக் கற்படுக்கையை உருவாக்கித் தந்தான் என்பது இதன் பொருள். இக்கல்வெட்டில் "அன்" ஆண்பால் ஒருமை ஈறு பணவன், கடலன் என தனியே பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

**கல்வெட்டு 1:2** > முதற் கல்வெட்டு உள்ள இடத்திலேயே இக்கல்வெட்டும் உள்ளது.

**கணிய் நத்திய் கொடிய்அவன்**

**விளக்கம்:** இக்கற்படுக்கையை கணி நத்தி என்பவன் ஏற்படுத்தி கொடுத்தான். டகர மெய் சேர்த்து கொட்டியவன் என படிக்க வேண்டும். நத்தி இன்னொரு தியானத் துறவி ஆவார். இவரும் கணி என்ற பட்டத்தை அடைந்தவர்.

**கல்வெட்டு 1:3** > முன் இரு கல்வெட்டுகளின் குகைக்கு வடக்கே கீழ்ப்புறம் உள்ள குகையின் வெளிப்புற பாறைச் சுவரில் ஒரே வரியில் நீளமாக பொறிக்கப்பட்டுள்ளது.

**கணிய் நந்தஸிரிய் குஅன் தமம் ஈதா நெடுஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் சேஇய் பளிய்**

**விளக்கம்:** கணி நந்த ஆசிரியரின் கல்விச் சாலையில் வேத பாடம் சொல்லிக் கொடுப்பவனுக்கு நெடுஞ்சழியனின் மனைவிவழி உறவினான இளஞ்சடிகனின் தந்தை சடிகன் தர்மமாக கற்படுக்கை அமைத்துக் கொடுத்தான் என்பது இதன் பொருள்.

**அரிட்டாபட்டி:** மதுரைக்கு வடக்கில் 20 கி. மீ. தொலைவில் மேலூர் செல்லும் வழியில் சாலையை விட்டுச் சற்று விலகி அரிட்டாபட்டி உள்ளது. அவ் ஊரில் உள்ள கழிஞ்ச மலையின் அடிவாரத்தில் இயற்கையான குகை ஒன்றில் கற்படுகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மழைநீர் உட்புகாமல் இருக்க நீர்வடி விளிம்பு குகையின் நெற்றிப்புறத்தில் வெட்டப்பட்டு உள்ளது. அதன் கீழ் ஒன்றும் மேல் ஒன்றும் என இரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டு உள்ளன.

**கல்வெட்டு 2:1 >** நீர்வடி விளிம்பின் கீழ் முதல் கல்வெட்டு உள்ளது. 1971இல் இது கண்டு அறியப்பட்டது.

**நெல்வெளிஈய் சிழிவன் அதினன் வெளியன் முழாகை கொடுபிதோன்**

**விளக்கம்:** நெல்வெளியைச் சேர்ந்த துணி வணிகன் அதினன் வெளியன் என்பான் இக் கற்படுக்கையை அமைத்துக் கொடுத்தான் எனப் பொருள். ஒற்று எழுத்து சேர்த்து கொட்டுப்பித்தோன் எனப் படிக்க வேண்டும்.

**சாசனச் செய்யுள்**

இலக்கியம் என்ற சொல் செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம் இரண்டையும் உள்ளடக்கியது. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்ற நூல் வெளியிட்டுள்ளார்கள். சாசனச் செய்யுள், சாசன உரைநடை என இரு கூறாகப் பகுக்கலாம். சாசனச் செய்யுட்களை மெய்க்கீர்த்திகள், மெய்க்கீர்த்தி தவிர்ந்த பிற செய்யுட்கள் என இரண்டாகப் பகுக்கலாம். சாசனச் செய்யுட்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது மெய்க்கீர்த்தி என்னும் இலக்கிய வகையாகும்.பாட்டியல் நூல்களில் மெய்க் கீர்த்திக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

**முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தி:**

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்

தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்

காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி

வேங்கை நாடும் கங்க பாடியும்

நுளம்ப பாடியும் தடிகை வழியுங்

குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்

எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்

இரட்டபாடி எழரை யிலக்கமும்

திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்

எழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்

தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்

தேககொள் கோராஜ சேகரி வர்மரான

ஸ்ரீ ராச ராச தேவர்க்கு யாண்டு....."

'ராஜ' என்ற சொல் மூன்று முறை இருப்பின் இராஜ ராஜனின் கல்வெட்டு எனக் கூறிவிடலாம். காந்தளூர்ச் சாலையில் வெற்றி கொண்டான். அதனால் 'காந்தளூர்ச்சாலைக் கலமறுத் தருளி' எனக் கல்வெட்டில் உள்ளது. மெய்க்கீர்த்திகள் நல்ல தமிழ் நடையில் அமைந்திருப்பதைக் காணலாம். ஒரு மன்னன் தனது ஆட்சியில் பெற்ற வெற்றிகளை மெய்க்கீர்த்தியில் காணலாம். அவனு டைய ஆட்சிக் காலத்துக் கடைசி கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் அவன் அடைந்த வெற்றியையெல்லாம் காணலாம். இராஜராஜன் காலத்திலிருந்து மெய்க்கீர்த்திகளின் தொடக் கத்தைக் கொண்டு, யார் காலத்தைச் சார்ந்தது எனக் கூறிவிடலாம்.

**மெய்க்கீர்த்தி தொடக்கம்:**

முதலாம் ராஜராஜன் - 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி' 'திருமகள் போல'

முதலாம் இராஜேந்திரன் - 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' 'பூர்வதேசமும் கடாரமும்கொண்ட கங்கையும்

இராஜாதிராஜன் - ' திங்களேர் தருதன் தொங்கல் வெண்குடைக்கீழ்"

இராஜாதிராஜன் - 'திங்களேர் பெறவளர்'

'திருக்கொடியொடு தியாகக்கொடி'

இரண்டாம் இராஜேந்திரன் - 'திருமாது புவியெனும்'

'திருமகள் மருவிய செங்கோல்"

'இரட்டபாடி ஏழரை இலக்கம்'

வீரராஜேந்திரன் - 'திருவளர் திரள்புயத் திருநில வலயந்'

'வீரமே துணையா'

அதிராஜேந்திரன் - 'திங்களேர் மலர்ந்தது வெண்குடை மண்டிய'

முதலாம் குலோத்துங்கள் - 'திருமன்னி விளங்கு'

'புகழ்மாது விளங்க'

'புகழ்சூழ்ந்த புணரி'

'பூமேலரிவையும் பொற்செயப் பாவையும்'

விக்கிரம் சோழன் - 'பூமாது புணர'

'பூமாலை மிடைந்து'

இரண்டாம் குலோத்துங்கள் - 'பூமன்னு பதுமம்'

'பூமருவிய புவியேழும்'

'பூமேவி வளர்'

'பூமேவு திருமகள்'

'பூமன்னு பாவை'

'பூமன்னு பூத்த'

மெய்க்கீர்த்தியை யொத்த பகுதியானது சோழர் காலத்துக்கு முந்திய தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. வடமொழிச் சாசனங்களில் காணப்படும் 'பிரசஸ்தி' வகையைச் சார்ந்தது. மன்னனது மட்டுமின்றி குலமுறைமையும் குலப்பெருமையும் முன்னோர் அருஞ்செயல்களும் கூறப்பட்டிருக்கும். (சின்னமனூர்ச் சாசனம்). மெய்க்கீர்த்தி தவிர்த்த மற்ற செய்யுட்களை மண்டல ரீதியில் தொண்டை மண்டலச் செய்யுட்கள், சோழ மண்டலச் செய்யுட் கள் என மயிலை சீனி.வேங்கடசாமி பகுத்துள்ளார்கள். சான்றாக,

'வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே - யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொான்றும் வேய்வாய் பகை' - என்ற பாடலைக் காணலாம்.

## சாசனத்துத் தமிழ் வழக்காறுகள்

சாசன வழக்குத் தமிழுக்கும் இலக்கிய வழக்குத் தமிழுக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. தமிழ்மொழியின் உண்மையான வரலாற்றையறியக் கல்வெட்டுத்தமிழ் பயன்படுகிறது. இன்றைய பேச்சு வழக்குகள் கூட நீண்ட கால வரலாறுடையன என்பது கல்வெட்டுத் தமிழிலிருந்து புலனாகின்றது. கல்வெட்டுக்களில் வடமொழிச் சொற்கள், சொற்றொடர்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்ய விழையும் இந்நேரத்தில், கல்வெட்டு வழக்காறுகளைத் தெரிந்து கொள்வது பயனளிக்கும்.

ஏகபோகம் – ஒரு பூ

அந்தப்புரம் – அகம்படி

தாம் பூலம் – சுருளமுது

திருமேனி - திருவுடம்பு

பரிவட்டம் - சாத்துக்கூறை

கவசம் – திருக்கொள்கை

நஷ்டம் – உள்ளிட்டம்

அவனிவேதனம் – பாடி காவல், ஊர்க்காவல்

கும்பாபிஷேகம் – கலசம் மாட்டுதல்

நைவேத்யம் - அமுதுபடி

மொழியின் வளர்ச்சி, மாற்றம், வரலாறு என்ற கண்ணோட்டத்தில் கல்வெட்டுத்தமிழ் முக்கிய இடம் பெறுகின்றது. அக்கல்வெட்டுத் தமிழை நூற்றாண்டு வாரியாகப் பிரித்து நன்கு ஆராயின், தமிழ் மொழி வரலாறு செம்மையாக அமையும்.

## 3. 2 தமிழில் பிற மொழி கலப்பு வராலாறு

ஒரு மொழி மற்றொரு மொழியுடன் தொடர்புகொள்ளும் போது, ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியில் கலத்தல் இயல்பாகும். மொழித் தொடர்பு என்பது மொழி வர லாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.'கடன் வாங்கப்பட்ட சொற்கள் (borrowed words) இல்லாத மொழியே பெரும்பாலும் இல்லை. ஏனென்றால் எந்த நாடும் தனித்து வாழ முடியாது. மற்ற நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது மொழித் தொடர்புக்கும் வழிகோலுகிறது' என மொழியியல்

பேரறிஞர் ஆட்டோ யெஸ்பர்சன் (Otto Jesperson) கூறுகிறார். மொழி வளர்வதும் வளர்ச்சியடைவதும் பரிணாம வளச்சியாலும் கடன் வாங்கலாலும் என்பர் வரலாற்று மொழியியல் பேரறிஞர்கள். பிறமொழிகளிலிருந்து கடன் வாங்குவதாலும், ஒப்புவமையாக்கத்தாலும் தேவைக்கேற்பப் பிறமொழிகளிலிருந்து சொற்களைப் பெற்றுக் கொள்வதாலும் புதிய சொற்கள் ஒரு மொழியில் கலக்கின்றன. நம்மிடம் இல்லாத புதிய பொருள்களைப் பயன்படுத்தும்போது அப்பொருளுக்குரிய பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்துகிறோம். ஒரு துறையில் ஒரு மொழி சிறப்புப் பெற்றிருந்தால், அத்துறையைக் கற்கும்போது அம்மொழிச் சொற்களைக் கடன் வாங்குகிறோம். அரசியல், சமயம், வணிகம் முதலியவற்றின் காரணமாக ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது, பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியில் இடம் பெறுகின்றன. சமண, பௌத்த சமயக் கருத்துக்களும் சமயச் சொற்களும் தமிழில் புகுந்தன. மணிமேகலைக் காப்பியமே இதற்குச் சான்றாகும். அரசியல் தொடர்பு காரணமாக நாயக்கர், முகம்மதியர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் பல சொற்கள் தமிழில் புகுந்தன.

இன்றைய மொழியியலாளர்கள் செல்வாக்குப்படுத்தும் மொழியைக் கடன் தரும் மொழி (donor language) என்றும் கடனை ஏற்றுக் கொள்ளும் மொழியைக் கடன் பெறும் மொழி (borrowing language) என்றும் கூறுவர். ஒரு மொழி கடன் தர வேறொரு மொழி கடன் ஏற்று மொழிக்கலப்பு உண்டாகிறது. மொழிக் கலப்புக்குக் கௌரவ நோக்கமும் (Prestige motive), நிறைவு படுத்த விரும்பும் மனப்பான்மையும் (need filling motive) காரணமாகும். வேற்று மொழிச் செல்வாக்கால் சொந்த மொழியில் சொற்களை இடம் பெயர்த்து அமைத்துக் கொள்வதை மொழியியலார் 'Loan shift' எனக் கூறுவர் (விமானம், வானவூர்த்தி). பிற மொழிகளிலே சில சொற்றொடர்கள் குறிக்கும் கருத்தைச் சொந்த மொழியிலுள்ள சில சொற்களைக் கூட்டிச் சொற்றொடராக்கி அதே கருத்தை வெளிப்படுத்தும் முயற்சியும் மொழியிலே நடைபெறுவது உண்டு. அருவி என்ற சொல் தமிழிலே இருப்பினும் water falls என்ற சொல்லுக்கீடாக 'நீர் வீழ்ச்சி' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். இதனை மொழியியலாளர் 'Loan translation' என்பர்.பிறமொழிச் சொல்லின் ஒரு பகுதியை

மட்டும் பெற்றுச் சொந்த மொழிச் சொல் ஒன்றின் பகுதியொடு ஒட்டி, ஒட்டிய இரு பகுதிகளையும் ஒரு சொல்லாகப் பயன்படுத்துவது உண்டு.

சங்க காலத்திலிருந்தே தமிழுக்கும் வடமொழிக்கும் இருந்த தொடர்பைத் தொல்காப்பியம் மூலம் அறிகிறோம். சங்க மருவிய காலத்தில் சமண சமயச் செல்வாக்கினால் பிராகிருத மொழித் தொடர்பு ஏற்பட்டது. ஆழ்வார், நாயன்மார் காலத்திலும் வட மொழிச் செல்வாக்கைக் காண்கிறோம். சோழர் காலத்தில் வட மொழிச் செல்வாக்கு மிகுந்துவிட்டது. அதன் விளைவாகப் பவணந்தியார் பதவியல் என்ற இயலில் வடமொழியாக்கம் பற்றிப் பேசுகிறார். கி.பி.14ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் படையெடுப்புக்குப் பின், தமிழகத்தின் ஒரு பகுதியை முஸ்லிம்கள் ஆண்டனர். வட நாட்டிலிருந்த பெர்சியன், உருதுமொழிகள் வாயிலாக அரபுச் சொற்கள் தமிழில் புகுந்தன.கி.பி.16 ஆம் நூற்றாண்டளவில் விஜயநகர நாயக்கர்கள் தமிழகத்தின் ஒரு பகுதியை ஆளத் தொடங்கிய பொழுது, தெலுங்குச் சொற்கள் தமிழில் புகுந்தன. கி.பி.16 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மேலைநாட்டார் நம் நாட்டிற்கு வரத் தொடங்கினர். அம் மேலைநாட்டாரின் வரவால் போர்ச்சுக்கீஸ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலக்கத் தொடங்கின. சுமார் 200 ஆண்டுக்காலம் ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டதால், எல்லாத் துறைகளிலும் ஆங்கில மொழிச் செல்வாக்கைக் காணலாம்.

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கும்போது பல விளைவு கள் ஏற்படுகின்றன. தமிழில் இல்லாத ஒலிகளையுடைய பிற மொழிச் சொற்களைத் தமிழில் எப்படி எழுதுவது என்ற பிரச்சினை எழுகின்றது. நன்னூலார் வடமொழிக்கு விதி கூறியுள்ளார். ஆங்கிலச் சொற்கள் அரசியல், அறிவியல், பயிற்றுமொழி காரணமாகப் பெருகிவிட்டன. தமிழ் ஒலியமைப்புக்கேற்பப் பிறமொழிச் சொற்களைச் ஆக்க வேண்டும் என்பர் சிலர். பிறமொழிச் சொற்களை ஒலி பெயர்ப்புச் செய்யவேண்டும் என்பர் சிலர். பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியில் அமையும் போது புதுப்பொருள் பெறுவதும் உண்டு.

## வடமொழி

தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட மொழி வடமொழியாகும். 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறுவதால்

தொல்காப்பியர் வடமொழியைக் கற்றுப் புலமை பெற்றிருந்தார் என்பது விளங்குகிறது. வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும்போது அவ்வொலி மரபோடு இயையவே விதிகளை அமைத்துள்ளார்.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. (தொல், சொல், 395)

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' (தொல். சொல். 396)

வடசொற்கள் தமிழிலே வழங்குமிடத்துச் சில சொற்கள் இரு மொழிக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களால் வரும்: காலம், கமலம் முதலியன. சில சொற்கள் சிதைந்து வரும் : ஆணை, நட்டம் முதலியன தொல்காப்பியர் சில வடமொழிச் சொற்களை மொழி பெயர்த்துக் கொண்டார்: அளபு (மாத்ரா), அவையல்கிளவி (அஸப் யம்), தகுதி (யோக்யதா), வேற்றுமை, (விபக்தி) முதலியன. அதி கரணம் என்பதனை 'நுதலியறிதல்' எனத் தமிழ்ப் படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் வடமொழிச் சொற்களைக் காணலாம்: ஆதி (குறுந்தொகை 293.4), யாமம் (குறுந்தொகை 6.1), அரமியம் (அகநா. 122.5), நேமி (கலி 105:9), ஆரம் (கலி 79.12), காரணம் (கலி 60.12), கமலம் (பரி 2.14), போகம் (பரி 5.79), மிவனம் (பரி. 11,6), அமிழ்தம் (புற 182.2), அவுணர் (திருமுரு. 59), அங்குசம் (திருமுரு 110), உரோகினி (நெடுநல். 163), சாலேகம் (நெடுநல் 125), ஆதி (திருக்.1) பாக்கியம் (திருக்.1141). கலித்தொகையிலும் பரிபாடலிலும் வடமொழிச் சொற்கள் நிறைய உள்ளன. சிலம்பில் சாவகர், சாரணர், தானம், தருமம், ஞானம், விஞ்சை, இந்திரன் போன்ற சொற்களும் மணிமேகலையில் பாவனை, நரகர், அநித்தம், துக்கம் போன்ற சொற்களும், திருக்குறளில் ஆதி, பகவன், பாக்கியம் போன்ற சொற்களும் காணப்படுகின்றன. பல்லவ அரசர்களின் செப்புப் பட்டயங்கள் கூடப் பிராகிருத மொழியில் உள்ளன. கி.பி.7 ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழகம் சமஸ்கிருதக் கல்வியின் மையமாகத் திகழ்ந்தது. ராஜராஜன், ராஜேந்திரன் போன்ற பெயர்களும் வடமொழிப் பெயர்களாகும். கி.பி.11 ஆம் நூற்றாண்டில் வடசொற்கள் கலந்த மணிப்பிரவாள நடை வழங்கியது. ஸ்ரீ புராணம் என்ற நூலே கலப்பு நடையில் எழுதப்பட்டதாகும். வடமொழி ஒலிகள் சில கிரந்த லிபியில் எழுதப்பட்டன. புத்தமித்திரனார் படலங்களை வகுக்கும் போதே, புணரியலைச் சந்திப்படலம் என்றும்

வினையியலைக் கிரியாபதப் படலம் என்றும் பெயரிடுகின்றனர். பிறவினையைக் காரகமென்கிறார். தாதுப்படலம், உபகாரப்படலம் என்றெல்லாம் வடமொழிப் பெயர்களையே வழங்குகிறார். நன்னூல் பதவியலில் வடமொழியாக்கம் பற்றிக் கூறுகிறார். வடமொழிக்கும் தமிழுக்கும் பொது எழுத்தாலாகியனவற்றைத் 'தற்சமம்' என்றும் வடமொழிக்கேயுரிய சிறப்பெழுத்தாலானவை திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வழங்குபவற்றைத் 'தற்பவம்' என்றும் கூறுகின்றனர். வடிவம் மாறி அமைவது தற்பவம் வடிவம் மாறாதது தற்சமம் எனலாம். பிறமொழிக் கலப்புப்பற்றித் தொல்காப்பியர் விரிவாகக் கூறவில்லை. சமண, பௌத்த சமயங்களின் தொடர்பால் வடமொழிச் சொற்களின் கலப்பு அதிகமாயிற்று. திசைச் சொல்லுக்குரிய இலக்கணத்தை நன்னூலார் விரிவுபடுத்துகின்றார். பிறமொழியிலிருந்து வருவனவற்றைத் திசைச்சொல் என்று குறிப்பிடுகின்றார். அருணகிரி, தாயுமானவர் போன்றோரும் வட சொற்களைக் கலந்து பாடினர். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய வாய்மொழி இலக்கியமான அம்மானைப் பாடல்களிலும் வடமொழிச் சொற்களைக் காணலாம். 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரதாப முதலியார் சரித்திரத்திலும் 20 ஆம் நூற்றாண்டுப் பாரதியார் நடையிலும் வடமொழிச் சொற்களைக் காணலாம். மறைமலை அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தமித்தமிழ் இயக்கத்தார் முடிந்தளவு வடமொழி நீக்கித் தனித்தமிழ் எழுத முற்பட்டனர். எனினும் வடமொழிச் செல்வாக்கை அறவே நிறுத்த இயலவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முண்டாமொழி

திராவிடர்களின் தொடக்ககால அண்டைய மொழிகள் முண்டா மொழிகளாகும். வடமொழியாளர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே முண்டா மொழிகள் பேசுவோர் இங்கு வாழ்ந்தனர். தவக்காய், தவளக்காய், தவளை ஆகிய சொற்கள் 'tapah, ala' என்ற சொல்லினின்றும் வந்தவையாகும். கத்தரிக்காயைக் குறிக்கும் 'வழுதுணங்காய்' என்ற சொல்லும் இம்மொழியிலிருந்தே வந்த தாகும். 'இளநீர்' என்ற சொல்லும் இம்மொழிகளிலிருந்தே வந்த தாகும். ஆஸ்டிரிக் மொழிகளில் 'niyor' என்ற சொல் தேங்காயைக் குறிக்கிறது. 'misei','bisai' என்னும் ஆஸ்டிரிக் மொழிச் சொற்களிலிருந்து 'மீசை', 'வீசை' என்னும் சொற்கள் வந்தன. எதிரொலிச் சொற்களையும் (echo words) முண்டா மொழிகளிலிருந்தே பெற்றோம். சாப்பாடு >

கீப்பாடு, பணம்> கிணம், வீடு கீடு என்பவற்றில் எதிரொலிச் சொற்கள் புதிய பொருளைக் கொடுக்கவில்லை. ஆனால் சம்பளம்> கிம்பளம் என்றவற்றில் மட்டும் கிம்பளம் என்ற எதிரொலிச்சொல் காலப்போக்கில் இலஞ்சத்தைக் குறிக்கப் பயன்படுகின்றது.

குமரகுருபரர் பாடல்களில் இந்திச் சொற்களைக் காண்கிறோம். குமர குருபரர் காசியில் சில காலம் வாழ்ந்தமையால் இந்தி மொழித் தொடர்பின் காரணமாக இந்திச்சொற்கள் இவரது பாடல்களில் காணப்படுகின்றன. நயா பைசா, காதி போன்ற சொற்கள் நம் மொழியில் வந்து கலந்துள்ளன.

## மராத்தி

மராட்டியர்கள் தமிழகத்தை ஆண்டு வந்த காலம் கி.பி. 1766 - 1800 ஆகும். சரபோஜி என்ற மராட்டிய மன்னர் சரசுவதி மகால் நூலகத்தை ஏற்படுத்தி மராத்தி, தெலுங்கு, தமிழ் மொழிகளில் இருந்த ஆயிரக்கணக்கான சுவடிகளைச் சேகரித்து, தமிழ்ப் புரவலராகத் திகழ்ந்தனர். பெரும்பாலான சொற்கள் உணவு வகைகளைப் பற்றியவையாகும் சேமியா, கிச்சடி, கசாயம், பட்டாணி, கோசும்பரி, வாங்கி, ஸொஜ்ஜி முதலியன. சுங்காலம், கிண்டி, ஜாடி, சாலிகை, குண்டான் முதலியன சமையல் பாத்திரங்கள் தொடர் பான சொற்களாகும்.(கண்டி, சாகி, லாவணி, அபங்கம், டோக்ரா) முதலியன இசைத் தொடர்பான சொற்களாகும். காமட்டி, கைலாகு (கொடுத்தல்), வில்லங்கம், சாவடி, கோலி (சிறுவர் விளையாட்டு), அபாண்டம், கில்லாடி, இண்டி மாமா, கலிங்கம், கொட்டு, சந்து, சலவை, ஜாஸ்தி, சுங்கு, சொண்டி, தடவை, தரகரி, திமிசு, நீச்சு, பீருடை போன்ற சொற்களும் நம் மொழியில் கலந்துள்ளன.

## தெலுங்கு

திராவிட மொழிகளில் ஒன்றான தெலுங்கு மொழியுடன் தமிழுக்கு நீண்ட காலத் தொடர்பு உண்டு. முதலாம் இராசேந் திரனின் மருமகன் தெலுங்குப் புலவர் நன்னயபட்டரை ஆதரித்தான். சோழர்களது வெற்றியாலும் திருமண உறவாலும் தெலுங்குச் சொற்கள் தமிழில் புகுந்தன. அருவர், மசரதம், தம்மி, கிச்சு, அக்கட, பரசம், இச்சிடம் என்பன கலிங்கத்துப்பரணியிலும் கம்பராமாயணத்திலும் காண்கிறோம். விசயநகரப் பேரரசின் சிற்றரசர்களான நாயக்கர்கள் ஆட்சி மதுரையில் நடைபெற்றபோது தெலுங்கு மொழி சிறப்புடன் விளங்கியது. தமிழ் நாட்டிற்கு

ரெட்டியார்களும் நாயக்கர்களும் மற்றும் தெலுங்கு பேசுவோரும் வந்து குடியேறியதால், தெலுங்குச் சொற்கள் தமிழில் நிறையப்புகுந்தன. தமிழ்ப் பேரகராதியின்படி 325 சொற்கள் தெலுங்கிலிருந்து தமிழில் வந்து புகுந்துள்ளன.

அக்கடா, அட்டி, அண்ணு, டாப்பு, துரை, பெத்த, தீவட்டி, ஜாடி, ஜதை, தண்டா, சளிப்பு, கடப்பாரை, ராயசம், களுவு, கட்டடம், கலப்படம், உருண்டை, சொக்கா, திப்பி, தோத்தி, பட்டறை, பலப்பம், சந்து, ரவிக்கை, ராவடம், ரேக்கு, லாகிரி, உத்தி, உப்பசம், உம்மச்சு, ஒட்டாரம், ஒயில், கந்தை, கண்ணராவி, கபோதி, கம்பத்தம், கம்பல், கரிசை, கவுனி, காட்டம், கும்பு, கெடுவு, கொப்பி, கொலுசு, சந்தடி, ஜளிப்பு, சிட்டிகை, சிமிளி, தடவை, தோவத்தி, பவிசு, வாணலி, ஜப்பை, அடாதுடி, அப்பட்டம், ரம்பம், காயம், குடுமி, கொடுக்கு, தெம்பு, நமுத்தல், ஜாஸ்தி, பத்தர், அட்டவணை, கேசரிபாத், சாம்பார், சரவடி, பேட்டை, லாவணி, ரசவாங்கி, வில்லங்கம், முதலியனன.

## கன்னடம்

சமண சமயத்தின் கோட்டையாகவும் கர்நாடகம் விளங்கிற்று.கன்னட மொழியின் ஆதி இலக்கியங்கள் சமணர்களாலே ஆக்கப்பட்டன.வீரசைவத் தைத் தழுவிய சிலர் கன்னட மொழியைப் போற்றினர்.தமிழ்ப் பேரகராதி 38 கன்னடச் சொற்கள் தமிழில் புகுந்தனவாகக் கூறுகிறது. அட்டிகை, இதா, எகத்தாளம், சமாளித்தல், சொத்து, பட்டாக்கத்தி, ஒது, இட்டளம், குலுக்குதல், குட்டு, கெம்பு, தாண்டல், எட்டன் முதலியன.

## மலையாளம்

பழஞ்சேரநாடே கேரள நாடாகும்.கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மலையாளம் தனித்தியங்க ஆரம்பித்தது. நாஞ்சில் நாடு கேரள அரசின் கீழ் இருந்து வந்தது.இன்றும் பல மலையாளச் சொற்கள் நாஞ்சில் நாட்டுத் தமிழில் வழக்கில் உள்ளன. திராவிட மொழிகளில் தமிழும் மலையாளமும் மிக நெருங்கிய தொடர்புடையனவாகும். அவற்றை வேறுபடுத்தி அறிவதில் சில சிக்கல்கள் உண்டு. கச்சவடம், காலன், தளவாடம், நெரியல், பிரதமன், வஞ்சி, சக்கை, வெள்ளம், அவியல், அச்சி, அடியந்திரம், பட்டி, ஜன்மி முதலியன.

### சிங்களம்

கிறித்து, பிறப்பதற்கு முன்பே தமிழர்கள் இலங்கையோடு தொடர்பு கொண்டிருந்தனர்.இலங்கையைத் தமிழர்கள் ஆண்ட வரலாற்றுச் செய்தியையும் அறிகிறோம். முருங்கை, பில்லி, அந்தோ, ஈழம் போன்ற சொற்கள் சிங்களத்திலிருந்து வந்தவையாகும்.

### சீனம்

சீனர்களோடும் நமக்குத் தொடர்பு உண்டு. படகு வகையைச் சார்ந்த 'சாம்பான்' என்ற சொல்லும் பெரிய மண் கலத்தைக் குறிக்கும் 'காங்கு' என்ற சொல்லும் 'பீங்கான்' என்ற சொல்லும் சீன மொழியிலிருந்து வந்தவைகளாகும்.

### கிரேக்கம்

பண்டைத் தமிழகம் கிரேக்க நாட்டுடன் தொடர்பு கொண் டிருந்தது.'மத்திகை' (சாட்டை), 'சுருங்கை' (தரைக்குள் செல்லும் வழி), 'கன்னல்' (நாழி வட்டில்) 'ஓரை' (இரண்டரை நாழி) என்ற சொற்கள் கிரேக்க மொழியின்றும் வந்தவையாகும்.குரூஸ் (cross) என்பது இலத்தீன் மொழிச் சொல்லாகும்.

**ஹீப்ரு (எபிரேயம்):** கிறித்துவப் பாதிரியார்கள் மூலம் ஹீப்ரு மொழிச் சொற்கள் தமிழில் புகுந்தன: ஏசு, யூதர், சாலமன் முதலியன.

### மலாய் (மலேசியா)

'சவ்வரிசி' என்பதிலுள்ள 'சவ்' என்பது மலாய் மொழிச் சொல்லான 'sagu' என்பதிலிருந்து வந்ததாகும்.'கிடங்கு' 'கிட்டங்கி' என்னும் சொற்கள் மலாய்ச் சொல்லான (gadong) என்பதிலிருந்து வந்தனவாகும். மலாக்கா (Malacca) மணிலா (Manila) என்னும் இடப்பெயரி லிருந்து 'மல்லாக் கொட்டை' "மணிலாக் கொட்டை' என்னும் பெயர்கள் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

### அரபிய மொழி

அரபுமொழி முகம்மதியர்களின் சமய மொழியாகும்.திருக் குர்ரான் இம்மொழியில் உள்ளது.திருக்குர்ரானைத் தமிழ் முஸ்லிம் கள் படிப்பதற்கு வசதியாகப் புதிய குறியீடுகளும் அடையாளப் புள்ளிகளும் தமிழ் வரி வடிவத்தில் இணைத்து அதனை 'அரபுத் தமிழ்' என்றனர். இஸ்லாமியர் சிலர் அரபுத் தமிழிலும் நூல் எழுதினர். இஸ்லாமியர்களின் பேச்சுத்தமிழில் அரபுச்சட்ட, சமுதாயச் சொற்கள்

காணப்படுகின்றன. பெர்சியன் உருது மொழிகள் மூலம் அரபுச் சொற்கள் தமிழில் புகுந்தன. வசூல், தபா,ரஜா, இமாம், இலாக்கா, பிஸ்மில்லா, உருசுகாயம், ஜேப்பி, சைத்தான், தாக்கீது, தவாலி, நகரா, மக்கர், மகால், இசும், சுன்னத்து, ஆஜர், இரிசால், மௌஸ், முகாம், முசாபர், முன்ஷி, மொபசல், மஹார், புனானி, லாயக்கு, ரத்து, ரஜா, ஹக்கிம், ஷராப், ஜப்தி, ஜபர்தஸ்து, ஜாமீன், தணிக்கை, மகசூல், முசாபயு, ஜில்லா கொசுவர், சுன்னி (முகம்மதியரில் ஒருபரிவு) முதலியன.

## பெர்சியன் (பாரசீகம்)

இந்தி, உருது வழியே பெர்சியன் சொற்கள் தமிழில் புகுந்திருக்க வேண்டும்.தமிழுக்கு வந்த பெர்சியச் சொற்களில் பெரும்பாலானவை ஆட்சித் துறைச் சொற்களாகும். டபேதர், தவாலி, திவான், முகர், ரவாணா, ரஸ்தா, ஜாகீர், சர்தார், ஹவல்தார் முதலியன. சமயம்,வழிபாடு தொடர்பாக, 'தர்க்கா, நமாஸ், லங்கர், கானா முதலிய சொற்கள் தமிழில் புகுந்தன. அங்கூர், சால்வை, துக்கான், ஷோக், சிப்பந்தி, லுங்கி, ரசீது, ஷால், அவுல்தார், சமீன், மாலீசு, முகூர், ரஸ்தா போன்ற சொற்கள் தமிழில் புகுந்தன. பிறமொழிச் சொற்கள் எனக் கூறமுடியாத அளவிற்குச் சில சொற்கள் தமிழாகி விட்டன(தயார்சுமார்).

## துருக்கி

துருக்கி மொழியிலிருந்து 'துப்பாக்கி', 'வான் கோழி ' போன்ற சொற்கள் தமிழில் வந்து புகுந்தன.

## உருது

நிர்வாகத் தொடர்பான சொற்கள் பல உருது மொழியிலிருந்து தமிழுக்கு வந்தன. அக்கப்போர், அக்கரகாரம், அக்கு, அசல், ஆசாமி, அண்டா, அணா, அபினி, அமுல், அம்பர், அம்பாரம், அம்பாரி, அலக் கலக்காக, அலாதி, அமீன், இந்துஸ்தான், ராஜினாமா, ராட்டினம், ராத்தல், லங்கோடு, இனாம், கச்சேரி, கஜானா, அஸ்திவாரம். இஸ்திரி, உசார், உண்டி, ரொக்கம், ஊதுவத்தி, கஸகஸா, கஸாப்பு, கஞ்சா, சுப்ஸா, கம்மி, கெடுபிடி, குத்தகை, சந்தா, சராசரி, அயன், அநாமத்து, உருமால், கரிமசால், கிராம்பு, சுவாத்து, கிருதா, குஷால், கைமா, குமாஸ்தா, சடுதி, சப்பாத்தி, சர்பத், சரிகை, சாட்டை, ஜவாப்தாரி, ராவித்தர், நசர், சராய், கோரி, சாலேசுரம், சுக்கான், சீட்டு, அலாதி, காய்லா, காலி, சுப்பி, சலாம், சுறார், கலாய்,குலாம், சராசரி, சாமான், இனாம்,

ஊதா, ஜவேஜு, கஜானா, கச்சேரி, சுலாயி,கிராக்கி, கெடுபிடி, கைலி, சர்க்கா, பேஜார், ரூஜு போன்ற எத்தனையோ சொற்கள் தமிழில் கலந்தன.

## மேலை நாட்டு மொழிகள்

### போர்ச்சுக்கீசியம்

மேலை நாட்டார் 15 ஆம் நூற்றாண்டி லிருந்தே இந்தியா விற்கு வரத் தொடங்கினர்.முதலில் இந்தியாவிற்கு வந்தவர்கள் போர்ச்சுக்கீசியர்கள்.அவர்கள் கொண்டு வந்த பொருள்கள் "பரங்கி' என்ற முன்னொட்டுடன் காணப்படுவதை இன்றும் காணலாம். பறங்கிக்காய், பறங்கிச் சக்கை முதலியவற்றில் காணலாம். ஊர்ப் பெயர்களிலும் பறங்கி மலை, பறங்கிப் பேட்டை என இருத்தலைக் காணலாம். 'பறங்கி' என்ற சொல் 'Frank' என்ற சொல்லினின்றும் வந்ததாகும். கடுதாசி, பேனா, வாத்து, சா(தேநீர்) இலஞ்சி, திராவி, அலமாரி, மேசை, சாவி, ஆயா, அன்னாசி, கோப்பை,பீப்பாய், வராந்தா, கிராதி, கொரடா, ஏலம், சன்னல், பேனா, மேஸ்திரி முதலிய சொற்கள் தமிழில் கலந்தன. தாமிரமும் துத்தநாகமும் சுலந்த 'தம்பாக்கு' என்ற சொல் 'tambuk' என்ற சொல்லினின்றும் பிறந்ததாகும்.'தோசை' என்ற சொல் முன்னர் இனிப்பான உணவுப் பொருளைக் குறித்து, பின்னர் அரிசிமாவால் தயாரிக்கப்பட்ட 'தோசை' யைக் குறித்தது. பிஸ்கோத்து, புனல், பொத்தான் போன்ற சொற்கள் அம்மொழி ஒலியுடன் தமிழில் கலந்தன.

### டச்சு

போர்ச்சுக்கீசியருக்குப் பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனிமூல மாக இந்தியாவிற்கு வணிகம் செய்ய வந்தவர்கள் டச்சுக்காரர்கள் 'கக்கூஸ்' என்னும் சொல்லானது 'Kakhuis' என்னும் சொல்லினின்று வந்ததாகும். 'துட்டு' எனும் சொல் 'duit' எனும் டச்சு நாணயம் என்ற பொருள் தரும் சொல்லினின்றும் வந்ததாகும்."பப்ளிமாஸ்', 'உலாந்தா', 'தோப்பு' போன்ற சொற்கள் தமிழில் வந்து புகுந்தன.

### பிரெஞ்சு

"போத்தல்' 'ஆசு' (சீட்டுக்கட்டு) 'லாந்தர்' 'தம்பூர்' 'ரோஜ'வடி' 'லோந்து' 'கும்பினியான்' 'கம்யூன்கள்' 'டாக்குத் துரை' 'ஆஸ்பத்திரி' 'பீரோ' 'ஆனிசு' 'உச்சே'

காப்பித்தான், 'கப்பே ' 'குமுசியார்'. 'திருங்கு' 'நொத்தாரிசு' 'பத்தாயி' 'பொத்தான்' 'பொர்மா' 'முதலியன'.

### ஆங்கிலம்

பதினேழாம் நூற்றாண்டிலிருந்தே கிழக்கிந்தியக் கம்பெனி மூலமாக இந்தியாவுடன் வணிகம் செய்தனர் ஆங்கிலேயர். பின்னர் இருநூறு ஆண்டுகள் நம்மை ஆண்டதன் விளைவாக எல்லாத் துறைகளிலும் ஆங்கிலத்தின் செல்வாக்கைக் காணலாம். ஏராள மான ஆங்கிலச் சொற்கள் தமிழோடு தமிழாகக் கலந்துவிட்ட நிலையையும் காண்கிறோம்.கோர்ட், காலரா, சோப்பு, சினிமா, ஷாப், டஜன், டிக்கெட், போலீஸ், பஸ், பில், பேப்பர், பேனா, பங்களா, பென்சில், மோட்டார், மீட்டிங்கு.உயில், ஏக்கர், ஓட்டல், கேசு, நம்பர், பிராமிசரி, லீவு முதலிய பல சொற்கள் தமிழ்ச் சொற்களாக ஆகிவிட்ட நிலையைக் காண்கிறோம்.

## பிறமொழிகளில் தமிழ்

தமிழில் பிறமொழிக் கலப்புப்பற்றிதான் பெரும்பாலும் பேசப்படுகின்றது. ஆனால், அதே நேரத்தில் தமிழ்ச் சொற்களும் இந்திய மொழிகளிலும் மேலைநாட்டு மொழிகளிலும் கலந்துள்ள வரலாற்றைக் காணவேண்டும். இதனை நாகரிக ஊடுருவல் (Cultural diffusion)! எனக் குறிப்பர். தமிழினம் பல நூற்றாண்டுக் கால அரசாட்சியிலும் வணிகத்திலும் சிறந்து விளங்கின. 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பெருமைக்குரியவர்களாய்த் தமிழர்கள் வாழ்ந்தனர்.

## வடமொழி

| தமிழ் | சமஸ்கிருதம் |
|---|---|
| அனல் | anala |
| உலக்கை | Ulükhala |
| குடம் | kuta |
| கள்வன் | khala |
| மாலை | māla |
| தண்டம் | danda |

| | |
|---|---|
| பள்ளி | palli |
| மயில் | mayūra |
| ஏலம் | ela |
| பழம் | phala |

தமிழில் வடமொழிச் சொற்கள் நிறைய கலந்துள்ளன.ஆனால், அதே நேரத்தில் தமிழ்ச் சொற்களும் வட மொழியில் கலந்துள்ள உண்மையை மறுப்பதற்கில்லை. வடமொழியில் தமிழ்ச் சொற்கள் கலப்புப்பற்றி டாக்டர் கால்டுவெல்லும், டாக்டர் பர்ரோ (T. Burrow) அவர்களும் விரிவாக எழுதியுள்ளனர். நீர், மீன், மின் போன்ற பல தமிழ்ச் சொற்களை வடமொழியில் காணலாம். ரிக் வேதத்தில் காணப்படும் தமிழ்ச் சொற்களைத் திராவிட மொழி யியல் பேரறிஞர் பர்ரோ அவர்கள் 'சமஸ்கிருத மொழி' (The San- skrit Language) என்ற நூலில் எடுத்துக்காட்டுகின்றார்.

இந்தோ-ஐரோப்பியா மொழிகள் காலப் போக்கில் செடி, கொடி, விலங்கு, பறவைகளின் பெயரைப் பயன்படுத்தி இருக்க வேண்டும் எனத் திராவிட மொழியியல் பேரறிஞர் எமனோ (Emeneau)/ கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கால்டுவெல், குண்டர்ட், கிட்டல், டர்னர், பர்ரோ போன்ற மொழியியல் பேரறிஞர்கள் வடமொழியில் காணப்படும் திராவிடச் சொற்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் நிறைய தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.இது குறித்து முறையான அறிவியலடிப்படையிலமைந்த மொழியியல் ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

**சிங்களம்**

தமிழகத்திற்கும், இலங்கைக்கும் நீண்ட காலமாகவே தொடர்புண்டு. இலங்கையைத் தமிழ் மன்னர்களும் ஆண்டுள்ளனர். பல நூற்றாண்டுக் காலமாகத் தமிழரும் சிங்களவரும் இலங்கையில் வாழ்வதால், சிங்கள மொழியில் தமிழ்ச் சொற்கள் காணப்படுவதும் தமிழ் மொழியில் சிங்களச் சொற்கள் காணப்படுவதும் இயற்கை யாகும். சிங்கள யாப்பு தமிழை யொட்டி அமைந்திருப்பதையும் இலங்கைக் கல்வெட்டில் 'பெரு மகன்' முதலான தமிழ்ச் சொற்கள் இருப்பதையும் பேராசிரியர்

தெ.பொ.மீனாட்சுந்தரனார் குறிப்பிடு கின்றார். சிங்கள மொழி யில் குடி, கூலி, பெருமகன், கல்,சரக்கு, பெட்டி, நங்கை, அம்மா போன்ற சொற்களைக் காணலாம்.

**கிரேக்கம்**

கிரேக்க நாட்டிற்கும் பழந் தமிழகத்திற்கும் வணிகத் தொடர்பு இருந்ததை வரலாற்றின் மூலம் அறிகிறோம். கிரேக்கச் சொற்களைத் தமிழிலும் தமிழ்ச் சொற்களைக் கிரேக்க மொழியிலும் காண்கிறோம்.

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| அரிசி | oryza |
| இஞ்சி | zingiber |
| கருவா(பட்டை) | karpion |

பழந் தமிழகத்திற்கும், பாபிலோனியாவிற்கும் வணிகத் தொடர்பு இருந்ததை சேஷ அய்யங்கார் எழுதிய 'திராவிட இந்தியா' (Dravidian India) என்ற நூலின்மூலம் விளக்கமாக அறிகிறோம். நம் நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் களுக்கு நம்நாட்டின் பெயரையே வழங்கினர் என்றும் அறிகிறோம்.முதலில் 'காகமும்' பின்னர் 'மயிலும்' அந்நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டன என்பதைப் புத்த ஜாதக் கதைகள் மூலம் அறிகிறோம்.சுமேரியத் தலைநகரான 'ஊர்' என்பதைத் தமிழ்ச் சொல்லான 'ஊர்' என்பதுடன் தொடர்படுத்திக் காட்டுவர் மொழி யியல் பேரறிஞர்கள். ஹீப்ரு மொழியில் மயிலுக்கு 'துகி' என்று வழங்குவதைத் 'தோகை' என்ற தமிழ்ச் சொல்லினின்றும் வந்ததாகக் கூறுவர். மயில்தோகை, தேக்கு, ஊர் போன்ற சொற்களை இம்மொழியில் காணலாம்.பழந்தமிழகத்திற்கும், பாபிலோனியாவிற்கும் நீண்டகால வாணிபத் தொடர்பு இருந்ததைப் பூரண லிங்கம் பிள்ளை சுட்டிக்காட்டிச் செல்வது இங்குக் குறிப்பிடத் தக்கது.

**சீனம்**

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே சீனாவுக்கும் தென்னிந் தியாவிற்கும் தொடர்பு இருந்ததை அறிகிறோம். கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்தே முத்துக்கள் போன்ற விலை உயர்ந்த பொருள்கள் சீனாவுக்குச் சென்றன என அறிகிறோம். 'காஞ்சி' என்ற சொல் houang-tche என்ற வடிவில் சீன மொழிக்குச் சென்றிருக்கலாம் என வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார்.

**சப்பான்**

சப்பானின் சுடந்த நெடுங்கணக்கு வடிவத்தில் தமிழின் செல்வாக்கு இருப்பதாக நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார். அண்மையில் ஜப்பானிய மொழிக்கும், தமிழ் மொழிக்கும் உள்ள உறவைக் குறித்துச் சுசுமு ஒக்னோ (Susumu Ohno)வும் சுசுமு சிபாவும் (Susumu Shiba)1 ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். இவ்வாய்வு வளர்ந்தால் இம்மொழிகளுக்குள்ள உறவு பற்றி அறிய பெரும் வாய்ப்பு ஏற்படும். இவ்வறிஞர்கள் தமிழ் மொழிக்கும், ஜப்பானிய மொழிக்குமுள்ள உறவைப் பல்வேறு நோக்கில் ஆராய்ந்து கொண்டுள்ளனர்.

| Tamil | Old Japanes |
|---|---|
| Oru | Píto |
| iru | Putu |
| Murukku(mu) | mi |
| Nalu(nanku) | yo |
| aintu | itu |
| atu | mu |

| Tamil | Japanes |
|---|---|
| kavvu | kamu |
| kayal | kaya |
| kal | kara |
| kotti | kagi |
| tati | tati |
| manti | masi |

இவண் இருமொழிக்குமுள்ள உறவை ஆராயத் தலைப்பட்டுள்ளனர். சப்பான் மொழியில் காணப்படும் தமிழ்ச் சொற்களைப் பற்றிய ஆய்வும் தொடர இருக்கின்றது.

## ஆங்கிலம்

இன்று உலக மொழியாக விளங்கும் ஆங்கிலம்உலகிலுள்ள பல்வேறு மொழிகளிலிருந்தும் சொற்களைப் பெற்று வளமிகுந்த மொழியாகத் திகழ்கின்றது. வெவ்வேறு நாட்டுப் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பொருட்கள் முதலியவற்றைப் பயன்படுத்தும்போதும் அவற்றைப் பற்றி எழுதும் போதும் அம்மொழிச் சொற்களையே பயன்படுத்த வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. ஆங்கிலேயர்கள் கி.பி.16 ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்தனர். கி.பி.17ஆம் நூற்றாண்டில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். நான்கு நூற்றாண்டுக் காலமாக இந்தியாவோடு ஏற்பட்ட வணிகத் தொடர்பினாலும் அரசியல் தொடர்பினாலும் ஆங்கில மொழிச் சொற்கள் நமது மொழியிலும் நமது தமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியிலும் புகுந்தன. இந்தியப் பண்பாட்டை விளக்கவும் நம் நாட்டில் காணப்படும் பொருட்கள், செடி, கொடி, விலங்குகளைக் குறிக்கவும் இந்தியச் சொற்கள் ஆங்கில மொழியில் கலந்தன. தமிழ் நாட்டொடு வணிகத் தொடர்பு கொண்ட மேலை நாட்டு வணிகர்கள் தங்கள் மொழியில் தமிழ் நாட்டுப் பொருள்களைக் குறிப்பதற்குரிய பெயர்கள் இல்லாத காரணத்தால், தமிழ்ச் சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானார்கள் பல நாட்டுச் சொற்கள் ஆங்கில மொழியில் கலந்து வளமுடைய மொழியாக மாறி விட்டது. ஆங்கில மொழியில் தமிழ்ச் சொற்கள் குறித்துப் பேராசிரியர் மயிலேறு, டாக்டர் அ.சிதம்பரநாத செட்டியார், பேராசிரியர் கோ. இராமச்சந்திரன், பேராசிரியர்டி.எஸ்.மாணிக்கம், டாக்டர் ஆஷர் போன்றோர் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மொழி வரலாற்றை நோக்கின் ஆங்கிலமொழி தொடர்பு கொண்ட எந்த மொழியிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கத் தயங்கியதே இல்லை என மொழியியல் பேரறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலமொழி கடன் வாங்கிய வேற்றுமொழிச் சொற்களின் பிறப்பிடங்களில் இந்தியத் துணைக் கண்டமும் ஒன்றாகும்.ஆங்கிலத்தில் காணப்படும் இந்தியச் சொற்களில் பெரும் பாலானவை கிழக்கிந்தியக் கம்பெனிமூலம் குடிபுகுந்தவையாகும். சில தமிழ்ச்சொற்கள் நேரிடையாகவும் மற்றும் சில மற்ற மொழிகள் மூலமாகவும் ஆங்கில மொழியில் கலந்தன. தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்த அஃறிணைப் பெயர்ச்சொற்களிலே

உணவுபற்றிய சொற்கள்தாம் அதிகம். இந்நாட்டு நாணயங்கள், அளவைகள் பற்றிக் குறிப்பிடும்போது இந்நாட்டுப் பெயர்கள் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்துடன் கலந்துறவாடும்போது, அச்சமுதாயப் பிரிவுகள், தொழில்கள் முதலியவற்றைக் குறிக்க அம்மொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| **தமிழ்** | **ஆங்கிலம்** |
|---|---|
| அணைக்கட்டு | anicut(1784) |
| ஓலை | Olla (1622) |
| பச்சிலை | Patchouli (1845) |
| கஞ்சி | Conjee, Congee(1698) |
| கட்டுமரம் | Catamaram (1697) |
| கணக்குப்பிள்ளை | Conicopoly (1680) |
| கயிறு | Coir (1582) |
| கறி | Curry (1898) |
| காசு | Cash (1598) |
| தோப்பு | Tope(1698) |
| மாங்காய் | Mango(1665) |

'இஞ்சி' என்ற திராவிடச் சொல் உலகிலே பல மொழிகளில் திரிந்து வழங்குகின்றது

| | |
|---|---|
| Inkiväati | Finnish |
| Ingefara | Swedish |
| Inbir | Russian |
| Gingsear | Irish |
| Ginger | Enghish |
| Gember | Dutch |

மொழிக்கு மொழி சொற்களைக் கடன் வாங்குவது இரு வழிப் பயணமாகும். பிறமொழிகளிலிருந்து சொற்களைப் பெறுவ தும் அம்மொழிகளுக்குச் சொற்களை வழங்குவதும் மொழி வர லாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். கடன்பேறு பற்றிய ஆய்வு (Borrowing study) விரிந்த அளவில் செய்யப்பட வேண்டும். ஒரு நாட்டின்

வரலாற்றை அறியவும் பிற நாட்டினரிடம் கொண்ட பண்பாட்டுத் தொடர்பை அறியவும் இவ்வாய்வு பெருந்துணை புரியும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

## தொகுப்புரை

- கல்வெட்டுத் தமிழில் பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் பெரும் மாற்றம் அடைந்துள்ளதை இந்தத் தரவுகள் மூலம் அறிய முடிகிறது.
- கல்வெட்டியல் தற்போது பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இலத்தீன் மொழிக்கு நிகராகத் தமிழ் மொழியிலும் அதிகப்படியான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.
- தமிழ் வரி வடித்தில் தற்போது இருக்கும் மாற்றத்தை விட தொடக்க காலத்தில் பெரும் மாறுதல்கள் காலத்திற்கேற்ப ஏற்பட்டுள்ளது.
- உயிரொலி மாற்றங்கள் கல்வெட்டுத் தமிழில் அதிக அளவில் உள்ளன.
- தமிழ்ப்பிராமி கல்வெட்டுக்கள் கி.பி 2ஆம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்டுள்ளன.
- தமிழில் பிற மொழிக்கலப்பு என்பது இடைக்காலத்தில் தவிர்க்க இயலாத ஒன்றாக இருக்கிறது.
- மன்னர்கள் பலர் தங்கள் பெயர்களை வடமொழியில் சூட்டிக் கொள்வதைப் பழக்கமாக்கிக் கொண்டனர்.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. கல்வெட்டின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தவர்?

அ) அயிராவதம் மகாதேவன்

**ஆ) தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்**

இ) டாக்டர் கே.கணபதி பிள்ளை

ஈ) ஜெயகுமாரி

2. கல்வெட்டுக்களில் தமிழ்ப் பகுதியை எழுதப் பயன்படுத்திய எழுத்து?

அ) கிரந்தம்

**ஆ) வட்டெழுத்து**

இ) ஆப்பு வடிவ எழுத்து

ஈ) பாலி

3. தமிழ்நாட்டுக் குகைக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டு என முதன் முதலில் கூறியவர்?

**அ) கே.வி.சுப்பிரமணிய அய்யர்**

ஆ) கோபிநாதராங்

இ) சிவராமமூர்த்தி

ஈ) மகாலிங்கம்

**4. தமிழிக் கல்வெட்டுக்களில் புழங்கும் சொல்லாட்சி ?**

**அ) பேச்சு வழக்கு**

ஆ) இலக்கண வழக்கு

இ) செய்தி வழக்கு

ஈ) சித்திர வழக்கு

5. துகி என்பது எம்மொழிச்சொல்?

அ) ஆங்கிலம்

**ஆ) ஹீப்ரு**

இ) பாரசீகம்

ஈ) சீனம்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. கல்வெட்டுக்களில் காணப்படும் பேச்சுத்தமிழ் குறித்து எழுதுக.
2. மெய்யொலிகள் கல்வெட்டில் பெற்றுள்ள இடம் குறித்து எழுதுக
3. சாசனத்துத்தமிழ் வழக்காறுகள் குறித்து எழுதுக
4. அயலகத்தமிழ் குறித்து எழுதுக

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. கல்வெட்டுத்தமிழ் குறித்துக் கட்டுரை வரைக.
2. கல்வெட்டில் காணப்படும் உயிரொலி மாற்றம் குறித்து எழுதுக.
3. தமிழ் மொழியில் பிறமொழி கலப்பு வரலாறு குறித்து எழுதுக.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

1. ஆ) தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்
2. ஆ) வட்டெழுத்து
3. அ) கே.வி.சுப்பிரமணிய அய்யர்
4. அ) பேச்சு வழக்கு
5. ஆ) ஹீப்ரு

………………..

# அலகு – 4

# தமிழ்க் கிளை மொழிகள் - தமிழ்ச் சொற்பொருள் மாற்றம்

## 4.1 தமிழ்க் கிளை மொழிகள்

### முன்னுரை

மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தனது கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் கருவியே மொழியாகும். மொழி இல்லையேல் சிந்தனையால், எண்ணத்தால், பண்பாட்டுச் சிறப்பால் மனிதன் வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போய் இருக்கும். எழுத்து வடிவமில்லாது பேச்சு வழக்கில் மட்டும் பயின்று வரும் ஆயிரக்கணக்கான பழங்குடி மொழிகளும் நம் நாட்டில் உண்டு. ஒரு மொழி பரந்த பரப்பில் பேசப்படும்பொழுது அதில் வேறுபாடுகள் காணப்படுதல் இயற்கையாகும். கிளைமொழி (dia- lect) என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையைக் குறிப்பதாகும். ஒரு தனி மனிதர் பேசும் பேச்சு வழக்கை 'Idiolect' என்பர். அதாவது இதைத் 'தனி மனிதப் பேச்சு வழக்கு' என்று குறிப்பிடலாம். பல தனி மனிதப் பேச்சு வழக்குகள் ஒரு கிளை மொழியையும், பல கிளைமொழிகள் சேர்ந்து ஒரு மொழியையும் உருவாக்குகின்றன. மொழிக் குடும்ப (language family) வரலாற்றிற்கு மொழியும் (language) ஒரு மொழி வரலாற்றிற்குக் (History of language) (Dialect study) கிளைமொழி ஆய்வும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

### தமிழின் கிளைமொழிகளும் வரலாறும்

செய்தித் தொடர்பில் குறுக்கீடுகள் (in- terferences) அதிகமானாலும் மொழியில் மாற்றங்கள் ஏற்படும். கிளைமொழியை வழங்கும் இடம் பற்றி வட்டாரக் கிளைமொழி (Regional Dialect) என்றும், பேசுகின்ற மக்களின் சமூகநிலை பற்றிச் சமூகக் கிளைமொழி (Social Dialect) என்றும் கூறுவர். பேச்சு மொழியை வரிவடிவத்தில் அளிக்கும்போது அதனைப் பார்வை கிளைமொழி (Eye Dialect) என்றும் கூறுவர். ஒரே மொழி வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்குச் சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும் கூட அவற்றிடையே ஒரு பொதுத் தன்மையைக் காண்கிறோம். எழுத்து மொழியுடன் பெரும்பாலும் ஒத்துச் செல்லும் பேச்சு வழக்கினைப் 'பொதுப் பேச்சு மொழி' (standard Spoken language) சமூகக் கிளைமொழி (Standard Dialect)

என்பர். கிளை மொழிகளைக் கண்டறிய மொழியியல் பேரறிஞர்கள் மொழிப்பாகுபாட்டுக் கோடு (Isolgoss) என்ற கருத்தினை வலியுறுத்துகின்றனர். கிளைமொழி எல்லையைக் (Dia- lect boundary) குறிக்கும் பாகுபாட்டுக் கோடுகள் மொழியின் எந்தவொரு கூறினையும் காட்டப் பயன்படுத்தலாம். கிளைமொழிகளுக்குள் பெரும்பான்மை ஒற்றுமையும் சிறுபான்மை வேற்றுமையும் காண்கிறோம். ஒற்றுமை யொட்டிப் புரிந்து கொள்ளும் தன்மை (mutual intelligibility) அமைகின்றது. பேசுகின்ற இடத்தைப் பொறுத்து வட்டாரக் கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவாக இருக்கும். கன்னியாகுமரி வட்டாரப் பேச்சுத் தமிழுக்கும் சென்னைப் பேச்சுத் தமிழுக்கும் ஓரளவு மிகுந்த வேற்றுமையைக் காணலாம். ஆனால், அதே நேரத்தில் மத்தியக் கிளைமொழிக்கும் தெற்குக் கிளை மொழிக்கும் சிறிது வேற்றுமையைக் காணலாம்.

சங்க காலத்திலேயே கிளை மொழிகள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் காண்கிறோம். சங்க காலப் புலவர்கள் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களாதலால், அவ்வட்டார வழக்கினையும் அவர்கள்தம் பாடல்களில் காண்கிறோம். புறநானூற்றில், 'நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை என்பதில் 'ஓசை' என்பது 'பொரியல்' என்ற பொருளில் வழங்குகிறது. கலித்தொகையில் 'செரு' என்ற சொல் 'வயல்', என்ற பொருளிலும் திருக்குறளில் 'பெற்றம்' என்ற சொல் 'பசு' என்ற பொருளிலும் வந்துள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் 'திசைச் சொல்' என்ற வழக்கு கிளைமொழியைக் குறிப்பதாகக் கூறுவர். தொல்காப்பியர் பன்னிரண்டு வட்டாரக் கிளை மொழிகளையும் உரையாசிரியர்கள் செந்தமிழுடன் கொடுந்தமிழ், சான்றோர் வழக்கு, குழூஉக்குறி, தொழில் பற்றிய வழக்கு எனப் பல நிலைகளில் பேச்சு மொழியினை எடுத்துக்காட்டியுள்ளனர். சங்கத் தமிழில் கிளை மொழிகளும் இருந்தன. இதனைத் தொன்மொழிக் கிளை மொழி (Archaic Dialect) எனப் பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் கூறுகிறார்கள். நான்கு என்பதை நால்கு என்றும், ஒன்பது என்பதைத் தொண்டு என்றும் இக்கிளை மொழியில் வழங்கியிருக்க வேண்டும். நான்காம் வேற்றுமைக்கு முன் மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் அத்துச் சாரியை இல்லாமல் வழங்குவது (ஆசிரியம் - ஆசிரியக்கு, வேழம் வேழக்கு போன்றவை) கிளை மொழியின் பண்பாகக் கொள்ள

வேண்டும். செய, செய்யின் என்ற வாய்பாட்டு வினையெச்சங்களில் ககரம் உள்ளது கிளைமொழிப் பண்பாகும். செய்யாது என்ற வாய்பாட்டில் (வழங்காமல் மறவாமல் போன்றவை) உள்ளதும் கிளைமொழிப் பண்புகளில் ஒன்றாகும். இப்பண்புகளே இடைக்காலத்தில் பெரு வழக்காயிற்று. சங்க இலக்கியங்களில் வழங்காத சில இலக்கணக் கூறுகள் சங்க காலப் பேச்சு வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பர் தமிழ் மொழி வரலாற்று ஆராய்ச்சியாளர்கள். இக்கூறுகளையுடைய கிளை மொழியை வழக்குத் தமிழ் கிளைமொழி எனலாம். முன்னிலைப் பன்மையாக 'நீர்' என்ற வடிவம் வழங்குவது, சகரத்தை முதலாக வுடைய சொற்களைப் பயன்படுத்துவது போன்ற கூறுகள் கிளை மொழியின் கூறுகளாகக் கொள்ளலாம். எனவே, சங்கத் தமிழிலும் பொதுத்தமிழ்க் "கிளை மொழி, தொன் மொழிக் கிளை மொழி, வழக்குத் தமிழ்க் கிளை மொழி ஆகியவை வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வழங்கும் 'சிறுமியர்' என்ற சொல்லுக்குச் 'சிறு பெண்கள்' என்ற பொருளிலும் குடகு நாட்டு வழக்கு எனக் குறிப்பிட்டுச் செல்கின்றார். 'போர்த்தல்' என்ற பொருள் கொண்ட 'தைத்தல்' என்ற சொல்லை மலைநாட்டு வழக்கு என்றும் 'பிரித்தல்' என்ற பொருள் கொண்ட 'தெழித்தல்' என்பது குடநாட்டார் வழக்கென்றும் கூறுவர். சளிப்பிடித்தலைக் குடநாட்டில் 'பனித்து' என்ற சொல்லால் குறிப்பிடுவர் என அடியார்க்கு நல்லார் கூறுவதினின்று, வட்டார வாய்மொழி வழக்கினை எண்ணூறு ஆண்டுகட்கு முன்பே எடுத்தியம்பியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து எல்லையையோ கொடுந் தமிழ் நிலத்து எல்லையையோ குறிப்பிடவில்லை. செந்தமிழை இயற்ாெல்லாகக் கொண்டு, வட்டார வழக்கினைத் திசைச் சொல் என்கிறார்.

**'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந் தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி' -(தொல். சொல்,400)**

சேனாவரையர் பொங்கர் நாடு, ஔநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு,பூழி நாடு. மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை எனப்பன்னிரு நிலத் தைக் குறிப்பிடுகின்றார். நன்னூல் மயிலைநாதர் உரையில் தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடநாடு, சுற்காநாடு, வேணாடு, பூழிநாடு,

பன்றிநாடு, அருவாநாடு, அருவாவடதலை, சீதநாடு, மலாடு, புனனாடு எனப் பன்னிரு நிலத்தைக் குறிப்பிடுகிறார். சேனாவரையர் கூறிய பொங்கர் நாடு, ஒளி நாடு என்ற இரண்டையும் மயிலைநாதர் குறிப்பிடவில்லை. மயிலைநாதர் குறிப்பிடும் வேணாடு, புனனாடு சேனாவரையத்தில் இல்லை. சேனாவரையர் செந்தமிழ் நிலத்திற்குக் கூறும் எல்லை, 'வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்' என்கிறார். மயிலைநாதர், இளம்பூரணர், நச்சினார்க்கினியரின் கருத்தும் இதுவே ஆகும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் இக்கிளை மொழிகளை இன்றைய நாட்டுப்பகுதி களுடன் ஒப்பிட்டுக் கிளைமொழி வடிவம் அதற்குள்ள பொது வடிவம் முதலியவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்.

கல்வெட்டுத் தமிழிலும் கிளைமொழிகளைப் பற்றி அறிகிறோம். 'தின்' என்றவடிவம் 17ஆம் நூற்றாண்டு செங்கல்பட்டு மாவட்டக் கல்வெட்டில் இறந்தகாலப் பெயரெச்ச வடிவமான 'துண்ண' என வழங்குகிறது. இன்றும் அப்பகுதியில் இச்சொல் வழங்குவதைக் காணலாம். ஆண்டைக் குறிக்கும் 'சம்வத்சரம்' என்ற சொல் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. மற்றைய பகுதிக் கல்வெட்டுக்களில் "வருஷம்' என்ற சொல் காணப்படுகின்றது. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுக்களில் 'மக்கமக்கள்' என்ற சொல் காணப்படுகின்றது. அதே பொருளைக் குறிக்கப் 'புத்திர பவுத்திர பாரம் பரியம்' என்றசொல் மதுரை, வடஆர்க்காடு மாவட்டக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. மேற்கு வட்டாரக் கிளைமொழி மற்ற கிளை மொழிகளினின்றும் வேறுபடுவதைக் காணலாம். 'அனுபவி' என்ற பொருளைக் குறிக்கும் 'மய்யாள்' என்ற சொல் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டக் கி.பி. 15:16, 17 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. 1598ஆம் ஆண்டு திருதெல்வேலி மாவட்டக் கல்வெட்டொன்றில் 'அனுபவி' என்ற சொல்லே புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி காணப்படுகின்றது. புது மாவட்டக் கல்வெட்டுக்களில் ன்ற் > ண்ண் என மாறுவதைக் காணலாம். (ஒன்று > ஒண்ணு, கொன்று > கொண்ணு) வடகிளை மொழி களிலும் கி.பி.17 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இந்த ஒலிமாற்றம் காணப்படுகின்றது. (பன்றி > பண்ணி), இந்த மாற்றம் தென் கிளை மொழிகளில் தோன்றி, மத்திய, வட கிளைமொழிப் பகுதிக்குப் பரவியிருக்கலாம். கி.பி.14ஆம்

நூற்றாண்டுத் தஞ்சை மாவட்டக் கல்வெட்டிலும் கி.பி.15ஆம் நூற்றாண்டுத் திருச்சி மாவட்டக் கல்வெட்டிலும் கி.பி.16ஆம் நூற்றாண்டுத் தென் மாவட்டக் கல்வெட்டுக்களிலும் ட் க்/ற்க் < க்க் என மாறியுள்ளதைக் காணலாம்.

மேற்கு >மேக்கு

தெற்கு > தெக்கு

விற்கிற > விக்கிற

உட்கிடை > உக்கிடை

இந்த மாற்றங்கள் மத்தியக்கிளைமொழியில் தொடங்கித் தெற்குக் கிளைமொழிக்கும் பரவியிருக்கலாம். கி.பி. 14, 15, 16 ஆம் நூற்றாண்டு மத்திய, வடகிளைமொழிப் பகுதிக் கல்வெட்டுக்களில்'ர' கர தோற்றத்தைக் காண்கிறோம்.

கோவை > கோர்வை

சேவை > சேர்வை

*சீர்மை < சீமை*

சமூகக் கிளைமொழி பற்றியும் கல்வெட்டில் குறிப்பு காணப்படுகிறது. ன்ற் > ன்ன் என்ற மாற்றமும் ன்ற் ண்ண் என்ற மாற்றமும் கி.பி.15ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் காண்கிறோம். செய்தவாள் (16ஆம் நூற்றாண்டு), வைஷ்ணவாள் (17ஆம் நூற்றாண்டு) போன்ற வடிவங்கள் கல்வெட்டில் காணப்படுகின்றன. பிராமணர்களின் பேச்சு வழக்கான'வாரம்' என்ற சொல்லும் மற்றவர்கள் பயன்படுத்தும் 'கிழமை' என்ற சொல்லும் கல்வெட்டில் காணப்படுகின்றன.

"மாதம்', 'மாசம்' போன்ற சொற்கள்மூலம் இலக்கியத் தமிழும், பேச்சுத் தமிழும் நிலவியதைக் கல்வெட்டுமூலம் அறிகி றோம். 'கொண்டு', 'கிட்டு' போன்ற துணை வினைகளைக் கி.பி. 17ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் காண்கிறோம். – ற - இற்- போன்ற விகுதிகள் நிகழ்காலம் காட்டுவனவாகக் கி.பி. 17ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

சங்க இலக்கியத்திற்கு அடிப்படையாக விருந்த கிளைமொழி பாண்டி நாட்டுத் தமிழாகும். பல்லவர் காலத்தில் சோழ நாட்டுத் தமிழ் இலக்கிய மொழிக்கு அடிப்படைக் கிளைமொழியாக இருந்திருக்கலாம். சங்க காலச் சிறுபான்மை வழக்குப் பல்லவர்

காலத்தில் பெரும்பான்மை வழக்காகிவிட்டது. இன்றைய எழுத்துத் தமிழ் சென்னைத் தமிழையொட்டி வளர்வதுபோல் எண்ண வேண்டி உள்ளது.

சென்ற நூற்றாண்டில் வின்சன் என்பவர் பொதுத்தமிழில் உச்சரிப்பு வேறுபாடுகளின் அடிப்படையில் தமிழின் கிளைமொழி களைப் பற்றி ஆராய்ந்துள்ளார். கஸ்ட் (1866) அவர்கள் தமிழின் கிளைமொழிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஜூல்ஸ் பிளாக் (1946) சாதிக் கிளைமொழிகளைப்பற்றி எழுதியுள்ளார். மலேசியாவிலுள்ள கீழ்பெராக் பகுதியில் இராம. சுப்பையா அவர்கள் 'A Lexical Study of Tamil Dialects' என்ற நூல் எழுதியுள்ளார். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் - 'இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்' (Tamil Literary and Colloquial) என்றொரு நூல் வெளியிட்டுள்ளார். நாஞ்சில் நாட்டு முப்பெரும் மொழியியல் பேரறிஞர்கள் டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம், டாக்டர் ச. அகத்தியலிங்கம், டாக்டர் முத்துச்சண்முகம் ஆகியோர் நாஞ்சில் நாட்டுத் தமிழை விரிவாக ஆராய்ந்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கிளைமொழி வரிசையில் (Dialects Series) பன்னிரண்டு நூல்களை வெளியிட்டுள்ளது. டாக்டர் கோ.சீனிவாச வர்மா அவர்கள் 'கிளை மொழியியல்' என்றொரு நூலே எழுதியுள்ளார். இதில் தமிழ்க் கிளைமொழிகள் குறித்து விளக்கமாகவும், விரிவாகவும் எழுதியுள்ளார். இது கிளைமொழி ஆய்வில் குறிப்பிடத்தக்க நூலாகும். டாக்டர் முத்துச் சண்முகம் பிள்ளை அவர்கள் பேச்சுத் தமிழ், இலங்கைத் தமிழ், இலக்கியத் தமிழ், இக்காலத் தமிழ், மீனவர் தமிழ் பற்றி ஆய்ந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கிளை மொழி ஆய்வுக்கு இந்நூல் மிக உறுதுணையாக உள்ளது. மொழியியல் பேரறிஞர் அகத்தியலிங்கம் அவர்கள் நாஞ்சில் நாட்டுத் தமிழை மாற்றிலக்கண அடிப்படையில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டார். டாக்டர் கருணாகரன் அவர்களும் சிவசண்முகமும் இணைந்து Social Dialects of Tamil என்றொரு நூல் எழுதி யுள்ளனர். கருணாகரன் அவர்கள் தமிழ்க் கிளைமொழிகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் நிறைய எழுதியுள்ளார். இந்நூலின் ஆசிரியர் டாக்டர் சு. சக்திவேல் அவர்களும் தமிழ்க் கிளைமொழிகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் கல்வெட்டுக்களில் காணப்படும் கிளை மொழிகள் குறித்து ஆய்வுக் கட்டுரையொன்று எழுதியுள்ளார்.

டாக்டர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) அவர்கள் தமிழின் கிளைமொழிகளை ஆராய்ந்து தமிழின் கிளைமொழிகளை நான்குபெரும் பிரிவாகப் பிரித்துள்ளார். இலங்கைத் தமிழையும் மற்றொரு பிரிவாகக் கொள்கின்றார். ஒவ்வொரு கிளைமொழிப் பிரிவுக்கும் பல உட்கிளைமொழி (Sub Dialects) உள்ளன என்றும் வருங்காலக் கிளைமொழி ஆய்வுதான் இதனை முடிவு செய்யும் என்றும் கூறுகிறார்.

1. வடக்குக் கிளை மொழி - வடகிழக்குச் சென்னை நகரம், வட மேற்குச் செங்கல்பட்டு, வேலூர், சித்தூர், கிருஷ்ணகிரி, தென்னார்க் காடு.

2. கிழக்குக் கிளை மொழி - காவிரி டெல்டாப் பகுதி, திருச்சி, தஞ்சை, கரூர், புதுக்கோட்டை.

3. மேற்குக் கிளை மொழி - வடமேற்குச் சேலம், ஈரோடு, தென் மேற்குக் கோயம்புத்தூர், திண்டுக்கல்.

4. தெற்குக் கிளை மொழி - மதுரை, தென்மேற்குத் திருநெல் வேலி, நாகர்கோவில் தென்கிழக்கு, இராமநாதபுரம், தூத்துக்குடி

**இலங்கைத் தமிழ்-** வடக்குக் கொழும்பு, வடகிழக்குத் திரிகோணமலை, தென்கிழக்கு மட்டக்கிளப்பு

தமிழகத்தில் பேசப்படும் கிளைமொழிகளை நான்கு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். வட்டாரக்கிளைமொழிகள் மட்டுமின்றிச் சமூகக் கிளைமொழிகளும் தொழில் பேச்சு வழக்குகளும் உண்டு.

1. வடக்குக் கிளைமொழி
2. மத்தியக்கிளைமொழி
3. மேற்குக் கிளைமொழி
4. தெற்குக் கிளைமொழி

நாஞ்சில் நாட்டுக்கிளைமொழி உட்கிளை மொழி.

## வடக்குக் கிளைமொழி

சென்னை, செங்கல்பட்டு, வடஆர்க்காடு, மாவட்டங்களில் வழங்கும் தமிழை வடக்குக் கிளைமொழி எனலாம். இப்பகுதியை ஒரு காலத்தில் ஆர்க்காடு நவாப்பும் தெலுங்கு அரசர்களும் ஆண்ட தால், இக்கிளைமொழியில் உருது, தெலுங்குச் சொற்களைக் காணலாம். ஒலியனியலில் 'ழகரம்' 'யகரமாகவும்''ளகரமாகவும்'

'ஸகரமாகவும்' மாறி இக்கிளைமொழியில் வழங்கி வருகிறது. இக்கிளை மொழியை 'யகரக் கிளைமொழி' என்பர். ஒலிப்புடை ஒலிகள் b, d, d,g, j, ஒலியன்காளக உள்ளன.

**ஒலியன்கள்:**

**உயிர் ஒலியன்கள்:**

| | | |
|---|---|---|
| இ ஈ | | உ ஊ |
| எ ஏ | | ஒ ஓ |
| | அ ஆ | |

**மெய் ஒலியன்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | த் | ட் | ச் | க் |
| b | d | d | ஜ | g |
| ம் | ன் | ண் | | |
| | ல் | ள் | | |
| வ் | ர் | ய் | | |

**ஒலியியல் மாற்றங்கள் (Phonological changes):**

'ழ'கரம் 'ய'கரமாகவும் 'ஸ' கரமாகவும் இக்கிளைமொழியில் வழங்குகின்றது.

ழ > ய

கழுதை > கய்தெ

கிழவி > கெய்வி

பழம் > பயம்

குழாய் > கொயா

பிழைப்பு > பொயப்பு

ழ > ஸ்

இழுத்துக்கொண்டான் > இஸ்துகினான்.

## இலக்கணக் கூறுகள்

(i) பெண்பால் விகுதியாக-ச்சி என்பது பல கிளைமொழிகளில் வழங்குகிறது. இக்கிளைமொழியில் - சி என வழங்குகிறது.

துலுக்கச்சி துலுக்கசி சச்சிலிச்சி > சக்கிலிசி

செட்டிச்சி> செட்டிசி

(ii) நிகழ்கால உருபு ழ்வாக இக்கிளைமொழியில் உள்ளது.

இருக்கிறது > கீது

கிழிகிறது > கீயுது

iii) 'விட்டால்' என்ற உருபு வரவேண்டிய இடத்தில் -காட்டி (gatti) என்ற உருபு இக்கிளைமொழியில் வருகிறது.

இல்லாவிட்டால் > இல்லாகாட்டி

வராவிட்டால் > வராகாட்டி

செய்யாவிட்டால் > செய்யாகாட்டி

(iv) 'ஆக' எனும் உருபு வருமிடத்தில் 'கோசரம்' என இக்கிளை மொழியில் வருகிறது.

எனக்காக > எனக்கோசரம்

அவளுக்காக அவளுக்கோசரம்

(v) துணைவினையாக -'கினுரு' இக்கிளைமொழியில் பயன்படுத் தப்படுகிறது.

சொல்லிக்கொண்டிருக்கிறான் > சொல்லிக்கினுருக்கான்

பார்த்துக்கொண்டிருக்கிறான் > பாத்துக்கினுருக்கான்

(vi) ஏழாம் வேற்றுமைப் பொருளைக் குறிக்க 'ஆண்டெ' கையிலே 'என்ற உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

என்னிடம் > என்னாண்டெ

வீட்டில் > ஊட்டாண்டெ

என்னிடம் > என் கையிலே

(vii) 'கிட்டு' எனும் காலங்காட்டும் உருபன் 'கினு' என வழங்கப் படுகிறது.

வந்துகிட்டு > வந்துகினு

போய்க்கிட்டு > போய்க்கினு

**அருஞ்சொற்பொருள்:**

கட்டெ தொட்டி - 'விறகுக் கடை'

சோமாரி -'சோம்பேறி'

ஜேபி -'சட்டைப்பை

ஜளுப்பு -'நீர் கொள்ளுதல்'

டபாயி - 'ஏமாற்று'

புருடா-'சுரைக்குடுக்கை'

வலிச்சுக்கே - 'இழுத்துக்கொள்'

அம்டன்- 'நாவிதன்'

ஆயா-'அம்மாவின் அம்மா'

ஏகாலிசி 'வண்ணாத்தி'

காவா - 'கால்வாய்"

கொடைக்கூலி -'வாடகை'

கொசுரு - 'இலவசம்'

கஸ்மாலம் - 'வசைச்சொல்'

டப்பா- 'தகரக்குவளை'

தொத்தா - 'சின்னம்மா'

துட்டு -'பணம்'

நயினா -'அப்பா'

நாஸ்டா -'காலைச் சிற்றுண்டி'

பேஜாரு - 'வசைச்சொல்'

பேமானி - 'வசைச்சொல்'

ரவ - 'கொஞ்சம்'

வாராவதி -'பாலம்'

மூஞ்சி -'முகம்'

அப்பாலெ -'பிறகு'

பஜாரு - 'கடைத்தெரு'

தொடப்பம் -'துடைப்பம்'

வஸ்தாது -'கெட்டிக்காரன்', 'பலசாலி'

## மத்தியக் கிளைமொழி

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டைப் பகுதிகளில் வழங்கும் பேச்சுத் தமிழை மத்தியக் கிளைமொழி என்பர். சோழ நாட்டுத் தமிழ் என்றும் கூறுவர். லகர, ழகர, ளகர ஒலியன்கள் வழங்கும் கிளைமொழியாகும். இதனை 'ழகரக் கிளைமொழி' என்றும் கூறுவர். றகரம் ரகரத்துடன் இணைந்து விட்ட நிலையையும் காண்கிறோம். 'எம்பளது'

'மல்லாட்டெ' போன்ற சொற்களைக் கொண்டு இக்கிளைமொழி பேசும் மக்களை இனங்கண்டு கொள்ளலாம்.

**உயிர் ஒலியன்கள்:**

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |
| அ ஆ | |

மெய் ஒலியன்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | த் | ட் | ச் | க் |
| (ஷ்) | ஜ் | | | |
| ம் | ன் | ண் | ஞ் | |
| | ல் | ள் | ழ் | |
| வ் | | | ய் | |

**ஒலியியல் மாற்றங்கள்:**

(i) 'ற' கரம் 'ர'கரமாக மாறுகின்றது.

கறி > கரி

ஆறு > ஆரு

'ற'கரம் இரட்டிக்கும்போது 'தகர' ஒலியாக மாறுகின்றது.

சோற்றுப்பானை > சோத்துப்பானை

(ii) 'ககரம்' 'வகர'மாக மாறுகின்றது.

போக> போவே

வேக > வேவெ

தோகை > தோவ

(iii) 'பகரம் 'வகர'மாக மாறுகின்றது.

கோபம் > கோவொ(ம்) , பாபம் > பாவம்

## இலக்கணக் கூறுகள்:

முன்னிலைப்பன்மைக்கு 'நீனு' என்ற வடிவமிருப்பினும் 'நீ' என்ற வடிவமும் பயன்படுத்தப்படுகின்றது. தான், தாம் என்ற வடிவங்களும் இக்கிளைமொழியில் வழங்குகின்றன. பன்மையைக் குறிக்க 'வொ' விகுதி பயன்படுத்தப்படுகின்றது.

மாடு மாடுவொ

ஆடு ஆடுவொ

ஆள் > ஆளுவொ

அவன் > அவனுவொ

அவள் > அவளுவொ

அது > அதுவொ

இப்பன்மை விகுதி வினைமுற்றுகளில் காணப்படுகின்றது.

அவனுவொ வந்தானுவொ.

பிறவினையைக் குறிக்க-ச்சு பயன்படுத்தப்படுகின்றது.

தன்வினை பிறவினை

ஒழி - ஒழிச்சு

இழி - ஈழ்ச்சு

நிகழ்கால உருபாக - க்கு, க்ர், ர் இக்கிளை மொழியில் வழங்கு கின்றது.

பாக்ரான்

போரான்

பாக்குது

**அருஞ்சொற்கள்:**

எம்பளது -'எண்பது'

ஆயி -'அம்மா'

ஊட்டி -'குரல்வளை'

அப்ரொ 'அதன் பிறகு'

அம்மா(ம்) -'அவ்வளவு'

இம்மா(ம்) -'இவ்வளவு

எம்மா(ம்) - 'எவ்வளவு'

கொட்டாஞ்சி .'தேங்காய் ஓடு'

கெடாக - 'எறி'

குந்து - 'உட்கார்'

கேவுரு - கேழ்வரகு'

கொல்லெ - 'விளைநிலம்'

கம்னாட்டி -'கைம்பெண்'

முத்துக்கொட்டை - 'ஆமணக்குக்கொட்டை"

ஒளெ - 'சேறு'

ஒழுங்கெ 'வண்டிப்பாதை'

பழணி -'பதநீர்'

பரியாரி 'அம்பட்டன்'

திருணா 'திருநாள்'

சிப்பம் - 'சிறிய மூட்டை'

தள்ளையாடு 'தாய் ஆடு'

மள்ளாட்டே - 'வேர்க்கடலை

## மேற்குக் கிளை மொழி:

கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் பேசப்படும் பேச்சுத் தமிழை மேற்குக் கிளைமொழி என்பர். இப்பகுதிகளில் கன்னடம், தெலுங்கு, மலையாள மொழி பேசுவோர் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில் தோடர், கோத்தர், இருளர், பணியர், காட்டு நாயக்கர், முள்ளுகுறும்பர், பெட்ட குறும்பர், சுசவார் போன்ற பழங்குடிமக்கள் வாழ்கின்றனர். தோடர் மொழியும் கோத்த மொழியும் தனி மொழிகளாகும். மற்ற பழங்குடிகளின் பேச்சுத் தமிழ், மலையாள, கன்னட மொழியில் கிளைமொழிகளாகும். பிறமொழிச் செல்வாக்கின் காரணமாக ஒலிப்புடைய கடையொலிகள் தனி ஒலியன்களாக இக்கிளை மொழியில் உள்ளன. இதனை 'லகரக்' கிளைமொழி என்பர். தமிழின் லகர ளகர ழகரங்கள் ஒலியனியல் நிலையில் லகரமாக ஒலிக்கப்படுகின்றது. இக்கிளைமொழியைக் 'கொங்கு நாட்டுத் தமிழ்' எனக் கூறுவர்.

உயிர் ஒலியன்கள்:

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |
| அ ஆ | |

## மெய் ஒலியன்கள்:

**(i) ளகரம் ணகரமாதல்:**

எனக்கு > எணக்கு

என்னெ> எண்ணெ

மூன்று > மூணு

நினைத்து > நெணைச்சி

**(ii) ணகரம் ளகரமாதல்:**

சாணாத்தி > சானாத்தி

வண்ணான் > வன்னான்

பெண் > பென்னு

**(iii) ழகரம் ளகரமாதல்**

வாழை > வாளெ

கழுதை > களுதெ

கிளவி > கெள்வி

**(iv) லகரம் ளகரமாதல்.**

காலை > காளெ

கவலை > கவளெ

கூலி > கூளி

**(v) சகரம் ஸகரமாதல்:**

சாப்பாடு > ஸாப்பாடு

சோறு > ஸோறு

**ஜகரமும் ஸகரமாதல்.**

ராஜா > ராஸா

ஜோலி > ஸோலி

## இலக்கணக் கூறுகள் :

(i) கொங்கு நாட்டுத் தமிழில் பன்மை விகுதியான "ங்க ' ஒருமை யாகவும் வினைமுற்றுக்களின் விகுதியாகவும் வருகின்றது.

ஏனுங்க

கேட்டுபுடுங்க

வந்துடுங்க

பாத்தமுங்க

(ii) 'பொழுது' என்ற வடிவத்திற்கு நிகராகப் 'புடி' என்ற விகுதி இக்கிளை மொழியில் காணப்படுகின்றது.

வரும்பொழுது > வரும்புடி கேட்கும்பொழுது > கேக்கும்புடி

போகும்பொழுது > போகும்புடி

(iii) 'விடு' என்பதற்குப் பதிலாகப் 'போடு' என்பதனை இக்கிளை மொழியில் காணலாம்.

சொல்லிவிடு சொல்லிபோடு செய்து விடு செய்துபோடு

**(iv) இரண்டாம் வேற்றுமை உருபாக - எ, எயெ என இரண்டு வேற்று மை உருபுகள் உள்ளன.**

கத்தி-எ > சுத்தியே

அவன் - எயெ > அவனெய

**(v) ஆறாம் வேற்றுமை உருபாக 'ன்ற' பயன்படுத்தப்படுகின்றது.**

எனது வீடு > என்ற வீடு

**அருஞ்சொற்கள்**

அணத்தான் 'அணில்'

ஈச்சலு - 'ஈசல்'

உருமாலெ - 'தலைப்பாகை'

எட்டு நூறு எண்ணூறு"

ஒரு சந்தி -'ஒருவேளை உணவு'

ஓடென் பிறப்பு - 'உடன் பிறந்தவர்கள்'

மறுகாளி - 'மீண்டும்'

சுக்குட்டி - 'பன்றிக்குட்டி'

கொடிக்காயி 'நிலக்கடலை'

பட்டாசாலெ - 'முற்றம்'

சத்தம் - 'வரி'

ஆரியம் -'கேழ்வரகு'

மக்யநாளு - 'மறுநாள்'

சேவா - 'பனம்பழம்'

தலைமூட்டை - 'தலையணை’

நங்கெயெ -'கணவரது சகோதரி'

அட்டாவி - 'சமையல்அறை'

எவுரு - 'பல்லீறு'

ஓதெக்காண் - 'ஓணான்'

ஆக்கெ 'பனையோலை'

தொணகி -'நாய் ஈ'

துண்டி'தடியான பெண்'

ராட்டினி - 'விளக்கு'

கூலைச்சி 'குட்டையான பெண்'

எள்னி - 'இளநீர்'

## தெற்குக் கிளைமொழி

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் வழங்கும் பேச்சு வழக்கினைத் தெற்குக் கிளை மொழி என்பர். ளகர ஒற்றுமையாலும் ழகரம் இன்மையாலும் படர்க்கைப் பன்மை வடிவத்தாலும் வேற்றுமை உருபாலும் இப்பேச்சு வழக்குத் தனியொரு கிளைமொழியாக விளங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசப்படும் பேச்சு வழக்கை இக் கிளை மொழியின் ஓர் உட்பிரிவாகக் (sub dialect) கொள்வர். சுன்னியாகுமரி பேச்சு வழக்கில் 'றகரத்தைக்' காணலாம். இந்த உட்பிரிவு கிளைமொழியினை, 'றகரக் கிளைமொழி' என்பர். நீண்ட காலமாகத் திருவிதாங்கூர் அரசின் கீழ் இருந்ததால், மலை யாள மொழியின் செல்வாக்கை இந்த உட்பிரிவுக் கிளைமொழியில் காணலாம். நாஞ்சில் நாட்டுத் தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும் உள்ள ஒற்றுமையை டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தமது ஆய்வுக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். யேசுதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டப் பேச்சு வழக்கைத் தனி வட்டாரக் கிளைமொழி (Regional Dialect) எனக் கூறலாம் என்கிறார்.

## கன்னியாகுமரி பேச்சு வழக்கு:

**உயிர் ஒலியன்கள்:**

இ ஈ உ ஊ

எ ஏ ஒ ஓ

அ ஆ

**மெய் ஒலியன்கள்:**

ப் த் ட் ச் க்

ம் ன் ண் (ஞ்) ஜ்

ர்ற்ல்வ்ள்ய்

**தெற்குக் கிளைமொழி (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி)**

**உயிர் ஒலியன்கள்:**

இ ஈ உ ஊ

எ ஏ ஒ ஓ

அ ஆ

மெய் ஒலியன்கள்:

ப் த் ட் ச் க்

ம் ன் ண் (ஞ்) ஜ்

ர்ற்ல்வ்ள்ய்

இக்கிளை மொழியில் ழகரம் ளகரத்துடன் இணைந்துவிட்டது. பிறமொழிச் செல்வாக்கினால் 'ஜ' கரம் ஒலியனாக உள்ளது. கன்னியாகுமரி உட்கிளை மொழியிலுள்ள றகரம் மற்ற கிளைமொழி யினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இக்கிளை மொழியில் 'சகரம்' 'யகரமாக' மாறுகிறது.

ஊசி > ஊயி

பாசி> பாயி

ஆகாரம் ஏகாரமாகவும் இந்த உட்கிளை மொழியில் மாறுகின்றது.

வாங்கு > வேங்கு

**'மார்', 'ஆக்கமார்' பன்மை விகுதியாகக் கன்னியாகுமரித் தமிழில் காணப்படுகிறது.**

அக்காமார்

நாடாக்கமார்

'வச்சி', 'கொண்டு' என்பது மூன்றாம் வேற்றுமை உருபாக இந்த உட்கிளை மொழியில் வழங்குகிறது.

கத்தியெ வச்சி

சுத்தியெக் கொண்டு

'ஆக' என்பது 'அவ' எனக் கன்னியாகுமரிப் பேச்சு வழக்கில் மாறுகின்றது.

எனக்காக > எனக்காவ வீட்டுக்காக > வீட்டுக்காவ

தெற்குக் கிளைமொழியில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் சாமான் என்பதை ஜாமான் என உச்சரிக்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத் தமிழில் நிகழ்கால உருபாக (Present tense suffix) 'தகரம்' வருகிறது.

அவன் சொல்லுதான்

அவன் கேக்குதான்

முன்னிலைப் பெயரில் நீ, நீரு, நீங்கள் என்ற மூன்று வடிவங்களும் வழங்கப்படுகின்றன.

செட்டிநாட்டுத் தமிழில் அமங்கல காரியங்களுக்குப் போடப் படுவதைப் 'பந்தல்' என்றும் சுப காரியங்களுக்குப் போடப் படுவதைக் 'கொட்டகை' என்றும் கூறுவர். தமிழகம் முழுவதும் எவ்வித வேறுபாடுமின்றிப் போடப்படுவதைப் 'பந்தல்' என்பர். இந்த ஒலியன் பாகுபாட்டுக்கோடு செட்டி நாட்டுத் தமிழை மற்ற வட்டார வழக்கினின்றும் வேறுபடுத்துகிறது.

அத்தம் - 'முடிவு'

அப்பலெ -'அப்பொழுது'

அர்ணாக்கொடி -'அரைஞாண்'

ஈராங்காய் - 'வெங்காயம்'

எத்து - 'உதை'

ஒக்கிடு -'சரி செய்'

ஓதம் - 'விரைவாதம்'

ஓராட்டு -"தாலாட்டு'

சும்புக்கூடு -'அக்குள்'

கம்மா -'பாசன ஏரி'

களவாணி - 'திருடன்'

கெரக்கம் - 'மயக்கம்'

கௌடம் - 'கிழவன்'

கெள்டி -'கிழவி'

சீமத்தண்ணி-'மண்ணெண்ணெய்'

நாணவந்தான் -'மைனா'

படப்பு -'வைக்கோல் போர்'

வெஞ்சனம் - 'கறி'

வாவரசி - சுமங்கலி', 'திருமணப்பெண்

பந்தல் - 'அமங்கலக் காரியங்களுக்குப் போடல் (செட்டிநாடு)

கொட்டகெ -'சுப காரியங்களுக்குப் போடல். (செட்டிநாடு)

அப்ராணி - 'ஒன்றும் தெரியாதவன்'

இன்கிட்டு -'இங்கே'

அன்கிட்டு -'அங்கே'

என்சிட்டு -'எங்கே'

இம்புட்டு -'இவ்வளவு'

அம்புட்டு -'அவ்வளவு'

எம்புட்டு -'எவ்வளவு'

நிப்பாட்டு -'நிறுத்து'

கன்னியாகுமரி பகுதியில் வழங்கும் அருஞ்சொற்கள்

அரி -'அரிசி'

எல்லு - 'எலும்பு'

கொமெ - 'பரிகசித்தல்'

கொள்ளாம் -'பரவாயில்லை'

சக்கெ -'பலாப்பழம்'

சுண்டு -'உதடு'

தவ்ணு - 'பனங்கொட்டை'

தக்டி -'நிர்வாணம்'

தொளி -'சேறு'

அனந்தவதி - 'ஓரகத்தி'

சாடு -'தாண்டு'

சூலி - 'கர்ப்பிE'

துட்டி -'சாவு'

சொக்காரன் - 'உறவுக்காரன்'

தென்னாளி - 'தேங்காய் நார்'

பட்டி -'நாய்'

பாட்டம் - 'குத்தகை'

அடியாந்திரம் - 'சடங்கு'

## சமூகக் கிளைமொழிகள்:

இந்தியச் சமூகம் சாதி அடிப்படையில் அமைந்ததாகும். சமூக அமைப்பில் பிராமணர்கள் உயர்ந்தோராகவும் அரிசனங்கள் தாழ்ந்தோராகவும் கருதப்பட்டனர். பிராமணர்கள் சமயச் சடங்குகளில் ஈடுபட்டதால் தூய்மையுடையவர்களாகவும் உயர்ந்தோர்களாகவும் கருதப்பட்டனர். சமூக உயர்வு, தாழ்வுக்கேற்பம் பேச்சுமொழி வேறுபட்டலாயிற்று. பிராமணர்கள் பல்லாண்டு காலமாக அக்கிரகாரம் போன்ற இடங்களில் தனித்து வாழ்ந்தது போன்று, அரிசனங்களும் மற்றவர்களினின்றும் தனித்துச் சேரிகளில் வாழுகின்றனர். அதனால் அவர்களது பேச்சில் அதிக வேறுபாடு காணப்படுகின்றது. ஜூல்ஸ் பிளாக் (1910) அவர்கள் எழுதிய கட்டுரையொன்றில் பிராமணர், பிராமணரல்லாதார் அரிசன் என்ற மூன்று சமூகங்களுக்கிடையேயுள்ள பேச்சு வேறுபாட்டைக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்ச் சமூகக் கிளைமொழிகள் குறித்து வில்லியம் பிரைட், மக்கொர்மக், ஏ. கே. இராமானுஜம், சண்முகம் பிள்ளை, சீனிவாச வர்மா, கருணகரன், சக்திவேல் போன்றோர் ஆராய்ந்துள்ளனர்.

## பிராமணர் பேச்சு மொழி:

பிராமணர்கள் சமய மொழியான வடமொழியையும் ஆங்கி லத்தையும் கற்ற இரு மொழியியளாளர்களாக விளங்குகின்றனர். கோயில்களில் நேரிடையாகப் பெரும்பங்கு வகித்ததால் சமூகத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்களது பேச்சுத்தமிழ்

மற்றவர்களது பேச்சுத் தமிழினின்றும் வேறுபடுகிறது. பிராமணர் என்ற ஒரு சமூகத்தைக் குறிப்பிடினும் அய்யர், அய்யங்கார் என்று இரு பிரிவு அவர்களிடையே உண்டு. அய்யர், அய்யங்கார் முறையே சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் பின்பற்றுவதால், அவர்களுடைய சொற்களஞ்சியத்திலும் வேறுபாட்டைக் காணலாம். இருப்பினும், இவ்விரு பிரிவினரிடையே ஒலியனமைப்பிலும் இலக்கண அமைப்பிலும் ஒற்றுமையிருப்பதைக் காணலாம்.

| **அய்யர்** | **அய்யங்கார்** |
|---|---|
| தெரிசனம் | சேவை |
| சமையல் | தளிகை |
| பாயசம் | திருக்கண்ணமுது |
| புளிசாதம் | புளியோதரை |
| தயிர்சாதம் | தெத்தியோனம் |
| பொணம் | சவம் |
| பைஷ்டே | ஆத்துக்காகாது |
| வரன் | மாப்பிள்ளெ |
| சுவாமி | பெருமாள் |
| உபவாசம் | பட்டினி |

ஒலிப்புடைத் தடையொலிகள் பிராமணர்களின் பேச்சில் தனி ஒலியன்களாக உள்ளன ஸ், ஹ், ஜ் இவர்களது பேச்சுவழக்கில் காணப்படுகின்றன. மெய்யொலியன்கள் மொழி முதலில் மயங்கவும் செய்கின்றன. மூவிடப் பெயர்களில் தன்மை முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை வடிவங்களிலும் படர்க்கைப் பெயர்கள் எழுவாய் வடிவங்களிலும் மாற்றமடைந்துள்ளன.

**தன்மை :** நேக்கு நான்காம் வேற்றுமை ஒருமை

**முன்னிலை:** நோக்கு நான்காம் வேற்றுமை ஒருமை

**படர்க்கை:** அவன் ஆண்பால் ஒருமை

அவெ பெண்பால் ஒருமை

அவா உயர் பன்மை

அவுங்க மிக உயர் பன்மை

நீர் வந்தீர்

நீங்கள் வந்தேள்

அவா வந்தா

அவர் வந்தார்

சித்தெ, துளியோண்டு, எதிர்க்க, தூரக்கெ போன்ற சொற்களும் அலம்பு, வெய், சேவி, லாந்து போன்ற வினைச்சொற்களும் இவர்களது பேச்சுத் தமிழில் அதிகம் காணப்படுகின்றன.

**அருஞ்சொற்கள் :**

ஆம்படையான் - 'கணவன்'

ஆத்துக்காரி -'மனைவி'

அம்மாஞ்சி -'அத்தை மகன்'

தோப்பனார் - 'அப்பா'

மாட்டுப்பொண் -'மருமகள்'

ஓரகத்தி -'கணவனுடைய சகோதரரின் மனைவி'

ஷட்டகர் - ‘மனைவியினுடைய சகோதரியின் கணவர்'

மருமான் - 'சகோதரியின்' மகள்''

அத்திம்பேர் - 'அக்கா, அத்தையின் கணவன்'

சூத்திரன் -'தாழ்ந்த சாதிக்காரன்'

பொண்டுகள் - 'பெண்கள்'

சேவை - 'இடியாப்பம்'

ஜாகெ -'தங்கியுள்ள இடம்'

சூதகம், பைஷ்டெ -'தீட்டு'

தொல்லெ - ‘வீட்டின் பின்புறம் '

க்ரேக்யம் -'சாவுச்சடங்கு'

ஜலம் -'தண்ணீர்'

ஆத்துக்கு - 'வீட்டிற்கு'

தொன்னெ -'வாழைச்சருகுக் கிண்ணம்'

## அரிசனப் பேச்சுத் தமிழ்:

இந்து சமயச்சாதி அடிப்படைக் கோட்பாட்டின்படி அரிசனர் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளனர். தனியாக வாழ்தல் (சேரி), சமுதாய நோக்கு முதலியவற்றின் காரணமாகப் பல்லாண்டு காலமாக அவர்கள் தனித்து வாழ்கின்றனர். நாடு விடுதலையடைந்த பின்னர் அவர்களது கல்வி, சமூக-பொருளாதாரத் துறையில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுகின்றது. எனினும் அவர்களது பேச்சுத் தமிழ் மற்றவர்களின் பேச்சுத் தமிழினின்று வேறுபட்டுக் காணப்படுகின்றது.

அரிசனப் பேச்சுத் தமிழில் ஐகார ஔகாரங்கள் 'அய்' 'அவ்' என்றே உச்சரிக்கப்படுகின்றன. றகரம் ரகரத்துடன் இணைந்து விட்டது.

**(i) உகரம் இகரமாக மாறல்.**

முக்கியம் > மிக்கியம்

புல்லு > பில்லு

காசு > காசி

**ii) ழகரம் ளகரமாக மாறல்:**

குமிழ் கும்ளு

சிமிழ் சிம்ளு

**(iii) ளகரம் ழகரமாக மாறல்:**

கேள்வி > கேழ்வி

**(iv) இடையில் வரும் பகரம் வகரமாக மாறல்:**

கோபம் > கோவொம்

பாபம் > பாவொம்

**(v) பெண்பால் விகுதியாக - இ,-ச்சி,-த்தி இவர்களது பேச்சு வழக்கில் காணப்படுகின்றது.**

அண்ணி

எடெச்சி

வண்ணாத்தி

**(vi) பதிலீடு பெயர்கள்:**

நானு

நாங்கெ

நீ,நீனு

நீங்க

அவெ(ன்)

அவெ

அது

அவெனுவொ

அவளுவொ

அதுவொ

அவுங்கெ

அவுரு

(vii) உறவு முறைச் சொற்கள் பெயராக வரும்போது வினைமுற்று அஃறிணை வடிவத்தில் இவர்களது பேச்சுத் தமிழில் காணப்படுகின்றது.

எங்கெ அண்ணெ வந்திச்சி.

எங்கெ ஆத்தா சொல்லிச்சி.

(viii) பல சொற்களின் வடிவ மாற்றத்தையும் காணலாம்.

வடக்கு முகமாக > வடக்கோமா

அப்பொழுது > அப்பெ

இப்பொழுது > இப்பே

அம்மாத்திரம் > அம்மான்

இம்மாத்திரம் > இம்மான்

**அருஞ்சொற்கள்:**

ஊத்தா -'மீன்பிடிக்கும் கூடை'

ஏந்த்ரொம் - 'திரிகை'

ஏணெ-'தூளி'

'குந்து - 'உட்கார்'

கெடாசு-'எறி'

கடவாணி - 'அச்சாணி'

தெரட்டி -'பூப்பெய்துதல்'

பிசினி - 'கோந்து'

மச்சி -'மனைவியின் தங்கை'

முதுக்கான் - 'பெரிய வீடு'

வாசாங்கு -'திட்டுதல்'

வேசகாளு - 'வெயில் காலம்'

**நாட்டுக்கோட்டைச் செட்டியார் பேச்சில் வழங்கும் அருஞ்சொற்கள்**

| | |
|---|---|
| இஞ்சி | கஞ்சன் |
| எகிடு | எனக்கு |
| அப்பாத்தா | ஆயி, அப்பாவின் தாய் |
| கடவு | சந்து |
| செவ்வாய் | திருவிழா |
| தாக்கல் | செய்தி |
| தும்பு | தாலி |
| படைப்பு | முன்னோர் வழிபாடு |

## தொழில் பேச்சு வழக்கு (Professional Register)

செய்கின்ற தொழிலால் பேச்சுவழக்கு மாறுவது உண்டு. உதாரணமாக மீனவர் பேச்சு மொழி மற்ற பேச்சு மொழியினின்றும் மாறுவதைக் காணலாம். தொழில் பேச்சு வழக்குச் சொற்கள் நிலையில்தான் வேறுபடும். ஒலியினியல், சொல்லியல் நிலையில் அந்தந்த வட்டாரக் கிளைமொழியுடன் பெரும்பாலும் ஒத்துச் செல்லும். மீனவர் பேச்சுத் தமிழைப் பற்றி டாக்டர் முத்துச்சண்முகம் பிள்ளை, டாக்டர் சுசீந்திர ராஜா, டாக்டர் கோ. சீனிவாச வர்மா, டாக்டர் வே. சிதம்பரநாதபிள்ளை, திருமதி இராசகுமாரி வர்மா ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இவர்களுள் திருமதி இராசகுமாரி வர்மா அவர்கள் மீனவர் தமிழை டாக்டர் பட்ட ஆய்வுக்கு ஆய்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீனவர் தமிழில் சங்க இலக்கியத்தில் காணமுடியாத நூற்றுக் கணக்கான சொற்களைக் காணலாம். மீனவர் தமிழில் ஆண்களின் பேச்சுக்கும் பெண்களின் பேச்சுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. ஆடவர்கள் பிடித்து வந்த மீன்களைப் பெண்கள்

எடுத்துச் சென்று விற்பதால், பெண்கள் மற்ற மக்களுடன் கலந்துறவாட வேண்டியுள்ளது. மீனவர் தமிழில் நீரைக் குறிக்கப் பல சொற்கள் வழங்குகின்றனஇ

ஏறிணி

வத்தொம்

கலக்கு

தெழிவு

பணிச்சல்

மிதாவது

சுரப்பு

சோனி வெள்ளொம்.

தென்னி வெள்ளொம்.

மேமுறி

கிராச்சித் தண்ணி

உப்புத் தண்ணி

நல்லத்தண்ணி

வாங்கியா முதலியன.

மீனவர் தமிழில் காற்றைக் குறிக்கப் பல சொற்கள் வழங்குகின்றன.

கொண்டல் -'கீழ்த்திசைக்காற்று'

நேர்கொண்டல்

சோழ கொண்டல்

வாடெ கொண்டல்

**கச்சான்**

கோடை - 'மேல் திசைக் காற்று'

கச்சான் கோடை

நேர் கோடை

வடகோடை

**சல்வா.**

முல்லைச் சல்வா.

வாடை 'வடதிசைக்காற்று'

குன்னு வாடெ

வடமரெ

வடமேலு

வடகோடெ

சோழகன் 'தென்றல்'

மீனவர் தமிழில் தோணியைக் குறிக்கப் பல சொற்கள் வழங்குகின்றன.

ஆசின் தோணி

கல் ஆசினி

கொட்டாஞ்சி ஆசினி

பூவாசினி

சீனித்தோணி

பொன்னுத்தோணி

மக்ந்தோணி

கிளைமொழி ஆய்வு பரந்த அளவில் செய்யப்படவேண்டும். இயந்திர யுகத்தாலும் புதுமை யாக்கத்தாலும் சொற்கள் வழக்கி னின்று மறைந்து கொண்டு வருகின்றன. கிளை மொழிகளை நன்கு ஆராயின் ஆயிரக்கணக்கான சொற்கள் தமிழ்ப் பேரகராதியில் இடம் பெறும். கிளை மொழி ஆய்வு மொழி வரலாற்றிற்கும், சொல்லாக்கத்திற்கும் ஒப்பிலக்கண ஆய்வுக்கும் பெருந்துணை புரியும்.

## தமிழ்ச் சொற்பொருள் மாற்றம்

மனிதனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பது மொழி. அம்மொழி பலவித அமைப்புக்களைக் கொண்டது. பல நூற்றாண்டுக் காலமாக மனிதனால் பேசப்படும் மொழியிலும் மாற்றங்கள் நிகழ்வது இயற்கையே. சங்க காலத்தமிழுக்கும் இக்காலத் தமிழுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளமையைக் காணலாம். ஒலியமைப்பிலும் இலக்கண அமைப்பிலும் வேற்றுமைகள் காணப்படுதல் போன்று சொல்லாட்சியிலும் மாற்றங்களைக் காணலாம். சங்க காலத்தில் காணப்பட்ட சொற்கள் பலவற்றை இக்காலத் தமிழில் காணமுடியாது. தற்காலத்தமிழில் காணப்படும் பல சொற்களைப் பழந்தமிழில் காணமுடியாது. சொல்பொருள் மாற்றத்திலும் இத்தகைய வேறுபாட்டைக்

காணலாம். சங்ககாலப் புறநானூற்றில் 'கோயில்' எனும் சொல் 'அரண்மனை' எனும் பொருளைத்தர, தேவார, நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் எழுந்த காலத்திலும் இக்காலத்திலும் 'இறைவனுடைய இருப்பிடம்' எனும் பொருளைத்தருகிறது. 'கோயில்' எனும் சொல் இருவகைப் பொருளைத்தர, இன்றையத்தமிழில் ஒரு பொருளையே தந்து நிற்கக் காண்கிறோம். இந்நிலையினை உலக மொழிகள் அனைத்திலும் காணலாம். மொழி வரலாற்றிலும் வளர்ச்சியிலும் இத்தகைய மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை ஆகும். வரலாற்று மொழியியல் இவற்றை அடிப்படையாக வைத்து எழுந்ததாகும். ஒரு சொல்லின் பொருள் தொடக்கத்தில் ஒன்றாக இருந்திருக்கும். இன்று ஒருவகையாக இருக்கும். ஒரு சொல்லுக்குத் தொடக்கத்தில் அமைந்த பொருளே இன்று வரையில் வழங்க வேண்டுமென்ற நியதி இல்லை. இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவற்றைக் குறித்த 'பொன்' எனும் சொல், இன்று தங்கத்தை மட்டும் குறிக்கிறது. எனவே, சொல் ஆரம்பத்தில் உணர்த்திய பொருள் ஒன்றாகவும் இன்று உணர்த்தும்பொருள் வேறாகவும் இருப்பதைக் காண்கிறோம். சொல் பொருள் உணர்த்தும் முறையில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்வதைச் சொற்பொருளியல் (Semantics) என்பர்.

தொடக்க காலத்தில் ஒப்பீட்டு மொழியியலுக்கும் சொற்பிறப்பியலுக்கும் சொற்பொருளியல் துணையாகயிருந்த காரணத்தால் மொழியியலாளர்களுள் சிலர் இதில் ஈடுபட்டனர். டிரன்சு, முர்ரே போன்றவர்கள் இவ்வாய்வைத்தொடங்க, பிரீல், தர்மஸ் டேட்டர் போன்றோர் இவ்வாய்வில் ஈடுபடலாயினர்; சொற் பொருளியலின் பல்வேறு கூறுகளை ஆராய்ந்தனர். புளூம்ஃபீல்டு அவர்கள் சொற்பொருள் மாற்றங்களை விளக்கிய போதிலும் பீரில் (Breal) அவர்கள்தாம் சொற்பொருளியலை அறிவியல் முறையில் ஆராயத் தொடங்கினார். மொழியின் இலக்கணத்திற்கும் சொற்பொருளியலுக்கும் உள்ள உறவை வைத்து ஆய்ந்தவர் சசூர் எனலாம். அமைப்பு மொழியியல் அடிப்படையில், அண்மைப் பகுப்பு முறையைப் பற்றி ஹேரிஸ், ஹாக்கெட் போன்றோர் ஆராயத்தொடங்கினர். இவர்கள் வாக்கியங்களை ஆராய்ந்த பொழுது, சொற்பொருளியலுக்கு முக்கியத்துவம் தரவில்லை. ஹேரிஸின் மாணவரான நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு மொழியியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 'தொடரியல் அமைப்பு' என்ற நூலை வெளியிட்டபொழுது

வாக்கியத்தில் அகநிலை அமைப்பை விளக்கப் பொருளியலைப் பற்றி எண்ணவில்லை. கட்ஜ்,போதோர் வெளியிட்ட 'சொற் பொருளியல் கோட்பாட்டின் அமைப்பு' என்ற நூலில் அகநிலை அமைப்பை விளக்கச் சொற்பொருளியலின் இன்றியமையாமை உணரத் தலைப்பட்டமையைக் காண்கிறோம். பின்னர் சோம்ஸ்கி வெளியிட்ட 'தொடரியல் கொள்கையின் கூறுகள்' (Aspects of theory of syntax) என்ற நூலில் சொற் பொருளியலைப் பற்றியும் விளக்கியுள்ளார். தொடரியல் முக்கியமானது என்றும் அதுவே பொருளுக்கு அடிப்படை என்றும் முதலில் சோம்ஸ்கி கருதினார். மெக்காலே (Mccauley), லேக்காப்(Lakoff), போஸ்டல் (Postal) போன்றோர்கள் பொருளே முக்கியமானது என்றும் அதுவே புதை நிலை அமைப்புக்காரணம் என்றும்கூறி, அக்கருத்துக்கு அரணாகப் பல ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சொற்கள் பொதுவாகச் சூழ்நிலையையொட்டிப் பொருள் உணர்த்துகின்றன. சில இடங்களில் ஒரு பொருளையும் வேறு சில இடங்களில் அப்பொருளோடு தொடர்புடைய இரண்டாவது பொருளையும் உணர்த்துகின்றன. இரண்டாவது பொருளே முதற்பொருள் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. மெய்ப்பொருளியல் முறையினால் மொழிப் பொருண்மையை முழுமையாக விளக்க முடியாததால், சூழல் அடிப்படையிலான பொருளியல் ஆய்வுப் பற்றி மாலினோவ்ஸ்கி (Malinowski), பிர்த் (Firth), விட்ஜென்ஸ் டைன் (Wittgenstein), புளூம்ஃபீல்டு (Bloomfield) ஆகியோர் சிந்திக்கலாயினர் சூழல் அடிப்படையில் சொல் பொருளியல் ஆய்வுக்கு மாலினோவ்ஸ்கியும் பிர்த்தும் அடித்தளம் அமைத்தனர். ஒரு சொல்லின் சூழலை அறிந்து கொள்ளாமல் அச்சொல்லின் பொருளை அறிதல் இயலாததொன்று எனக்கூறினர். மாலி னோவ்ஸ்கி, பிர்த், விட்ஜென்ட்ன் ஆகியோர் கருத்துக்ளைச் 'சூழல்கோட்பாடு' என வழங்கலாம். இக்கோட்பாடே பின்னர் 'பயன்வழியியல் கோட்பாடாக' (Pragmatic theory) மாறியது எனலாம்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரியல் என்பன சொல்லின் தன்மையை வெளிப்படுத்துவன. சொற்கள் பொருளை உணர்த்தி நிற்பது பொருள் இலக்கணம் எனப்படும்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.'(தொ.சொ.155) என்கிறார் தொல்காப்பியர். இதே கருத்தினைத்தான் மொழியியல் பேரறிஞர் ஜான் லயன்ஸ் அவர்களும் குறிப்பிடுகிறார்.

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லினாகு மென்மனார் புலவர்'(தொ. சொ.156) என்று கூறுகிறார். சொற்கள் சூழ்நிலையை நோக்கிப் பல்வகைப் பட்டபொருள் நுட்பங்களைப் புலப்படுத்துகின்றன. பொருண்மை சுட்டல் வெளிப்படையாகவும் அமையலாம். சூழ்நிலையைப் பொறுத்துக் குறிப்பாகவும் அமையலாம். இலக்கணவியலாரின் இதே கருத்தினை மொழியியல் பேரறிஞர் பிர்த்(குசைவா) 'அவர்களும் உல்மன்' (Ullman) அவர்களும் கூறியுள்ளனர்.

வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது என்றும் தகுதி என்பது அப்பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மையன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதலென்றும் சேனாவரையர் குறிப்பிடுவர். நன்னூலார் வழக்குக்கு இயல்பு வழக்கென்றும் தகுதிக்குத் தகுதி வழக்கென்றும் பெயரிட்டு வழங்குகின்றார். இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ ஆகியவற்றை இயல்பு வழக்கென்றும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகியவற்றைத்தகுதி வழக்கென்றும் நன்னூலார் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் இடக்கரடக்கல் என்பதை 'அவையல் கிளவி' எனவும் அவையல் கிளவியாவது இழிந்தோர் சொல்லாதலான் அதனை நன்மக்களிடை மறைத்துக் கூறுக வென்பார். 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.' (தொ. சொ.442) கண்கழீஇ வருதும், கால்கழீஇ வருதும், ஆமுன் பகரவீ என்றற்றொடக்கத்தன. இடக்கரடக்கல் இடக்கர் போலக் கூறத் தகாததன்றேனும் மங்கமில்லாததை யொழித்து மங்கலமாகக் கூறுவதும் ஆகும். செத்தாரைத் துஞ்சினர் எனவும், ஓலையைத் திருமுகம் எனவும், இடுகாட்டை நன்காடு எனவும் வழங்குவர்.

பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும் யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் கள், சாராயம் முதலியவற்றைத் தண்ணி என்றலும் குழூஉக் குறியாகும். அவாய்நிலை, தகுதி, அண்மை என்பன சொற்பொருளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். வடமொழியார் இதனை ஆகாங்ஷா, யோக்யதா, சம்நிதி என வழங்குவர். இலக்கணச் சுருக்கம் ஆசிரியர் ஆறுமுக நாவலரும் வாக்கியப் பொருள்

உணர்வுக்குக் காரணமென்னும் பகுதியிலே 'அவாய் நிலை, தகுதி, அண்மை, கருத்துணர்ச்சி என்னு நான்குமாம்' என்று கூறி அவற்றை விளக்கியுள்ளார். ஒன்றன் பெயரால் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றைக் குறிக்க வழங்கும் ஆகுபெயர், அன்மொழித்தொகை என்பனவும் குறிப்புப் பொருளை உணர்த்துவனவாகும்.

**'பொருள்முத லாறோ டளவை சொற்றானி**
**கருவி காரியங் கருத்த னாதியுள்**
**ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்**
**தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே' (நன். 290)**

ஆகுபெயரையும் அதன் வகைகளையும் விரிவாகக் கூறுகின்றது நன்னூல்

தொல்காப்பியர் அன்மொழித்தொகையைப் பற்றி,

**'பண்புதொக வரூஉங் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.' - (தொ.சொ .418)**

என்று கூறியுள்ளார். சேனாவரையர் இந்நூற்பாவிற்கு எழுதிய விளக்கவுரையில் சிறுபான்மை உவமைத் தொகை நிலைக்களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்பர். நன்னூலாரும் இதே கருத்தினர் என்பதைப் பின்வரும் நூற்பா காட்டுகிறது:

**'ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி'- ( நன். 369)**

சங்கரநமச்சிவாயர் நன்னூல் விருத்தியுரையில் ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்குமுள்ள வேறுபாட்டை விளக்குகின்றார். சிவஞான முனிவர், 'ஆகுபெயரும் அன்மொழித்தொதையும் தம் பொருள் உணர்த்தாது, பிறிது பொருள் உணர்த்துதலால் ஒக்குமாகலின் அவை தம்முள் வேற்றுமையாதோ எனின், ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனோடியைபு பற்றிய பிறிதொன்றனை உணர்த்தி ஒரு மொழிக் கண்ணதாம்; அவ்மொழித்தொகை இயைபு வேண்டாது இருமொழியுந்தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருள் உணர்த்தி இருமொழிக் கண்ணதாம் இவை தம்முள் வேற்றுமை என்க' என்கிறார். இத்தகைய வேறுபாட்டை உணர்ந்துதான் நன்னூலார் 'ஒன்றன்பெயரானதற்கியை பிறிதை' என்ற நூற்பா செய்துள்ளார்.

பழந்தமிழ் இலக்கண ஆசிரியர்கள் சொற்பொருளியலுக்குச் சிறப்பிடம் வழங்கவில்லையெனினும் அவற்றைக் குறித்தும் ஆராய்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பீரிலும் (1897), ஆக்டனும், ரிச்சார்ட்ஸும் (1923) உல் மன்னும் (Ullmann) (1957) சொற்பொருள் இயலை நன்கு ஆராய்ந்த பெருமக்களாவர். தமிழில் பேராசிரியர் ரா. பி.சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ்ச் சொற்பொருளியலை நன்கு ஆராய்ந்து 'Words and their significance' என்றொரு நூல் எழுதியுள்ளார். மாற்றிலக்கணத்தார் சொற்பொருளியலில், மிக்க ஈடுபாடு கொண்டுள்ளனர்.

## சொற்பொருள் மாற்றம்

சொற்பொருள் மாற்றத்திற்கு மொழியியல் காரணங்களும் வரலாற்றுக் காரணங்களும் சமூகக் காரணங்களும் உளவியல் காரணங்களும் அயல் மொழிச் செல்வாக்கும் அடிப்படையாகும்.

### 1. ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்:

பேச்சு மொழியில் ஒரு சொல் ஒரு பொருளை உணர்த்தும். ஒரு சொல் இரு பொருளை உணர்த்தின் அவற்றில் ஒன்று நிலை பெற மற்றொன்று அழியும் சில நேரங்களில் இரண்டாவது பொரு ளையும் உணர்த்தும். 'கவலை' என்ற சொல் இரண்டாகப் பிரியும் இடத்தையும் மனக்கவலையையும் உணர்த்தி வந்தது. ஆனால், இன்று மனக்கவலையை மட்டும் உணர்த்துகின்றது. 'போர்' என்ற சொல் வைக்கோற் போரையும் சண்டையையும் உணர்த்தி வந்தது. ஆனால், இன்று வைக்கோற் போர் என்பது வழக்கிலுள்ளது.

### 2. ஒரு பொருளுக்கு ஒரு சொல்:

ஒரு பொருளை உணர்த்த ஒரு சொல்லே வழங்கும். இரு சொல் வழங்கின் ஒன்று அழிய மற்றொன்று நிலைபேறு அடையும். 'வீடு'. 'இல்', 'மனை' போன்றவை ஒரு பொருளை உணர்த்துவன வாகும். 'இல்' என்றசொல் இலக்கிய வழக்கில் மட்டும் வழங்குகிறது. 'மனை' என்ற சொல் இன்று வீடு கட்டுவதற்குரியகாலி இடம் என்ற பொருளில் வழங்குகின்றது. 'மனை' (Plot) வாங்கியுள்ளேன் என எவரேனும் கூறினால், வீடு கட்டுவதற்கு இடம் வாங்கியுள்ளார் என்று பொருளாகும். இதே போன்று 'குடக்கு', 'மேற்கு' என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகும். ஆனால், இன்று 'மேற்கு

என்ற சொல் நிலைபெற, குடக்கு வழக்கற்றுப் போய்விட்டது. 'குணக்கு', கிழக்கு என்றசொற்களில் கிழக்கு என்ற சொல் நிலைபெற,குணக்கு' என்ற சொல் வழக்கற்றுப் போய் விட்டது.

## 3. உயர் பொருட்பேறு (Elevation)

முன்பு இழிந்த பொருளைக் குறித்து வந்த சொல், இன்று உயர்ந்த பொருளில் வழங்குவதை உயர் பொருட்பேறு என்பர். முன்பு கள்ளுண்டு களித்தலைக் 'களிப்பு' என்றனர். ஆனால், இன்று 'களிப்பு' என்பது பொதுவான மன மகிழ்ச்சியைக் குறிக்கின்றது. முன்பு சூதாடுமிடத்தைக் குறித்த'கழகம்' என்ற சொல் இன்று கற்றவர் பேரவையைக் குறிப்பிடுகின்றது. திருக்குறள் கழகம், பல்கலைக்கழகம் என வழங்குவதைக் காணலாம். 'பிள்ளை' என்ற சொல்லும் முதலில் 'அணிற் பிள்ளையைக்' குறித்து மக்களின் மகவை உணர்த்தி, பின்னர் மகனையும் மகளையும் உணர்த்தத் தொடங்கிவிட்டது. நெருப்பினால் தூளான 'நீறு' என்பது காலப் போக்கில் திரு நீற்றையே குறிக்கத் துவங்கிவிட்டது.

## 4. இழிபொருட்பேறு (Degradation)

முன்பு உயர்ந்த பொருளில் வழங்கி வந்த சொல் இன்று இழிந்த பொருளில் வழங்குவதை இழி பொருட்பேறு என்பர். பழங்காலத்தில் 'நாற்றம்' என்ற சொல் 'வாசனை' என்ற பொருளில் வழங்கிற்று. ஆனால், இன்று இச்சொல் துர்நாற்றத்தையே குறிக்கின்றது. 'காமம்' என்ற சொல் பழங்காலத்தில் உண்மை அன்பைக் குறிப்பிட, இன்று தீயநோக்கோடு கூடிய அன்பைக் குறிக்கிறது. குவியலாக இருக்கும் ஒன்றைக் குறித்து வந்த 'குப்பை' என்ற சொல் இன்று உதவாத பொருட்களையே குறிக்கின்றது. பலர் வாழு மிடத்தை அக்காலத்தில் 'சேரி' என்றனர். பார்ப்பனச் சேரி என அக்காலத்தில் இருந்ததை அறிகிறோம். ஆனால் இன்று தாழ்த்தப் பட்டோர் வாழும் இடங்களையே 'சேரி' என்கிறோம்.

## 5. சிறப்புப் பொருட்பேறு (Restriction or Narrowing)

முன்பு பலவற்றிற்கும் பொதுவாகயிருந்த சொல் இன்று அவற்றுள் ஒன்றையே உணர்த்துவதைச் சிறப்புப் பொருட்பேறு என்பர். தங்கம், வெள்ளி, செம்பு முதலியவற்றைக் குறித்த 'பொன்' என்ற சொல், இன்று தங்கத்தை மட்டும் குறிக்கின்றது. எள்ளின் நெய், பாலின் நெய் முதலியவற்றைக் குறித்த 'நெய்' என்ற

சொல், இன்று பாலின் நெய்யையே குறிக்கின்றது. பழமையானவற்றை யெல்லாம் குறித்த 'பழையது' என்ற சொல், இன்று பழைய சோற்றையே குறிக்கின்றது. எப்பொருளை இழந்தாலும் அதனைக் குறித்த 'இழவு' என்ற சொல், இன்று இழப்பாகிய 'சாவை' மட்டும் உணர்த்துகின்றது. புறக்காழ் உடைய பலவற்றையும் உணர்த்திய 'புல்' என்ற சொல், இன்று நிலத்தில் வளரும் 'புல்லையே' குறிக்கின்றது. விலங்குகளைப் பொதுவாகக் குறித்த 'மான்' என்ற சொல், இன்று 'மான்' (deer), என்ற இனத்தை மட்டும் கின்றது. பெண்ணினத்தைக் குறித்த ''பெண்சாதி' என்ற குறிக் சொல், இன்று 'மனைவி'யை மட்டும் குறிக்கின்றது. வீரரைக் குறித்த 'மறவர்'என்ற சொல், இன்று ஓர் இனத்தாரை மட்டும் குறிக் கின்றது.

பறையை முழக்கியவர்களைக் குறித்த 'பறையர்' என்ற சொல் இன்று ஓர் இனத்தாரை மட்டும் குறிக்கின்றது. வாணிபம் செய்யும் அனைவரையும் குறித்த 'வாணியன்' என்ற சொல். இன்று எண்ணெய் வாணிபம் செய்பவரை மட்டும் குறிக்கின்றது. காவல் அமைந்த வீட்டைக் குறித்த 'அரண்மனை' என்ற சொல், இன்று அரசன் வாழுமிடத்தை மட்டும் குறிக்கின்றது. சுல்வி இல்லாதவன், அறிவு இல்லாதவன் செல்வம் இல்லாதவன் எனப் பொதுவாகக் குறித்த 'இல்லாதவன்' என்ற சொல், இன்று செல்வம் இல்லாதவனை மட்டுமே குறிக்கின்றது. கல்லால் கட்டப்பெற்ற அறையைக் குறித்த 'கல்லறை' என்ற சொல், இன்று இறந்தவர்மீது சுட்டப்படும். அறையையே குறிப்பிடுகின்றது.

## 6. பொதுப் பொருட்பேறு (Expansion or idening):

முன்பு ஒருவகைப் பெயருக்கே வழங்கிய பெயர், பின்னர் அதனோடு ஒத்த பலவற்றிற்கும் பொதுப்பெயராக வழங்குவதைப் பொதுப்பொருட்பேறு என்பர். மரத்தினால், செய்யப்பட்ட முகத்தலளவையை 'மரக்கால்' என்றனர். ஆனால், இன்று இரும்பு போன்றவற்றால் செய்யப்படுவதையும் 'மரக்கால்' என்றே கூறுகின்றனர். அணில், நாய், பன்றி இவற்றின் இளமைப் பெயராகக் 'குட்டி' என்ற சொல் வழங்கியது. ஆனால், இன்று எல்லாவற்றின் இளமைப் பெயராகக் 'குட்டி' என்ற சொல் வழங்குகிறது. அகக்காழ் உடையவற்றை 'மரம்' என்ற சொல்லால் குறித்தனர். ஆனால், இன்று புறக்காழ் உடைய தென்னை, பனை போன்றவற்றையும் 'மரம்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம்.

எள்ளினின்றும் எடுக்கப்பட்டதை 'எண்ணெய்' என்றனர். ஆனால், இன்று தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் விளக்கெண்ணெய் எனக் கூறுகிறோம். தண்மை பொருந்திய நீர் 'தண்ணீர்' என்பது இன்று சுஞ்சித்தண்ணி, காபித்தண்ணி எனக் கூறுமளவிற்குப் பொதுச் சொல்லாகி விட்டதை அறிகிறோம். நிறுத்தற் குறியினுள் ஒன்றாகிய 'புள்ளி' என்ற சொல் இன்று பெரிய மனிதர் என்ற பொருளில் வழங்கப்படுவதைக் காண்கிறோம். அவர் இவ்வட்டாரத்தில் 'பெரும்புள்ளி' எனப் பேசப்படுவதைக் காண்கிறோம். சந்திரனைக் குறிக்கும் 'திங்கள்' என்ற சொல் இடைக் காலத்தில் மாதத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

## 7. நுண்பொருட் பேறு (Abstraction):

முதலில் பருப்பொருளை உணர்த்தி வந்த சொல், இன்று நுண்பொருளை உணர்த்தத் தொடங்கி விட்டது. ஆகுபெயர்களாக அமைந்தவை நுண்பொருட் பேற்றினை உணர்த்தத் தொடங்கி விட்டன. சூழலையும் சூழ்ந்து நிற்றலையும் உணர்த்தி, வந்த 'சூழ்ச்சி' என்ற சொல், நுட்பமான எண்ணத்தைக் குறிக்கும் 'சதி' என்ற பொருளைத் தருகிறது. நிறத்தையும் வடிவத்தையும் உணர்த்திய 'செம்மை' என்ற சொல் இன்று 'நடுவு நிலைமை' என்ற பொருளை உணர்த்துகின்றது. அணைத்தலை உணர்த்திய 'தழுவல்' என்ற சொல், இன்று வேறு பொருளில் வழங்கக் காண்கிறோம. 'அவன் என் கருத்தைக் தழுவிப் பேசினான்' என்று கூறக் கேட்கிறோம். உறுப்பை உணர்த்தும் 'தலை' என்ற சொல் 'சிறப்பு' என்ற நுண் பொருளை உணர்த்துகிறது. அதே போன்று 'அரை', 'கால்' என்ற சொற்கள் முறையே அளவைக் குறிக்கின்றன. பார்வையை உணர்த்திய 'நோக்கம்' என்ற சொல், இன்று 'குறிக்கோளை' உணர்த்தத் தொடங்கி விட்டது.

## 8. பருப்பொருட்பேறு(Concretion):

நுண்மையான பொருளை உணர்த்திய சொல் இன்று பருப்பொருளை உணர்த்துவதைப் பருப்பொருட்பேறு என்பர். 'புதுமை' என்னும் பண்பை உணர்த்திய 'விருந்து' எனும் சொல் இன்று 'விருந்தையும்' (feast) வீட்டிற்குப் புதியதாக வந்த விருந்தி னரையும் (guest) குறிக்கின்றது.

## 9. மென் பொருட்பேறு (Hyperbole):

வன்மையான பொருளை உணர்த்திய சொல், இன்று மென்மையான பொருளை உணர்த்துவதை மென்பொருட்பேறு என்பர். பழங்காலத்தில் நால்வகைப் படையுடன் பொருதி மனிதரும் படைக்கலன்களும் அழியும் இடத்தை 'அமர்க்களம்' என்ற சொல்லால் குறித்தனர். ஆனால், இன்று குழந்தைகள் செய்யும் விளையாட்டுக்களையும் பேச்சுக்களையும் 'அமர்க்களம்' என வழங்குகி றோம்."அமர்க்களம்" இன்று மென்மையான பொருளை உணர்த்து வதைக் காண்கிறோம்.

## 10. வன்பொருட் பேறு (Litotes)

முன்பு மென்மையான பொருளை உணர்த்திய சொல் இன்று வன்மையான பொருளை உணர்த்தத் தொடங்கிவிட்டது. அன்று 'அவர் அங்கே ஒழிந்தார்' என்று கூறின், அவர் எங்கும் செல்லாமல் ஓரிடத்தில் தங்கினார் என்று பொருளாகும். ஆனால், இன்று அவர் அங்கே அழிந்துவிட்டார் என்ற பொருளைத் தருகின்றது.

## 11. மங்கல வழக்கு (Meliorative tendency):

மங்கலம் அல்லாதவற்றைக் கூறும்போது மங்கலமான வேறு சொற்களால் கூறுவதை மங்கலவழக்கு என்பர். அதனால் பொருள் வேறுபடுதலும் உண்டு. செத்தாரைத் துஞ்சினார் என்றும். விண்ணுலகை அடைந்தார் என்றும் சிவலோக பதவி அடைந்தார் என்றும் கூறுவர். ஓலையைத் திருமுகம் என்றும், இடுகாட்டை நன்காடு என்றும் கூறுவர். இத்தகைய வழக்கு எல்லா மொழி களிலும் உண்டு, ஆங்கிலத்தில் 'usiuare' என்ற சொல் இருப்பினும்' 'makewatere' என்று கூறுவர்.

## 12. இடக்கரடக்கல் (Pejorative tendency):

நாகரிகமில்லாத சொற்களை மறைத்து அவற்றின் பொருளை நாகரிகமான சொற்களால் கூறுவதை இடக்கரடக்கல் என்பர். இதனால் அச்சொற்களின் பொருள் வேறுபடுவது உண்டு. தொல்காப்பியர் இடக்கரடக்கலை அவையல் கிளவி என்கிறார். அவையல் கிளவியாவது இழிந்தோர் சொல்லும் இழிந்த சொல்லாதலான் அதனை நன்மக்களிடையே மறைத்துக் கூறுகவென்பர். கண்கழீஇ வருதும், கால்கழீஇ வருதும் என்பன இடக்கரடக்கல் ஆகும். இச்சொற்களெல்லாம் நாகரிகமாகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறவேண்டியதைக் கூறாது

வேறுமுறையில் கூறப்பட்ட சொற்களாகும். இது பேச்சு வழக்கின் கண்ணும் செய்யுள் வழக்கின் சுண்ணும் ஒருசேர வரும் இயல்பினை உடையதாகும். இவைகள் எல்லாம் கலாச்சாரத்தின் அடிப்படைக் கூறுகளாக அமைகின்றவையாகும். தமிழ் இலக்கணவியலார்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 13. குழூஉக்குறி (slang):

ஒவ்வொரு குழுவினுள் உள்ளோர் யாதானும் ஒரு காரணத்தால், ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற் குறியால் கூறுவதை குழூஉக்குறி என்பர். குழூஉக்குறி என்பது குறுமொழியைச் சார்ந்ததாகும். குழூஉக்குறி இளைஞரிடையே அதிகமாக வழங்குகின்றது. பழைய சொற்களை விட்டுக் கவர்ச்சிகரமான புதுச் சொற்களைப் பேசும் மொழி விளையாட்டு என்னும் வேடிக்கை வேட்கை அதன் இயல்பாகும் மாணவர்கள், திருடர்கள், விபசாரிகள், கள்ள வாணிபம் செய்வோர் தமக்குள் வழங்கும் மொழி இவ்வகையைச் சாரும். பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றலும் சாராயம், கள் குடிப்போர் அதனைத் 'தண்ணி' எனக் கூறலும் இதன்பாற்படும். குழூஉக்குறி ஒரு குழுவினருக்கே உரியது. குழூஉக்குறி வழக்கு நெறியாகாது என்று சேனாவரையரும் சிவஞானமுனிவரும் கூறுகின்றனர். பலருக்குப் புரியாத சங்கேத மொழி போன்று குழூ உக்குறி அமைந்துவிட்ட காரணத்தால் இவ்வழக்கு சான்றோர் களின் செய்யுட்கண் வாராது என்று கூறினார்கள் போலும்.

## 14. ஆகுபெயர் (Metonomy):

ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவதை ஆகுபெயர் என்பர். 'ஊர் சிரித்தது' எனின் ஊர் சிரிக்கவில்லை. ஊரிலுள்ள மக்கள் சிரித்தனர் 'உலகம் பொல்லாதது' எனின் உலகிலுள்ள மக்கள் பொல்லாதவர்கள் என்று பொருளாகும். 'கட்சி முடிவெடுத்தது' எனின் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் முடிவெடுத்தனர் என்று பொருளாகும். 'சிகப்புத் தொப்பி' எனின் காவலரையும், செஞ்சட்டை எனின் கம்யூனிஸ்டுகளையும், கருஞ்சட்டை எனின் திராவிடக் கழகத்தினரையும் குறிக்கும்.

## 15. உருவகம் (Metaphor):

ஒரு பொருளினை அதற்குரிய சொல்லால் உணர்த்தாமல் தெளிவுறுத்த விரும்பி உருவகப்படுத்தி அந்த உருவகச் சொல்லால் உணர்த்துவதை உருவகம் என்பர்.

### (i) Anthropomorphic metaphor

உடல் சம்பந்தப்பட்ட உறுப்புக்களின் சொற்களை உயிரில்லாப் பொருள்களுடன் இணைத்துக் கூறுதல்.

கால் > நாற்காலியின் கால்

கால் > பந்தலின் கால்

வாய் > சட்டியின் வாய்

கழுத்து > புட்டியின் கழுத்து

கண் > தேங்காய் கண்

பல் > சீப்பின் பல்

காது > ஊசிக் காது

(ii) Animal Metaphor:

ஒருவகை மாம்பழத்தைக் 'கிளிமூக்கன்' எனக் கூறுகிறோம். கிளியின் மூக்குப் போன்று இருப்பதால் அவ்வாறு வழங்குகிறோம். உடல் திண்மை வாய்ந்தவனைக் 'காளை' என வழங்குதலும் இதன் பாற்படும். இதைப்போன்று தைரியமுடையவனைப் 'புலி', 'சிங்கம்' எனலும், தந்திரக் குணமுடையவனை 'நரி' எனலும், சோம்பேறியை 'எருமை' எனலும் இதன்பாற்படும். அழகான பெண்ணைக் 'கிளி' என அழைத்தலும் இதன்பாற்படும்.

(iii) 'வாழும் வழி' என்பதில் 'வழி' என்பது பாதையாகும். 'வழி' என்பது வாழும் என்பதனுடன் இணைந்து வாழும் வழி (way of liv- ing) என்ற பொருளைத் தருகிறது. 'தடித்தல்' என்பது பெருத் தலாகும். 'பேச்சுத் தடித்தது' என்பதில் பேச்சு அளவு மீறியது என்ற பொருளைத் தருகிறது.

(iv) Synaesthetic metaphor:

பாரதியாரின், செந்தமிழ் நாடென்னும் போதினிலே-இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்ற பாடலில் ருசியின் உணர்வு (sense of taste) கேட்கும் உணர் வாக (sence of hearing) மாறுவதைக் காண்கிறோம். சான்றோன், கடன் என்ற சொற்கள்

காலப்போக்கில் அடைந்த பொருள் மாற்றத்தை டாக்டர் அ.சண்முகதாஸ் அவர்கள் தமது நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

**'ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே'.- (புறநானூறு-312)**

என்பதில் 'சான்றோன்' எனின் படைக்கலப் பயிற்சியாகிய கல்வி யறிவு பெற்றவன் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் திருக்குறளில்,

**'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய்'. -**

என்பதில் சான்றோன் என்பது கல்விகேள்விகளில் நிறைந்தவன்

என்ற பொருளில் வருகின்றது. படைக்கலக் கல்வி பெற்ற வீரனைக் குறித்த சான்றோன் என்னுஞ் சொல் சங்க மருவிய காலத்தில் கல்வி கேள்விகளில் சிறந்தவனைக் குறிக்கலாயிற்று'. இம்மாற்றத்திற்குக் காரணம் சமயச் செல்வாக்காகும். புறநானூற்றில் காணப்படும் 'கடன்' என்ற சொல்லுக்குக் 'கடமை' என்று பொருளாகும். ஆனால், கம்பன் காலத்தில் இச் சொல்லுக்கு வேறு பொருள் வழங்கலாயிற்று.

'கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதில் 'கடன்' என்பதற்கு இன்று நாம் வழங்கும் பொருளிலேயே காணப்படுவதைக் காண்கிறோம். திருப்பித் தருவதாகப் பெறுகின்ற பணத்தையே 'கடன்' எனக் கூறுகிறோம். திருப்பிக் கொடுத்தலே கடமை என்ற காரணத்தால், இப்பொருளில் வழங்கியிருக்கலாம் .

சொற்கள் பொருளில் அடையும் மாற்றம் விரிவு, சுருங்கல், உயர்வு, இழிவு முதலியனவின்றி வெறும் மாற்றமாக இருக்கும் என்று கூறி, 'பழந்தமிழ்' என்ற நூலில் பேராசிரியர் இலக்குவனார் கீழ்க்கண்ட உதாரணங்களைத் தருகிறார்:

| சொல் | பழம்பொருள் | புதுப்பொருள் |
|---|---|---|
| அகம் | உள், மனம் | கர்வம் |
| அகலம் | மார்பு | இடத்தின் பரப்பு |
| கட்டில் | அரியணை | படுக்கும் கட்டில் |
| மடை | மூட்டுவாய் | நீர் போகும் வழி |
| கிழவன் | உரியவன் | முதியவன் |

சொற்களுக்குப் புதுப்பொருள் உண்டாவதைப் போலப் பொருளைக் குறிக்கப் புதுச்சொற்களும் ஆக்கப்படுகின்றன. பழைய சொற்கள் வழக்கு மிகுதியால் பல பொருட்களுக்கும் உரிமையாதலால், நுட்பமான கருத்துக்களை விளக்கப் புதுச்சொற்கள் தோன்றுகின்றன. மொழியில் சொற்களுக்குப் புதுப்பொருள் தோன்றுவதைப் போல, புதுச்சொற்களும் புதுச்சொல்லமைப்புக்களும் தோன்றுதல் மொழியின் இயற்கையாகும்.

தமிழ்ச் சொற்றொகுதியை i) உருவப்பொருட்கள் (en- tities ) ii) நிகழ்ச்சிகள் (events) iii) அருவப் பொருட்கள் (abstracts) உறவுகள் (relation) எனப் பகுத்து மேலும் அவற்றை சிறு உட்பிரிவாகப் பகுத்துப் பொருண்மை அமைப்பை ஆராயலாம். உருவப் பொருட்களின் பொருண்மை அமைப்பில் (Semantic stcruture of entities) உயிரற்ற இயற்கை, செயற்கைப் பொருட்கள், உயிருள்ள விலங்கு, பறவை, பூச்சி முதலியவற்றையும் அருவப் பொருட்களின் பொருண்மை அமைப்பில் நேரம், தூரம், பரிமாணம், வேகம், நிறம், எண், நிலை, மதம், உண்மை, பொய், நல்லது, கெட்டது, சக்தி, ஆரோக்கியம் முதலியவற்றையும் உறவுகளின் பொருண்மை அமைப்பில் உறவு, நேர உறவு, தருக்க வரவு ஆகிய பொருண்மைக் களங்களின் பொருண்மை அமைப் பையும் நிகழ்ச்சிகளின் பொருண்மை அமைப்பில் இடமாற்றம், உருமாற்றம், ஐம்புலனுணர்வு, மன உணர்வு அறிவு போன்ற பொருண்மைக் களங்களில் சொற்களின் பொருண்மை அமைப்பும் ஆராயப்படும்.

அண்மைக் காலத்தில் 'உருவாக்கப் பொருண்மையியல் கோட்பாடு' (Generative Semantics) ராஸ், லேக்காப் ஆகியவர்களால் உருவாக்கப்பட்டது. இவர்களுடைய கோட்பாட்டில் வாக்கிய அக அமைப்பும் பொருண்மைக் கூறுகளின் அமைப்பும் ஒன்றேயாகும். இப்பொருண்மை அக அமைப்பில் மாற்றுவிதிகள் செயல்படும். மாற்றுவிதிகள் முழுவதும் செயல்பட்ட பின்னர்க் கிடைக்கின்ற அமைப்பில் அடங்கியுள்ள பொருண்மைக் கூறுகள் சொற் கூறுகளால் பதிலீடு செய்யப்படும். பின்னர் கிடைக்கும் அமைப்பே புற அமைப்பாகக் கருதப்படுகின்றது. உருவாக்கப் பொருண்மையியல் கோட்பாட்டோடு தொடர்பு கொண்ட ஃபில்மோர் என்பாரின் வேற்றுமைப் பொருண்மைக் கோட்பாடு விளங்குகிறது. ஒரு கூற்றின் பொருண்மையைத் தீர்மானிப்பதில் சூழல் பெரும்பங்காற்றுகிறது. சூழலை

அடிப்படையாகக் கொண்டு பொருண்மையியல் கோட்பாட்டினை உருவாக்க முயற்சி செய்தனர். அம்முயற்சியின் விளைவு 'பயன்வழியியல் கோட்பாடு' (Pragmatic theory) உருவாகியது. சூழலை அடிப்படையாகக் கொண்ட பொருண்மையியல் ஆய்வுக்கு மாலினோவ்ஸ்கியும் ஃபிரீத்தும் (Malinowski & Firth) அடித்தளம் அமைத்தனர் எனலாம்.

பொருண்மை என்பது பண்பாட்டுச் சூழல், வாக்கியம், தொடர், சொல், ஒலியன் ஆகியவை கலந்த கலவை என ஃபிர்த் விளக்கம் கூறுகிறார். பேசுவோர் கேட்போரின் பண்பாட்டுச் சூழலுக்கேற்பக் கூற்றின் பொருண்மை மாறுபடுவதும் உண்டு. விட்ஜென்ஸ்டின் (Wittgenstein) கருத்தும் இவரோடு ஒத்துச் செல் கிறது. இவர்களது கோட்பாட்டினைச் சூழல் கோட்பாடு எனலாம். இதுவே பயன்வழியியல் கோட்பாடாக மாறியது எனலாம். பயன் வழியியல் கோட்பாட்டையே ரூத் கெம்சன், தாம்ஸன் போன்றோர் கருத்துப்பரிமாற்றக் கோட்பாடு (Communication theory) எனப் பெயரிட்டு அழைத்தனர்.

## தொகுப்புரை

- இவ்வியலின் மூலம் தமிழ்ச் சொற்கள் எவ்வாறு பொருண்மை அடிப்படையில் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன என்பதை ஆராயலாம்.
- பலவகைப்பட்ட அகராதிகள் உருவாக்குவதற்கு இவ்வாய்வு துணைபுரியும். ஒரு பொருள் பன்மொழி அகராதிகளில் சொற்களைப் பகுக்கவும் இது பயன்படும்.
- ஆக்கமுறை மாற்றிலக்கணத்திற்கு அகராதி உருவாக்க இவ்வாய்வு அடிப்படையாக அமையும்.
- மொழி பெயர்ப்புக்கான அடிப்படைக் கூறுகளை அறிய வகை செய்யும். தொடரியல் பண்புக் கூறுகளைப் பெற வாய்ப்புள்ளதால் இவ்வாய்வு தொடரியல் செயற்பாங்கைப் பற்றி அறியவும் வழி செய்கிறது.
- 'உருவாக்கப் பொருண்மையியல் கோட்பாடு' தற்காலத்தில் நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. 'சிறுமியர்' என்ற சொல்லுக்குச் 'சிறு பெண்கள்' என்று பொருள் கொள்ளும் நாடு

**அ) குடகு நாடு**

ஆ) அருவா நாடு

இ) தென்பாண்டி நாடு

ஈ) குட நாடு

**2.** 'A Lexical Study of Tamil Dialects' என்ற நூலை இயற்றியவர்?

அ) வி.ஐ. சுப்பிரமணியம்

**ஆ) ரா.பி. சேதுப்பிள்ளை**

இ) டாக்டர் ச. அகத்தியலிங்கம்

ஈ) டாக்டர் முத்துச்சண்முகம்

3. மொழியின் இலக்கணத்திற்கும் சொற்பொருளியலுக்கும் உள்ள உறவை வைத்து ஆய்ந்தவர்?

அ) ஹேரிஸ்

ஆ) ஹாக்கெட்

**இ) சசூர்**

ஈ) பீரில்

**4.** 'அவையல் கிளவி' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது?

**அ) இடக்கரடக்கல்**

ஆ) மங்கலம்

இ) குழூஉக்குறி

ஈ) உத்தி

**5.** களிப்பு என்பது

அ) இழிபொருட்பேறு

**ஆ) உயர் பொருட்பேறு**

இ) சிறப்புப் பொருட்பேறு

ஈ) பொதுப் பொருட்பேறு

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. கிளைமொழி குறித்துச் சுருக்கி வரைக.
2. மேற்குக் கிளை மொழி குறித்து எழுது.
3. அரிசனப் பேச்சுத் தமிழ் குறித்து எழுதுக.

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. தமிழ்க் கிளை மொழிகள் குறித்துக் கட்டுரை வரைக.
2. வடக்குக் கிளை மொழி, மத்திய கிளைமொழி குறித்து எழுதுக.
3. தமிழ்ச் சொற்பொருள் மாற்றம் குறித்து விளக்கி உரைக்க.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. அ) குடகு நாடு
2. ஆ) ரா.பி. சேதுப்பிள்ளை
3. இ) சசூர்
4. அ) இடக்கரடக்கல்
5. ஆ) உயர் பொருட்பேறு

.............................

# அலகு – 5

# தமிழ்த் தொடரியல் - தமிழ் வரிவடிவம்

## 5.1 தமிழ்த் தொடரியல்

### முன்னுரை

சொற்கள் தொடர்ந்து அமையும் அமைப்பைச் சொற்றொடர் என்பர். சொல்லியலில் சொற்களைப் பகுக்க, சொற்கள் தொடராக நிற்றலைச் சொற்றொடரில் காண்கிறோம். சொற்கள் காலப் போக்கில் மாற, சொற் பொருளும் மாறுவதைக் காண்கிறோம். ஆனால், சொற்றொடர் அமைப்பில் பெரும் மாறுபாட்டைக் காண முடியாது. சொற்றொடரமைப்பே ஒரு மொழியின் தனிச்சிறப்பைக் காட்டவல்லதாகும். ஒரு வாக்கியத்தில் அமைகின்ற பல்வேறு சொற்களிடையே காணப்படுகின்ற இலக்கணத் தொடர்புகளையும் பொருள் தொடர்புகளையும் நன்கு அறிகிறோம்.

### 5.1.1 தமிழ்ச்சொற்றொடர் அமைப்பு வரலாறு

தொடரியல் ஆராய்ச்சியின் வரலாற்றை நோக்கின் மூன்று நிலைகளை நாம் காணலாம்.

(i) தொல்காப்பியர், நன்னூலார் போன்ற மரபு இலக்கண ஆசிரியர்கள் (Traditional grammarians) சொற்றொடர் அமைப்பை ஆராய்ந்த நிலையை முதல் நிலையாகக் கொள்ளலாம்.

(ii) அமைப்பு மொழியியல் (Structural Linguistics) வளர்ந்த நிலையில், தொடரியலைப்பற்றி ஆராயவேண்டுமென எண்ணம் ஏற்பட்டது. அதனால் சில கொள்கைகளும் கோட்பாடுகளும் வழி முறைகளும் உருவாயின. இந்நிலையில்தான் அண்மை உறுப்பு பிரிப்புமுறை (Immediate Constituent Analysis) தோன்றியது. இதனை இரண்டாவது நிலையாகக் கருதலாம்.

(iii) 1950 ஆம் ஆண்டையொட்டிய காலப் பகுதியில் மாற்றிலக்கணம் (Transformation grammar) என்ற கொள்கை உருவாயிற்று. தொடரியல் பற்றி ஆராய்ந்த கொள்கைகளுள் மாற்றிலக்கணக் கொள்கையே மிகச் சிறந்ததாக இன்று கருதப்படுகின்றது. தொடரியலைப் புதியதொரு நிலையில் ஆராய்ந்த இந்நியையை மூன்றாவது நிலையாகக் கருதலாம்.

## மரபு இலக்கணங்களும் தொடரியலும்:

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை ஆராய்ந்து நோக்கின், தொடரியல் கருத்துக்களும் நுட்பங்களும் உள்ளமை தெரியவரும். கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் போன்ற இயல்களில் காணப்படும் பல நூற்பாக்கள் இவ்வுண்மையைச் சுட்டிக் காட்டுவனவாக உள்ளன. கிளவியாக்கத்திலுள்ள அறுபத்தொரு நூற்பாக்களில் ஐம்பதிற்கும் மேற்பட்டவை தொடரியல் விளக்கத்தையே அளிக்கின்றன. கிளவியாக்கம் என்ற தொடரே பல கிளவிகளால் அதாவது பல சொற்களால் ஆக்கப்படும் தொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பற்றிப் பேசுவது எனப் பொருள்படும். இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட ஒன்பது ஓத்தினுள்ளும் முதற் கண்ணது கிளவியாக்கம். இது கிளவியாக்கமென விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சியென்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகு நிலைமையைக் கிளவி யாக்கம்' என்றார் தெய்வச்சிலையார். சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களும் இவ்வியல் தொடர் ஒற்றுமை இயைபு, (Concord) பற்றிக் கூறுவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வியலின்கண் எழுவாய் பயனிலை (494) பெயரடை - பெயர் (506, 509) போன்றவற்றில் காணப்படும் இயைபு (504, 511, 521) வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு, இரு வாக்கியங்கள் இணையும் போது ஏற்படும் மாற்றங்கள் போன்றவை காணப்படுகின்றன.

வேற்றுமை இயலில் வேற்றுமையை எட்டாகப் பிரித்து அவற்றின் உருபுகளைக் கூறிச் செல்லும் ஆசிரியர், அவ்வேற்றுமைகள் எத்தகைய வினைச் சொற்களை ஏற்று நிற்கும் என்பதையும் கூறுவது தொடரியல் விளக்கத்தைக் காட்டுவதாக உள்ளது. முதல் வேற்றுமையினை எழுவாய் வேற்றுமையென்றும் அவ்வெழுவாயாகப் பெயர்ச் சொல்லே அமையும் என்றும் கூறிச் செல்கின்றார். நன்னூலார் அப்பெயர்ச் சொல்லைத் 'திரிபில் பெயர்' என்கிறார். இவ்வாறு பெயர்ச் சொல் எழுவாயாக அமைய, அதன் பயனிலையாக வினைச்சொல்லோ, பெயர்ச் சொல்லோ வினாச்சொல்லோ வந்தமையும் என எல்லா மரபு இலக்கணங்களும் கூறுகின்றன. தமிழ் வாக்கியத்திற்கு எழுவாய்-பயனிலை அடிப்படை என்பது இதனால் பெறப்படுகின்றது. எந்தெந்த வினைகள் எந்தெந்த வேற்றுமைகளுடன் வருகின்றன

என்பதை வேற்றுமையியலிலும் சில வினைகள் சில வேற்றுமை உருபுகளோடு வரும்போது தத்தம் பொருளை இழந்து நிற்கின்றன என்பதை வேற்றுமை மயங்கியலிலும் காணலாம்.

'கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை' (268)

என்ற நூற்பாவில் இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் 'சார்ந்தான்' என்ற வினையோடு வரும்போது மயங்குகின்ற நிலையைக் காட்டுகின்றது.

பெயர் எச்சத்தைப் 'பெயரெஞ்சு கிளவி' என்று குறிப்பிடுவதே தொடரியல் அடிப்படையாகும். செய்யும், செய்த என்ற இரு வாய்ப்பாடுகளில் காணப்படும் இவ்வெச்சம் உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் (700) கொண்டு முடியும் என்று இப்பெயர்களுக்கும் அப்பெயரெச்சத்திம் இடையே காணப்படும் இலக்கணத் தொடர்பு பலவேறாக இருக்குமென்றும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

**'நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.'(719)**

என்ற நூற்பாவில் இடம், செயப்படுபொருள், காலம், கருவி, எழுவாய், வினை என்ற ஆறு வகையான இலக்கணத்தொடர்புகள் பெயரெச்சத்திற்கும் பெயருக்குமிடையே காணப்படும் எனக் கூறிச் சென்றுள்ளார்.

ஒரு தொடர் பல பொருள்களைத் தந்து நிற்றலை மொழிகள் பலவற்றில் காணலாம். ஒன்று பல பொருள் தரும் ஒரு சொல்லில் உண்டாகும் சொல் மயக்கம் (Lexical ambiguity), சொற்களின் அமைப்பில் உண்டாகும் அமைப்பு மயக்கம் (Structural ambiguity) என இரண்டு வகையுண்டு. 'மா' என்ற சொல் மாமரத்தையும் விலங்கினையும் குறிக்கும்.

**'மா கண்டேன்'**

என்பது 'மாமரத்தினைக் கண்டேன்', 'விலங்கினைக் கண்டேன்' என இரு பொருள்படும்.

**'கொன்ற புலி'**

போன்ற தொடர்கள் புலி கொன்றதா அல்லது யாராவது புலியைக் கொன்றார்களா என்ற இரு பொருளைத் தந்துநிற்கக் காண்கிறோம். இத்தகைய மயக்கம் பற்றி

**'தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**

**கடிநிலை யிலவே பொருள்வயினான.'**

என்ற நூற்பாவில் கூறப்பட்டுள்ளது.

எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும் பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்குமிடையே நம் மொழியில் ஓர் இயைபைக் காண்கிறோம்.

**'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்**

**பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்**

**மயங்கல் கூடா தம்மர பினவே' (தொ.சொ. 11)**

என்ற நூற்பாமூலம் பயனிலை காட்டும் திணை பால்களை, எழுவாயும் காட்டும் என்பது அறியலாம். இன்றும் சொற்றொடரில் இஃது அடிப்படையாக உள்ளதைக் காண்கிறோம். ஆனால், காலப் போக்கில் இவ்வமைப்பில் மாற்றம் ஏற்பட்டதையும் ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கத்தில் குறிப்பிடுகின்றார். 'ஆறனுரு பொழிந்த வேற்றுமையுருபுகளையும் வினைமுற்றையும் வினையெச்சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி முன் வருதலுமுண்டு'.

அடை சினை முதல் என அமையும் தொடர் பிரிக்க முடியாதவாறு அமைந்துள்ளதைத் தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார்.

**'அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை**

**நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்:(509)**

இதேபோன்று தொகைநிலைத் தொடர், வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை போன்றவை எழுவாயாக அமையுமிடத்து அவற்றைப் பிரித்தெழுத முடியாது. சிறப்புப் பெயரும் இயற்பெயரும் அடுக்கி வரும் தொடரையும் பிரித்தெழுத முடியாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்கள் சொற்றொடரில் இடம் பெறும்போது 'உம்' எனும் இடைச்சொல் சேர்த்துக் கூறப்படுவதுண்டு. தொல்காப்பியர் 'உம் ' எனும் இடைச்சொல் பற்றிக் கூறுமிடத்து,

**'எச்சம் சிறப்பே யைய மெதிர்மறை**

**முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்**

**றப்பா லெட்டே யும்மைச் சொல்லே' (தொ.சொ.225)**

எனக் குறிப்பிடுவார். அவற்றுள் எண்ணும்மை பற்றி 'நிலனும் நீரும் தீயும் வளியுமாகா யமுமெனப் பூதமைந்து என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை' எனச் சேனாவரையர் கூறுகிறார். இன்றும் அவ்வாறே வழங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழில் காணப்படும் பல்வேறு சொற்றொடரமைப்பை எடுத்துக் காட்டுடன் காண்போம்.

1. எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடம் என்பவற்றால் ஒத்திருத்தல் தமிழ் மொழியின் இயல்பாகும்.

அவன் வந்தான்.

அவள் வந்தாள்.

அது வந்தது.

2. பயனிலை பொதுவாகச் சொற்றொடரின் இறுதியில் வருவதே இயல்பானாலும், மாறி வருதலும் உண்டு.

கண்டனென் கற்பினுக்கணியைக் கண்களால். (கம்ப. திருவடி 57)

நோகோ யானே.

வந்தார் தலைவர்

கண்டேன் அவனை.

3. செயப்படுபொருள் பெரும்பாலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் வரும். சிறு பான்மை மாறி வருதலும் உண்டு.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றினார்.

4. எழுவாய் ஒருமையாயிருக்க, பயனிலை பன்மையாய் வரும்.

'அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்' -(புற 145)

5. பல வினைகள் வரின், ஒருமை பன்மை மயக்கம் நிகழும்.

'உண்கு மெந்தை நிற் காண்கு வந்திசின்'- (புற 125)

6. பயனிலை பெரும்பாலும் வினை முற்றாக அமைய, சிறு பான்மை பெயராகவும் அமையும்.

'அவன் இராமன்?'

7. ஓர் உருவம் ஆணா, பெண்ணா எனத் தெளிவாய் அறியப் படாவிடின், எழுவாய் ஒருமையாக இருப்பினும் பயனிலை பன்மையாகயிருக்கும்.

'ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ அஃதோ தோன்றுவார்.

'அங்கேநிற்பவர் இராமனா அன்றி சீதையா?'

8. எழுவாய், முன்னிலை படர்க்கையாக இருப்பின் முன்னிலைப் பன்மை வினைப் பயனிலையாக வரும்.

'நீயும் அவனும் போனீர் (கள்).'

9. எழுவாய் உணர்திணையும் அஃறிணையும் கலந்ததாக இருப்பின் உயர்திணைப் பன்மையாய் வரும்.

'நானும் நாயும் சோறு சாப்பிட்டோம்.'

10. எழுவாய் தன்மை முன்னிலைப் பெயர்களாயேனும் தன்மைப் படர்க்கைப் பெயர்களாயேனும் தன்மை முன்னிலைப் படர்க்கைப் பெயர்களாயேனும் இருப்பின், பயனிலை தன்மைப் பன்மையாயிருக்கும்.

''நானும் நீயும் போனோம்.'

'நானும் அவனும் போனோம்'

'நானும் நீயும் அவனும் போனோம்'

11. அன்பினால் அஃறிணைக்கு உயர்திணையும் உயர்திணைக்கு அஃறிணையும் வரும்.

(ஆவின் கன்றைப் பார்த்து) 'என் தந்தை வந்தான்' எனக் கூறல்

(ஆண்மகனைப் பார்த்து)'என் யானை வந்தது' எனக் கூறல்

(சிறப்புக்கருதி) 'செந்தார்ப் பசுங்கிளியார்' (சீவக. 1036) எனக் கூறல்.

12. சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வரல் தமிழ் மரபாகும்.

‘தெய்வப் புலவர் திருவள்ளுவர்’

13. சுட்டுப்பெயர் இயற்பெயரின் பின்னர் வரும்.

'சாத்தன் அவன் வந்தான்.'

14. உயர்த்துக் கூறுமிடத்து ஒருமைப் பொருளைக் குறிக்கப் பன்மையும் வரும்.

'யாமேத்துகம் பலவே.'

15. எழுவாய் ஒருமையாயிருக்க, பயனிலை பன்மையாய் வருவது முண்டு.

'அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்' - (புற.145)

16. இரண்டாம் வேற்றுமை உருபேற்ற பெயர் பெரும்பாலும் வினையின் முன்னர் வரும்.

'தலையை வணங்கி.' -(சிலம்பு 490, 33).

17. ஆறாம் வேற்றுமை உருபும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பெயர் கொண்டு முடிவன. நான்காம் வேற்றுமை சில இடங்களில் பெயர் கொண்டு முடிதலும் உண்டு மற்ற வேற்றுமை உருபுகள் வினை கொண்டு முடிவன்.

'எனது முகம்'.

'மதுரை நகரின் மேற்கு பல்கலைநகர்.'

'அவனுக்குப் பகை'.

'நான் அவருக்கு மகள்'.

18. பெயரடை எல்லாம் பெயர்க்கு முன்னும் வினையடை எல்லாம் வினைக்கு முன்னும் அமைகின்றன.

'நல்ல பையன்' - பெயரடை

'வேகமாக வந்தான்.' - வினையடை

19. பெயரெச்சங்கள் யாவும் பெயர்க்கு முன்னும் வினையெச்சங்கள் யாவும் வினைக்கு முன்னும் வரும்.

'படித்த பையன்.'

'படிக்காத பையன்.'

'அழுது துடித்தான்.'

'பாடி முடித்தான்.'

20. விரைவின் நிமித்தம் காலம் மயங்குதலும் உண்டு.

'இதோ வந்தேன்.'

21. எதிர்காலத்திற்குப் பதிலாக நிகழ்காலமும் இறந்த காலமும் வருவதுண்டு.

'பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்.' (கம்ப. அயோ. 216.4)

'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்' (குறள்)

22. ஆங்கிலத்தில் சொற்களை இணைத்தற்கு 'and' என்ற இணைப்பு இடைச்சொல் வரும். அச்சொல் பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது ஈற்றில் மட்டும் வரும். ஆனால், தமிழில் 'and'க்கு இணையாக 'உம்' எனும் சொல் பல சொற்களோடும் வரும்.

'சேரனும் சோழனும் பாண்டியனும் தமிழகத்தை ஆண்ட

23. செப்பாக வரும் வாக்கியங்களுக்கும் வினாவாக வரும் வாக்கியங்களுக்கும் வேறுபாடு இல்லை எனலாம். செப்பு வாக்கியங்களின் ஈற்றில் ஆ, ஒ முதலான வினாச்சொற்கள் சேர்க்கப்படும்.

'சாந்தி வந்தாள்' - செப்பு

'சாந்தி வந்தாளா?'- வினா

24. ஆங்கிலத்தில் இணைப்பு இடப்பெயர் வந்து இரண்டு வாக்கியங்களை இணைக்கும்.

'This is the man who came.'

பெயரெச்சத் தொடரும் வினையாலணையும் பெயரும் அமைதல் தமிழ்த் தொடரியல்பாகும்.

'வந்த மனிதன் போனான்.' 'வந்தவன் போனான்."

25. 'வேறு இல்லை உண்டு ஐம்பான் மூவிடத்தன' என நன்னூலார் இம்மூன்றும் இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான சொற்கள் என்கிறார். இவை எழுவாயோடு பொருந்தி நிற்றலைக் காணலாம்.

'அவர் வேறு' 'நண்பன் உண்டு.' 'நண்பன் இல்லை.

26. எண்ணுப்பெயர்களில் ஒன்று முதலான எண்களெல்லாம் பெயருக்குப் பின்னால் வரும்.

'மாடு ஒன்று.'

ஒன்று என்ற எண்ணுப்பெயர் ஒரு என மாறிப் பெயருக்கு முன் வரும்.

ஒரு மாடு.

27. தமிழில் வினையாலணையும் பெயராக வருவதை ஆங்கிலத்தைப் போல பெருந் தொடராக அமைத்துக் கூறும் முறை வளர்ந்துள்ளது.

'வந்தவன் நல்லவன்'

'நன்கு படிப்பவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவார்கள்.'

28. எதிர்மறைகள் செய்திலன், உண்டிலன் எனப் பழங்காலத்தில் வழக்கிலிருந்தன.

'நான் நேற்றுச் செய்யவில்லை' 'அவன் இன்று உண்ணவில்லை'

பிரிநிலை வாக்கியங்களாக அமைந்து தொடர் நிலையில் எதிர்மறைகள் காலம் உணர்த்துகின்றன.

29. தா, வா போன்ற வினைகள் தொல்காப்பியர் காலத்தில் தன்மை, முன்னிலைக்கு வரும் எனக் கூறுகிறார். ஆனால், சங்க காலத்திலே படர்க்கைக்கு வரலாயிற்று.

பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த' (படர்க்கை)

30. ஆங்கிலத்தைப் போன்று தமிழிலும் தனி வாக்கியங்கள் அமையலாம். 'He came, he saw and he conquered'

'அவன் வந்தான், அவன் கண்டான், அவன் வென்றான்'

இதனையே அவன் வந்து, கண்டு வென்றான் எனக் கூறலாம். வினையெச்சங்களைப் பயன்படுத்தித் தொடர் வாக்கியம் அமைக்க முடியும்.

சொல் தனியே நின்று பொருள் உணர்த்த வல்லதாயினும் சொல்லை அடுத்து வரும் அண்மைச் சொல் அப்பொருளைத் தெளிவாக்கப் பெரிதும் உதவுகிறது. அண்மைச் சொல்லோடு இயையும் அமைப்பைத் தொடர் அமைப்பு என்பர். பேராசிரியர் ரா. சீனிவாசன் அவர்கள் 'வேற்றுமைப் பொருள் பற்றித் தொடரும் தொடர்களை வேற்றுமைத் தொடர் என்றும் ஏனையவற்றை அல்வழித் தொடர் என்றும் கூறுவர். 'வந்தேன்' என்று எழுவாய் இன்றிக் கூறினாலும் அதன் எழுவாய் 'நான்' என அறிந்து கொள்ளலாம். இவை தோன்றாத போதும் எழுவாயைப் புரிந்து கொள்ளலாம். எனவே 'நான் வந்தேன்' என்னும் பொழுது எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே தாண்டு குறிப்பு இருப்பதாகக் கருதுகிறோம்.

## சொற்றொடரமைப்பும் தொடரியல் வழி ஆய்வும் அண்மை உறுப்புப் பிரிப்பு முறை (ICA):

அமைப்பு மொழியியல் (Structural linguistics) வளரத் தொடங்கியபோது, தொடரியலையும் முறையாக ஆராய வேண்டும் என எண்ணினர். சொல் வகைகளைப் பற்றி அமைப்பு அடிப்படையில் விளக்கங் காண முற்பட்டனர். இந்நிலையில்தான் பெயர்த் தொடர்களிலும் வினைத் தொடர்களிலும் காணப்பட்ட பல்வேறு

சொற்களைப் பிரித்து இணைத்து ஆராய்ந்த நிலையில் தான் அண்மை உறுப்புப் பிரிப்பு முறை (Immediate Constituent Analysis) என்ற கொள்கை உருவாயிற்று.

ஒரு மொழியிலுள்ள சொற்கள் சங்கிலிக் கோவை போல் தொடர்ந்து அமைந்தவையாகும். மொழி அமைப்பு மூவகைப்படும்.

(i) ஒரு நிலை அமைப்பு (Linear structure)

(ii) படி நிலை அமைப்பு (Hierarchical structure)

(iii) நுண்நிலை அமைப்பு (Abstract structure)

சங்கிலிக் கோவை போல் அமைந்தவற்றை உறுப்பி (Constitute) என்பர். ஒவ்வோர் உறுப்பியிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புக்கள் (Constituents) உண்டு.

| | | | |
|---|---|---|---|
| அந்தச் | சிறிய | பையன் | (உறுப்பி) |
| 1 | 2 | 3 | (மூன்று உறுப்புக்கள்) |

'அந்தப் பையன் பால் குடித்தான்' என்பதில் அந்த, பையன், பால், குடித்தான் என்ற நான்கு சொற்களும் அதே வரிசையில் அமைந்துள்ளன. இதனை ஒரு நிலை அமைப்பு என்பர். அந்த என்பதற்கும், பையன் என்பதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதும் பையன் என்பதற்கும் பால் என்பதற்குமிடையே உள்ள தொடர்பை விடப் பால் என்பதற்கும் குடித்தான் என்பதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது தெளிவாக்கப் படவில்லை. எனவே ஒரு நிலை அமைப்பைவிடச் சிறந்த அமைப்பு இருக்க வேண்டும். இதனைப் படிநிலை அமைப்பு எனலாம். இந்தப் படிநிலை அமைப்பில் அந்த என்பதற்கும் பையன் என்பதற்கும் நெருங்கிய தொடர்பு என்பதையும் பால் என்பதும் குடித்தான் என்பதும் நெருங்கிய தொடர்புடையவை என்பதையும் அறிகிறோம். பையன் என்பதும் பால் என்பதும் அடுத்தடுத்து இருப்பினும் நெருங்கிய தொடர்பு இல்லை.

அந்தப் பையன் பால் குடித்தான்(1)

அந்தப் பையன் (2) பால் குடித்தான் (3)

அந்த(4) பையன் (5) பால் (6) குடித்தான் (7)

ஒன்று (1) என்பது உறுப்பியாகும். 4,5,6,7 என்பவை உறுப்புக் களாகும். அந்தப் பையன் பால் குடித்தான் என்பதன் அண்மை உறுப்புக்கள் (Immediate Constituents)

அந்தப் பையன் என்பதும் பால் குடித் தான் என்பதும் ஆகும். நேரடித் தொடர்புடைய உறுப்புக்களையே ஓர் உறுப்பியின் அண்மை உறுப்புக்களாகக் கொள்வர். ஓர் உறுப்பியை இரு பகுதிகளாக்கி அவற்றில் ஒன்றை நிலையான தாக்கி, மற்றொன்று உள்ள இடத்தில் பதிலியாகத் தனிச்சொல் ஒன்றைக் கூற இயலுமாயின், அப்பகுதியை ஓர் அண்மை உறுப்பாகக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| அந்தப் பையன் | இந்தப் புத்தகத்தைப் படித்தான் |
| (பதிலியாக) | (பதிலியாக) உறங்கினான் |
| (ஒரே வடிவத் தொகுதி) | (ஒரே வடிவத் தொகுதி) |

இரண்டு உறுப்புக்கள் பொருள் தரும் முறையில் இணைந்து நிற்கும்போது அதனை அண்மை உறுப்புகள் என்கிறோம். பொருள் தரும் முறையில் சொற்களை இணைத்து விளக்குவது அண்மை உறுப்பு வகை முறையாகும் (Immediate Constituent Analysis).

சொற்றொடரை முதலில் தொடராகப் பிரித்து ஆய்வது முதல் நிலையாகும். பெயர்ச்சொல் தொடர் (பெ.சொ.தொ) வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ), பெயரடைத்தொடர் (பெ.அ.தொ.) வினையடைத் தொடர் (வி.அ.தொடர்) எனப் பலவாறு தொடர்களைப் பிரித்துக் கொள்ள முடியும். இவற்றுள் பெ.சொ.தொடரும் வினைச்சொல் தொடரும் பெரிய தொடர்களாகும். இவ்விரு தொடர்களின் உள்ளுறுப்பாகவே பெ. அ தொடரும் வி. அ தொடரும் அடங்கும்.

கண்ணன் வந்தான் என்ற சொற்றொடரை எடுத்துக்கொள்வோம் இதில் கண்ணன் என்பது பெ.சொ.தொ. ஆகும். பெயர்ச் சொல்லைத் தலைமையாகக் கொண்டிருக்கிற தொடரைப் என்கிறோம். இதுபோன்றே வினைச் சொல்லைத் தலைமையாகக் கொண்டிருக்கிற தொடரை பெ.சொ.தொ. என்கிறோம். வினைச்சொல்லைத் தலைமையாகக் கொண்ட தொடர வி.சொ.தொ. என்கிறோம்.

இதன்படி பேர் குறித்த கண்ணன் வந்தான் என்ற சொற்றொடரில் வந்தான் என்பது வினைச்சொல் தொடராகும். இவ்விரண்டு தொடர்களும் ஒன்றையடுத்து ஒன்று நிற்கக் கண்ணன் வந்தான் என்ற சொற்றொடர் கிடைக்கிறது. இச்சிறிய சொற்றொடரைப் பல வகைகளில் பெரிய சொற்றொடராக்க முடியும். பெயர்ச்சொல் தொடரில் இருக்கும் பெயர்ச்சொல்லுக்கு அழகான என்ற அடையைச் சேர்க்க அழகான கண்ணன் வந்தான் என்ற சொற்றொடர் கிடைக்கிறது. இங்கு அழகான என்ற அடை

வினையைக் குறிக்கவில்லை. பெயரையே தழுவி நிற்கிறது. இவ்வாறு இரு சொற்கள் ஒன்றையடுத்து ஒன்று நிற்கும் முறையை அண்மை உறுப்பு முறை (ICS) என்பர். ஒரு சொற்றொடருக்கும் இன்னொரு சொற்றொடருக்குமுள்ள உறவை வெளிக்கொணரும் சொற்றொடரில் ஏற்படும் பொருட் குழப்பத்தையும் தவிர்க்கப் பயன்படுகின்றது.

அழகான கண்ணன் வந்தான் எனும் தொடரில் கண்ணன் என்னும் அண்மை உறுப்பு வந்தான் என்பதோடு அடுத்து நின்று, கண்ணன் வந்தான் என்ற சொற்றொடரைத் தருகின்றது.

இனி அழகான கண்ணன் வந்தான் என்பதில் அழகான என்பது கண்ணனைத்தான் அடுத்து நிற்கிறதேயொழிய வந்தான் என்னும் அண்மை உறுப்பு அல்ல. இந்தப் பெயர்ச்சொல் தொடர் வந்தான் என்பதை அடுத்து நின்று ஒரு முழு சொற்றொடராகிறது. இனி அழகான கண்ணன் வந்தான் என்பதில் வேகமாக என்பது வந்தான் என்பதை அடுத்து நிற்கும் வினையடைத் தொடராகும். எனவே வேகமாக வந்தான் என்ற முழுமையான தொடர் கிடைக்கின்றது. இது அழகான கண்ணன் என்ற பெயர்ச்சொல் தொடரை அடுத்து நிற்கின்றது.

இவ்வாறாக அண்மையுறுப்பு வகை முறை (I.C. Analysis) மூலம் ஒரு தொடரில் உள்ள உறுப்புகளுக்கிடையில் இருக்கும் அடுத்து நிற்கும் உறவையும் பின்னர் அத்தொடர் முழுமையாக இயங்கி, பிற முழுமையான தொடரோடு கொள்கிற அடுத்து நிற்கும் உறவையும் விளக்குகிறோம். அண்மை உறுப்பு ஆய்வின் மூலம் சிறு தொடரின் உறுப்புக்களிலிருந்து பெருந்தொடரின் உறவுவரை விளக்கப்படுகின்றது.

1. கண்ணன் வந்தான்.
2. அழகான கண்ணன் வந்தான்.
3. அழகான கண்ணன் வேகமாக வந்தான்.

## அண்மை உறுப்புக்களின் வகைகள்

### இடைவிடாத அண்மை உறுப்புகள் (Continous ICs):

கண்ணன் சென்றான் என்பதில் அண்மை உறுப்புக்கள் கண்ணன் என்பதும் சென்றான் என்பதும் ஆகும். இவ்விரண்டு அண்மை உறுப்புக்களும் தொடர்ச்சியாக அமைந்துள்ளமையால் இவற்றை இடைவிடாத அண்மை உறுப்புக்கள் எனலாம்.

## இணைந்தியல் அண்மை உறுப்பு (Simultaneous ICs):

அவன் வந்தான் என்பதை வியப்பைப் குறிக்கும் சுரவிசையுடன் கூறின் அவன் வந்தது வியப்பு ஆகிறது. வியப்பைக் குறிக்கும் சுரவிசை அவன் வந்தான் என்ற பயனிலையுடன் இணைந்து ஒலிப்பதாதல் இணைந்தியல்அண்மை உறுப்பு என்பர்.

## இடைவிட்ட அண்மை உறுப்பு (Discontinuous ICs):

இதுவரையிலும் உறுப்பியின் உறுப்புக்கள் இரண்டும் அடுத்தடுத்து இருக்கக் கண்டோம். சில தொடர்களில் அடுத்தடுத்து நிற்காமல் மாறியும் நிற்கக் காண்கிறோம். ஆங்கிலத்தில் Is John go- ing? என்பதனை எடுத்துக்காட்டுவர். John ஓர் அண்மையுறுப்பு. Is...going என்பது மற்றைய உறுப்பாகும். வேகமாய் ஓடி இராமன் கீழே விழுந்தான் என்னும்போது ஓடி விழுந்தான் என்பது விழுந்தான் அல்லது கீழே விழுந்தான் என்பதனோடு இயையும் இடையில் இராமன் வருகிறது. வேகமாய் ஓடி..கீழே விழந்தான் என்பது இடைவிட்ட அண்மை உறுப்பாகும். இலக்கண ஆசிரியர்கள் கூறும் 'சுரை ஆழ அம்மி மிதப்ப' என்பதனை இதற்கு உதாரணம் காட்டலாம்.

## மயக்கும் அண்மை உறுப்பு (Ambiguous IsC):

ஆங்கிலத்தில் Old ladies' hostel என்னும் பொழுது old என்பது ladies என்பதற்கோ hostel என்பதற்கோ அடைமொழியாக அமையலாம். இருவேறு வகையான அண்மையுறுப்புகள் அமைவதைக் காணலாம். தமிழிலும் இதுபோன்ற தொடர்களைக் காணலாம். பழைய அரசன்அரண்மனை - இவண்கண் பழைய என்பது அரசனுக்கு அடையாக வருகின்றது. பழைய அரசன் அரண்மனை - இவண்கண் பழைய என்பது அரண்மனைக்கு அடையாக வருகின்றது. இதுபோன்ற பல தொடர்களைத் தமிழில் காணலாம்.

## பல்நிலை அண்மை உறுப்பு (Multiple IsC):

அண்மை உறுப்புக்கள் பொதுவாக இரண்டாக அமையும். இரண்டுக்கு மேற்பட்ட அண்மை உறுப்புகளையுடைய உறுப்பிகளும் உண்டு. கை கால் முகம் கழுவினான் என்பதில் உறுப்பியாகக் கொண்டால் கை கால் முகம் என்பது அதன் அண்மை உறுப்பாகும். இது உறுப்பியாகும் போது இதன் அண்மை உறுப்புக்கள் கை, கால், முகம் என மூன்று ஆகும். கை கால் முகம் என்ற தொடரை கை கால் + முகம்

என்றோ, கை + கால் முகம் என்றோ அண்மை உறுப்புக்களாகப் பிரிக்கமுடியாது. இங்கே இரண்டுக்கு மேற்பட்ட அண்மை உறுப்புக்கள் 'பல்நிலை அண்மை உறுப்புக்கள்' (Multiple ICs) என்று கூறலாம்.

இத்தொடர்களில் மூன்று உறுப்புக்கள் அண்மையுறுப்புக்களாக அமையும்:

அறம் பொருள் இன்பம்

சேர சோழ பாண்டியர்

மா பலா வாழை

இத்தொடர்களில் உறுப்பியின் உறுப்பாக அமையும் நிலையில் மூன்றுக்கும் சம உரிமை உள்ளது.

அண்மை உறுப்பு ஆய்வின் வளர்ச்சியில் மூன்று கால கட்டங்களைக் குறிப்பிடலாம். இவ்வாய்வு முறையின் தந்தை புளூம் ஃபீல்டாக (Bloomfield) இருந்தபோதிலும் இதனை நன்கு வளர்த்த (Harris) ரூலன் வெல்ஸ் (Rulon Wells) போன்றோரையே சாரும். ரூலன் வெல்ஸின் 'அண்மை உறுப்புப் பகுப்பு முறை' (Immediate Constituent Analysis) என்ற ஆய்வுக் கட்டுரையும், ஹாரிஸின் "அமைப்பு மொழியியல்" (Structural Linguistics) என்ற நூலுமே இவ்வாய்வு முறையைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குவதாக அமைந்துள்ளன. அண்மை உறுப்பு ஆய்வு முறையில் நிறைகள் சில இருப்பினும் குறைகளும் உண்டு என்பதைப் பின்னர் அறிய நேரிட்டது. இந்த அண்மையுறுப்பு ஆய்வுமூலம் மொழியிலுள்ள எல்லா வாக்கியங்களின் அமைப்பையும் விளக்க முடியவில்லை.

i) சில சொற்றொடர்களிடையே காணப்படும் ஒற்றுமையை இவ்வாய்வு முறையால் தெளிவாக விளக்க முடியவில்லை. ஒரு சொற்றொடருக்கும் அதன் எதிர்மறைச் சொற்றொடருக்குமுள்ள ஒற்றுமையையும் இவ்வாய்வு முறையால் விளக்க முடியவில்லை.

ii) இரண்டு தனிச் சொற்றொடர்களைக் கூட்டுச்சொற்றொடராக மாற்றும்போது ஏற்படும் சில மாற்றங்களை இவ்வாய்வு முறையால் விளக்க முடியவில்லை.

iii) பொருள் தொடர்புடைய சொற்றொடர்களை விளக்க முடியவில்லை.

இதுபோன்ற குறைகளை நீக்கப் பெரிதும் உதவியாக அமைந்த தொடரியல் கோட்பாடே 'மாற்றிலக்கண ஆய்வு' முறையாகும். அமைப்பு மொழியியல் மொழி

ஆராய்ச்சியில் மொழிக் கூறுகளின் இருதலைப் பாகுபாட்டினையே வற்புறுத்தி அதற்கான எடுத்துக்காட்டுகளையும் கூறிச் செல்கிறது என்றோம்.

தொடரியலைப் பற்றித் தெளிவான ஆராய்ச்சி ஓரளவுக்கு அமைப்பு மொழியியல் ஆய்வு விரிவடைந்த பின்னரே துவங்கப்பட்டது எனலாம். 1930 ஆம் ஆண்டு வரை தொடரியல் பற்றித் தெளிவான கோட்பாடே உருவாகவில்லை. சொற்றொடர்கள் யாவும் உருபன்களின் தொடர்ச்சியே என்ற கொள்கையால் தொடரியல் ஆய்வு வளர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சொற் றொடர்களின் ஆய்வு பற்றித் தொல்காப்பியர் போன்ற மரபிலக்கண ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சொற்றொடர் ஆய்வு முறையைப் புளூம்ஃபீல்டு அவர்கள் அறிமுகப்படுத்தினார். அண்மை உறுப்பு ஆய்வு முறையால் சொற்றொடரமைப்பை ஆராயமுடியும் என்ற எண்ணம் மொழியியலறிஞரிடையே 1957 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலவி வந்தது. சொற்றொடர்களைப் பல தொடர் உறுப்புகளாகப் பாகுபாடு செய்வதையே இவ்வண்மை உறுப்பு ஆய்வு முறை வலியுறுத்துகின்றது. இது பெரும்பாலும் மரபு இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள சொற்றொடர் பாகுபாட்டு முறையையே ஒத்துள்ளது. புளூம்ஃபீல்டு அண்மை உறுப்பு ஆய்வு முறையில் ஏற்படுத்தாத ஒரு மாற்றத்தை ஹாரிஸ் தமது ஆய்வு முறையில் புகுத்தினார். ஒவ்வோர் அண்மை உறுப்பிற்கும் ஒவ்வோர் இலக்கணக் குறியீடு கொடுத்தார். இவ்விலக்கணக் குறியீடுகளையே சோம்ஸ்கி மாற்றிலக்கணத்தில் தொடர்க் குறியீடுகள் எனக் குறிக்கிறார். இத்தொடர்க் குறியீடுகளின் வரிசையே சொற்றொடர். இதையே தொடரமைப்பு இலக்கணம் (Phrase structure grammar) என்பர். இவ்வண்மை ஆய்வு முறையின் திருந்திய வடிவமே மாற்றிலக்கணத்தின் முதல்படியான தொடர் அமைப்பு இலக்கணமாகும். 'மொழித்திறன்' (Combetence), 'மொழிச் செயல்பாடு(Performance) ஆகிய இரண்டிற்குமிடையேயான வேறுபாட்டைத் தெளிவாகப் புலப்படுத்தியவர் சோம்ஸ்கி எனும் மொழியியல் அறிஞராவார்.

## மாற்றிலக்கணம் (Transformation grammar)

தொடரியல் பற்றி ஆராய்ந்த கொள்கைகளில் மாற்றிலக்கணக் கொள்கையே மிகச்சிறந்த கொள்கையாகக் கருதப்படுகின்றது. சோம்ஸ்கி (Noam A. Chomsky) என்னும் அறிஞர் இன்றைய மாற்றிலக்கணத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.

இவரது 'தொடரியல் அமைப்பு' (Syntactic Structure) என்ற நூல் மொழியியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்ளைக் கூட இவர் 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' (Aspects of the theory of Syntax) என்ற நூலில் சிறிது மாற்றியமைத்தார். மாற்றிலக்கணத்தின் இயல்புகளை,

(i) ஆய்வு நிலையில் வேறுபாடு.

(ii) வாக்கியங்களின் தொடர்பைக் குறிப்பிடுதல்.

(iii) அமைப்புப் பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்

(iv) சொற்பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்.

(v) பெயர்ப் பயனிலை அமைந்த வாக்கியங்களை உருவாக்கப் பயன்படல்.

(iv) திறன்நிலை.

(vii) அண்மைநிலை.

(viii) உணர்நிலை.

இலக்கணம் பின்வரும் மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்

i) குறிப்பிட்ட சில விதிகள்.

(ii) அளவற்ற வாக்கியங்கள்.

(iii) இலக்கணமற்ற வாக்கியங்கள்.

எதுவும் உருவாகாமலும் இருக்கவேண்டும். இந்நிலையில் தமிழ் மொழியின் இலக்கணம் தமிழ்மொழியில் இப்போது காணப்படுகின்ற வாக்கியங்களுக்கு மட்டுமின்றி உருவாகும் வாக்கியங்களுக்கும் இலக்கணம் கூறுவதாக அமையவேண்டும். தமிழகம் தந்த மொழியியல் பேரறிஞர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள்தாம் முதன்முதலில் தமிழ் மொழியின் தொடரியலை மாற்றிலக்கண முறையில் ஆராய்ந்தார். வாக்கியங்களுக்குப் புதையமைப்பு (Deep Structure), புற அமைப்பு (Surface Structure) என்ற இருவேறு அமைப்பு நிலைகள் உண்டெனக் கொள்ளுதல் வேண்டும். இவ்வமைப்பு நிலைகளில் வாக்கியம் கொடுக்கின்ற முழுப்பொருண்மையினையும் அவ்வாக்கியத்தின் புதையமைப்பு கொடுக்கின்றது.

இவ்வமைப்பு கொடுக்கும் பொருண்மையினை உணர்த்துவதற்குரிய சொல்லுறுப்புக்கள் முழுவதும் இல்லாத நிலையிலும் சிலவற்றின் மூலம் உரிய பொருண்மையினை வெளிப்படுத்தும் அமைப்பே புற அமைப்பாகும். புதைநிலையைப்

புறநிலையோடு தொடர்புபடுத்துவனவே மாற்றல் விதிகளாகும் (transformation rules). புணர்ச்சியில் விகாரமானது தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படுதல் போல மாற்று விதிகளும் அடிப்படையில் மூவகைப்படும். 'தோன்றல் மாற்று விதி' (Adjunct transformation), 'கெடுதல் மாற்று விதி' (Deletion transformation), 'திரிதல் மாற்று விதி' (Substitution transformation). இவை மூன்றும் அடிப்படை மாற்றுவிதிகளாகும். இடமாற்றம் (Permutation) என்பதைத் திரிதலின் ஒரு வகையாகக் கொள்ளலாம்.

கூட்டு வாக்கியங்களை விளக்குவதில் மாற்றிலக்கண முறை சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

1. அது பள்ளிக்கூடம் (அகப்படுத்தும் வாக்கியம்)
2. நான் பள்ளிக்கூடத்தில் படித்தேன் (அகப்படும் வாக்கியம் )

இவ்விரண்டு வாக்கியங்களிலிருந்து 'அது நான் படித்த பள்ளிக் கூடம்' என்ற கூட்டு வாக்கியம் கிடைக்கிறது.

அது நான் படித்த பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் என்ற பெயர் அகப்படும் வாக்கியத்திலும் அகப்படுத்தும் வாக்கியத்திலும் இருப்பதால், அகப்படும் வாக்கியத்தில் உள்ள பள்ளிக்கூடம் நீக்கப்படுகிறது. இது முதலாவது மாற்று விதியாகும். பின்னர் அகப்படுத்தும் வாக்கியத்திலுள்ள படித்தேன் என்ற முற்றுவினை படித்த என்ற பெயரெச்சமாக மாற்றப்படுகிறது. இறுதியில் நான் படித்தபள்ளிக்கூடம் என்ற வாக்கியம் கிடைக்கிறது. இது போன்ற எண்ணற்ற கூட்டு வாக்கியங்களை மாற்றிலக்கண முறையில் எளிதில் விளக்கி விடலாம். மாற்றிலக்கணம் மூன்று பகுதிகளை உடையது;

(i) தொடரமைப்புப் பகுதி (Phrase structure)
(ii) மாற்றுவிதிப் பகுதி (Transformation)
(iii) உருபொலியனியல் பகுதி (Morphonemics)

## தொடரமைப்புப் பகுதி:

மாற்றிலக்கணத்தில் இப்பகுதி வாக்கியங்களின் தோற்றத்திற்கு அடிப்படையானது. 'S' என்ற குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு மற்றைய பகுதிகளைத் தோற்றுவிக்கக் கூடியது.

→ S NP VP

NP என்பது பெயர்த் தொடரையும் (Noun Phrase) VP என்பது வினைத் தொடரையும் (Verb Phrase) குறிக்கும். ஒரு மொழியிலுள்ள வாக்கியம் பெயர்த் தொடராலும் வினைத் தொடராலும் ஆக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. VP என்பதை PP என்றும் Post Positional Phrase) என்றும் V என்றும் (Verb) விரிக்கலாம்.

VP ⟶ PP V

PP என்பது வேற்றுமைத் தொடரையும் V என்பது வினையையும் குறிக்கும். குறியீடுகளை நீக்கி அவ்விடத்தில் மொழியிலுள்ள வார்த்தைகளை நிரப்புவது இரண்டாவது நிலையாகும். ஒரு விதி ஒரு குறியீட்டை மட்டும்தான் ஒரு சமயத்தில் மாற்றும்.

'இராமன் கண்ணனை அடித்தான்.'

தொடரமைப்புத் தோற்றுவித்த வாக்கியங்களை மாற்று விதி மாற்றும். இந்த மாற்றுவிதிகள்தாம் வாக்கியங்களுக்கிடையே அமைந்து கிடக்கும் தொடர்பைக் காட்டுவன. மேலேயுள்ள வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு வினா வாக்கியத்தையும் எதிர் மறை வாக்கியத்தையும் மாற்றுவிதியின் மூலம் கொணரலாம்.

**இராமன் + கண்ணன் -ஐ + அடித்தான்**

**இராமன் - ஆ + கண்ணன் - ஐ + அடித்தான்**

**இராமன் + கண்ணன் -ஐ + அடித்தான்**

**இராமன் + கண்ணன் - ஐ - ஆ + அடித்தான்**

**இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான்**

**இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான் -ஆ**

இம்மூன்றில் ஆ-விகுதி பெயரோடும் வினையோடும் சேர்க்கலாம். 'எவன்' என்பதை எழுவாய் இடத்தில் சேர்த்தால், 'எவன் + கண்ணன் - ஐ + அடித்தான்' என வரும். ஒரு வாக்கியத்தில் செய்யப்படும் விதியைத் தனி மாற்று விதி (Singularly transformation) வாக்கியங்களில் செய்யப்படும் விதியைப் பொது மாற்று விதி (Generalised transformation rule) என்றும் வழங்குவர்.

செய்வினை வாக்கியங்களும் செயப்பாட்டு வினை வாக்கியங்களும் புறத்தோற்றத்தில் வேறுவேறாக இருந்தாலும் அடிநிலையில் அல்லது புதை நிலையில் அவை ஒன்றாக இருப்பதால்தான் அவை இரண்டும் ஒரே பொருளைத் தருகின்றன

எனக் கூறுகின்றனர். இந்நிலையில் புதை நிலையமைப்பு (Deep structure) என்ற கோட்பாடும், புறநிலையமைப்பு (Surface structure) என்ற கோட்பாடும் பிறந்தன. இரண்டு வாக்கியங்கள் வெவ்வேறு நிலையில் காணப்பட்டாலும் புதை நிலையில் அவை ஒரே பொருளைத் தருகின்றன என விளக்கம் தருகின்றனர். புதை நிலையை அடிப்படையாக வைத்து இரண்டு அல்லது மூன்று புற நிலைகள் உருவாக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். இவ்வாறு உருவாக்கும் போது மேற்கொள்ளும் விதிகளை மாற்று விதிகள் (Transformation rules) என்பர். புதை நிலையும் புறநிலையும் மாற்று விகுதிகளுமே மாற்று இலக்கணக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவங்கள் எனலாம். ஒரு வாக்கியத்திற்கும் மற்றொரு வாக்கியத்திற்கும் உள்ள தொடர்பினைச் செய்வினை வாக்கியங்களுக்கும் செயப்பாட்டு வினை வாக்கியங்களுக்குமுள்ள தொடர்பினையும் அமைப்பு மயக்கம் போன்றவற்றையும் விளக்கலாம்.

செய்வினை வாக்கியம் அடிப்படையானது என்றும், செயப்பாட்டு வினை வாக்கியம் அதிலிருந்து உருவானது என்றும், செய்வினை புதை நிலை என்றும், செயப்பாட்டு வினை புறநிலை என்றும் கூறலாம். சில விதிகளைக் கொண்டு மிகப்பல வாக்கியங்களைப் படைத்துக் கொள்வதுதான் மாற்றிலக்கணத்தின் சிறப்பாகும்.

எட்டு விதிகளைக் கொண்டு பதினெட்டு வாக்கியங்களைப் படைக்க முடியும்

1. அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
2. ஒரு அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
3. அந்த அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
4. அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
5. அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
6. ஒரு அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
7. ஒரு அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
8. அந்த அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
9. அந்த அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
10. அமராவதி அம்பிகாவதியைக் கண்டாள்
11. ஒரு அமராவதி அம்பிகாவதியைக் கண்டாள்
12. அந்த அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்

13. அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
14. அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்
15. ஒரு அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
16. ஒரு அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்
17. அந்த அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
18. அந்த அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்

## உருபொலியனில் பகுதி:

மொழியியலார் கூறும் புணர்ச்சி விதிதான் உருபொலியனியலாகும். தொடரமைப்பும் மாற்று விதிப் பகுதியும் செயல்பட்ட பின்பு இது செயல்படும். ஒலி வடிவையும் வரிவடிவையும் கொடுப்பது இதன் செயலாகும்.

சோம்ஸ்கியின் கோட்பாடுகளைக் கொண்ட மாற்றிலக்கணமும் காலப் போக்கில் சில மாற்றங்களைக் கண்டது. சோம்ஸ்கி அவர்கள் தொடரியலே முக்கியமானது என்றும் அதுவே பொருளுக்கு அடிப்படை என்றும் கருதினார். மக்காலே (McCauley), லேக்காப் (Lakkoaff) போஸ்டல் (Postal) போன்றவர்கள் பொருளே முக்கியமானது என்றும் அதுவே புதைநிலை அமைப்புக்குக் காரணம் என்றும் கூறி, அக்கருத்துக்கு அரணாகப் பல ஆய்வுக் சுட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது கோட்பாடுகளை 'உருவாக்குப் பொருண்மைக் கோட்பாடுகள்' (Generative Semantic Theories) என வழங்குவர்.

இக்கோட்பாடு உருவாகக் காரணமாக இருந்தவர் ஜார்ஜ் லேக்காஃப். இக்கோட்பாடு வளர உதவியவர் ஜான் ராபர்ட் ராஸ். இக்கோட்பாட்டிற்குச் சிறந்தவடிவம் கொடுத்தவர் ஜேம்ஸ் மக்காலே. ஆக்கமுறைப் பொருளியலர் பேரகராதி தேவையற்றது என எண்ணகின்றனர். முற்கருத்து, பொருட்பேறு மட்டுமின்றி சூழ்நிலை முழுதும் பொருளனியல் வடிவத்தில் இடம் பெறவேண்டும் என ஜார்ஜ் லேக்காஃப் எண்ணுகின்றார். ஆக்கமுறைப் பொருளனியல் தர்க்கவியலைப் பெரிதும் சார்ந்தது என்பதும் ஒரு வாக்கியத்தின் முழுப்பொருளையும் முழுதும் தெளிவாக அறிந்து கொள்ளப் பயன்படுகின்றறது என்றும் கூறலாம்.

காலப்போக்கில் தமிழ்மொழியில் ஏற்பட்ட மாற்றங்களயும், வளர்ச்சியையும் வளர்ந்து வரும் புதிய ஆய்வுக் கோட்பாடுகளின்படி ஆராய்வது நமது கடனாகும்.

## 5.2 தமிழ் வரிவடிவ வரலாறு

மனித சமுதாயம் மொழியால் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கின்றது. மனித சமுதாயத்தில் பேச்சு மொழி, எழுத்து மொழி என இரு வகையுண்டு. பேச்சு மொழினின்று வளர்ந்ததே எழுத்து மொழி. பேச்சு மொழி ஆறு போன்றது எனின் எழுத்து மொழி அவ்வாற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என மொழி இயலார் குறிப்பிடுகின்றனர். இருபத்து இரண்டு திராவிட மொழிகளிலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளுக்குத்தான் எழுத்து வடிவம் உண்டு. இலக்கிய வளமில்லாத துளு மொழி முதலில் மலையாள எழுத்திலும் பின்பு கன்னட எழுத்திலும் எழுதப்பட்டது. பழங்குடி மொழியான கூயி மொழியை ஒரியா எழுத்தில் எழுதுகின்றனர். மற்ற பழங்குடி மொழிகளுக்கும் வரி வடிவம் காண முயற்சிகள் நடைபெறுகின்றன. பேச்சு மொழியினை வரிவடிவில் காட்டுவது தான் எழுத்து மொழி. ஆனால், பேச்சு மொழிக்கு இல்லாத சில பண்புகள் எழுத்து மொழிக்கு உண்டு.

எழுத்துருவம் பெற்ற மொழிகளையே நாகரிக மொழிகள் என்றும் சிறந்த மொழிகள் என்றும் கருதுகின்றோம். அதிலும் மிகப் பழங்காலத்தில் எழுத்து உருவத்தினைப் பெற்ற மொழிகளைப் பழமையான மொழிகள் என்றும் நாகரிகத்தைத் தோற்றுவித்த மொழிகள் என்றும் கூறுவதைக் காணலாம். திராவிட மொழிகளிலே தமிழ் மொழியிலேயே மிகப் பழமையான எழுத்துருவத்தைக் காண்கிறோம். இது மற்ற திராவிட மொழிகளின் எழுத் துருவத்திற்கும் மிக முந்தியது எனக் கூறலாம். தெலுங்கு மொழியின் எழுத்துருவம் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. கன்னட மொழியின் எழுத்துருவம் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது. மலையாள மொழியின் உருவம் இன்னும் பிந்தியது. இந்நிலையில்தான் இந்திய மொழிகளில் தமிழ் மொழிக்குத் தனி இடம் இருப்பதும் சமஸ்கிருதத்திற்கொப்ப இதற்குப் பெருமையும் சிறப்பும் உள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

ஆங்கில மொழி அனைத்துலக மொழியாகயிருப்பினும் கிரேக்கமும் இலத்தீனும் இன்றும் பழைய மொழிகளாக நாகரிக மொழிகளாகக் கருதப்படுகின்றன. கிரேக்கம் மிகப் பழமையான எழுத்துருவத்தைக் கொண்டு உலக நாகரிகத்திற்கு அடிகோலியாக

விளங்கியது. எழுத்து உருவத்திற்கும் நாகரிகத்திற்கும் தொடர்பு இருப்பது போன்று, எழுத்து உருவத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்பு இருப்பதைக் காணலாம். நாகரிக மக்களின் மொழிகள் அனைத்தும் எழுத்துருவத்தைப் பெற்ற மொழிகளாக மிகப் பழங்காலத்திலேயே இருந்துள்ளன. எகிப்து நாகரிகம், சீனா நாகரிகம், இந்திய நாகரிகம் அனைத்தும் பழமையான நாகரிகங்களாகும்.

இன்றைய உலகில் எத்தனையோ எழுத்து முறைகள் உள்ளன. கிரேக்க எழுத்து முறை, ரோமன் எழுத்துமுறை, அரேபிய எழுத்து முறை, சீனா எழுத்து முறை, எகிப்து நாட்டு ஹீரோகிளிபிக் எழுத்து முறை, எத்தியோப்பிய எழுத்து முறை, பீனிசிய எழுத்து முறை, ஆரமய்க் எழுத்து முறை, இந்திய எழுத்து முறை எனப் பல்வேறு எழுத்து முறைகள் உள்ளன. இவ்வெழுத்து முறைகள் இன்று நேற்று தோன்றியவை அல்ல. பல நூற்றாண்டுக் காலமாக வளர்ந்து வந்த முறையாகும். உலக எழுத்து முறைகளில் கிரேக்க எழுத்து முறைக்குத் தனிச் சிறப்பு உண்டு. கிரேக்க நாகரிகம் மேற்கு நாகரிகத்திற்கு அடிகோலியது போல, மேற்கத்திய எழுத்துமுறைக்குக் கிரேக்க எழுத்து முறை அடிகோலியது. இம்முறை பீனிசிய முறையிலிருந்து உருவானது. உலகில் இன்று அதிகமான மொழிகள் இவ்வெழுத்து முறையில்தான் எழுதப்படுகின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானி, போர்த்துகீஸ், சிலாவனிக் போன்ற மொழிகளும் பின்னி, ஹங்கேரியன் போன்ற ஐரோப்பிய மொழிகளும் மலாய் போன்ற கீழை நாட்டு மொழிகளும் இவ்வெழுத்து முறையைப் பின்பற்றுகின்றன. எத்தியோப்பிய முறை கிரேக்க எழுத்திலிருந்து உருவானது எனச் சிலரும் இந்திய எழுத்திலிருந்து உருவானது எனச் சிலரும் சிரியாக், காப்டிக்ரூன் போன்றவற்றிலிருந்து உருவானது எனச் சிலரும் கருதுகின்றனர்.

பீனிசிய எழுத்து முறை உலகில் குறிப்பிடத்தக்க தொன்றாகும். ஆரமய்க் எழுத்து முறையும் தொல்லெழுத்து இயல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க தொன்றாகும். சிரியாவுக்கு மேற்கே உள்ள எழுத்து முறைகளுக்குக் கிரேக்கம் தாயகமாக இருப்பது போல, கிழக்கே உள்ளவற்றிற்கு ஆரமய்க் தாயகமாக உள்ளது. பிராமி, பெர்சியன், துருக்கி, மங்கோல் போன்றவை இதனின்றும் பிறந்தவை என்கின்றனர். உலக எழுத்து முறைகளில் எகிப்து நாட்டு ஹீரோகிளிபிக் மிகப்பழமையான ஒன்றாகும். இவ்வெழுத்தே எகிப்து நாகரிகத்தை வெளிக் கொணர்ந்தது எனலாம். சீன எழுத்து

முறை உலக எழுத்து முறை களில் மிக முக்கியமான ஒன்றாகும். இம்முறைதான் அன்று முதல் இன்று வரை அதிக மாற்றமின்றியே உள்ளது. கி.மு. இரண்டா யிரத்துக்கு முன்பே இவ்வெழுத்து முறை வழக்கில் இருந்ததுள்ளது. ஷான் வம்சாவளி முதலே இருந்துவரும் இஃது ஓர் உச்சரிப்பு எழுத்து முறையாகும்.

**எழுத்து முறையினை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:**

1. பட எழுத்து முறை (Pictography)
2. எண்ண எழுத்து முறை (Ideographic writing)
3. ஒலி எழுத்து முறை (Phonetic writing)
   (i) அசையெழுத்து முறை (Syllabic writing)
   (ii) அகர எழுத்து முறை (Alphabetic writing)

எழுத்து முறையில் முதன்முதல் தோன்றிய முறை 'பட எழுத்து முறையே' எனக் கருதுவர் சூரியனைக் காட்ட ஒரு வட்டத்தை வரைந்து காட்டினர். படங்களை வரைந்து செய்தியைக் காட்டுதல் 'பட எழுத்து முறை'யாகும். இம்முறையினை எம்மொழியினரும் உணரலாம். குறிப்பிட்ட ஒருபொருளையோ கருத்தையோ உணர்த்தப் பயன்படுமே தவிர, பொருளின் பலவகை வேறுபாடுகளையோ நுட்பங்களையோ உணர்த்தப் பயன்படாது.

எண்ண எழுத்து முறையை 'Ideography' என்று கூறுவர் சிலர் (Gelb, A study of writing. P. 14). வட்ட வடிவம் சூரியனைக் குறிக்கும். ஆனால், இதனைச் சூரியன் என்றே வாசிப்போம். ஆனால், பட எழுத்து முறையில் இவ்வாறு வடிவத்தோடு உச்சரிப்பைப் பொருத்திக் காண்பது இல்லை. பட எழுத்து முறையை அனைவரும் புரிந்து கொள்வர். வட்ட வடிவமான உருவத்தை நாம் "சூரியன்' என்போம். ஆங்கிலேயர் 'Sun' என்பர். பின்னர் ஒலி எழுத்து முறை வளர்வதற்கு இஃது காரணமாயிற்று என்பர்.

ஒலி எழுத்து முறையால்தான் பேச்சு மொழியில் காணப்படும் ஒலிகளுக்கும் எழுத்து முறையில் உள்ள வரிவடிவத்திற்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்பட்டது. ஒலி வடிவத்தை வரி வடிவில் காணத் தொடங்கிய நிலையில்தான் குறிப்பிட்டத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. அசைகளை வரிவடிவத்தில் எழுதிய நிலையில்தான் அசை எழுத்துமுறை உண்டானது. அசையெழுத்து முறையில் பல வடிவங்களின் நிலையை

உணரலாம். சுமேரியன் ஆப்பு வடிவ (cuniform) எழுத்துக்கள்தான் அசையெழுத்து வடிவங்களுள் மிகவும் பழமையானதாகும். சுமேரியன், ஏலமைட், எகிப்திய மொழி, ஹிட்டைட், சீன, கிரேக்க மொழிகள் இவ்வெழுத்து முறையைக் கொண்டிருக்கின்றன.

பெரும்பாலான உலக மொழிகள் அகர எழுத்து முறையையே பின்பற்றுகின்றன. 'எத்தனையோ நூற்றாண்டு வளர்ச்சியில் தான் இன்றைய மொழிகள் அகர எழுத்து மொழியைக் கொண்டுள்ளன. அசையெழுத்து முறையில் ஏராளமான எழுத்து உருவங்களை நினைவில் கொள்ளவேண்டும். அகரவகை எழுத்துக்களில் ஓர் உரு ஓர் ஒலியையே குறிக்கும். இவ்வெழுத்து முறைகளின் மூலம் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைக் காணலாம்.

பட எழுத்து முறையே எழுத்துக்களின் தோற்றத்திற்குக் காரணம் என்றும் பட எழுத்தே எண்ண எழுத்தாகிப் பின் ஒலி எழுத்தாகியது என்றும் கருதப்படுகிறது. ஒலியெழுத்திலே அசை யெழுத்து, அகரவரிசை முறை என இருவகை முறைமையையும் கண்டோம். எழுத்து வளர்ச்சி பற்றித் தமிழர்களுக்கும் ஒரு கோட்பாடு இருந்தமை பற்றி அறிகிறோம்.

## உருவெழுத்து (Phonography)

காணப் பட்ட வுருவ மெல்லா
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
வெழுதப் படுவ துருவெழுத் தாகும்.

## உணர்வெழுத்து (Ideography):

கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்.

## ஒலியெழுத்து (Phonograyhy):

இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்.

கல்வெட்டு எழுத்துக்களைப் பற்றி ஆராயத் தொல்லெழுத்தியல் துறை தோன்றியது. கி.பி. ஐந்தாம். நூற்றாண்டைச் சார்ந்த திருநாதர் குன்று கல்வெட்டில் பண்டைத் தமிழ் எழுத்துக்களைப்பற்றி அறிகிறோம். தமிழ் நூல்கள் அச்சிடத்

தொடங்கப் பெற்ற காலத்தேதான் தமிழ் எழுத்துக்கள் இப்போது காணப்படும் வரிவடிங்களைப் பெற்றன எனக் கூறலாம். இதற்கு முன் தமிழ் வரிவடிவங்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல மாறுதல்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளதை நாம் காணலாம். தமிழ்நாட்டில் காணப்பெறும் மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எனும் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. எழுத்து பிராமி எனினும் மொழி தமிழேயாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே தமிழகத்தில் தொடர்ச்சியாகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் நான்கு வகை எழுத்து முறைகள் காணப்படுகின்றன. மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் காணப்படுகின்றன. வட மொழியை எழுதக் கிரந்த எழுத்துப் பயன்படுத்தப் பட்டது. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் பண்டைத் தமிழ் எழுத்துக்களும் பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் வட்ட எழுத்துக்களும் காணப்படுகின்றன. கி.பி. ஏழாம் நூற்றண்டிலிருந்த தமிழ் வரிவடிவத்திலும் கிரந்த வரிவடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்த தமிழ் வரி வடிவத்திலும் கிரந்த வரிவடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுக் களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன. பல்லவ காலத்தில் பல்லவ கிரந்தம், தமிழ், நாகரி, வட மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. சோழர் காலத்தில் நாணயங்களில் 'நாகரி' எழுத்து காணப்படுகின்றது. வட்டெழுத்து பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் வழக்கிலிருந்தன. கி.பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டில்தான் தற்போது வழக்கத்திலிருக்கும் தமிழ் எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றன.

## பிராமி எழுத்து:

மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்களும் தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் ஏறத்தாழ ஒத்துள்ளன. இரண்டு நாட்டிலும் காணப்பட்ட கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. குகைக் கல்வெட்டுக்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்பர். வெங்கோபராவ் அவர்கள் கீழவளைவிலுள்ள கல்வெட்டையும் கெமைட்டு என்னும் ஆங்கிலேயர் மருகால்தலையிலுள்ள கல்வெட்டையும் கே.வி. சுப்பிரமணிய அய்யர் பன்னிரண்டு

இடங்களில் முப்பது கல்வெட்டுக்களையும் கண்டு பிடித்தனர். இராசு அவர்கள் அரிச்சலூரிலுள்ள கல்வெட்டையும் ஐராவதம் மகாதேவன் அவர்கள் திருவாதவூரிலுள்ள கல்வெட்டையும் சென்னைப் ல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினர் அழகரை, உறையூர், காஞ்சியிலுள்ள கல்வெட்டுக்களையும் தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறையினர் கொற்கையிலுள்ள கல்வெட்டுக்களையும் கண்டுபிடித்தனர்.

இக்கல்வெட்டுக்களில் ஒலிப்புடை ஒலிகளும் மூச்சுடை ஒலிகளும் காணப்படாமையை நோக்கி இக்கல்வெட்டுக்களின் மொழி தமிழ் என்றும் சில பிராகிருதச் சொற்கள் கலந்திருக்கலாம் என்றும் கருதினர். பிராகிருதச் சொற்களைக் கொண்டு பிராகிருத மொழிக் கல்வெட்டு என நாராயணராவ் கூறினார். தமிழும் பிராமியும் கலந்த விளங்காத மொழியில் உள்ளன என்றார். டாக்டர் கே.கே. பிள்ளை அவர்கள் எழுத்து பிராமி எனினும் மொழி தமிழே எனக் கூறினார். பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டு மொழி தமிழே என்கிறார். கே.வி.சுப்பிரமணிய அய்யர் போன்றோர் இவ்வெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களே என்கின்றனர். டாக்டர் நாகசாமி அவர்கள் இதனைத் 'தமிழி' என வழங்குகின்றார்.

அரிச்சலூர்க் கல்வெட்டு ஒன்றில் 'ழ' கரம் இருப்பதைச் சுட்டிக் காட்டி, மற்ற மொழிக் கல்வெட்டுக்களில் அஃது இல்லாமையையும் காட்டி அக்காலத்திய தமிழ் எழுத்துக்களினின்றும் பிராமி இதைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் கூறுகின்றனர். பல்லவர் காலக் கிரந்தத்திற்கு முன் தமிழ் மொழிக்கெனத் தனி எழுத்துக்கள் கிடையா என்றும் பிராமி எழுத்தைத்தான் நம்பியிருந்தது என்றும் கூறுகின்றனர். மெகஸ்தனீஸ் அவர்கள் தனது பிராயாண நூலில் இந்தியர்கட்கு எழுத்து வடிவம் கிடையாது எனக் குறிப்பிட்டிருப்பதைச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றனர். பிராமி எழுத்துக்களின்றும் தமிழ் எழுத்துக்கள் வளர்ந்தனவா? அல்லது தென்னாட்டிலிருந்து வடக்கே எழுத்துக்கள் சென்றனவா? அல்லது சிந்து நதிக்கரை எழுத்தினின்றும் பெறப்பட்டதா? என்ற கேள்விகளுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. டாக்டர் சுநீத்குமார் சட்டர்ஜி அவர்களும் பண்டைத் தமிழ் பிராமி எழுத்துக்களைத் தான் பெற்றிருந்தது என்கிறார். ஆனால், டாக்டர் கே.கே.பிள்ளை அவர்கள் இதனை மறுக்கின்றார். சிந்து வெளியின்

சித்திர எழுத்துக்களே திராவிடப் பெருங் குடிமக்களது எழுத்துக்களின் மூல வடிவமாக இருக்கலாமென ஹீராஸ் (Heras) அடிகள் குறிப்பிடுகின்றார்.

அசோகர் கண்ட பிராமி எழுத்துக்கள் கி.மு.1ஆம் நூற்றாண்டில் குசான் பிராமியாகவும் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் குப்த பிராமியாகவும், கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் சித்தமாத்ரிகா பிராமி யாகவும், கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் நாகரிக வடிவமாகவும் குடில வடிவமாகவும் மலர்ந்தது. இதுவே வங்காளி, அசாமி, மைதிலி, ஒரியா, காஷ்மீரி போன்ற மொழிகளுக்கு வரிவடிவமாத் திகழ்ந்தது. பிராமி இந்தியாவிலேயே தோன்றியிருக்க வேண்டுமென மேலை நாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர். பிராமி மேற்காசியாவிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டுமென மேலைநாட்டு அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். பிராமி எழுத்துக்கள் வடசெமிடிக் எழுத்துக்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டன என்றும் கி.மு. 700-ல் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சிலர் கருதுகின்றனர். பிராமி எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன.

சில இடங்களில் இடமிருந்து வலமாக எழுதப்பட்டன. வடசெடிமிக் வரிவடிவத்திலிருந்து குறிப்பாக ஆரமய்க் வரிவடிவத்திலிருந்து பிராமி பெறப்பட்டதாக டேவிட் டிரின்ஜர் (David Diringer) கருதுகிறார். தானி (Dani) யும் பிராமியின் தோற்றம் பற்றி இதே கருத்துக் கொண்டுள்ளார். சிந்து வெளி எழுத்துக்களிலிருந்து பிராமி தோன்றியிருக்க வேண்டுமெனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். பிராமி திராவிட மொழிக்குரிய வடிவமாயிருந்து பிராகிருதம் அகில இந்திய மொழியான போது அம்மொழி ஏற்றிருக்க வேண்டுமெனச் சுப்பிரமணியம் கருதுகிறார். இந்தியத் தொல் வரிவடிவ இயலில் பட்டப்படிப்பு படிப்போருக்குக் கல்வெட்டும் தமிழ் நாட்டுக் குகைக் கல்வெட்டும் பெறும் இடம் பிரச்சினைக் குரியதாக உள்ளது.

பிராமி எழுத்து வடிவம் இந்திய மொழி வடிவங்களின் தாயாகக் கருதப்படுகின்றது. இந்த வரிவடிவம் பல்வேறு நிலைகளில் வளர்ந்தும் திரிபுற்றும் திகழ்கின்றன. பிராமி எழுத்து முறையில் வடபிராமி, தென்பிராமி என இருவகையுண்டு. தென் பிராமியைத் 'திராவிடி' என்றும் வழங்குவர். வடபிராமி வட இந்திய மொழிகளுக்கேற்றாற்போல அமைந்திருக்கின்றது. தென் பிராமியில் வடமொழிக்கு இன்றியமையாத பல ஒலிகள் இல்லை. அனுஸ்வாரம், விஸர்க்கம்

என்பவை இல்லை; மூச்சுடை ஒலிகள் இல்லை. வடமொழிக்கு வேண்டாத எகரக் குறிலும் ஒகரக் குறிலும் உள்ளன. ஆகையால் அவை தொல்காப்பியர் காலத்துப் பழந் தமிழுக்குரிய ஒலிகளை மட்டும் உணர்த்தி வந்தன என்றும் பழந்தமிழ் எழுத்தையொட்டி அமைக்கப்பட்டவை என்றும் சிலர் கருதுகின்றனர். 'பிராமி லிபி முதலில் வடமொழிக்காக ஏற்பட வில்லை என்றும் உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் அதிக சிறப்பை அளிப்பதும் மெய் எழுத்துக்களில் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறியீடுகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ண வேண்டி உள்ளது. இந்தியாவிலுள்ள மொழிகளில் தமிழ் ஒன்றுதான் இவ்விதம் உள்ளது. அங்ஙனமாயின் பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமோ? இஃது ஆராய்தற்குரியது' என்பர் தி.நா. சுப்பிரமணியம் அவர்கள்.

நீண்ட கோடு நெட்டுயிரையும் குறுகிய கோடு குற்றுயிரையும் குகைக் கல்வெட்டில் குறிக்கின்றன. கோட்டின் வேறுபாட்டால் எகர ஏகாரமும் ஒகர ஓகாரமும் வேறுபடுத்தப்படுகின்றன. 'G' என்ற வடிவம் தென்னகப் பிராமியில் 'ழ' கரம் என இனங்காணப் பட்டது. பிராமியில் % வடிவம் இகரத்தைக் குறிக்கின்றது. 'n' வடிவம் தகரத்தைக் குறிக்கின்றது ற,ன,ஏ போன்ற மெய்களும் எ,ஒ போன்ற உயிர்களும் இக்கல்வெட்டுக்களில் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் சொற்றொடரமைப்பு தமிழ் முறைப்படி அமைந்துள்ளது. பிராமி எழுத்தைத் 'தமிழ்' என்றும் இந்த எழுத்தில்தான் சங்க இலக்கியங்கள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும்' என நடன காசிநாதன் கூறுகிறார். தமிழ் மொழிக்குரிய ழ, ள, ற, ன உள்ளன. என்றும் அசோகன் காலப் பிராமி எழுத்துக்களான மூச்சுடை ஒலி (aspirated stop) இவற்றில் இல்லை என்றும் இவ்வெழுத்துக்களைத் 'தமிழ்' எனக் கூறுவது பொருத்தமென்றும் கூறுகிறார்.

குகைக் கல்வெட்டு எழுத்துக்கள் பற்றி ஐ. மகாதேவன் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

1. தமிழ் மொழிக்கு உள்ள ஒலிகளே குறிக்கப்பட்டுள்ளன. 'ஸ' எனும் வடவெழுத்தும் 'த' எனும் வர்க்கவெழுத்தும் காணப் படுகின்றன.

2. ழ,ற,ள,ன என்ற எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

3, ஆரம்ப காலக் குகைக் கல்வெட்டுக்களில் உள்ள புள்ளியில்லா மெய் வடிவு மெய்யை மட்டுமே குறிக்கும்.

4. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புள்ளியில்லா மெய்யுருவம் அகரமேறிய மெய்யாகவே வழங்கப்பட்டது.

5. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.

6. எகர ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

7. உயிர் மயக்கங்கள் (Vowel clusters) மிகுதி.

இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள காலத்தால் மிகப் பழைய கல்வெட்டுக்கள் யாவும் பிராமி வரி வடிவத்திலேயே உள்ளன. குகைக் கல்வெட்டுக்களுக்கும் பாண்டிச்சேரிக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட அரிக்கமேடு பானைமீது எழுதப்பட்ட எழுத்துக்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டிய தானி, அவை இரண்டையும் சமகாலத்தனவாகக் கருதுகின்றார்.

## கிரந்த எழுத்து

தமிழகத்தில் வட மொழியை எழுதத் தொன்று தொட்டு வழங்கிய எழுத்தைக் கிரந்தம் என்பர். வட மொழியில் கிரந்தம் எனின் நூல் என்று பொருளாகும். வடமொழியை எழுத வழங்கிய எழுத்தையும் கிரந்தம் என்றனர். தமிழகத்தில் வட மொழியை எழுத வழங்கிய எழுத்தும் தெலுங்கு, கன்னடப் பகுதியில் வழங்கிய எழுத்தும் ஒன்றுபோல் இருந்தன. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கிரந்த எழுத்துக்களும் கன்னட தெலுங்கு எழுத்துக்களும் தனித் தனியே பிரிந்து வளரலாயின. குகைக் கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்களை எழுதப் பயன்படுத்திய வடமொழி எழுத்துக்களே கிரந்த எழுத்துக்களின் முன்னோடி ஆகும். குகைக் கல்வெட்டுக்களில் காணப்பட்ட 'ஸ' எனும் வட எழுத்துப்பற்றியும் 'த' எனும் வர்க்க எழுத்துப்பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். பல்லவர் காலத்தில் கிரந்த எழுத்துக்களின் வளர்ச்சியைக் காணலாம். பல்லவர் காலத்தில் வழங்கிய கிரந்த எழுத்தைப் பல்லவ கிரந்தம்' என்றே வழங்குவர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் கிரந்த எழுத்துக்கள் மிக அழகாகப் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனைமலை, ஆழகர்மலை, திருமயம், குடுமியாமலை முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களும் வேள்விக்குடி, சின்னமனூர், ஸ்ரீவரமங்கலம், தளவாய்புரம்

செப்பேடுகளிலும் கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தகடூரை ஆண்ட சோழன் ஆட்சிக் காலக் கல்வெட்டுக்களும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சோழப் பேரரசர்களும் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர். விசயநகரப் பேரரசர்களும் அவர்களுக்குப் பின்வந்த நாயக்க மன்னர்களும் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டில் மட்டும் கிரந்த எழுத்துக்கள் பலவும் தமிழ் எழுத்துக்கள் பலவும் ஒரே வடிவமுடையனவாதலாலும் ஆரியர், தமிழ் எழுத்துக்களோடு வடமொழிக்குத் தேவையான சிறப்பு எழுத்துக்ககளையும் இணைத்துக் கிரந்த லிபியைத் தோற்று வித்தனர் என்பர் சிலர். கிரந்த எழுத்தும் தமிழ் எழுத்தும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை பெற்ற மாற்றங்களைச் சிவராமமூர்த்தி அவர்கள் தமது நூலில் எடுத்துக்காட்டுகின்றார். கோபிநாதராவ் அவர்கள் தமிழ் எழுத்து, கிரந்த எழுத்து, வட்டெழுத்து என்பவற்றின் வளர்ச்சிப் படிகளைக் காட்டுகின்றார்.

## தமிழ் எழுத்து:

ஒவ்வொரு நூற்றாண்டிலும் வரிவடிவங்கள் சில மாறுதல்களுக்கு உள்ளாகி வளர்ச்சியடைந்திருக்கின்றன. தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரிச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப் பட்டுள்ளன. தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் தொண்டை மண்டலம், சோழ மண்டலம் ஆகிய நாடுகளில் பல்லவர்களின் ஆட்சிக் கால முதல் காணப்படுகின்றன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஆண்ட மகேந்திரனின் கல்வெட்டு முழுதும் தமிழில் உள்ளது. பல்லவர் காலத்திலும் நிறையக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

டாக்டர் நாகசாமி அவர்கள் சோழர் காலத்திய எழுத்துக்களை முற்காலச் சோழர் எழுத்து என்றும் பிற்காலச் சோழர் எழுத்து என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார். முற்காலச் சோழர் எழுத் துக்கள் பெரிய எழுத்துக்களாக இருந்தன. ராஜராஜன் காலம்வரை முற்காலச் சோழர் காலம் எனலாம். பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் அழகின்றிப் பிழை மலிந்து காணப்படுகின்றன. பல்லவர் ஆட்சியில் தமிழில் எழுதப்பட்டது போல வட்டெழுத்திலும் எழுதப்பட்டது. பாண்டியர் கல்வெட்டுக்கள் சில தமிழிலும் பல கிரந்தத்திலும் உள்ளன அவர்களது செப்பேடுகள்

அனைத்தும் வட்டெழுத்திலேயே உள்ளன. சோழரது கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தமிழிலும் கிரந்தத்திலும் உள்ளன. பாண்டி நாட்டைக் கைப்பற்றியபொழுது வட்டெழுத்திலேயே எழுதினர். பின்னர் பாண்டி மண்டலத்திலும் தமிழிலேயே எழுதத்தொடங் கினர். விசய நகரப் பேரரசர்களது காலத்தில் வட்டெழுத்து மறைந்து தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னட எழுத்துக்கள் வழங்கலாயின.

கிரந்த வரிவடிவத்திற்கும் தமிழ் வரிவடிவத்திற்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது என்பர். உ,ஊ,க,ங,த,ந,ய,வ என்பவை இருவடிவங்களிலும் ஒரே விதமாக எழுதப்படுகின்றன. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ற, ர, ல, ள என்னும் எழுத்துக்கள் இரண்டு வரிவடிவங்களிலும் சிறிதளவே மாறுபடுகின்றன. எனவேதான் இதனைக் 'கிரந்தத் தமிழ் வடிவம்' என்பாருமுளர். பல்லவ மன்னன் பரமேஸ்வர வர்மனுடைய கூரம் சாசனத்திலுள்ள கிரந்த வடிவத்தையும் தமிழ் வரி வடிவத்தையும் ஒப்பிட்டால், உ,ட,ண,த,ந,ய,வ என்பனவும் உயிர் மெய் வடிவங்களில் வரும் ஆ, இ,ஈ, எ, ஒ எனும் எழுத்துக்களின் குறிகளும் வரிவடிங்களும் ஒன்றாக இருப்பதைக் காணலாம். க, ர என்ற எழுத்துக்களே சிறிது வேறுபடுகின்றன. கிரந்த வடிவம் வடமொழியை எழுதப் பயன்படுத்தப்பட்டது. ஆரியர் தமிழ் வரிவடிவத்தை ஏற்று வடமொழிக்குரிய எழுத்துக்களை இணைத்துக் 'கிரந்தம்' எனப்பெயரிட்டனர் எனக் கூறுகின்றார் எல்லீஸ். பல்லவர் கிரந்த வடிவத்தையும் தமிழ் வரிவடிவத்தையும் தென்னிந்தியாவில் புகுத்தினர் எனக் கூறுகின்றார் தி.நா. சுப்பிரமணியம் அவர்கள்.

தமிழ் எழுத்துக்கள் காலப்போக்கில் அடைந்த மாற்றங்களைக் காண்போம். முதலில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும கி.பி. பதினோராம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் ஒப்பிட்டு நோக்குவோம். மெய்யெழுத்துகளில் சில மேலே கிடைக்கோடும் இடது பக்கம் குத்துக்கோடும் பெற்றமையைக் காணலாம். இத்தகைய மாற்றம் ஏழாம் நூற்றாண்டு வரிவடிவத்திலிருந்து பதினோராம் நூற்றாண்டு வரிவடிவம் பெற்ற எழுத்துக்களாக க, ங, ச, த, ந, ர போன்ற எழுத்துக்களைக் கூறலாம். பதினோராம் நூற்றாண்டுக் கல்வெட்டு எழுத்துக்களில் சில, கால் அல்லது கீழ்ப்பகுதி நீண்டமைந்துள்ளன. பதினோராம் நூற்றாண் டிலே ஞ, ண, ல, ள போன்ற எழுத்துக்கள் சுழிகளோடு காணப்படுகின்றன தமிழ் வரிவடிவ மாற்றங்களுக்கு அலங்கார விருப்பமும் எளிமையான போக்கும் ஒரு காரணமாகும்.

அ.ஆ. இ. என்ற உயிர் எழுத்துக்களிலும் ட, ப, ம என்ற மெய் எழுத்துக்களிலும் வளைவு தீக்கி எழுதப்பட்டது எளிமையான போக்கின் விளைவாகும், ஏழாம் நூற்றாண்டில் புள்ளியோடு எழுதப்பட்ட மெய்யெழுத்துக்கள் பதினோராம் நூற்றாண்டிலே புள்ளியின்றி எழுதப்பட்டதற்கும் எளிமையான போக்கே காரணமாகும்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால், இடப்பக்கத்தில் ஒரு குத்துக் கோட்டுடன் தொடங்கும் க, ங, ச, த, ந, ர என்பன பதினோராம் நூற்றாண்டில் குத்துக் கோட்டைச் சிறிது வளைவாகப் பெற்றிருந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் நேர்த்தன்மையுள்ள நீளமான குத்துக் கோட்டைப் பெற்றன. இந்த மாற்றத்திற்கும் அலங்கார விருப்பமே காரணமென்கின்றனர். க, ச, த ஆகிய எழுத்துக்களின் வளைவு களும் ங, ந, ம, ழ ஆகிய எழுத்துக்களின் வலப்பக்க வளைவுகளும் பதினோராம் நூற்றாண்டைக் காட்டிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் செம்மையாக அமைந்துள்ளன. பதினோராம் நூற்றாண்டில் சிறிதளவு சுழியைப் பெற்ற அ, ஆ, எ, ஞ, னா, ல, ள, ண என்ற எழுத்துக்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் தெளிவாக உள்ளன. இவ்வாறு காலப்போக்கில் தமிழ் எழுத்துக்களில் நிகழ்ந்த மாற்றங்களைக் கல்வெட்டுத் துணை கொண்டு டாக்டர் ஆ. வேலுப் பிள்ளை அவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்கள்.

## வட்டெழுத்து:

தமிழ் நாட்டில் தமிழ் மொழியை எழுதுவதற்கு வழங்கிய வட்ட வடிவமான தமிழ் எழுத்துக்களை வட்டெழுத்து என்பர். 'கல்லில் வெட்டும் எழுத்தாகலின் வெட்டெழுத்து என்பதே திரிந்த வட்ட எழுத்து ஆயிற்று என்பாருமுளர் வட்டெழுத்தை அக்காலத்தில் 'வட்டம்' என வழங்கியதாகக் குற்றாலக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். வட்டெழுத்தும் பிராமியிலிருந்து தோன்றியதாக டி.ஏ. கோபிநாதராவ் கூறுகின்றார். ஹரிபிரசாத் சாஸ்திரியாரும் கரோஷ்டி எழுத்திலிருந்து வட்டெழுத்து உருவாகியிருக்க வேண்டும் என்கிறார். இவ்வட்ட எழுத்துக்கள் பிராமி எழுத்தி லிருந்து தோன்றி வளர்ந்தவை என்கிறார் டாக்டர் பூலர் (Buhler) அவர்கள். ஆரியர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழர்கள் நாகரிக நிலையில் இருந்தனர். பிராமி எழுத்துக்கு

மூலமான பீனிஷிய எழுத்துக்களிலிருந்து தமிழ் மக்கள் இவ்வட்ட எழுத்துக்களை அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று டாக்டர் பர்னல் (Burnell)' அவர்கள் கூறுகின்றார். வட்டெழுத்தும் ஏனைய கிரந்தம், பழந்தமிழ் எழுத்துக்களைப் போல,பிராமி எழுத்தி னின்றும் தோன்றியதே என்கிறார் தி.நா. சுப்பிரமணியம் அவர்கள்! டாக்டர் பர்னல் அவர்கள் பிராமியிலிருந்து வட்டெழுத்துக்கள் உருவாகியிருக்க முடியாது என்கிறார்.

மிகப் பழைய கல்வெட்டுக்களில் உள்ள வட்டெழுத்து தமிழரின் பழைய எழுத்து என்றும் தொல்காப்பியர் குறிப்பிடும் எழுத்து வடிவங்கள் வட்டெழுத்தையே குறிப்பிடுவதாகவும் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வெழுத் தினையே கோலெழுத்து எனவும் கண்ணெழுத்து எனவும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். ஓவிய எழுத்துக்களினின்று ஒலி எழுத்துக்கள் தோன்றியதை எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சி வரலாற்றில் காண்கிறோம். பிராமி எழுத்து அவ்வாறு வளர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை.

## வட்டெழுத்து:

பிராமி எழுத்துக்களாலான அசோகர் கல்வெட்டுக்கள் தோன்றுவதற்கு முன்பே வட்டெழுத்துக்கள் வழங்கியிருந்தன என வரலாற்றறிஞர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர்'குறிப்பிடுகின்றார். சிவராமமூர்த்தி அவர்களும் வட்டெழுத்து தமிழ் எழுத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த செவ்வையற்ற வடிவம் என்கிறார். இவ் வட்டெழுத்துக்களிலிருந்து தான் பல்லவர்கள் கிரந்த எழுத்துக்களையும் இக்காலத்துள்ள தமிழ் எழுத்துக்களுக்கு அடிப்படையாயுள்ள பழைய தமிழ் எழுத்துக்களையும் அமைத்துக் கொண்டனர்.

வலக்கைப் புறத்திலிருந்து இடக்கைப் புறமாக எழுதப்பட்ட பீனிஷிய எழுத்துக்களிலிருந்து இடக்கைப் பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கமாக எழுதப்பட்ட வட்டெழுத்துக்கள் தோன்றியிருக்க முடியாது. ஆகவே, பண்டைத் தமிழ் எழுத்துக்களாகிய வட்டெழுத்துக்கள் தமிழ் மக்களாலேயே முற்காலத்தில் அமைக்கப் பெற்றவை. அவ்வட்டெழுத்தின் திருந்திய வடிவங்களே இப்போதுள்ள தமிழ் எழுத்துக்களாகும். எனவே, தமிழ் எழுத்துக்கள் தமிழ் நாட்டிலேயே தோன்றிய தனி எழுத்துக்களாகும் எனக் கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார்.

மிகப் பழைய எழுத்துக்கள் எனக் கருதும் சுமேரிய எழுத்துக்களும் மொஹஞ் சதாரோ எழுத்துக்களினின்று பிறந்தவை என்று ஹீராஸ் (Heras) குறிப்பிடுகின்றார். திரு நடன காசிநாதன் அவர்கள் தமிழில் பழைய எழுத்துக்கள் (Ancient Tamil Script) என்ற ஒரு வகை இருந்ததாக வும் அதிலிருந்துதான் வட்டெழுத்துக்களும் இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துக்களும் தனித்தனியே உருவாயின என்றும் கூறுகிறார்.

வட்டெழுத்து பாண்டி நாட்டில் மிகச் சிறப்பாக வழங்கியது. மிகத் தொன்மையான கல்வெட்டுக்கள் தமிழகத்தின் வடபகுதியில் தான் கிடைத்துள்ளன. கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து 8 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் சில, வட்டெ ழுத்தில் காணப்படுகின்றன. கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் காணப்படு கின்றன. பாண்டி நாட்டிலும் கொங்கு நாட்டிலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டுவரை வட்டெழுத்தே சிறப்புற்று விளங்கியது. கேரளத் தில் கிரந்தமும் வட்டெழுத்தும் இணைந்து மலையாள எழுத்தாகப் பரிணமித்தது என்பர். வட்டெழுத்து ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் பரவியிருந்திருத்தல் வேண்டும். பல்லவர்கள் கிரந் தத்தைப் புகுத்திய பின்பு இது வழக்கொழிந்திருக்க வேண்டும். கிரந்தத் தமிழும் வட்டெழுத்தும் தமிழகத்தின் வெவ்வேறு பகுதியில் தோன்றி வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் எனத் தானி குறிப்பிடுகின்றார்.

சிம்ம விஷ்ணுவின் காலத்துக் கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலும் மகேந்திரவர்மன் காலத்துக் கல்வெட்டுக்கள் தமிழ் எழுத்திலும் உள்ளதாகத் திரு நடனகாசிநாதன் கூறுகிறார். வட்டெழுத்துக்களின் திருந்திய வடிவமே இக்காலத் தமிழ் எழுத்துக்கள் என அ.மு.பரமசிவானந்தம் கூறுகிறார். திரு.நாகசாமி அவர்கள் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரையில் தமிழ்மொழிக் கல்வெட்டுக்கள் தமிழ் வட்டெழுத்து இரண்டும் கலந்த எழுத்துக்களில் எழுதப்படுவதும் வழக்கம் என்கிறார். மயிலை சீனிவேங்கடசாமி என்பவர் ஒரு காலத்தில் தமிழ் நாடு முழுவதும் வட்டெழுத்து வழங்கப்பட்டது என்கிறார். கே.எஸ் ராமசாமி சாஸ்திரி. அவர்கள் வட்டெழுத்து பிற தொடர்பின்றித் தமிழகத்திலேயே உருப்பெற்று வளர்ந்த எழுத்தென்றும் மெய்யெழுத்தின்மேல் புள்ளியிடல் தமிழுக்கே உரியதென்றும் மற்ற

இந்திய மொழிகளில் இல்லாத சிறப்பென்றும் கூறியுள்ளார். தெலுங்கு, கன்னட எழுத்துக்கள் பிராமியிலிருந்து உருவானவை என்றும் கூறியுள்ளார்.

## நாகரி எழுத்து

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதியில் சமஸ்கிருதத்தை எழுத வழங்கப்பட்ட ஒருவகை எழுத்துக்களை 'நாகரி' என்பர். இதனைத் 'தேவ நாகரி' என்றும் அழைப்பர். தேவநாகரி பிராமியிலிருந்து தோன்றியதாகக் கூறுவர். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சிறப்பும் முழுமையும் பெற்றது. தேவநாகரி நெடுங்கணக்கிலிருந்து தமிழ் நெடுங்கணக்கு வேறுபடு மாற்றை டாக்டர் மு.வ. அவர்கள் 'மொழி வரலாற்றில்' நன்கு விளக்கியுள்ளார். குப்த அரசர்கள் காலத்தில்தான் பிராமி எழுத்தி னின்றும் தேவநாகரி எழுத்துக்கள் உருவாயின என்பர்.

வட மொழியை எழுதக் கிரந்த எழுத்துக்களோடு நாகரி எழுத்தும் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நரசிம்ம வர்மனின் கல்வெட்டுக் கிரந்த எழுத்திலும் அதே செய்தி நாகரி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வேணாட்டை ஆண்ட கருநந்தடக்கன் நாகரி எழுத்தில் செப்பேடு வெளியிட்டுள்ளான் உத்தம சோழன், ராஜராஜன், கங்கை கொண்ட சோழன், ராஜேந்திர சோழன் ஆகிய மன்னர்களது பெயர்கள் காசுகளில் நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னாட்டில் வழங்கிய எழுத்துக்களை 'நந்தி நாகரி' என்பர்.

## மராட்டிய 'மோடி' எழுத்து:

தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலில் 'மோடி' என்னும் எழுத்தில் எழுதப்பட்ட மராட்டிய மொழிக் கல்வெட்டுக்கள் சில உள்ளன. மராத்தி மொழி 19 ஆம் நூற்றாண்டு வரை மோடி எழுத்துக்களால் எழுதப்பட்டது.

## மரபு இலக்கணங்களும் எழுத்துக்களும்:

### தொல்காப்பியமும் பண்டைத் தமிழ் எழுத்துக்களும்:

தொல்காப்பியத்தில் பண்டை எழுத்துக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வரிவடிவைக் குறிக்கும் 'எழுத்து' என்ற சொல்லும் புத்தகத்தைக் குறிக்கும் நூல் என்ற சொல்லும் தனித்தமிழ்ச் சொற்களாகவே பழந்தமிழில் காணப்படுகின்றன. எழுத்து என்பது ஒலிகளை மாத்திரமின்றி, வரிவடிவையுங் குறித்த தென்பதற்குப் பல சான்றுகள் தொல்காப்பியத்தில் உள்ளன. வரிவடிவம் மட்டுமின்றி முறை வைப்பையும்

கூறுகின்றார். தமிழ் எழுத்துக்கள் அகர முதல் னகர இறுதியாக இக்கால நெடுங்கணக்கில் காணப்படுவது போன்று தொல்காப்பியர் காலத்தும் முறைப்பட எழுதப் பெற்று வழங்கி வந்தன. தொல்காப்பியர் காலத்தே தமிழுக்கு ஒரு நெடுங்கணக்கு வரி வடிவம் உண்டு என்பதை உணர்கிறோம். தனி மெய்யெழுத்திற்கு வடிவு கூறுகிறார். இதில் தனி மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்று இயங்குவதும் உயிர்மெய் ஆகும்போது அகரமேறின் புள்ளி நீங்கி முன்னைய வடிவோடு நிற்றலும் பிறவுயிர்கள் ஏறும்போது வடிவு மாறி நிற்றலும் கூறுகின்றார். மெய்யெழுத்துக்களும் எகர ஒகர எழுத்துக்களும் புள்ளி பெற்று நிற்றல் வேண்டும் என்பதையும் மகரக்குறுக்கும் மெய்ப் புள்ளியோடு உள்ளே மற்றொரு புள்ளியும் பெறுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**'மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்.' -(எதால்.எழுத்.46)**

என்பதால் மேற்புள்ளி நீங்கிய தனி மெய்யெழுத்துக்கள் இயல்பான அகரத்தோடு சேர்ந்து ஒலிக்கும் என்பது பெறப்பட்டது. 'ஏகர ஒகரத் தியற்கையு மற்றே' என்ற சூத்திரத்தின்படி, எகர, ஒகரங்களை, ஏகார ஓகாரங்களினின்றும் வேறுபடுத்திக் காட்டப் புள்ளி பயன்படுத்தப்பட்டது என்பதை உரையாசிரியர்கள் மூலம் அறிகிறோம். இந்த மாதிரி உட்புள்ளி அமைப்பு பழைய ஓலைச் சுவடிகளில் இருந்தன என்று நன்னூல் வெளியீட்டு முகவுரையில் டாக்டர் உவே. சாமிநாத அய்யர் குறிப்பிட்டுள்ளார். தாண்டவராய முதலியார் வெளியிட்ட சேந்தன் திவாகரம் என்ற நூலில் எகர ஒகரங்களில் புள்ளி வைக்கப்பட்டிருப்பதாக மு. அருணாசலம் அவர்கள் தமது 'தமிழ் இலக்கிய வரலாற்றில்' குறிப்பிட்டுள்ளார். கடைச்சங்க காலத்தில் சேர நாட்டிலும், சோழ நாட்டிலும் வழங்கி வந்த தமிழ் எழுத்துக்கள் கண்ணெழுத்துக்கள் என்ற பெயருடையனவாயிருந்தன என்பதைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம்.

**'கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்**
**மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித்து.' (சில.26. 170-171)**

கண்ணெழுத்துக்கள் ஒரு காலத்தில் முழுவதும் வழக்கிலிருந்திருக்க வேண்டும். கண்ணெழுத்தே பழைய தமிழ் எழுத்து என்பாருமுளர். சிலர் கண்ணெழுத்தையே வட்டெழுத்தென்பாருமுளர்.

## பிரயோக விவேகம்:

'ஆவியெழுத்தச் சொடுசர மாறாமவற்றின் பின்னே
மேவிய மெய்கள் விளம்புமல் லோடுவியஞ்சனமாற்
தாவியெதிர்த்து மதர்த்தரி பாய்ந்திரு தாழ் குழைத்தோய்.'

## நேமிநாதம் :

'ஆதியுயிர் வவ்வியையின் ஔவாம் அஃதன்றி
நீதியினால் யவ்வியையின் ஐயாகும்- ஏதமிலா
எஒமெய் புள்ளிபெறும் என்ப சஞயமுன்
அஐயாம் ஆதி யிடை.'

## இலக்கண விளக்கம்:

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி.'

## தொன்னூல் விளக்கம்:

'தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்
சான்றுளித் தோன்றும் தான் எழுத்து இயல்பே.'

## வீரமாமுனிவர் செய்த மாற்றம்:

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தில் வீரமாமுனிவர் மாற்றம் செய்துள்ளார். 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல், 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' என்ற நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மேலும் வேறுபடுத்தினார். எகரத்துக்கும் ஒகரத்துக்கும் புள்ளி நீக்கி,ஏகாரத்திற்குக் கால் இட்டும் ஏனைய நெடில் அறிகுறியாகிய 'ா' காலினின்றும் வேறுபடுத்தினார். உயிர் மெய்களில் எகர ஒகரங்களுக்கு ஒற்றைக் கொம்பையும் அமைத்தார். இக்கால கட்டத்தில் வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ மாற்றம் பற்றிக் சிந்திக்கத் தொடங்கினார்.

## எழுத்துச் சீர்திருத்தம்:

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை நோக்கினால் மொழிகள் ஓர் எழுத்தை - வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொண்டுள்ளதையும் இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்து கொண்டுள்ளதையும் எழுத்து

எண்ணிக்கையையும் அதிகரித்துக் கொண்டுள்ளதையும் சொல்லெழுத்தில் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டுள்ளதையும் காணலாம். இவற்றையே வரிவடிவ மாற்றம், வரிவடிவத்திருத்தம், எழுத்துக்களின் எண்ணிக்கை மாற்றம் சொல்லெழுத்து மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் வழங்குகின்றனர். சோழப் பேரரசு தமிழகம் முழுமையையும் ஒரு குடைக்கீழ் கொணர்ந்த பொழுது தமிழ் எழுத்து புகுத்தப்பட்டது. பாண்டி நாட்டில் வழக்கிலிருந்த வட்டெழுத்து கைவிடப்பட்டுத் தமிழ் எழுத்து புகுத்தப்பட்டது. தமிழ் மொழி வரலாற்றில் எழுத்து எண்ணிக்கை கூடியிருப்பதைக் காணமுடிகிறது. கி.பி. 10 நூற்றாண்டில் திருமந்திரத்தில் ஹ, க்ஷ, ஸ, ஸ்ரீ ஆகிய எழுத்துக்கள் பயன்படத்தப்பட்டுள்ளன. கி. பி. 15 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் கிரந்த எழுத்துக்கள் எனப்படும் ஸ, ஷ,ஜ,ஹ, ஸ்ரீ, க்ஷ என்ற ஆறு எழுத்துக்களும் காணப்படுகின்றன.

பழைய னா, ணா, ரு, என்ற எழுத்துக்கட்கு மட்டும் தனித்தனி அச்சு வார்ப்புகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இக்குறையை நீக்க னா, ணா, றா, என்று பயன்படுத்த எண்ணினர். இந்தச் சிந்தனையின் அடிப்படையில்தான் பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் எழுத்துச் சீர்திருத்தத்தைத் துவக்கினார். தமிழ் நாட்டு அரசாங்கம் பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்ற வேண்டும்' என அரசு ஆணை (அரசாணை எண் 1875) பிறப்பித்தது. மொழியும் எழுத்தும் சமூகத்தின் தேவைக்கும் தொழிலியல் வளர்ச்சிக்குமேற்ப அமைய வேண்டும். பேராசியர் டாக்டர் செ. வை. சண்முகம் அவர்கள் எழுதிய 'எழுத்துச்சீர்திருத்தம்' என்னும் நூல் எழுத்துச் சீர்திருத்தங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்த ஆய்வு நூலாகும்.

## பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்

| முன்பு | தற்பொழுது |
|---|---|
| ணா | ணா |
| றா | றா |
| னா | னா |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| னை | னை |

தமிழக அரசு செய்துள்ள இச் சீர்திருத்தம் திட்டமிட்டுச் செய்த மொழி வளர்ச்சியின் முதல்படி ஆகும். எல்லா இந்திய மொழிகட்கும் பிராமி வரிவடிவே தாயாகயிருப்பதாலும் தமிழின் மிகப் பழைமையான குகைக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதியிருப்பதாலும், தமிழ் எழுத்துக்களும் பிராமி எழுத்தினின்று படிப்படியாக வட்டெழுத்தும் பின்னர் வட்டெழுத்தினின்று இன்று நாம் பயன்படுத்தும் எழுத்துக்களும் உருவாயின எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். பொதுவாக உலகமொழிகள் அனைத்தும் எழுத்து மொழியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு மூலத்திலிருந்து உண்டா கியிருக்கலாம் என்று எழுத்துக்களை ஆராயும் அறிஞர்கள் நம்பு கின்றார்கள். மொஹஞ்சதாரோ - ஹரப்பாவின் சித்திர எழுத்துக் களினின்றும் தமிழ் எழுத்துக்கள் தோன்றி வளர்ந்திருக்கக்கூடும் என்றும் சிலர் எண்ணுகின்றனர். தமிழ் வரி வடிவ வரலாறு இன்னும் ஆராய்ச்சியாளர்களுக்குப் புரியாத புதிராகவே உள்ளது. வருங்கால ஆய்வு உலகம்தான் இதனை முடிவு செய்யவேண்டும்.

## தொகுப்புரை

- தொல்காப்பியரும், நன்னூலாரும் தமிழ்ச் சொற்றொடர் அமைப்பை ஆராந்தவர்களுள் முன்னோடியாகத் திகழ்கின்றனர்.
- பொருட்பேறு காலந்தோறும் மாற்றத்திற்கு உள்ளாகி தன்னுடைய பொருள் கூறும் தன்மையில் வேறுபட்டு நிற்கிறது.
- அகப்படும் வாக்கியம் மற்றும் அகப்படுத்தும் வாக்கியம் ஆகியவை சொற்றொடர் அமைப்பில் பொருள் மாற்றத்தை உண்டுபண்ணுகின்றன.
- திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளுக்குத்தான் எழுத்து வடிவம் உண்டு.
- மூன்று வகையான எழுத்து முறை எழுத்து முறை அமைப்பைத் தீர்மானிக்கின்றன.
- குகைக் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் பிராமி எழுத்துக்களே இடம் பெற்றுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. மாற்றிலக்கணம் என்ற கொள்கை உருவான ஆண்டு?

அ) 1945

**ஆ) 1950**

இ) 1955

ஈ) 1965

2. அண்மை உறுப்பு ஆய்வின் தந்தை எனப்படுபவர்?

**அ) புளூம் ஃபீல்டு**

ஆ) ரூலன் வெல்ஸி

இ) ஹாரிஸ்

ஈ) சோம்ஸ்கி

3. நான் பள்ளிக்கூடத்தில் படித்தேன் என்பர் எவ்வகை வாக்கியம்ஃ

அ) தனிநிலை வாக்கியம்

ஆ) ஒட்டு நிலை வாக்கியம்

இ) அகப்படுத்தும் வாக்கியம்

**ஈ) அகப்படும் வாக்கியம்**

4. 'உருவாக்குப் பொருண்மைக் கோட்பாடுகள்' என்பதில் தொடர்பில்லாதவர்?

அ) லேக்காப்

**ஆ) ரஸ்கின்**

இ) மக்காலே

ஈ) போஸ்டல்

5. திராவிடி என்று அழைக்கப்படுவது?

அ) பிராகிருதம்

ஆ) வட பிராமி

**இ) தென் பிராமி**

ஈ) சித்திர எழுத்து

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. சொற்றொடரமைப்பும் தொடரியல் வழி ஆய்வும் அண்மை உறுப்புப் பிரிப்பு முறை பற்றி எழுது.

2. மாற்றிலக்கணம் என்றால் என்ன? விளக்குக.

3. எழுத்து முறை பிரிவுகள் பற்றி எழுதுக.

4. பிராமி எழுத்து குறித்து எழுதுக.

5. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எழுதுக.

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. தமிழில் காணப்படும் பல்வேறு சொற்றொடரமைப்பை எடுத்துக் காட்டுடன் விளக்கு.

2. அண்மை உறுப்பின் வகைகள் குறித்து எழுது.

3. தமிழ் வரிவடிவ வரலாறு குறித்து எழுது.

4. கிரந்தம் மற்றும் வட்டெழுத்து வரிவடிவங்கள் குறித்து கட்டுரை வரைக.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. ஆ) 1950

2. அ) புளூம் ஃபீல்டு

3. ஈ) அகப்படும் வாக்கியம்

4. ஆ) ரஸ்கின்

5. இ) தென் பிராமி

……………….

## பாட நூல்கள்


- மொழிநூல், மு.வரதராசனார், பாரிநிலையம், சென்னை, 2011
- தமிழ்மொழி வரலாறு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2002


## பார்வை நூல்கள்


- தமிழ்மொழி வரலாறு, தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு
- புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2018
- தமிழ் மொழியின் வரலாறு, வி .கோ. சூரியநாராயண சாஸ்திரியார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010
- திராவிட மொழிகளின் ஒப்பாய்வு, ஜான்சாமுவேல், பாரிநிலையம், சென்னை, 2014
- தமிழ்மொழி இலக்கிய வரலாறு, மா இராச மாணிக்கனார், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1996


------------------------------